தொல்காப்பிய அகவியற் கோட்பாட்டு இலக்கண வளர்ச்சி

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (Ph.D.,)
பட்டத்திற்குப் பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

மு.செண்பகவள்ளி
(பதிவு எண்.552)

நெறியாளர்

பேராசிரியர் **சே.செந்தமிழ்ப்பாவை**

தமிழ்ப் பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத் தர நிர்ணயக்குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+
(CPA:3.64) தகுதி பெற்றது மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பல்கலைக்கழக மானியக்கு
முவின்
முதல்தரப் பல்கலைக்கழகத் தகுதிபெற்றது)

காரைக்குடி – 630 003

தமிழ்நாடு - இந்தியா

ஆகட்டு - 2019

முனைவர்சே.செந்தமிழ்ப்பாவை,எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,பிஎச்.டி.,
பேராசிரியர் & இயக்குநர்,
தமிழ்ப்பண்பாட்டுமையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள் :

நெறியாளர் சான்றிதழ்

"தொல்காப்பிய அகவியற் கோட்பாட்டு இலக்கண வளர்ச்சி" என்னும் தலைப்பில் மு.செண்பகவள்ளி அவர்கள் முழுநேர முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காகச் செய்த இவ்ஆய்வு அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்ப்பண்பாட்டு மையத்தில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும் இந்த ஆய்விற்காக வேறு
எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

(முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை)
நெறியாளர்

மு.செண்பகவள்ளி, *(பதிவு எண்.552)*
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
தமிழ்ப்பண்பாட்டு மையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள் :

ஆய்வாளர் உறுதிமொழி

“தொல்காப்பிய அகவியற் கோட்பாட்டு இலக்கண வளர்ச்சி” *என்னும் தலைப்பில் முழுநேர முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்ஆய்வு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்ஆய்வேடு அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.*

மு.செண்பகவள்ளி
(ஆய்வாளர்)

உறுதிக் கையொப்பம்
முனைவர்சே.செந்தமிழ்ப்பாவை,*எம்.ஏ.,எம்ஃபில்.,பி.எட்.,பிஎச்.டி.,*
பேராசிரியர் & இயக்குநர்,
தமிழ்ப்பண்பாட்டுமையம்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நன்றியுரை

கல்வி வள்ளல் அழகப்பரின் பெயரால் அமைந்த பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் **"தொல்காப்பிய அகவியற்கோட்பாட்டு இலக் கண வளர்ச்சி"** என்னும் தலைப்பில் முனைவர் பட்டட ஆய்வு நிகழ்த்த வாய்ப்பு நல்கிய அழகப்பா பல்கலைக்கழகத்தின் மாண்பமை **துணைவேந்தர்** அவர்களு க்கும் மதிப்பிற்குரிய **பதிவாளர்** அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வின் நெறியாளராகவும் எனது செவிலித் தாயாகவும் இருந்து எனது வளர்ச்சியில் மிகுந்த ஆக்கமும் கணப்பொழுதும் குறைவில்லா ஊக்கமு ம் அளித்து ஆய்வேட்டைச் செம்மையாக உருவாக்குவதற்கு உதவிய தமிழ்ப் ப ண்பாட்டு மையப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் முனைவர் **சே.செந்தமிழ்ப்ப ாவை** அம்மா அவர்களுக்கு என்பணிவான நன்றி என்றும் உரியது.

ஆய்வு தொடர்பான பல்வேறு அறிவுரைகளை நல்கிய உதவிப் பேராசி ரியர் முனைவர் க.கணநாதன் அவர்களுக்கும் வெறுங்கல்லாய் இருந்த என்னை கலைச் சிற்பமாய் வடிவெடுக்க அடித்தளமிட்ட மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி ஆசிரியர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் நன்னிலை பெற்றுயர தம்முயிரை ஈந்த எனது தந்தை, சகோதரி ஆகியோருக்கும் மேன்மைபெற நாளும் உதவும் எனது குடும்பத்தாருக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வு நிகழ்த்திய காலங்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எனது தோழி லெ.பொ.பிரியாவிற்கும், ஆய்வு வழிகாட்டிகளான முனைவர் ம.தமிழரசன், ஆ.அருள்சாமி, பெ.குபேந்திரன் ஆகியோருக்கும் எம் முனைவர் பட்ட ஆய்வுச் சகோதர, சகோதரிகளுக்கும் மிகச்சிறந்த முறையில் கணினித் தட்டச்சு செய்து தந்த சகோதரி திருமதி பா.சாந்தி பாண்டியன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

(மு.செண்பகவள்ளி)

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

1.	அகம்.	-	அகநானூறு
2.	அவிந.	-	அவிநயம்
3.	ஆ.சிவ.	-	ஆ.சிவலிங்கனார்
4.	இலக்.வி.	-	இலக்கண விளக்கம்
5.	இளம்.உரை.	-	இளம்பூரணர் உரை
6.	இறை.அக.	-	இறையனார் அகப்பொருள்
7.	உ.ஆ.	-	உரையாசிரியர்
8.	ஐங்.	-	ஐங்குறுநூறு
9.	களவி.கா.	-	களவியற்காரிகை
10.	குறுந்.		குறுந்தொகை
11.	சுவாமி.	-	சுவாமிநாதம்
12.	தமி.நெறி.விள.	-	தமிழ்நெறி விளக்கம்
13.	தொல்.பொருள்.அகத்.	-	தொல்காப்பிய பொருளதிகார அகத்திணையியல்
14.	தொல்.பொருள்.புறத்.	-	தொல்காப்பிய பொருளதிகார புறத்திணையியல்
15.	தொல்.பொருள்.கள.	-	தொல்காப்பிய பொருளதிகார களவியல்
16.	தொல்.பொருள்.கற்.	-	தொல்காப்பிய பொருளதிகார கற்பியல்
17.	தொல்.பொருள்.பொருளி.	-	தொல்காப்பிய பொருளதிகார பொருளியல்
18.	தொல்.பொருள்.மெய்ப்.	-	தொல்காப்பிய பொருளதிகார மெய்ப்பாட்டியல்
19.	தொல்.பொருள்.செய்.	-	தொல்காப்பிய பொருளதிகார செய்யுளியல்
20.	தொல்.பொருள்.மர.	-	தொல்காப்பிய பொருளதிகார மரபியல்
21.	தொன்.விள.	-	தொன்னூல் விளக்கம்
22.	நச்.உரை.	-	நச்சினார்க்கினியர் உரை

23.	நம்.அக.	-	நம்பி அகப்பொருள் (அகப்பொருள் விளக்கம்)
24.	ப.ஆ.	-	பதிப்பாசிரியர்
25.	பேரா.உரை.	-	பேராசிரியர் உரை
26.	புறம்.		புறநானூறு
27.	மாற.அக.	-	மாறன் அகப்பொருள்
28.	முத்.வீரி.	-	முத்துவீரியம்
29.	மேலது.	-	மேலே குறிப்பிடப்பட்டுள்ளது
30.	வீர.சோ.	-	வீரசோழியம்

பொருளடக்கம்

வ. எண்	இயல்	தலைப்பு	பக்க எண்
1.		முன்னுரை	1-4
2.	ஒன்று	வரலாற்று நோக்கில் அக இலக்கணங்கள் ஓர் அறிமுகம்	5-31
3.	இரண்டு	திணைக்கோட்பாட்டு வளர்ச்சி	32-83
4.	மூன்று	செய்யுள் உறுப்புகள் கோட்பாடும் அகப்பாட்டு உறுப்புகள் கட்டமைப்பும் இலக்கண வளர்ச்சி	84-107
5.	நான்கு	கூற்றுக் கோட்பாட்டு வளர்ச்சி	108-201
6.	ஐந்து	அகக்கோட்பாட்டில் புது மரபுகளும் மாற்றங்களும்	202-234
7.		முடிவுரை	235-244
8.		துணைநூற்பட்டியல்	245-257

முன்னுரை

தமிழில் இன்று கிடைக்கின்ற இலக்கண நூல்களில் முதல் நூலாகத் திகழ்வது தொல்காப்பியம் ஆகும். உலகத்தில் உள்ள எம்மொழியிலும் பொரு ளுக்கெனத் தனி இலக்கணநூல் தோன்றவில்லை. அது தமிழ்மொழியில் அமை ந்திருப்பது தமிழரின் தனித்தன்மையைப் புலப்படுத்தும்.

தொல்காப்பியர் ஆண், பெண் மாந்தர்களின் உணர்வைத் தம் பொரு ளதிகாரத்தில் பொதுமைப்படுத்தியுள்ளார். மக்கள் எந்நாட்டவராக, எம்மொழி யினராக, எவ்வினத்தவராகக் காணப்பட்டாலும் உணர்வு நிலையில் ஒன்றுபட்டவர்களே. எனவே எல்லா மக்களுக்கும் பொருந்தும் இல க்கணமாகத் திகழ்கிறது தொல்காப்பியம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த தொல்காப்பியத்திற்குப் பின் கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய பல்வேறு அக இலக்கணங்களுள் பொருளுக்கெ ன பன்னிரு அக இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. இப்பன்னிரு நூல்களிலு ம் தொல்காப்பியர் சுட்டியுள்ள அகக்கோட்பாடுகளை ஆய்வது ஆய்வுலகிற்கு ப் பயன் நல்கும்.

ஆய்வுத் தலைப்பு

வாழ்க்கையில் இருந்து தோன்றுவது இலக்கியம். இலக்கியத்தில் இ ருந்து எடுபடுவது இலக்கணம். இது தொடர் நிகழ்ச்சியே தவிர சுழல் நிகழ்ச்சி அல்ல. இதனையே தொல்காப்பியமும் தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களும் உணர்த்துகின்றன. அவ்வகையில் தொல்காப்பி யமும் பிற்கால அக இலக்கண நூல்களும் உரைக்கும் அகவியல் கோட்பாடுகளைப் பற்றி ஆராயும் நிலையில் ''தொல்காப்பிய அகவியற் கோட்பாட்டு இலக்க ண வளர்ச்சி'' என்பது ஆய்வுத் தலைப்பாக அமைகிறது.

ஆய்வு நோக்கம்

தொல்காப்பியம் தமிழ் இலக்கணங்களின் ஆணிவேர். அதனுடைய வளர்ச்சியாகப் பின்வந்த இலக்கண நூல்கள் அமைகின்றன. எனவே தொல்காப் பியம் தொடங்கிக் காலந்தோறும் தோன்றிய அக இலக்கணங்களில் ஏற்பட்ட

வளர்ச்சி நிலைகள், மாற்றங்கள், புதிய மரபுகள் போன்றவை பற்றிக் காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

அக இலக்கண நூல்களாகிய தொல்காப்பியம், அவிநயம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் போன்ற நூல்கள் ஆய்வுக்கு எல்லையாகும்.

சான்றாதாரங்கள்

தொல்காப்பியப் பொருளதிகாரமும் பிற்கால அக இலக்கணங்களும் முதன்மைச் சான்றாதாரங்கள் (Primary Sources) ஆகும். இவை தொடர்பான திறனாய்வு நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்கள் (Secondary Sources) ஆகும்.

கருதுகோள்

அக இலக்கணங்கள் மனிதனின் பண்பட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. எனவே காலந்தோறும் தோன்றிய அக இலக்கணங்களில் காலத்திற்கேற்ப மாற்றங்கள் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வில் அக வாழ்வியல் கோட்பாடுகளை விளக்கும் நிலையில் விளக்கவியல் அணுகுமுறையும் தொல்காப்பியத்தையும் பிற அக இலக்கணங்களையும் ஒப்பிடும் நிலையில் ஒப்பியல் அணுகுமுறையும் ஆய்வு அணுகுமுறைகளாக மேற்கொள்ளப்பெறும்.

ஆய்வுப் பகுப்பு

“தொல்காப்பிய அகவியற்கோட்பாட்டு இலக்கண வளர்ச்சி” என்னும் தலைப்பிலான இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு;

1. வரலாற்று நோக்கில் அக இலக்கணங்கள் ஓர் அறிமுகம்
2. திணைக்கோட்பாட்டு வளர்ச்சி
3. செய்யுள் உறுப்புகள் கோட்பாடும் அகப்பாட்டு உறுப்புகள் கட்டமைப்பும் இலக்கண வளர்ச்சி
4. கூற்றுக் கோட்பாட்டு வளர்ச்சி
5. அகக்கோட்பாட்டில் புதுமரபுகளும் மாற்றங்களும்

“வரலாற்று நோக்கில் அக இலக்கணங்கள் ஓர் அறிமுகம்” என்பது முதலாம் இயலாகும். தொல்காப்பியம் தொடங்கி அறுவகை இலக்கணம் வரையிலான பதின்மூன்று அகஇலக்கணங்களும் தோன்றிய முறை, பகுப்பு, காலம், வரலாறு, நூலாசிரியர், உரையாசிரியர் பின்னணி, நூலினுள் உள்ளடங்கிய செய்திகள் போன்றவற்றை ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

“திணைக்கோட்பாட்டு வளர்ச்சி” என்பது இரண்டாம் இயலாகும். அகத்திணையின் வகைகள், அகத்திணைகளுக்கே உரிய முதல், கரு, உரிப்பொருட்கள், திணைமயக்கம், பிரிவுகள், பெயர் சுட்டா மரபு, உள்ளுறை, இறைச்சி போன்ற அகத்திணைக் கூறுகள் காலந்தோறும் அடைந்துள்ள வளர்ச்சி போன்றவை பன்னிரு நூல்களிலும் இடம்பெற்றுள்ள முறை குறித்து ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

“செய்யுள் உறுப்புகள் கோட்பாடும் அகப்பாட்டு உறுப்புகள் கட்டமைப்பும் இலக்கண வளர்ச்சி” என்பது மூன்றாமியலாகும். இவ்வியலில் செய்யுளுக்குரிய உறுப்புகள் முப்பத்து நான்கனுள் அகச்செய்யுளுக்கென உரிய திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை என்னும் பன்னிரு உறுப்புகள் தொல்காப்பியம் மற்றும் பிற்றைய இலக்கணங்களில் பெற்றுள்ள வளர்ச்சி மாற்றம் போன்றவை குறித்து ஆராயப்பெற்றுள்ளது.

"கூற்றுக் கோட்பாட்டு வளர்ச்சி" என்பது நான்காம் இயலாகும். இதில் அக்கூற்றுக்குரிய மாந்தர்களான பார்ப்பான், பாங்கன், தலைவன், தலைவி, தோழி, செவிலி, பாணன், கூத்தன், விறலி, பரத்தை, கண்டோர், அறிவர், நற்றாய் என்ற பதின்மூன்று மாந்தர்களின் கூற்றுகள் குறித்த செய்திகள் அகஇலக்கணங்களில் இடம்பெற்றுள்ள நிலை குறித்து ஆராயப்பெற்றுள.

"அகக்கோட்பாட்டில் புதுமரபுகளும் மாற்றங்களும்" என்னும் ஐந்தாம் இயலில் தொல்காப்பியத்தில் இடம்பெறாது பிற இலக்கணங்களில் கூறப்பெற்றுள்ள புதுமரபுகள், தொல்காப்பியக் கருத்துகள் பிற்கால அக இலக்கணங்களில் மாற்றம் பெற்றுள்ள முறை போன்றவை குறித்து ஆராயப்பெற்றுள.

ஆய்வில் கண்டறிந்த முடிவுகள் முடிவுரையிலும் ஆய்விற்குத் துணைநின்ற நூல்கள் துணைநூற்பட்டியலிலும் இடம்பெறும்.

இயல் - 1

வரலாற்று நோக்கில் அக இலக்கணங்கள் ஓர் அறிமுகம்

உலகத்தில் பயிலும் மொழிகளில் பெரும்பான்மையான மொழிகளுக்கு இலக்கணங்கள் உண்டு. எனினும் உலக மொழிகள் அனைத்தும் எழுத்து, சொல் இலக்கணங்களை மட்டுமே பகர, தமிழ்மொழி மட்டுமே மனிதனுக்கு, அவன் வாழ்க்கைக்கு ஆதாரமான பொருள் இலக்கணத்தைப் பற்றிப் பேசுகின்றது. இத்தகைய சிறப்புவாய்ந்த பொருள் இலக்கணத்தை தமிழரின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் சிறப்புற எடுத்துரைக்கின்றது.

தொல்காப்பியம் கூறும் வாழ்வியற்கோட்பாடுகளைப் பின்வந்த சில இலக்கண நூல்களும் எடுத்துரைக்கின்றன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை பதின்மூன்று அக இலக்கண நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன. இவ்வக இலக்கணங்கள் தோன்றிய காலம், வரலாறு, அமைப்பு, பகுப்பு போன்ற முறைகளை வரலாற்று நோக்கில் ஆராய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

இலக்கியமும் இலக்கணமும்

இலக்கியம் தாய்; இலக்கணம் சேய், இலக்கியம் தேமாங்கனி; இலக்கணம் தீஞ்சுவைச்சாறு, இலக்கியம் பெருவிளக்கு; இலக்கணம் அதன் ஒளி, இலக்கியம் எள்; இலக்கணம் எண்ணெய், இந்த உறவுமுறையை, பிணைப்பு முறையை நம் முன்னோர் நன்கு அறிந்து தெளிந்திருந்தனர். இதனாலேயே,

“இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்”[1]

என்றனர். நன்னூலாரும்

“இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்”[2]

என்றுரைப்பது இதனை நன்கு விளக்கும். இதனால் இலக்கியப் பெருந்தருவின் நிழலில் எழுந்து நிற்பதே இலக்கணம் என்பது பெறப்படும். “இலக்கியமும் இ

லக்கணமும் வேறுபட்ட நிலையுடையன அல்ல; ஒரு வழிப்பட்ட ஒற்றுமையு டையனவே ஆகும்''[3] என்பர் சோம.இளவரசு.

இலக்கணம் – சொல்லாராய்ச்சி

இலக்கு என்னும் தமிழ்ச்சொல், அணம் என்னும் விகுதி பெற்று இல க்கணம் என ஆயிற்று என்று கோடலே பொருந்தும். இலக்கணம் என்ற சொல்லினை முதலில் வழங்கியவர் தொல்காப்பியர் ஆவார். இவர் இச்சொல்லினை ''பல பொருளை உய்த்துணர்ந்து அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறிவித்தற்குக் காட்டப்படும் வரையறை என்ற பொருளிலேயே ஆட்சி செய்துள்ளார். சிலர் புலம் என்னும் சொல் தமிழ் இலக்கணத்தைக் குறிக்கும் என்பர். இதற்குச் சான்றாகப் 'புலம் தொகுத் தோனே போக்கறு பனுவல்' என்னும் பனம்பாரனர் கூற்றைக் காட்டுவர். வே றுசிலர், இயல் என்பது இலக்கணத்தினைக் குறிக்கும் தமிழ்ச்சொல்''[4] என்பர்.

அக இலக்கண நூல்கள்

கி.பி.5 ஆம் நூற்றாண்டு தொடங்கி 19-ஆம் நூற்றாண்டு வரை தமி ழில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி ஆகியவற்றிற்கு பல்வேறு இலக்கண ங்கள் தோன்றித் தமிழை வளர்த்துள்ளன. இவற்றில் பதின்மூன்று இலக்கணங்க ள் அக இலக்கணத்தைப் பேசுகின்றன. அவற்றுள் சில நூல்கள் அக இலக்கணத்தை முழுமையாகவும் சில நூல்கள் அக இலக்கணத்தை த ஒரு பகுதியாகவும் கூறுகின்றன. இதனைப் பின்வரும் படம் விளக்கும்.

அக இலக்கண நூல்கள்

ஒரு பகுதியாக | **முழுமையாக**

அவிநயம் | வீரசோழியம் | இலக்கண விளக்கம் | தொன்னூல் விளக்கம் | முத்து வீரியம் | சுவாமி நாதம் | அறுவகை இலக்கணம்

தொல்காப்பியம் | இறையனார் களவியல் | தமிழ்நெறி விளக்கம் | நம்பியகப் பொருள் | களவியற் காரிகை | மாறனகப் பொருள்

நூற்றாண்டு வரிசையில்

இவ்வக இலக்கணங்களைப் பேசும் பதின்மூன்று நூல்களை நூற்றா ண்டு வரிசையில் நோக்கும்போது,

1.	தொல்காப்பியம்	-	கி.மு.5-ஆம் நூற்றாண்டு
2.	அவிநயம்	-	கி.பி.6-ஆம் நூற்றாண்டு
3.	இறையனார் களவியல்	-	கி.பி.7-ஆம் நூற்றாண்டு
4.	தமிழ்நெறி விளக்கம்	-	கி.பி.10-ஆம் நூற்றாண்டு
5.	வீரசோழியம்	-	கி.பி.11-ஆம் நூற்றாண்டு
6.	நம்பியகப்பொருள்	-	கி.பி.12-ஆம் நூற்றாண்டு
7.	களவியற்காரிகை	-	கி.பி.13-ஆம் நூற்றாண்டு
8.	மாறன் அகப்பொருள்	-	கி.பி.14-ஆம் நூற்றாண்டு
9.	இலக்கண விளக்கம்	-	கி.பி.17-ஆம் நூற்றாண்டு
10.	தொன்னூல் விளக்கம்	-	கி.பி.17-ஆம் நூற்றாண்டு
11.	முத்துவீரியம்	-	கி.பி.19-ஆம் நூற்றாண்டு
12.	சுவாமிநாதம்	-	கி.பி.19-ஆம் நூற்றாண்டு
13.	அறுவகை இலக்கணம்	-	கி.பி.19-ஆம் நூற்றாண்டு

தொல்காப்பியம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்ற ஒன்பது இயல்கள் அமைந்துள்ளன. இவற்றில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் என்ற ஐந்து இயல்களும் முழுமையாக அகப்பொருளைப் பற்றிப் பேசுகின்றன. உவமையியல், செய்யுளியல் என்ற இரண்டு இயல்களிலும் சில நூற்பாக்கள் அகப்பொருளைப் பற்றி உரைக்கின்றன.

அகத்திணையியல்

அகப்பொருட்செய்திகளை விளக்கும் அதிகாரம், பொருளதிகாரம் ஆகும். இதில் இன்ப ஒழுக்கத்தின் இயல்பை விளக்கும் இயல் அகத்திணையியல் எனப்பட்டது. இவ்வகத்திணையியலில் 58 நூற்பாக்கள் உள்ளன.

களவியல்

களவு என்பதற்குப் பிறர்க்குரியதான ஒன்றை அவரறியாது தனதாக்கி க் கொள்ளுதல் என்று பொருள். இங்கே காதல் களவாடப்படுகின்றது. தலைவ னும், தலைவியும் பெற்றோர் அறியாமல் அக ஒழுக்கம் மேற்கொள்ளும் களவு பற்றிக் கூறுவதால் களவியல் எனப்பட்டது. களவியல் 51 நூற்பாக்களைக் கொ ண்டது.

கற்பியல்

கற்பொழுக்கத்தின் உயர்வைக் கூறும் இயல் கற்பியல் ஆகும்.
இதில் கற்புக்கால வாழ்வியல் 53 நூற்பாக்களில் விளக்கப்பெற்றுள்ளன.
பிறர் அறியாதபடி களவின்கண் பழகிவந்த தலைவனும் தலைவியும் ஊரார் அ றியத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது கற்பாகும். தலைவிக் குத் தலைவனும் அவ்விருவருக்கும் இருமுதுகுரவர், செவிலி, அந்தணர் போன் றோர் அறிவையும் ஒழுக்கத்தையும் கற்பித்தலால் கற்பு என்பது காரணப் பெய ராகும்.

பொருளியல்

பொருளதிகாரத்தின் ஒழிபியலாக அமைந்திருப்பது பொருளியல் ஆ கும். இப்பொருளியல் 52 நூற்பாக்களைக் கொண்டுள்ளது.

மெய்ப்பாட்டியல்

மெய் + பாடு - மெய்ப்பாடு; மெய் - உடம்பு, பாடு - செயல்பாடு.
உள்ளத்து உணர்வுகள் உடலில் வெளித்தோன்றத் தெரிவது மெய்ப்பாடாகும்.
உள்ளத்துள் உண்டாகும் மகிழ்ச்சி, சினம், இரக்கம், இன்னபிற உணர்வுகள் பே ான்றவற்றையும் அதன் வகைகளையும் விரித்துரைக்கும் இயல் மெய்ப்பாட்டிய ல் எனப்பட்டது. இம்மெய்ப்பாட்டியலில் 28 நூற்பாக்கள் உள்ளன.

உவமையியல்

அறியாத ஒரு பொருளை உணர்த்த அதைப்போன்ற இன்னொரு பெ ாருளைச் சுட்டி, இது போன்றது அது என்று விளக்கிக் காட்டிச் சொல்லும் பெ ாருள் உவமையாகும். இத்தகைய உவமைகள், அவற்றின் வகைகள், மேலும் அ

வற்றைப் பற்றிய சில செய்திகள் ஆகியவற்றை விளக்கும் உவமையியலில் 38 நூற்பாக்கள் உள்ளன.

செய்யுளியல்

செய்யுள் இலக்கணம், பாட்டு அமைப்பு, பாவகை பற்றிக் கூறும் இயல் செய்யுளியல் ஆகும். இச்செய்யுளியலில் 235 நூற்பாக்கள் உள்ளன. இதில் 34 வகை செய்யுள் உறுப்புக்களைத் தொல்காப்பியர் கூறுகின்றார்.
இதில் பதினைந்து வகை உறுப்புகளே அகம் பற்றிப் பேசுவன; இவ்வக உறுப்புகள் பற்றிய செய்திகள் பயின்று வரும் நூற்பாக்கள் 24 ஆகும்.

அவிநயம்

அவிநயம் என்ற இலக்கண நூல் அவிநயர் என்பவரால் எழுதப்பட்டது ஆகும். இந்நூல் ‘‘சங்க காலத்திற்குப் பிற்பட்டு கி.பி.5 அல்லது கி.பி.6-ஆம் நூற்றாண்டளவில் தோன்றி கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை விளங்கிப் பின்னர் மறைந்த நூல் ஆகும்.’’[5] இவ்‘‘அவிநயத்திற்கு அவிநயக்கலாவியல் என்ற மற்றெரு பெயரும் இருப்பதாகச் ச.வே.சு. சுட்டுகின்றார்.’’[6]

அவிநயம் முழுமையும் கிடைக்காத ஓர் இலக்கண நூலாகும். இவ்வரிய நூலைப் பதினைந்திற்கும் மேற்பட்ட இலக்கண நூல்களில் உரையாசிரியர்கள் உரைமேற்கோள்களாகப் பயன்படுத்தி உள்ளனர். மேற்கோள்களாகக் கிடைத்த நூற்பாக்களைத் தொகுத்து க.ப.அறவாணன் அவர்கள் இதனை நூலாக்கம் செய்துள்ளார்.

அவிநயத்தைப் பற்றி முதன்முதலாகத் தெரிவித்தவர் மயிலை.சீனி. வேங்கடாமி ஆவார். அவர் ‘‘தம் மறைந்துபோன தமிழ் நூல்கள் (1967) என்ற நூலில் மறைந்து போன 45 இலக்கண நூல்களில் ஒன்றாக அவிநயம் குறிப்பிடப் பெறுகிறது’’[7] என்கிறார்.

அவிநயம் நால்வகை இலக்கணம் கூறும் நூலாகும். இந்நூலில் ‘‘எழுத்ததிகாரம் 18, சொல்லதிகாரம் 20, பொருளதிகாரம் 8, யாப்பதிகாரம் இரண்டு உரை மேற்கோள்களோடு மொத்தம் 62 நூற்பாக்கள் என்ற எண்ணிக்கையில் நூல் முழுவதும் உள்ள நூற்பாக்கள் 108 ஆகும்.’’[8] அவிநயத்தில் கிடைக்கப் பெ

ற்ற நூற்பாக்களைக் கொண்டு பொருளதிகாரம் அகத்திணை, புறத்திணை, அகப்புறத்திணை என்ற மூன்று பகுப்புக்களாக இருந்திருக்க வேண்டும் எனக் கூற முடிகிறதே தவிர அம்மூன்று பகுப்புகளான பிரிவுகளுக்குள் அடங்கும் செய்திகள் குறித்து அறிய இயலவில்லை. அவிநய ஆசிரியர் சமண சமயத்தைச் சார்ந்தவர். அவிநயத்திற்கு இராசபவுத்திரப் பல்லவதரையன் என்பவர் உரை எழுதியுள்ளார்.

அவிநயப் பொருளதிகாரம்

அவிநயம் எட்டு நூற்பாக்களில் பொருளதிகாரம் பற்றிக் கூறுகின்றது. அதில் திணையின் மூன்று வகைகள் ஊழ்வினையின் காரணமாகத் தோன்றும் காதல், கைக்கிளையின் நான்கு நிலைகள், தலைவி, தலைவனது குணங்கள், களவு மணம், ஆகியவற்றோடு அவிநயனார் பொருளதிகாரத்தை நிறைவு செய்கின்றார்.

இறையனார் அகப்பொருள்

தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணத்தைப் பேசும் வழிநூல் இறையனார் அகப்பொருள். இந்நூலை இறையனார் இயற்றியுள்ளார். களவு குறித்த செய்தியை மிகுத்துக் கூறுவதால் இந்நூல் இறையனார் அகப்பொருள் என்று பெயர் பெற்றது. இந்நூல் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. உரையால் சிறப்புப் பெற்ற நூல் என்ற பெருமைக்கு உரியது. இந்நூலிற்கு நக்கீரர் உரை எழுதியுள்ளார்.

இந்நூற்சூத்திரங்கள்

இந்நூலில் மொத்தம் 60 சூத்திரங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் ஓரடி, ஈரடிச் சூத்திரங்களாகவே உள்ளன. ஓரடிச் சூத்திரங்கள் 15. ஈரடிச் சூத்திரங்கள் 27. 15-ஆம் சூத்திரம் ஒன்று மட்டுமே பத்துவரி கொண்டதாகும்.

சூத்திரங்கள் சிறியதாகக் காணப்படினும் இதற்கான உரை விளக்கங்கள் மிகப்பெரியதாகக் காணப்படுகின்றன. இந்நூற்சூத்திரங்கள் எளிமையானதாகக் காணப்பட்டாலும், திட்ப நுட்பம் செறிந்தனவாகவும் உரைக்க உரைக்கப் பொருள் தருவனவாகவும் காணப்படுகின்றன.

இறையனார் அகப்பொருளின் அமைப்பு

இறையனார் அகப்பொருளில் களவு பற்றிய செய்திகளை 33 நூற்பாக்களும் கற்பு பற்றிய செய்திகளை 27 நூற்பாக்களும் கூறுகின்றன. தொல்காப்பியம் ஒன்பது இயல்களில் பொருளதிகாரம் பற்றிக் கூறும் செய்திகளைக் களவு, கற்பு என்ற இரு இயல்களில் சுருக்கமாகக் கூறுகிறது.

இறையனார் அகப்பொருளின் உள்ளடக்கம்

களவுக்கு இவ்வாசிரியர் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமை சுட்டுதற்குரியது. இந்நூலில் ஐந்திணைக்குரிய திருமணமுறைகள், தலைமக்கள், இருவரும் ஒருவரே, மதியுடம்படுதலாகிய தோழிக்குரிய உணர்ச்சி, இரவுக்குறியில் தலைவனைத் தலைவி சந்தித்தல், களவென்பதின் விளக்கம், வரைதலின் வகைகள், தாய், தந்தை, தமையன்மார் தலைவியின் காதலை அறிவது, அறத்தொடு நிற்றல், காமம் மிக்க கழிபடர் கிளவி, களவுக்கான காலம், களவுக் காலத்துத் தலைமகன் காரணமாக இடையீடு இல்லை என்ற செய்திகளை உள்ளடக்கியதாக அமைந்துளது. கற்பியலில் பிரிவு, அதன் வகைகள், பிரிவு கடிந்து வரையப்படாமை, பிரிவிற்குரிய மாந்தர், தலைவன் தலைவிக்குரிய பண்புகள், வாயில்கள், அவர்களுக்குரிய பண்புகள், செய்யுள் உறுப்புகள், எச்சம் பற்றிய செய்திகள் ஆகியவை சுட்டப்பட்டுள்ளன.

தமிழ்நெறி விளக்கம்

தமிழுக்கு விளக்குப் போன்று அமைவதால் இந்நூல் தமிழ்நெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. தமிழரின் ஒழுக்கங்களாகிய தமிழ் நெறியை விளக்கும் இந்நூலின் ஆசிரியர் பெயரை அறியமுடியவில்லை. விளக்கம் என்ற பெயரால் அமைந்த முதல் நூல் இதுவாகும். இந்நூலுக்குப் பிறகுதான் அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் போன்ற நூல்கள் தோன்றின.

இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியாத நிலையில், இந்நூல் தோன்றிய ஆண்டு பற்றியும், சரியாக அறிய இயலவில்லை. ‘‘தமிழ் இலக்கண நூல்களின் தோற்றம் பற்றிக் கூறும் ச.வே.சு. அவர்கள் தமிழ்நெறி விளக்கம் என்னும் இந்நூல் கி.பி.10-

ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர்.''[9] இந்நூல் பிரிவு பற்றி ஆயிடைப் பிரிவு, சேயிடைப் பிரிவு என்ற இருவகைகளைக் குறிப்பிடுகின்றது.

இவ்விரண்டு வகைப் பிரிவுகளையும் பரிமேலழகர் திருக்குறள் கற்பியல் உரையில் 'வரைந்தெய்திய பின் தலைமகன் அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுச் சேயிடையிலும் ஆயிடையிலும் பிரிந்து செல்லும்' என்று கூறியிருப்பதால் ''பரிமேலழகர் காலமாகிய கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராக இத்தமிழ்நெறி விளக்க ஆசிரியர் இருக்கலாம்''[10] என்பர் சோம.இளவரசு.

நூலாசிரியரே உரையாசிரியர்

இந்நூலின் உரையாசிரியர் இன்னாரென அறிய இயலவில்லை எனினும் இந்நூலுக்குள்ள உரையால் இவ்வுரையாசிரியரும் நூலாசிரியரும் ஒருவர் எனப் பலரும் எண்ணும் நிலை உள்ளது.

உ.வே.சா.வின் அரிய பணி

சங்க நூல்களை அதன் ஏட்டுப் பிரதிகளைத் தேடிப் பதிப்பித்த உ.வே.சா. அவர்கள் இதன் ''முற்பகுதி, பிற்பகுதி ஆகிய இருபகுதிகளும் சிதைந்த நிலையில் கிடைத்த ஓர் ஏட்டைக் கொண்டு அகப்பொருள் பகுதியையேனும் அழிந்துவிடாமல் காக்க வேண்டும் என்ற பேரார்வத்தால் 1937-இல் இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.''[11]

பொருளியல் பகுதி

இந்நூல் முதல் நூற்பாவில்,

> **''அகத்ததும் புறத்ததும் ஆயிரு பகுதியின்**
> **மிகுந்ததும் ஆகி விரிந்தது பொருளே''**[12]

என்று கூறுவதில் இருந்து அகப்பொருள், புறப்பொருள், அகப்புறப்பொருள் என்ற மூன்று பகுதிகள் இத்தமிழ்நெறி விளக்கத்தில் இடம்பெற்றிருந்திருக்கக் கூடும் என அறியமுடிகின்றது. எனினும் நமக்குக் கிடைத்திருப்பது 25 நூற்பாக்கள் அடங்கிய பொருளியல் என்னும் பகுதியே ஆகும். இந்நூலில் முதல் 21 நூற்பாக்கள் களவியலைப் பற்றியும் பின் நான்கு நூற்பாக்கள் கற்பியலைப் பற்றியும் உரைக்கின்றன.

களவியல், கற்பியல் செய்திகள்

அகத்திணைக்கு இன்றியமையாத முதல், கரு, உரிப்பொருள் பற்றிய செய்திகளை முதல் 13 நூற்பாக்களில் இவ்வாசிரியர் கூறுகின்றார். ஐந்து திணை க்குரிய நிலம், பெரும்பொழுது, சிறுபொழுது, அறுவகைக் கருப்பொருள், ஐந் து நிலத்திற்குரிய தெய்வங்கள், தலைமக்கள், நிலத்து வாழ்மக்கள், அவர்களின் தொழில்கள், உணவு, இசை, மேலும் மரம் என்ற பொதுவான தலைப்பில் மரத் தை மட்டுமன்றி விலங்கு, பறவை, உரிப்பொருள், களவின் திருமணமுறை, இய ற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், தோழியற் கூட்டம், வரைவு கடாதல், உட ன்போக்கு வலித்தல் போன்ற செய்திகளை களவியலில் உள்ளடக்கியுள்ளார். அறத்தொடு நிற்றல், உடன் செலவு, சேயிடைப் பிரிவு, ஆயிடைப் பிரிவு என்ற செய்திகளைக் கற்பியலில் விளக்குகின்றார்.

வீரசோழியம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங் களைக் கூறும் நூல் வீரசோழியம். ஐந்திலக்கணம் என்னும் அமைப்பில் வெளி வந்த முதல் நூல் இவ்வீரசோழியமே. இந்நூல்
கி.பி.11ஆம் நூற்றாண்டில் தோன்றியது. சோழ அரசர்களுள் ஒருவனாகிய வீரர ாஜேந்திரசோழன் வீரசோழன் என்று அழைக்கப்பட்டான். அவன் பெயரிலேயே ய சோழநாட்டில் பொன்பற்றியூர் என்னும் ஊரில் வாழ்ந்த புத்தமித்திரர் என் னும் சிற்றரசரே இந்நூலை எழுதியவர்.

புத்தமித்திரரின் ஊர் ‘‘தஞ்சை மாவட்டத்தில், அறந்தாங்கித் தாலுக ாவில் உள்ள பொன்பேத்தியே. பொன்பற்றியே பொன்பேத்தி இன்று மருவி வ ழங்கப்படுகிறது.’’[13] இந்நூலாசிரியர் புத்த மதத்தைச் சார்ந்தவர் ஆவார். வீரசே ாழியத்திற்கு உரை எழுதியவர் பெருந்தேவனார். இவர் புத்தமித்திரனார் காலத் தவர் என்றும், அவர் மாணவர் என்றும் இருவேறு கருத்து நிலவுகின்றது.

வீரசோழியம் அமைப்பு

வீரசோழியம் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தது.
இதன் பெரும் பிரிவு அதிகாரம். உட்பிரிவு படலம் என்றும் குறிக்கப் பெறுகிற து. எழுத்ததிகாரத்தில் சந்திப்படலம், சொல்லதிகாரத்தில் வேற்றுமைப் படலம்

உபகாரப்படலம் தொகைப்படலம் தத்திதப்படலம் தாதுப்படலம் கிரியாபத ப்படலம், பொருளதிகாரத்தில் பொருட்படலம், யாப்பதிகாரத்தில் யாப்புப்ப டலம், அலங்காரத்தில் அலங்காரப்படலம் என இந்நூல் ஐந்து அதிகாரங்களை யும் பதினோர் படலங்களையும் கொண்டு அமைந்துள்ளது.

வீரசோழியம் பொருளதிகாரம்

பொருட்படலப் பகுதியில் 21 நூற்பாக்கள் உள்ளன. இதில் பொருட் களின் தொகை, அகத்திணை, புறத்திணைகளின் வகைகள், அகம், அகப்புறம், புறம், புறப்புற உரைகளின் வகை, தொகைகள், ஐந்திணைகளுக்கும் உரிய முத ல், கரு, உரிப்பொருள் பற்றிய செய்திகள், வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உ ழிஞை, வகை, தும்பை, பாடாண் ஆகிய புறத்திணைகளின் வகைகள் பற்றிய செ சய்திகள் இடம்பெற்றுள்ளன.

நம்பியகப்பொருள்

தொல்காப்பியத்திற்குப் பிறகு பல அகப்பொருள் இலக்கண நூல்கள் தோன்றியிருப்பினும் நம்பியகப்பொருள் நூல் மட்டுமே மிகுந்த செல்வாக்குப் பெற்ற நூலாகும். இந்நூலை நாற்கவிராச நம்பி என்பவர் இயற்றினார். இந்நூலு க்கு மேற்கோள் செய்யுளாக அமைந்த நூல் தஞ்சைவாணன் கோவை என்பதா கும். இந்நூல் அகப்பொருளை மட்டுமே விளம்பும் அகப்பொருள் இலக்கண நூலாகும்.

காலம்

இந்நூலின் சிறப்புப் பாயிர உரை இந்நூல் குலசேகரபாண்டியன் கா லத்தது என்று கூறுகின்றது. ‘‘இங்கு குறிக்கப்பெறும் குலசேகரபாண்டியன் முத ல் சடையவர்மன் குலசேகரனே ஆவான். இவன் காலம் கி.பி.1192 - 1266 ஆகு ம். எனவே நம்பியின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் இறுதியும் 13-ஆம் நூ ற்றாண்டின் தொடக்கமாகும்’’[14] என்பர்.

நூலாசிரியரும், சமயமும்

நாற்கவிராச நம்பியின் இயற்பெயர் நம்பி. இவர் ‘‘ஆசுகவி, மதுரகவி , சித்திரகவி, வித்தாரகவி என்னும் நான்குவகைக் கவிகளையும் பாடவல்லவர்

என்பதால் நாற்கவிராசர் எனச் சிறப்புப் பெயர் பெற்று நாற்கவிராசநம்பி''[15] என அழைக்கப்படுகிறார். சமண சமயத்தைச் சார்ந்த இவரே இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

இவர் பாண்டிய நாட்டில் உள்ள புளியங்குடி உய்யவந்தான் என்னும் முத்தமிழ் ஆசிரியரின் மைந்தன் என்றும், வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் வல்லவர் என்றும், இவர் இயற்றிய சிறப்புப் பாயிரத்தால் அறியமுடிகின்றது.

நூலின் இயல்பு

''இந்நூல் தொல்காப்பியத்தின் அகப்பொருள் இலக்கியத்தையும் சான்றோரின் இலக்கியத்தையும் தழுவி இயற்றப்பட்டது. நூற்பாக்கள் எளிமையுடையன, மனப்பாடம் செய்வதற்கு ஏற்றன. வேண்டியாங்கு விரித்துக் கூறப்பெறும் கருத்துக்களை விரித்தும் சுருக்கிக் கூறவேண்டியவற்றைச் சுருக்கியும் கூறுகின்றது.''[16]

இயல் பகுப்பு

இந்நூல் அகத்திணையியல் தொடங்கி ஒழிபியல் ஈறாக ஐந்து பகுப்புக்களை உடையது. அவை முறையே, அகத்திணையியல் (116),
களவியல் (54), வரைவியல் (29), கற்பியல் (10), ஒழிபியல் (43) எனக் கொண்டு,
ஆக மொத்தம் (252) நூற்பாக்களைக் கொண்டு விளங்குகின்றது.

அகத்திணையியல்

அகத்திணையியலில் அகப்பொருளின் வகை, செய்யுள் இயற்றப்படும் புனைந்துரை, உலகியல் என்னும் இரண்டு தன்மைகள், கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை என்பதன் இலக்கணம், முதல், கரு, உரிப்பொருட்கள், உரிப்பொருட்களின் பத்து வகைகள், கைகோளின் இரண்டு வகைகள், களவுப் புணர்ச்சியின் நான்கு வகைகள், கைக்கிளைக்குரிய தலைமக்கள், குறியிடம், பகற்குறி, இரவுக்குறியின் இலக்கணம், குறியின் வகைகள், களவில் நிகழும் இருவகைப் பிரிவுகள், அவற்றிற்குரிய காலங்கள், வரைவு நிகழ்வதற்குரிய காலங்கள், வரைவி

ன் வகைகள், அறத்தொடு நிலை நிகழும் சூழல், அறத்தொடு நிற்கும் முறை, தலைமகள் அறத்தொடு நிற்கும் இடம், பாங்கி, செவிலி, நற்றாய் ஆகியோர் அறத்தொடு நிற்கும் நிலை, களவில் வினா நிகழும் இடங்கள், உடன்போக்கில் அறத்தொடு நிற்றற்குரியோர், கற்பின் வகைகள், கற்பில் நிகழும் அறுவகைப் பிரிவுகள், பரத்தையர் பிரிவின் வகைகள், ஓதல் பிரிவுக்கும் மற்றைய பிரிவுக்கும் உரியவர்கள், ஊடலைத் தணிவிக்கும் பதினைந்து வகை வாயில்கள், வாயில்களில் பாணன், விறலி, இளையோர், கூத்தர், கண்டோர், பாங்கர், பாகர், அறிவர், செவிலி, பரத்தையர் ஆகியோருக்குரிய செயல்கள், காமக்கிழத்திக்கு உரிய இலக்கணம், தலைமக்களின் துறவறம் பற்றிக்கூறி அகத்திணையியலை நிறைவு செய்கின்றார்.

களவியல்

இவ்வியல் களவு, காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல், இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கிமதி உடன்பாடு, பகற்குறி, ஒருசார் பகற்குறி, இரவுக்குறி, இரவுக்குறி இடையீடு, அல்லகுறி, வரைதல் வேட்கை, வரைதல் வேட்கையின் விரி, வரைவு கடாதல், வரைவு கடாதலின் விரி, ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல், அவற்றின் விரி போன்ற செய்திகளை உரைக்கின்றது.

வரைவியல்

தலைவன், தலைவியை ஊரறியத் திருமணம் செய்து கொள்ளுதல் வரைவு என்று கூறப்படும். அவ்வரைவின் இயல்பைத் தொகுத்துக் கூறுவதால் இவ்வியல் வரைவியல் எனப் பெயர் பெற்றது. இவ்வியல் களவுக்கும் கற்புக்கும் இடையில் அமைந்துள்ள ஓர் இயல் ஆகும். இவ்வரைவியலில் வரைவின் இலக்கணம், வரைவிற்குரிய கிளவித்தொகை, வரைவு மலிதலின் வகைகள், தலைவி, பாங்கி, செவிலி, ஆகியோர் அறத்தொடு நிற்கும் முறைகள், அறத்தொடு நிற்றலின் விரி, களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை, உடன்போக்கின் எட்டு வகைகள், அதன் விரிகள், கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை, செவிலி, நற்றாயின் புலம்பல்கள், மனைமருட்சியின் விரி, கண்டோர் இரங்கலின் தன்மை, செவிலி பின் தேடிச் செல்லல், மீட்சியின் வகைகள், விரிகள், தன்மனை வரை

தல், வரைதலின் விரிகள், மீண்டு வரைதல், உடன்போக்கு இடையீடு, வரைத லின் விரிகள் ஆகிய செய்திகளை உள்ளடக்கியுள்ளது.

கற்பியல்

கற்பொழுக்கத்தின் இயல்புகளை எடுத்துரைக்கும் இவ்வியலில் கற்பி ற்குரிய கிளவித்தொகை, இல்வாழ்க்கையின் வகைகள், விரி பரத்தையர் பிரிவி ன் வகைகள், ஊடல் வகைகள், ஐவகைப் பிரிவுகளுக்கு உரிய கிளவிகள் ஆகிய வற்றைப் பற்றி விரிவாக உரைக்கின்றது.

ஒழிபியல்

முன்நான்கு இயல்களிலும் கூற இயலாத செய்திகளைத் தொகுத்துக் கூறுவதால் இவ்வியல் ஒழிபியல் என்று அழைக்கப்பெறுகிறது. இவற்றில் செய் யுளுக்குரிய அகப்பாட்டு உறுப்புகள், திணை, கைகோள், களவு, கற்பில் கூற்றிற் குரியோர், கூற்றிற்கு உரிமை அற்றோர், தலைவன், தலைவி கூற்றிற்குரிய சிறப் பு விதிகள், நற்றாய்க்குக் கூற்று நிகழாத இடம், கூற்று நிகழுமிடம், செவிலி கூற் று, கண்டோர் கூற்று, பிறர் கூற்றுகள், தலைவி, அனைவர் கூற்றுக்கும் புறனை ட, மறையோன், அறிவர், கூற்றைக் கேட்போர், இடம், காலம், பயன், முன்ன ம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை துறையின் இலக்கணம், எச்சத்திற்குப் பு றனடை, அகப்பாட்டுள் வரும் பொருள்கள், உவம வகைகள், உள்ளுறை, வெ ளிப்படை, இறைச்சிப் பொருள் அகப்புறக் கைக்கிளை, அகப்புறக் கைக்கிளை க்கு உரியார், அகப்பொருள் பெருந்திணையின் வகை, அகப்புறப் பெருந்தி ணக்கு உரியவை, அகப்பாட்டினுள் பாடப்படுவோர், பாட்டுடைத் தலைமக்க ளுக்கு உரிய பெயர்கள், கிளவித் தலைவனுக்குப் பொருந்தாப் பெயர், அகப்புற ப் பாட்டிற்கு உரிய விதி, திணை மயக்கத்தின் இலக்கணம், அதிகாரப் புறனை ட ஆகியவற்றைக் கூறி ஒழிபியலை நம்பியாசிரியர் நிறைவு செய்கின்றார்.

களவியற்காரிகை

களவியற்காரிகை என்ற அகப்பொருள் இலக்கண நூலில் முதலிலும் இடையிலும் முடிவிலும் சில நூற்பாக்கள் கிடைக்கவில்லை. அந்நூல் சிதைவுற் ற நிலையிலேயே கிடைத்துள்ளது. களவு குறித்த நூற்பாக்கள் அதிகம் கிடைத்

துள்ளதால் களவியற்காரிகை என்னும் பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் இன்னாரென அறிய இயலவில்லை.

களவியற்காரிகை என்னும் பெயரை

"களவியற்காரிகை என்னும் நூல் நமக்கு முழுவதும் கிடைக்காவிட் டாலும், இந்நூலில் 60 நூற்பாக்கள் இருந்திருக்க வேண்டும் என்பர் பேராசிரிய ர் வையாபுரிப்பிள்ளை. நூலின் பெயரும் ஆசிரியர் பெயரும் கிடைக்காத நிை லயில் பேராசிரியரே இந்நூலுக்குக் 'களவியற்காரிகை' என்ற பெயரைச் சூட்டி அதனைப் பதிப்பித்தும்"[17] உள்ளார்.

நூலாசிரியரும், உரையாசிரியரும்

இந்நூலாசிரியர் "நம்பியகப்பொருள் போலத் துறைவகையால் கோ வைப் படுத்தியே நூலைக் கொண்டு செல்வதால், ஒருகால் நூலாசிரியரே, உை ரயாசிரியராகவும் இருந்திருக்கக் கூடும் என்பர்"[18] இரா.இளங்குமரன்.

மொத்த நூற்பாக்கள்

இந்நூலின் மொத்த நூற்பாக்கள் 60 என எஸ்.வையாபுரிப்பிள்ளை கூ றினாலும் தற்போது இந்நூலில் உள்ள நூற்பாக்கள் 53 ஆகும். இவற்றிலும் சில நூற்பாக்கள் அரைகுறையாகக் காட்சி தருகின்றன. கிடைத்த "இக்களவியற்கா ரிகையில் முதற்பத்துக் காரிகைகள் இல்லை. 22 ஆம் வரையிலான பகுதியும் ெ பரிதும் சிதைந்துவிட்டன. 36 முதல் 42 வரையிலான காரிகைகள் சிதைந்து ப டினும் 54 ஆம் காரிகை வரையிலான உரைப்பகுதிகள் பெரும்பாலும் கிடைக் கப் பெற்றுள்ளன. 54 ஆம் காரிகைக்கு மேற்பட்டவை அழிந்துவிட்டன."[19] நூ லில் 23 ஆம் நூற்பா முதல் 54 ஆம் நூற்பா வரையே உள்ளன.

களவியற்காரிகையின் இயல்பகுப்பு

இந்நூல் அகப்பொருள், களவொழுக்கம், கற்பொழுக்கம் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. அகப்பொருள் என்ற இவ்வியலில் அடங்கியு ள்ள பகுதிகள் அனைத்தும் கிடைக்கப்பெறவில்லை. களவொழுக்கவியல் என் னும் இரண்டாவது இயல் 23-ஆம் நூற்பாவில் இருந்து 42-ஆம் நூற்பாவரை அமைந்த 20 நூற்பாக்களைக் கொண்டது. இதனுள் 33,35, 36, 37,38, 39, 40, 4

1, 42 ஆகிய எண்களைக் கொண்ட ஒன்பது நூற்பாக்கள் கிடைக்கப்பெறவில்லை. மீதமுள்ள பதினொரு நூற்பாக்களே இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

களவொழுக்கம், தெய்வப்புணர்ச்சி, பாங்கற்கூட்டம், தோழியாலாய கூட்டத்தில் பகற்குறி, இரவுக்குறி, வரைவு கடாதல், உடன்போக்கு வலித்தல், அகப்புறக் கைக்கிளையின் மூன்று வகை, இயற்கைப் புணர்ச்சியின் ஏழு வகை, பாங்கனாலாய கூட்டமாகிய இடந்தலைப்பாடு, தோழியாலாய கூட்டம் ஆகிய மதியுடம்படுத்தல் அதன் கிளவித்தொகை, தோழியிலாய கூட்டக் கிளவித்தொகை, தோழி அயர்ந்துரைத்தல், செலவழுங்குவித்தல் ஆகியவற்றின் வகைகளைக் கூறி இவ்வாசிரியர் களவியலை நிறைவு செய்கின்றார்.

கற்பொழுக்கம் என்ற பிரிவின்கீழ் 12 நூற்பாக்களைப் பற்றிக் கூறுகின்றார். வெளிப்படைநிலை, கற்பொழுக்கத்தின் வகை, அவ்வகை ஒன்பதினுள்ளும் முதலாவதான வெளிப்படை நிலையின் கிளவித்தொகை, வரைபொருட்டேகல், அதன் 27 கிளவி வகைகள் ஆகியவற்றைக்கூறி கற்பொழுக்கத்தை நிறைவு செய்கின்றார்.

மாறன் அகப்பொருள்

மாறன் அகப்பொருள் என்னும் நூல் கி.பி.15 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு அகப்பொருள் நூலாகும். இந்நூலை இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவர் ஆவார். இம்மாறனகப் பொருளுக்கு மேற்கோளாய் அமைந்த கோவை நூல் திருப்பதிக்கோவை. இக்கோவை நூலையும் திருக்குருகைப்பெருமாள் கவிராயரே இயற்றியுள்ளார். இவர் ஒரு வைணவர். ‘‘காரிமாறப்பெருமான் ஆகிய நம்மாழ்வார் மேல் இம்மாறனகப்பொருளை இவர் இயற்றியுள்ளார்.’’[20]

பகுப்புக்களும், நூற்பாக்களும்

இம்மாறனகப்பொருள் அகத்திணையியல் (128), களவியல் (62), வரைவியல் (34), கற்பியல் (10), ஒழிபியல் (126) என்னும் ஐந்து இயல்களாகிய பகுப்புக்களையும் மொத்தம் 360 நூற்பாக்களையும் கொண்டு அமைந்துள்ளது. இந்நூற்பாக்கள் எளிமையும் கட்டுக்கோப்பும் சிறப்பும் உடையன.

மாறனகப்பொருளில் இடம்பெற்றுள் செய்திகள்

மாறனகப்பொருள் நம்பியகப்பொருள் போலவே ஐந்து இயல்களில் அடங்கிய செய்திகளையே சற்று விரித்து சில செய்திகளைக் கூடுதலாகச் சுட்டு கின்றது.

இலக்கண விளக்கம்

சைவ மரபைச் சேர்ந்த திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பவர் எ ழுதிய நூல் இலக்கண விளக்கம் ஆகும். இந்நூல் தொல்காப்பியம் போன்று மூ ன்று அதிகாரங்களில் ஐந்து இலக்கணங்களையும் மொழிகின்றது. மூன்றாவது அதிகாரமான பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், அணி யியல், செய்யுளியல், பாட்டியல் ஆகிய ஐந்து இயல்கள் அமைந்துள்ளன.

உரையாசிரியர்

''இலக்கண விளக்க நூலாசிரியரே உரையாசிரியரும் ஆவார் என்று ஒரு சிலரும், நூலாசிரியரின் மகனார் சதாசிவ நாவலரே உரையாசிரியர் என்று மற்றொரு சிலரும் உரைக்கின்றனர்.''[21]

அகத்திணையியல்

பொருளதிகாரத்தின் முதலாவது இயலாகிய அகத்திணையியலில் ம ட்டுமே அகப்பொருள் பற்றிய செய்திகள் அடங்கியுள்ளன. இதில் அகப்பொரு ள் பற்றிய பொதுச் செய்திகளோடு, களவு, கற்பு என்னும் கைகோள்கள் இரண் டும் அவற்றின் ஒழிபுப் பொருள்களும் 226 நூற்பாக்களில் இடம்பெற்றுள்ளன. இலக்கண விளக்கம், தொல்காப்பியம், நம்பியகப் பொருளில் சொல்லப்பட்டு ள்ள செய்திகளை சில சொற்களை மட்டும் மாற்றி உள்ளது உள்ளவாறே சுட்டு கின்றது.

தொன்னூல் விளக்கம்

தமிழ் மரபிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் இயற்றிய ஐந்திலக்கண நூல் தொன்னூல் விளக்க ம் ஆகும். இந்நூலுக்கு வீரமாமுனிவரே உரை எழுதியுள்ளார்.

நூலின் சிறப்பு

இத்தொன்னூல் விளக்கப் பொருளதிகாரம் புதுமை வாய்ந்தது. இந் நூலில் இவர் முன்னையோரைப் பின்பற்றாமல், முன்னோர் வழிச் செல்லாமல், புதுவழியில் செல்கின்றார். இதுகுறித்து ச.வே.சு. அவர்கள் ''இப்பொருளதிகாரம் காலத்திற்குத்தகப் பல மாற்றங்களுடன் மரபையும் தழுவி அமைக்கப்பட்டுள்ளது''[22] என்பர்.

தொன்னூல் விளக்கத்தில் பகுப்புகள்

இந்நூலும் தொல்காப்பியம் போன்றே எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களில் ஐந்திலக்கணத்தை 370 நூற்பாக்களில் விளக்குகின்றது. பொருளதிகரத்தில் 58 நூற்பாக்கள் உள்ளன. பதிகம், காரணம், விரிவு, தொகையுந்துணிவும் உரிமை என்னும் ஐந்து பெரும்பகுப்புக்களையும் காலஉரிமை, இடவுரிமை, பண்புரிமை, சாதித்தொழிலுரிமை, பற்றுதலுரிமை, வடிவுரிமை, ஒழுக்க உரிமை, சொல் உரிமை என்ற சிறு பகுப்புக்களையும் கொண்டுள்ளது.

பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள செய்திகள்

முதல் நூற்பாவில் கடவுள் வாழ்த்தாகிய தற்சிறப்புப் பாயிரம், பொருள்நூலின் இலக்கணம், அதன் மூன்று வகைகள், முப்பொருளின் பயன்கள், பொருளின் பொதுவழியாகிய காரணத்தின் இருவகைகள் அகத்திணையின் பன்னிரு பிரிவுகள், புறத்திணையின் மூன்று பிரிவுகள் ஆகியவற்றைக் கூறுகின்றார்.

கால உரிமை என்னும் பகுதியில் அறுவகைப் பெரும்பொழுது, சிறு பொழுதுகள், அவற்றிற்குரிய பருவநிலைகளான இயற்கைக்கூறுகள் போன்றவற்றையும் மொழிகின்றார். இடவுரிமை என்ற பகுப்பில் ஐந்திணை, அவ்வைந்து திணைகளுக்குரிய நிலங்கள், கருப்பொருளின் வகைகள், போன்றவற்றையும் பண்புரிமையில் பிறந்த சாதியையும் சாதித் தொழிலுரிமையில் நால்வகைச் சாதியினரையும் அவரவர்களுக்குரிய தொழிலையும் பற்றிக் கூறுகின்றார். சொல் உரிமை என்பனவற்றுள் பல்வேறு மொழிகள், அம்மொழிக்குரிய நாடுகள், இருவகை வழக்குகள் சிறப்புப் பெயர்கள், அகப்பொருள், புறப்பொருள் இரண்டிற்

குரிய திணைகள் ஆகியவற்றையும் தொகுத்துக்கூறி தொன்னூல் விளக்கத்தினை நிறைவு செய்கின்றார்.

முத்துவீரியம்

முத்துவீரிய உபாத்தியாயரால் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல் முத் துவீரியம் ஆகும். தொல்காப்பியம், அகத்தியம் போன்று இந்நூலும் முத்துவீரி யம் என ஆசிரியர் பெயராலேயே வழங்கப்படுகின்றது. இந்நூல் 19 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவ ர். முத்துவீரியம் நூற்பா யாப்பால் அமைந்தது. இதன் உரையாசிரியர் திருப்பா ற்கடல்நாதன் கவிராயர். இவ்வுரை பொழிப்புரையாகவும் சுருக்கமான எளிய உரையாகவும் அமைந்துள்ளது.

முத்துவீரிய இயல்பகுப்புக்கள்

முத்துவீரியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தி லக்கணங்களையும் எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் ஒவ்வொரு அதிகாரத்திலும் மும்மூன்று பிரிவுகளைக் கொண்டது. இந்நூலின் பொருளதிகாரம் 92 நூற்பாக் களைக் கொண்டது.

பொருளதிகாரப் பகுப்புகளும் செய்திகளும்

இப்பொருளதிகாரம் மூன்று இயல் பகுப்புக்களைக் கொண்டது. அ கவொழுக்கவியல் 60, களவொழுக்கவியல் 24, கற்பொழுக்கவியல் 8 என்ற எ ண்ணிக்கையில் நூற்பாக்களைக் கொண்டு விளங்குகின்றது. அகம், புறம் என்ற பகுப்புக்கள் இன்றி அகப்பொருளை மட்டுமே விரிவாக மூன்று இயல்களிலும் விளக்குகின்றது. தொல்காப்பியம் நம்பியகப்பொருள் சுட்டியுள்ள அகத்திணை ச் செய்திகளை இம்முத்துவீரியமும் உள்ளவாறே மொழிகின்றன.

களவொழுக்கவியல்

களவொழுக்கவியலில் கைக்கோளின் வகை, மன்றலின் எட்டு வகை கள், தலைமகன், தலைமகளுக்குரிய குணங்கள், களவொழுக்கம் நிகழும் விதம், அகத்திணை நிகழ்ச்சி, கைக்கிளையின் வகை, இயற்கைப்புணர்ச்சி, இடந்தலை ப்பாடு பாங்கற் கூட்டத்தின் வகை, மதியுடம்படுத்தலின் வகைகள், மதியுடம்ப

டுத்தல், இருவரும் உள்வழி அவன்வர உணர்தல், முன்னுற உணர்தல், குறையுற உணர்தல் அதன் வகைகள், நாணநாட்டம், நடுங்க நாட்டம், மடல்திறம், குறைநயப்பித்தலின் வகை, இரவுக்குறியின் வகை, ஒருவழித்தகுத்தலின் வகை, உடன்போக்கின்விரி, வரைவு முடுக்கம், வரைபொருட்பிரிதல் ஆகியவற்றையும் களவொழுக்கவியலில் கூறுகின்றார்.

கற்பொழுக்கவியல்

இவ்வியலில் கற்பின் இலக்கணம், மணச்சிறப்புரைத்தல், கற்பிற்பிரிவின் வகை, ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிப் பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையர் பிரிவின் வகைகள் ஆகிய நிகழ்வுகளோடு கற்பொழுக்கவியலை நிறைவு செய்கின்றார்.

சுவாமிநாதம்

சுவாமிக் கவிராயர் என்பவரால் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல் சுவாமிநாதம் ஆகும். இந்நூல் திருவாவடுதுறை ஆதினத் தலைவராக இருந்த சுப்பிரமணிய தேசிகரின் வேண்டுகோளுக்கு இணங்க சுவாமிக்கவிராயரால் எழுதப்பட்டது. எனவே அவரின் காலமாகிய கி.பி.19 ஆம் நூற்றாண்டே இந்நூலின் காலமும் ஆகும். சுவாமிக் கவிராயர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். “சுவாமிநாதத்திற்கு உரையாசிரியரும் பதிப்பாசிரியரும் அறிஞர் செ.வை.சண்முகம்”[23] ஆவார்.

சுவாமிநாத நூல் அமைப்பு

இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து அதிகாரத்தைக் கொண்டும், ஒவ்வொரு அதிகாரத்திற்கும் மூன்று இயல்கள் வீதம் பதினைந்து இயல்களைக் கொண்டும் விளங்குகின்றது. “சுவாமிநாதத்தின் நூற்பாக்கள் அந்தாதித்தொடையில் அமைந்த எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப்பாக்களால் ஆனவை.”[24] சுவாமிநாதப் பொருளதிகாரம்

81 நூற்பாக்களையும் அகத்திணை மரபு 14, கைக்கோண் மரபு 44, புறத்திணை மரபு 23 என்ற மூன்று இயல் பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது.

அகத்திணை மரபு செய்திகள்

இவ்வியலில் அகத்திணை வகை, திணை, பொழுது, கருப்பொருள், உரிப்பொருளின் வகைகள், ஐந்திணை நிகழ்ச்சிகள், கைக்கிளை, இயற்கைப் பு ணர்ச்சி, களவுப் புணர்ச்சியின் விளக்கம், அறத்தொடு நிற்றல், கற்பில் புணர்ச்சி , பிரிவு, ஊடல் விளக்கம் பற்றியும் கூறி அகத்திணை மரபை நிறைவு செய்கின் றார்.

கைக்கோண் மரபு

இப்பகுதியில் களவு, கைக்கிளையின் விளக்கம், களவிற்குரிய கிளவி த்தொகை, இயற்கைப் புணர்ச்சியின் விரி, வன்புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச் சி, பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கற்கூட்டத்தி ன் எஞ்சிய பகுதி, பாங்கிமதி உடன்பாடு, பாங்கியற்கூட்டம், பகற்குறி, பகற்கு றி இடையீடு, இரவுக்குறி, இரவுக்குறி இடையீடு, வரைதல் வேட்கை, ஒருவழி த் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு, வரைவு, வரைவு மலி தல், அறத்தொடு நிற்றல், செவிலி அறத்தொடு நிற்றல், உடன்போய் வரைவு, உ டன் போக்கின வரைவு, விரி உடன்போக்கின் விரியும் கற்பொடு புணர்ந்த கவ் வையும், கற்பொடு புணர்ந்த கவ்வையின் எஞ்சிய பகுதியும், மீட்சியும், மீட்சி யின் ஒரு பகுதியும், மீள் வரைவு, போக்கு இடையீடு உற்று வரைதல், வரைவுக் குரிய தொகை, கற்பு, இல்வாழ்க்கையின் விரிவுணர்த்தல் பரத்தையர் பிரிவு, உ ணர்த்த உணர்த்திடும் வாயில்கள், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள், பி ரிவு வகைகள், அகப்பாட்டு உறுப்புகள், கூற்றுகள், கூற்றுக்குரியோர், கூற்று பற் றிய சில விதிவிலக்குகள், இடம், காலம், மெய்ப்பாடு, எச்சம், பயன், முன்னம், பொருள்வகை, துறை, உவமவகை பற்றியும் கூறி கைக்கோண் மரபை நிறைவிக் கிறார்.

புறத்திணை மரபு

*மூன்றாம் இயலில் **23** நூற்பாக்கள் உள்ளன. எனினும் இவை பெரும் பாலும் புறத்திணையின் இயல்புகள் பற்றியே பேசுகின்றன.*

அறுவகை இலக்கணம்

அறுவகை இலக்கணம் தண்டபாணி சுவாமி என்பவரால் இயற்றப்ப ட்ட ஒரு அக இலக்கண நூலாகும். இந்நூல் கி.பி.19 ஆம் நூற்றாண்டில் இயற் றப்பட்டது. இவர் ஒரு சைவத்துறவி ஆவர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணத்தோடு புலமை இலக்கணம் என்ற பகுதியையும் சே ர்த்து ஆறிலக்கணம் கூறும் நூலாக இவ்வறுவகை இலக்கணம் அமைந்துள்ளது. தண்டபாணி சுவாமிகள் அகப்பொருளையே தன் நூல் முழுவதும் விளம்பியிரு ந்தாலும் இவர் அகத்தைச் சொல்லியுள்ள முறை புதிது.

இயல்பகுப்புகள்

*இந்நூல் எழுத்ததிகாரம் - **165**, சொல்லதிகாரம் - **112**, பொருளதிகா ரம் - **122**, யாப்பதிகாரம் - **134**, அணியதிகாரம் - **109**, புலமை அதிகாரம் - **14 4** என மொத்தம் **6** இயல்களையும் **786** நூற்பாக்களையும் கொண்டு அமைந்து ள்ளது.*

பொருளிலக்கணப் பகுப்பு

*பொருளிலக்கணம் அறுவகை இலக்கணத்தில் அகப்பொருள், புறப் பொருள், அகப்புறப்பொருள் என மூன்று பகுப்புக்களைக் கொண்டு விளங்குகி ன்றது. அகப்பொருள் என்ற பிரிவு, தோற்றுவாய், உறுப்பியல்பு, குறிப்பியல்பு, பழமையியல்பு, துறையில்பு என்ற ஆறு உட்பிரிவுகளைக் கொண்டு **56** நூற்பா க்களுடன் விளங்குகின்றது. புறப்பொருள் என்ற பிரிவு நிலத்தியல்பு, வழியியல் பு, வேற்றுயிர் இயல்பு, கருவியியல்பு, தொகுப்பியல்பு என்ற ஆறு உட்பிரிவுக ளையும் **55** நூற்பாக்களையும் கொண்டு அமைந்துள்ளது. அகப்புறப் பொருள் என்ற பிரிவு, எந்தவித உட்பிரிவுகளுமின்றி தனித்து **11** நூற்பாக்களுடன் அமை ந்துள்ளது.*

தோற்றுவாய்

*தோற்றுவாய் என்ற அகப்பொருள் பிரிவின் உட்பிரிவில் **5** நூற்பாக்களே உள்ளன. அவற்றில் முறையே கடவுள் வாழ்த்து, பொருளின் ப குப்பு, அவையடக்கம், அகப்பொருள் தமிழுக்கு உரியது, அகப்பொருளுக்கு உ*

ரிய விளக்கம், அடுத்த பிரிவான உறுப்பியல்பையும் என்ன எனக் கூறி தோற்று வாய் என்ற இவ்உட்பிரிவை நிறைவு செய்கின்றார்.

உறுப்பியல்பு

இந்தப் பிரிவில் 23 நூற்பாக்களில் பெண்களின் உடல் உறுப்புக்களை தலை முதல் பாதம் வரை வர்ணனை செய்கின்றார். இதில் பெண்களுக்கு இயற்கையாய் அமைந்த அழகுகள், செயற்கையாகிய ஒப்பனையால் வரும் அழகு பற்றி விரிவாகச் சொல்கின்றார்.

குறிப்பியல்பு

குறிப்பியல்பு என்ற உட்பிரிவில் பேதை முதல் பேரிளம் பெண் வரையிலான ஏழு பருவ மகளிரின் செயல்களைப் பன்னிரு நூற்பாக்களில் விவரிக்கின்றார். பழமை இயல்பு என்னும் சிறு பிரிவில் பழைய இலக்கணங்களில் கூறியுள்ள களவு நிகழ்ச்சிகளை விவரிக்கிறார். துறை இயல்பு பகுதியில் அகப்பொருட் துறைகள் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் விளக்கிச் சொல்கிறார். புறப்பொருள் நிலத்தியல்பு என்ற பகுதியில் மக்கள் வாழ்வதற்குரிய இடங்களை திணை அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையின் இயல்புகளை விவரிக்கிறார்.

வழியியல்பு என்பதில் மக்களின் தொழில்கள், இன்னபிற, செய்திகள் பற்றிக் கூறுகின்றார். வேற்றுயிர் இயல்பில் மனிதர்களன்றி கருப்பொருளாகிய விலங்கு, பறவைகளின் இயல்புகள் பற்றியும், கருவியியல்பு என்னும் பிரிவில் மக்கள் தங்கள் வாழ்வில் பயன்படுத்துகின்ற கருவிகளின் இயல்புகள் பற்றியும் விளக்குகின்றார். தொகுப்பியல்பு என்ற பிரிவில் இதுவரை சொன்ன மற்ற இயல்களின் செய்திகளைத் தொகுத்துக் கூறுகின்றார். அகப்புறப்பொருள் என்ற இப்பிரிவில் அகத்திற்குப் புறமாக உள்ள செய்திகளைக் கூறுகின்றார்.

தொகுப்புரை

- இலக்கணம் என்னும் சொல்லை முதலில் வழங்கியவர் தொல்காப்பியர் ஆவார். கி.மு.5 ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியம் முதல் கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனப் பல்வேறு இலக்கணங்கள் தோன்றித் தமிழை வளர்த்துள்ளன.
- தொல்காப்பியம், அவிநயம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறன் அகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் என்ற பதின்மூன்று நூல்கள் அக இலக்கணத்தைப் பேசுகின்றன.
- தொல்காப்பியம், இறையனார் களவியல், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறன் அகப்பொருள் போன்ற ஆறு நூல்கள் அக இலக்கணத்தை முழுமையாகப் பேசுகின்றன.
- அவிநயம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் போன்ற ஏழு நூல்கள் அக இலக்கணத்தைப் பகுதியாக உரைக்கின்றன.
- தொல்காப்பியப் பொருளதிகாரம் ஒன்பது இயல்களில் அகத்திணையியல் , களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் என்ற ஐந்து இயல்களிலும் முழுமையாகத் தொல்காப்பியர் அகப்பொருளைப் பற்றிப் பேசுகின்றார்.
- உவமையியல், செய்யுளியல் என்ற இரண்டு இயல்களிலும் சில நூற்பாக்களில் அகப்பொருளைக் கூறுகின்றார்.
- அகத்திணையியலில் முப்பொருள்கள், திணைமயக்கம், மூன்றுவகைப் பிரிவுகள் ஆகிய செய்திகளைப் பேசுகின்றார்.
- அவிநயம் எட்டு நூற்பாக்களில் பொருளதிகாரம் பற்றிப் பேசுகின்றது.
- இறையனார் அகப்பொருளில் களவு பற்றிய செய்திகளைக் கூறும் 33 நூற்பாக்களும் கற்பு பற்றிக் கூறும் 27 நூற்பாக்களும் உள்ளன.
- தமிழ்நெறி விளக்கம் என்னும் நூல் கி.பி.10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது .

- *வீரசோழியம் கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்த ஒரு இலக்கண நூலாகும். வீரசோழியத்தின் உட்பிரிவு படலம் ஆகும்.*
- *நம்பியகப்பொருள் அகத்திணையியல் தொடங்கி ஒழிபியல் ஈறாக ஐந்து பகுப்புக்களைக் கொண்டது.*
- *களவியற்காரிகையில் 23வது நூற்பா முதல் 54வது நூற்பா வரையே முழு மையாகக் கிடைக்கின்றன.*
- *மாறனகப்பொருளின் அகத்திணையியலில் 128 நூற்பாக்கள் உள்ளன.*
- *தொன்னூல் விளக்கப் பொருளதிகாரம் பதிகம், காரணம், விரிவு, தொகை யுந்துணிவும் உரிமை என்னும் ஐந்து பகுப்புக்களையும் 58 நூற்பாக்களையும் கொண்டுள்ளது.*
- *முத்துவீரியத்தின் உரையாசிரியர் திருப்பாற்கடல்நாதன் கவிராயர் ஆவார்.*
- *ஐந்து அதிகாரங்களைக் கொண்ட சுவாமிநாதம் மரபு என்னும் உட்பிரிவைக் கொண்டு விளங்குகின்றது.*
- *அறுவகை இலக்கணப் பொருளதிகாரம் அகப்பொருள், புறப்பொருள், அகப்புறப்பொருள் என மூன்று பெரும்பிரிவுகளையும் தோற்றுவாய், உறுப்பியல்பு, குறிப்பியல்பு, பழமையியல்பு, துறையியல்பு, நிலத்தியல்பு, வழியியல்பு, வேற்றுயிர்யியல்பு, கருவியியல்பு, தொகுப்பியல்பு என்னும் பத்து சிறுபிரிவுகளையும் கொண்டுள்ளது.*

சான்றெண் விளக்கம்

1. சோம.இளவரசு, இலக்கண வரலாறு, ப.9.
2. பவணந்தி முனிவர், நன்னூல், எழுத்ததிகாரம், 141.
3. சோம.இளவரசு, இலக்கண வரலாறு, ப.9.
4. க.வெள்ளைவாரணார், இலக்கிய வரலாறு, ப.113.
5. இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.203.
6. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், ப.96.
7. மேலது, ப.95.
8. இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.202.
9. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், ப.10.
10. சோம.இளவரசு. இலக்கண வரலாறு, ப.86.
11. இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.228.
12. தமி.நெறி.விள.1.
13. சோம.இளவரசு, இலக்கண வரலாறு, ப.98.
14. மேலது, ப.143.
15. மேலது, ப.142.
16. மேலது, ப.144.
17. மேலது., ப.147.
18. இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.329.
19. கா.சுந்தரபாண்டியன், தமிழில் பொருளிலக்கண வளர்ச்சி, ப.39.
20. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், ப.310.
21. சோம.இளவரசு, இலக்கண வரலாறு, ப.187.
22. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், ப.455.
23. இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.404.
24. சோம.இளவரசு, இலக்கண வரலாறு, ப.211.

இயல்-2

திணைக் கோட்பாட்டு இலக்கண வளர்ச்சி

தொல்காப்பியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலத்தை நான்காகவும் திணையை ஐந்தாகவும் பாகுபாடு செய்துள்ளது. திணை என்பது அக ஒழுக்மாகும். நிலத்துக்கும், மக்களுக்குமான தொடர்பு, உயிருக்கும், உடலுக்குமான தொடர்பைப் போன்றது. மனிதன் வாழ்வதற்குத் தேவையான அனைத்து வாழ்வாதாரப் பொருட்களையும் நிலம் தருகின்றது.

அகத்திணைகள் அனைத்தும் உணர்வு நிலையின் அடிப்படையில் தான் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஒருதலைக்காதல், பொருந்தாக்காமம் என உணர்வுகளின் அடியொற்றியே பிரிக்கப்பட்டுள்ளன. இந்த உணர்வுகள் தோற்றம் பெறும் சூழ்நிலையை நிலம், காலம் என்ற முதற்பொருள்கள் தீர்மானிக்கின்றன. தோற்றம் பெற்ற உணர்வுகள் வெளிப்பட கருப்பொருள்கள் கருவியாகத் துணை செய்கின்றன.

இத்தகைய முதல், கரு, உரிப்பொருட்களின் அடிப்படையில் களவை மேற்கொள்ளும் தலைவன் தலைவியர் தங்களுக்குள் உரையாடும் பொழுது உள்ளுறை, உவமை போன்ற பொருட்களைப் பயன்படுத்திக் களவு வாழ்வை கற்பாக்குகின்றனர். இக்கற்பு வாழ்வில் தலைவனொடு அறுவகைப் பிரிவுகள் ஏற்படுகின்றன. இத்தகைய திணை சார்ந்த கோட்பாடுகள் தொல்காப்பியத்தில் அகத்திணையில் முக்கியப் பங்காற்றுகின்றன.

தொல்காப்பியம் தமிழர்களின் முதல் நூலாக மட்டுமன்றி முதன்மையான நூலாகவும் விளங்குகின்றது. ‘‘அகம் என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல். திணை என்பது ஒழுக்கம். ஒருவனுக்கும், ஒருத்திக்கும் உளதாய காதல் ஒழுக்கமே அகத்திணை எனப்படும்’’[1] என்பர் கா.சுப்பிரமணிய பிள்ளை. மேலும் இவ்வகத்திணை பண்டைத் தமிழ் மக்களால் மூவகையாகப் பகுக்கப்பட்டது. அவை ஒருபாற்காதல் ஒத்த காதல், ஒவ்வாக்காதல் என்ற முத்திறச் சார்பாய ஒழுக்கங்களாகும்.

''பொருளதிகாரம் தொல்காப்பியனார் காலத்துக்கு முன்னும், அவர் காலத்தும் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை விளக்கம் என்று கொண்டாலும் கூர்ந்து நோக்கும் போது வாழ்க்கை விளக்கமாக மட்டும் அல்லாமல் இலக்கியக் கோட்பாடுகளின் பெட்டகமாகவும் அது திகழ்கின்ற பாங்கினைத் தெளியலாம். பொருளதிகாரத்தில் அமைந்துள்ள ஒன்பது இயல்களுமே அக இலக்கியக் கோட்பாடுகளை விளக்கிச் செல்கின்றன.''[2] இங்ஙனம் தொல்காப்பியம் சுட்டும் திணை தொடர்பான கோட்பாடுகள் பிற்றை அக இலக்கணங்களில் அமைந்துள்ள முறை குறித்து பின்வரும் பகுதி விளக்கும்.

அக இலக்கணங்கள் காட்டும் திணைகள்

உயிர்கள் யாவும் இன்பத்தை நாடுவன. உணர்ச்சிகளுள் சிறந்தது இன்ப உணர்ச்சி. அவ்வின்ப உணர்ச்சியை இயம்புவதுவே ஐந்திணை. திணை என்பது நிலம், இடம், வீடு, குலம், ஒழுக்கம் என்னும் பல்பொருள் தழுவிய ஒரு சொல் ஆகும். இவ்வகத்திணைகளுக்கான இலக்கணத்தைத் தொல்காப்பியர்,

> **''கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப''**
>
> **(தொல்.பொருள்.அகத்.1)**

என வகுப்பர். அகத்திணை என்பது தமிழுக்கே உரிய ஒன்றாகும். அகத்திணைகள் கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழுவகைப்படும்.

அவிநயத்தில் திணைகள்

தொல்காப்பியர் அகத்திணைகளை எழுதிணை எனச் சுட்டியதை அவிநயனார் மூன்று வகையாக அகத்திணை, புறத்திணை, அகப்புறத்திணை எனச் சுட்டுகின்றார். இதில் ''குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணையை அகத்திணைகள்''[3] என்று சுட்டி, புறத்திணை, அகப்புறத் திணைகள் என்பதில் என்னென்ன திணைகள் அடங்கும் என்பதை அவர் சுட்டவில்லை. ''இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், இலக்கண விளக்கம், அறுவகை இலக்கணம் என்ற

ஐந்து நூல்களும் ஐந்திணை மரபையும்''[4], ''நம்பியகப்பொருள், மாறனகப்பொ

ருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய ஆறு நூல்களும் எழுதிணை மரபையும் சுட்டுகின்றன.''[5]

தொல்காப்பியத்தில் கைக்கிளை

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கைக்கிளை பற்றிய செய்திகளை அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் ஆகிய ஐந்து இயல்களில் குறிப்பிடுகின்றார்.

அகத்திணையியலில் கைக்கிளைச் செய்திகள்

குறிஞ்சி, முல்லை, நடுவுநிலைத்திணை, மருதம், நெய்தல், கைக்கிளை, பெருந்திணை என்ற எழுதிணைகள் பற்றிய மரபைத் தொல்காப்பியர் முதல் நூற்பாவிலேயே எழுதிணையுள் முதல் திணையாகக் கைக்கிளையைக் கூறுகின்றார். இதில் '' 'கை' என்பதற்குச் சிறிய என்றும், கிளை என்பதற்கு உறவு என்றும் பொருள் கொண்டு கைக்கிளை என்பது பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்ற இளம்பூரணரின்''[6] கருத்தை ந.சுப்புரெட்டியார் சுட்டுவர். இதற்கு நச்சினார்க்கினியர் ''
'கை' என்பதற்கு பக்கம் எனப் பொருள் கொண்டு 'ஒரு மருங்கு பற்றிய கேண்மை' எனக் குறிப்பிடுவர்.''[7] ''கைக்கிளை காதல் வாழ்வில் தொடக்க உணர்வு. பெண்ணின் இசைவு அறியுமுன்பு ஆடவனிடம் தோன்றும் காதல் உணர்வு''[8] என்பர் தமிழண்ணல்.

கைக்கிளை நூலில் முதலாவதாக வைத்துக் கூறப்பட்டாலும் அதற்குரிய விளக்கம் அன்பின் ஐந்திணைகளுக்குப் பின்னே அமைந்துள்ளது. இவ்வைப்பு முறைக்கான காரணத்தை ''முதல், கருப்பொருள்களின்றி உரிப்பொருள் மட்டுமே தழுவிக் கைக்கிளையும் பெருந்திணையும் வரும்
என்ற கருத்தால் அவை அகத்திணையியலின் இறுதிப் பகுதியில் தொல்காப்பியரால் வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு''[9] என்பர்.

பிற்றைய இலக்கணங்களில் கைக்கிளை

தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிய அக இலக்கணங்களுள் ''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்க

ம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஆறு நூல்களும் தொல்காப்பியத்தைப் பி ன்பற்றி எழுதிணை மரபில் கைக்கிளையை முதல்திணை என்றே உரைக்கின்றன .''[10]

கைக்கிளைக்குரிய இலக்கணத்தினை,

''காமம் சாலா இளமையோள் வயின்
ஏமம் சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே''

(தொல்.பொருள்.அகத்.53)

என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கும்.

''கைக்கிளையின் உரிப்பொருளினை விளக்கம் செய்யும் இந்நூற்பா விற்கு பருவம் எய்தாத இளையாளிடத்து ஆடவன் கொள்கின்ற காதல் என்றே பெரும்பான்மையோர் விளக்கம் எழுதுகின்றனர். தொல்காப்பியர் காதலை, அ கத்தைக் காமம் என்றே குறிப்பிடுவார். இவ்விடத்து சாலா என்பதற்கு 'நிரம்பா த' என்றே பொருள் எழுதுகின்றனர். எனவே காதல் உணர்வு நிரம்பப்பெறாத இளையவள் என்பதே பொருத்தமாகும்.''[11]

தொல்காப்பியர் ஐந்திணை பற்றிய செய்திகளை அகத்திணையியலி ல் விரிவாக விளக்குவதையும், கைக்கிளை, பெருந்திணை பற்றிய செய்திகளைச் சுருக்கமாக விளக்குவதையும் நோக்கி ஆராய்ந்த ந.சுப்புரெட்டியார், ''ஒருதலைக் காமமாகிய கைக்கிளையிலும், ஒவ்வாக் காமமாகிய பெருந்திணையிலும் இருவர் பாலும், ஒத்த அன்பினைக் காண்டல் அரிது என்பதை உணர்த்தல் வே ண்டும். இத்தகைய பொருத்தமற்ற கூட்டுறவுகள் எந்நாட்டிலும், எக்காலத்திலு ம் காணப்பெறுபவையே. பொருந்தாத செயல்களைக் குறிப்பாகச் சுட்டியும் வி லக்கியும் பொருத்தமுடைய நற்செயல்களை வெளிப்படையாக எடுத்துரைத்து விளக்கியும் மக்களை நல்வழிப்படுத்துவதே சிறப்புடைய நூலின் குறிக்கோள் ஆகும். இதனை உளங்கொண்டே ஆசிரியர் தொல்காப்பியனார் தம் நூலில் அ

ன்பின் ஐந்திணையை விரிவாகவும், ஏனைய இரண்டினைக் குறிப்பாகவும் விள க்கியுள்ளார் என்பதை நாம் உய்த்துணர வேண்டும்''[12] என்று குறிப்பிடுகின்றார்.

நம்பியகப்பொருள் கைக்கிளையை ''காமம் நுகர்தற்கு ஏற்ற பருவம் அடையப்பெறாத இளையாளைக் (சிறுபெண்ணைக்) கண்ட தலைவன் அவளி ன் மன இயல்பை அறியாமல் அவள் அருகில் சென்று தன் காமக்குறிப்பை மே லும் மேலும் பேசுவது''[13] அகப்புறக் கைக்கிளை என்கிறது. இதனையே இலக்க ண விளக்கமும் மொழிகின்றது. ''தொல்காப்பியரின் கைக்கிளைச் செய்தியைே ய மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டு நூல்களும் மொழி கின்றன.''[14]

சுவாமிநாதமும் ''தலைவியிடத்து உண்டாகும் குறிப்பினைத் தான் அறியும் வரை தலைவன் அவளைச் சாராது நின்று நெஞ்சோடு சொல்லுதல் ை கக்கிளையாம்''[15] எனச் சுட்டுகின்றது. அகத்திணையியலில் கைக்கிளை, பெருந் திணைக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர்,

''முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப''
(தொல்.பொருள்.அகத்.55)

என்ற நூற்பாவைச் சுட்டுவர். இந்நூற்பாவிற்கு விளக்கம் தருகையில், ஒவ்வொ ரு உரையாசிரியர்களும் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர். இளம்பூரணர் தொல்காப்பியர் பெருந்திணைக்குச் சுட்டிய ஏறிய மடல் திறம், இளமை தீர்திற ம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல்திறம் என்ற நான் கிற்கும் எதிர்பதமான ''ஏறா மடற்றிறம், இளமை தீராத்திறம், தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மாறாகாத்திறம்''[16] எனக் கூறுகின்றார். மு.மணிவேல் அவர்கள் ''பெருந்திணைக்குத் தொல்காப்பியர் சொல்லிய செய ல் திறங்களின் எதிர்நிலைகளைக் கைக்கிளைக்குரியனவாகக் காட்டிப் பெருந்தி ணையும், கைக்கிளையும் உணர்வு நிலையில், செயல்திறன் நிலையில் வேறுபடு கின்றன என்று கூறுதலே இங்குப் பொருந்துவதாகக் கொள்ளலாம்''[17] என்கின்ற ார். தொல்காப்பியர் சுட்டிய கைக்கிளை பற்றிய இச்செய்தி, பிற்கால அக இல க்கணங்களில் இடம்பெறவில்லை.

களவியல் சுட்டும் கைக்கிளைச் செய்திகள்

தொல்காப்பியர் களவியலின் முதல் நூற்பாவில் திருமண முறைகளைப் பற்றிக் கூறுகின்றார். அவர் எண்வகைத் திருமணமுறைகள் எனக் குறிப்பிடுகின்றாரே தவிர அவை என்னென்ன என விளக்கிக் கூறவில்லை. எனினும் உரையாசிரியர்கள் தான் அவை பற்றி விளக்கிக் கூறுகின்றனர். இதில் இளம்பூரணர் ''பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்திருவம், அசுரம், இராக்கதம், பைசாசம்''[18] என எண்வகைத் திருமணமுறைகளை வரிசைப்படுத்தி உரைக்கின்றார். பின் பாலதாணையால் ஒத்த தலைவனும் தலைவியும் கூடி வாழும் களவு வாழ்வில் பாங்கனால் நிகழக்கூடிய நிமித்தம் பன்னிரெண்டு வகைப்படும் என மற்றொரு நூற்பாவில் உரைக்கின்றார். அதற்கடுத்த நூற்பாவில்,

''முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே''

(தொல்.பொருள்.கள.14)

எனக் கைக்கிளை பற்றிய செய்தியைச் சுட்டுகின்றார். இதற்கு உரைவகுத்த இளம்பூரணர் ''எண்வகை மணத்தினுள்ளும் முன்னையவாகிய அசுரம் முதல் மூன்றும் கைக்கிளைப் பாற்படும்''[19] என்று கூறுகின்றார். மாறனகப்பொருள் எண்வகை மணங்களை வரிசையாகக் கூறியபின் அதற்கு அடுத்த நூற்பாவில்,

''அவற்றுள்
முறைபெறப் பின்நிகழ் மூன்றும் கைக்கிளை''

(மாற.அக.131)

என்று தொல்காப்பியக் கருத்தையே ''மாறனகப்பொருளும்''[20] வழிமொழிகின்றது. சுவாமிநாதம், ''ஐந்திணை ஒழுக்கத்துள் களவு என்பது வேதத்துள் சொல்லப்பட்ட பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற எட்டு வகைத் திருமணத்துள் காந்தருவ மணத்தோடு ஒத்தது. பின்னால் உள்ள அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்று வகையும் கைக்கிளைக்கும் முன் உள்ள பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கு வகையும் பெருந்திணைக்குரியது.''[21] என இளம்பூரணரின் கருத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

மெய்ப்பாட்டியியல் கைக்கிளைச் செய்திகள்

மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியர் கைக்கிளைக்குரிய மெய்ப்பாடுகளைத் தனியாகக் கூறவில்லை. எனினும்,

''அவையும் உளவே அவையலங் கடையே''[22]

என்ற நூற்பாவில் களவுக்குரிய மெய்ப்பாடுகளாக முன் தொல்காப்பியர் சுட்டிய ''புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல், நகுநயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கு இன்மை, கூழை விரித்தல், காதொன்று களைதல், ஊழணி தைவரல், உடை பெயர்த்து உடுத்தல், அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இல்வலியுறுத்தல், இருகையும் எடுத்தல், பாராட்டு எடுத்தல், மடம் தப உரைத்தல், அலர் நாணல், கொடுப்பவை கோடல், தெரிந்துடம்படுதல், திளைப்பு வினை மறுத்தல், கரந்திடத்து ஒழித்தல், கண்டவழி உவத்தல், புறஞ்செயச் சிதைத்தல், புலம்பித் தோன்றல், கலங்கி மொழிதல், கையறவு உரைத்தல் என்ற இருபத்து நான்கு மெய்ப்பாடுகளும் ஐந்திணை ஒழுக்கத்துக்கு அல்லாத கைக்கிளைக்கும் பொருந்துவனவாகும்''[23] என்கிறார்.

செய்யுளியலில் கைக்கிளை பற்றிய செய்திகள்

தொல்காப்பியர் செய்யுளியலில் முப்பத்து நான்கு உறுப்புகளைச் செய்யுளுக்கு உரியனவாகக் கூறுகின்றார். இதில் கைக்கிளைப் பொருள் அடங்கிய செய்யுளைப் பாடும்பொழுது வெண்பாவில் தொடங்கி ஆசிரியப்பாவில் முடிக்க வேண்டும் என்கிறார். இதன்படி முதல் இரண்டடியை வெண்பாவிலும் இறுதி இரண்டடியை ஆசிரியப்பாவிலும் அமைக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. பின் செய்யுளுக்குரிய
34 உறுப்புகளுள் திணையாகிய உறுப்பு பற்றிக் கூற முற்படுகையில் ''கைக்கிளை தொடங்கி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை வரை உள்ள ஏழு பெருந்திணைகளும் முன் சொன்ன முறைப்படியே சொல்லப்படும்''[24] எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

புறத்திணையியலில் கைக்கிளைச் செய்திகள்

புறத்திணையியலில் தொல்காப்பியர் கைக்கிளையைத் துறை நிலையில் வைத்துக் கூறுகின்றார். புறத்திணைகளுக்கு அகத்திணைகளைச் சார்புநி

லத் திணையாகக் கூறுவது போலக் கைக்கிளையைப் பாடாண்திணைக்குப் புற மாகக் (தொல்.செய்.25) குறிப்பிடுகின்றார். "தொல்காப்பியர் கைக்கிளையை அகக்கைக்கிளை, அகப்புறக் கைக்கிளை
என இருவகையாகக் கூறுகின்றார். தொல்காப்பியத்தில் அகக்கைக்கிளை திணை நிலையிலேயும் அகப்புறக் கைக்கிளை பாடாண் திணையில்
துறை நிலையிலேயும் அமைகின்றன. இங்ஙனம் துறைநிலையில்
அமையும் கைக்கிளையைப் பெண்பாற் கைக்கிளையாகக் கொள்ளலாம் என்பர்."[25]

அன்பின் ஐந்திணைகள் பற்றி அக இலக்கணங்கள்

பெருமையும், உரனும் கொண்ட தலைவனும் அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்பும் கொண்ட தலைவியும் உயர்ந்த பாலது ஆணையால் ஒருவரை ஒருவர் கண்டு, காதல் கொண்டு இன்பம் துய்க்கின்றனர். ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பின் காரணமாக நிகழும் இவ்வொழுக்கம்
ஐந்து நிலங்களிலும், ஐந்து திணைகளிலும் நிகழ்வதால் இவை அன்பின் ஐந்திணை என வழங்கப்பட்டன. இத்தகைய அன்பின் ஐந்திணைகள் பற்றி முதல் நூலான தொல்காப்பியம் நேரடியாக நூற்பாவில் கூறவில்லை. அவிநயம் இறையனார் அகப்பொருள் போன்ற இலக்கண நூல்களும் அன்பின் ஐந்திணைகள் பற்றிய செய்திகளைக் கூறவில்லை. நம்பியகப்பொருளே முதன் முதலில்,

"ஐந்திணை உடையது அன்புடைக் காமம்"   (நம்.அக.4)

என்று ஐந்திணைக்குரிய ஒழுக்கத்தைச் சுட்டுகின்றது. "மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம்"[26] ஆகிய நான்கு நூல்களும் நம்பியகப்பொருள் கூறியதையே வழிமொழிகின்றன.

அன்பின் ஐந்திணை

தொல்காப்பியர் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்து திணைகளைப் பற்றி நடுவண் ஐந்திணை என்னும் பெயரால் குறிப்பிடுகின்றார். இந்நடுவண் ஐந்திணையில் நிலம் பகுக்கப்பட்ட திணைகளை,

"அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்

படுதிரை வையம் பாத்திய பண்பே'' (தொல்.பொருள்.அக.2)

என மொழிகின்றார். இதில் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் நடுவில் அமைந்த பாலைத்திணையை நடுவணது திணை எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். இந்நூற்பாவில் கைக்கிளை, பெருந்திணைக்கு நடுவில் அமைந்த நடுவண் ஐந்திணையிலும் அவற்றிற்கு நடுவில் அமைந்த பாலைத்திணை தவிர்த்து மற்ற நான்கு திணைகளுக்கும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் நிலம் உண்டு. பாலைத்திணைக்கு நிலம் இல்லை.

திணைப்பெயர்கள்

அன்பின் ஐந்திணைகளான முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற இத்திணைகளுக்குரிய திணைப்பெயரைத் தொல்காப்பியர் தனி நூற்பாவாகச் சுட்டவில்லை. எனினும் ''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற அறுவகை இலக்கண ஆசிரியர்களும் தங்கள் நூலில் ஐந்திணைக்குரிய பெயர்களைத் தனி நூற்பாவாகச் சுட்டுகின்றனர்.''[27] *இதனை,*

''குறிஞ்சி, பாலை முல்லை மருதம்
நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே'' (நம்.அக.6)

என்னும் நூற்பா விளக்கும்.

பெருந்திணை

பெருந்திணை பற்றிய செய்திகளைத் தொல்காப்பியர் அகத்திணையியல், களவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் என்னும் நான்கு இயல்களில் நான்கு நூற்பாக்களில் சுட்டுகின்றார்.

எழுதிணையுள் பெருந்திணை

தொல்காப்பியர் பெருந்திணை என்பதை அகத்திணை ஏழனுள் ஒன்று என்கிறார். ''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஆறு நூல்களும் அகத்திணைகள் ஏழனுள் பெருந்திணை ஒன்றென மொழிகின்றன.''[28]

திணை என்பது ஒழுக்கம். இங்கு 'பெருந்திணை' என்பது குறிப்பால் சிறிய ஒழு

க்கம் எனப் பொருள்படும். கழிகாமத்தைச் சிறுமை எனக் கூறும் மரபு. தாலி பெருகிற்று, விளக்கைப் பெருக்கு என்பவற்றுள் பெருமைச் சொல் மறுதலைப் பொருளில் வருவது போலவே, பொருந்தாக்காமத்தைப் பெருந்திணை என்பதிலும், பெருமை அடை ஒழுக்கச் சிறுமையைச் சுட்டுவதாகும். எனவே பெருந்திணை என்பது அவையில் உரைக்கவொண்ணா இழிவொழுக்கத்தை மறைத்துக் கூறும் செய்யுள் வழக்குச் சொல்லாகும்.

''தொல்காப்பியர் கூறிய பெருந்திணைக்குரிய இலக்கணத்தை இலக்கண விளக்கம் அப்படியே எடுத்து மொழிகின்றது.''[29]

''பெருந்திணையை ஒவ்வாக்கூட்டம் என்றுரைத்த இளம்பூரணர் மடலேறுதலைத் தலைவனுக்கு உரியதாக்கியும் இளமை தீர்திறத்தைத் தலைமக்கள் இருவருக்கும் உரியதாக்கியும் (தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதல், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதல், இவ்விருவரும் இளமைப்பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றிக் காமத்தின்மேல் மனம் நிகழ்தலும் என மூவகையாக உரைப்பர்) தெளிவு ஒழிந்த காமத்தின் கண்ணே மிகுதலைத் தலைவனுக்கு உரியதாகவும் ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவதைத் தலைமக்கள் இருவருக்கும் உரியதாகவும் உரைப்பர். இதில் இளமைதீர்திறம், மிக்க காமம் ஆகிய இரண்டும் பெண்பாலார்க்கும் உரியது என்பது இளம்பூரணர் கருத்தாகும். இதில் மடலேறுதல் என்பது தலைவியைத் தமர் மறுக்கும் நிலையிலும், பிறவாறு இடையூறுகளுற்ற நிலையிலும் நிகழும்.''[30]

''மடலேறுவேன் என வாயால் அச்சுறுத்துவது அன்பின் ஐந்திணையுள் அடங்கும். மடலேறினால் அது பெருந்திணைப்பாற்படும். இளமை கழிந்த நிலையில் தோன்றுவது இளமைதீர் திறம், தேறுதல் சொல்லித் தெளிவிக்க முடியாது பெருகிய காமத்தால் வருந்துவது தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், நான்காவதாக வரும் மிக்க காமத்து மிடல் என்பது தலைவி ஊடியிருக்கவும் காம மிகுதியால் தனது மிடல் கொண்டு வலிதிற் கூடுவது அல்லது எதிர்ப்பட்டாரை வலிதிற் புணர்தலாகும்.''[31]

''பெருந்திணையானது எண்வகை மணங்களுள் நான்கு மணம் பெறுதல் போல அறம், பொருள், இன்பம் என்னும் நிலையாமை மூன்றையும் பெறுதலான் காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்றென ஒப்புமை கூறுகின்றார்''[32] நச்சினார்க்கினியர்.

பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலின் இறுதியில் பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் இருபதை,

> **''இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,**
> **எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்,**
> **பசிஅட நிற்றல், பசலை பாய்தல்,**
> **உண்டியில் குறைதல், உடம்புநனி சுருங்கல்,**
> **கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்,**
> **பொய்யாக் கோடல், மெய்யே என்றல்,**
> **ஐயம் செய்தல், அவன் தமர் உவத்தல்,**
> **அறன் அளித்து உரைத்தல், ஆங்கு நெஞ்சு அழிதல்**
> **எம்மெய் ஆயினும் ஒப்புமை கோடல்**
> **ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல்,**
> **நலத்தக நாடின், கலக்கமும், அதுவே''**[33]

எனச் சுட்டுகின்றார். இவ்விருவது மெய்ப்பாடுகளும் ''புணர்ச்சிக்கு நிமித்தமாகாதன போன்று காட்டினும் இவற்றை நன்மை பொருந்த மிகவும் ஆராய்ந்துணரின் புணர்ச்சி நிமித்தமேயாகும்''[34] என்பர் வெள்ளைவாரணன்.

அகப்பாடலும், பொருளும்

அகத்திணைகளைச் சுட்டிய தொல்காப்பியர் அதனையடுத்து எழுதிணைகளையும் பாடுதற்குரிய பொருள் பற்றி,

> **''முதல் கரு உரிப்பொருள் என்றமூன்றே**
> **நுவலும் காலை முறை சிறந்தனவே**
> **பாடலுள் பயின்றவை நாடும் காலை''**[35]

என்னும் நூற்பாவில் உரைப்பர். இதனால் அகப்பாடல் பாடுவதற்கு முதல், கரு, உரிப்பொருள்கள் இன்றியமையாதன என்பது புலனாகும்.

முதல், கரு, உரிப்பொருட்கள்

உயிர்கள் நிலத்தை ஆதாரமாகக் கொண்டே வாழ்கின்றன. இவ்வாறு உயிர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள நிலமும் அவ்விடத்துத் தோன்றும் காலமும் முதற்பொருள் ஆகும். நிலத்தினும் காலத்தினும் தோன்றும் பொருள் கருப்பொருள். அவ்வுயிர்களின் ஒழுகலாறுகளே உரிப்பொருள் ஆகும்.

உரையாசிரியர்களில் முதல்வரான இளம்பூரணர்

"யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம் முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம் உரிப்பொருள் தானேவரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம்"[36] என்கிறார். நச்சர் இம்முப்பொருள்கள் பற்றி "முதலில் கருவும், கருவில் உரிப்பொருளும் சிறந்து வரும்."[37] "அகப்பாட்டுக்களில் உரிப்பொருளே தலையாயதென்பதும், அதற்கு முதலுங் கருவும் துணையாகச் சார்ந்து வருபொருள்களாமென்பதும் வெளிப்படை."[38] "முதற்பொருளாலும், கருப்பொருளாலும் முடிவு செய்ய முடியாத நிலை ஏற்படின் உரிப்பொருள் கொண்டு தெளிவாக முடிவு செய்யலாம். ஏனென்றால், திணைப் பாடல்களுக்குப் புற உடலாக இருப்பவை முதலும் கருவும், உயிராக இருப்பது உரிப்பொருளே, புறக்கோலங்களால் மயக்கம் நிகழ்ந்தவிடத்து உரிப்பொருள் கொண்டு திணை முடிவு செய்த இலக்கியக் கொள்கையையே இம்மரபு தெளிவுறுத்துகிறது."[39] திணை நோக்கில் முதற்பொருளே முப்பொருள்களுள் முதன்மையான பொருள் என அறுதியிட்டுக் கூறலாம். "முதற்பொருள் அடிப்படையில் இருக்கின்றது. கருப்பொருள் பின்னணி அமைக்கின்றது. காதலர் மகிழ்ச்சிக்கு உரிய உரிப்பொருள் கொலுவிருக்கின்றது."[40]

தொல்காப்பியர் சுட்டிய முதல், கரு, உரி என்ற முப்பொருளைப் பற்றி கொள்கையை பிற்றைய அக இலக்கணங்களான தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய ஏழு நூல்களும் உரைக்கின்றன. தமிழ்நெறி விளக்கம் அகப்பொருள் பற்றிப் பேசும் பொழுது,

"முதல்கரு வணைந்த உரிப்பொரு ளாகமே"

(தமி.நெறி.விள,2)

என்கிறது. நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் என்ற ஐந்து நூல்களும் அதனையே வழிமொழிகின்றன. "தொன்னூல் விளக்கம் ஒரு நூற்பாவில் முப்பொருள் என்ற சொல்லை மட்டும் பயன்படுத்தியுள்ளது."[41]

தொல்காப்பியம் காட்டும் கருப்பொருள்

பாடலுள் பயிலும் பொருட்களைத் தொல்காப்பியர் முதல், கரு, உ ரிப்பொருள் என்ற வரிசை முறையிலேயே குறிப்பிடுகின்றார். ஆனால் அப்பெ ாருட்களின் விரி பற்றிக் கூறும் பொழுது முதற்பொருள், உரிப்பொருள், கருப்பெ பாருள் என்ற வரிசை முறைமையில் உரைக்கின்றார்.

கருப்பொருட்கள்

நிலமும், பொழுதுமாகிய முதற்பொருளின் வழியாகக் கருக்கொண் ட பொருள் கருப்பொருள் ஆகும். " 'கரு' என்பது 'கர்' என்னும் வேர்வழிச்செ ால்."[42]

கர், கார், கருமை, கருமுகில் என்றும் மழை என்றும் இக்கருப்பொரு ள் அழைக்கப்படுகின்றது. இவ்உலகத்தில் மழை இன்றேல் புல்லும் தலைக்காது , கருக்கொள்ளாது என்ற காரணத்தால் தான் இக்கருப்பொருள் இன்றியமையா தது ஆகும். "முதலும் உரியுமல்லாத அகப்பொருள்களுள் அகத்திணைக்குக் க ருவாய் அமைவன யாவும் கருப்பொருள் என்பர் அகநூலார்."[43] *தொல்காப்பிய ர் "தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ் என்ற எட் டைக் கருப்பொருளாகக் கொள்கின்றார்."*[44] *இதில் அவ்வகை பிறவும் என்பதற் கு இளம்பூரணர் "பூ, நீர் என்னும் இரண்டையும்"*[45] *நச்சினார்க்கினியர் "பூ, நீர், ஊர், மக்கள், தலை மக்கள்"*[46] *என்னும் ஐந்தையும் புலவர் குழந்தை "மரம் உ ண்மையால் பூவும் உண்டு, நிலம் எனில் நீருண்டு மக்கள் அந்நிலத்து வாழ்வோ ரே"*[47] *என மூன்றையும் கூறுகின்றனர். இக்கருப்பொருள் வைப்புமுறையைப் ப ற்றிச் சுட்டும்பொழுது,*

“கடவுளால் படைக்கப்பட்ட மக்கள் கடவுளைத் தம் அறிவு முதிர்ச்சியால் உணர்ந்து படைத்துக் கொண்டனர். வாழ்க்கை நலனுக்கு, உலக ஒழுங்குமுறைக்குக் கடவுட் கொள்கை இன்றியமையாததென உளத்திற் கொண்டு போற்றினர். உணவினும் முதன்மையானது என்று கண்டனர். உணவை மறந்தாலும் கடவுளை மறத்தல் ஆகாது என்று உறுதியாகக் கொண்டனர். அதனாலன்றோ ஆசிரியர் தொல்காப்பியனாரும் உணவுக்குமுன் தெய்வத்தை வைத்துள்ளனர்”[48] என்பர். “புணர்தல் முதலிய உரிப்பொருட்களைச் சிறப்பித்துப் பாடும் அகப்பாட்டுக்களில் அவ்வுரிப்பொருள்கள் நன்கு விளங்குதற் பொருட்கு அவ்வுரிப் பொருட்குத் துணையாக அது நிகழும் நிலம் பொழுதுகளாகிய முதற்பொருள்களையும் உணவு, விலங்கு, புள் முதலிய கருப்பொருள்களையும் அமைத்துப்பாடுதல் போல, அவ்வந்நிலமக்கள் தத்தம் நிலத்தலைவர்களை வாழ்த்தி வணங்குவதாகப் பாடுதலும் உரிப்பொருளறிவுக்கு ஏற்புடையதே ஆகும். இக்கருத்து பற்றியே தெய்வத்தைக் கருப்பொருள்களி லொன்றாகக் கூறியுள்ளார்.”[49] கருப்பொருட்களில் யாழைத் தொல்காப்பியர் கூறியதற்கான காரணத்தை “இன்னிசையில் தமிழர்கள் நன்கு சிறந்திருந்தனர் என்பதற்கும் வாழ்வில் இன்னிசையும் தக்க இடம் பெறுதல் வேண்டும் என்பதற்காகவுமே தொல்காப்பியர் யாழாகிய இன்னிசைக் கருவியையும் கருப்பொருளில் ஒன்றாக்கியுள்ளார்”[50] என்பர். இக்கருப்பொருள் மயங்கிவரும் முறையைத் தொல்காப்பியர்,

“எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்” (தொல்.பொருள்.அகத்.21)

எனச் சுட்டுகின்றார்.

“ஆயர், வேட்டுவர் ஆடூஉத்திணைப் பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே”
(தொல்.பொருள்.அகத்.23)

என்பதில் மக்களைச் சுட்டுகின்றார். இதில் “ஆயர் என்பது முல்லைநில மக்களுக்குத் திணைப் பெயராகும். அதுவே போல் வேட்டுவர் என்பதும் முல்லைநில மக்கட் பெயரென்று இளம்பூரணரும், குறிஞ்சி நில மக்கட் பேரென்று நச்சரும் உரைப்பர்.”[51] மு.இராகவையங்கார் “குறிஞ்சி மக்கள் பெயர் கானவர், வேட்டுவர், குன்றுவர் முல்லைநில மக்கள் பெயர் கோவலர், இடையர், ஆயர், பொது

வர்''[52] என்பர் ஆகிய பெயர்களைக் கூறுவர். தொல்காப்பியர் முன்னர் கூறிய கருப்பொருட்கள் எட்டுடன் பூ, மக்கள் என இரண்டைச் சேர்த்து பத்தாக வகைப்படுத்தி உரைக்கின்றார்.

திணைக்குரிய கருப்பொருட்கள்

தொல்காப்பியர் ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருட்களைப் பற்றி விரிவான செய்திகளைத் தரவில்லை. எனினும் நான்கு திணைகளுக்கும் உரிய நிலங்களைப் பற்றி உரைக்கும் பொழுது கருப்பொருட்களில் முதன்மையான தெய்வத்தோடு சேர்த்தே திணைகளுக்குரிய நானிலங்களை வகைப்பாடு செய்கிறார். அவர் ''காடாகிய முல்லை நிலத்திற்கு மாயோன் ஆகிய திருமாலும் மலை நிலமாகிய குறிஞ்சிக்குச் சேயோனாகிய முருகனும், நீர்நிலம் மிகுந்த வயலாகிய மருதத்திற்கு வேந்தனும் பெருமணல் கரையையுடைய கடல் சூழ்ந்த நெய்தல் நிலத்திற்கு வருணனும் தெய்வம்''[53] என்று தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

பிற்றை இலக்கணங்களில் கருப்பொருள்

தொல்காப்பியர் சுட்டிய கருப்பொருள் பற்றிய செய்திகளையும் அதன் எண்ணிக்கையையும் தொல்காப்பியத்திற்குப்பின் தோன்றிய அக இலக்கணங்களில் தமிழ்நெறி விளக்கம் ''தெய்வம், மானிடம், செய்தி, உணவு, இசை, விலங்கு என்ற அறுவகையைக் கருப்பொருளாக உரைக்கின்றது. தொல்காப்பியர் போலவே இவ்வாசிரியரும் கருப்பொருள் வகையை இனையன பிறவும்''[54] எனக் கூறுகின்றார். இவ்வினையன பிறவும் என்பதில் என்னென்ன இடம்பெற்றுள்ளன என இவ்வுரையாசிரியர் சுட்டவில்லை.

நம்பியகப்பொருள் கருப்பொருள் வகையை,

> **''ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு**
> **ஊர்நீர் பூமரம் உணாபறை யாழ்பண்**
> **தொழில் எனக்கரு ஈர்எழுவகைத் தாகும்''** ***(நம்.அக.19)***

எனப் பதினான்காக உரைக்கின்றது. தொல்காப்பியர் பத்தெனக் கூறிய கருப்பொருள் வகையை எடுத்துக் கொண்ட நம்பியாசிரியர், ஆயர் வேட்டுவர் என்னும் நூற்பாவில் நிலத் தலைவனைப் பொதுவாகத் தொல்காப்பியர் மக்கள் எனச்

சுட்ட இவர் அதனை உயர்ந்தவர், இழிந்தவர் என இரண்டாகப் பிரித்தும் கூறி யுள்ளார். பின் தொல்காப்பியர் சொன்ன பூவையும் தொல்காப்பிய உரையாசி ரியர்கள் சொன்ன ஊர், நீர், பண் ஆகியவற்றைச் சேர்த்துக் கருப்பொருளைப் ப தினான்கு வகையாகக் கூறுகின்றார். நம்பியகப்பொருள் போலவே, ''மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநா தம் என்ற ஐந்து நூல்களும் கருப்பொருட்களைப் பதினான்கு வகையாகவே ெ மாழிகின்றது.''[55] தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் என்னும் இரண்டு நூல்க ளும் ''தலைமக்களைச் செல்வர் என்ற சொல்லாலும், குடிமக்களைச் சேர்குடி எ ன்ற சொல்லாலும்''[56] குறிப்பிடுகின்றன.

சுவாமிநாதம், ''தெய்வம் தொடங்கி தொழில் வகை உள்ள பதினான் கு பொருளும், பிறவும் கருப்பொருளாக ஆக்கம் பெறுபவை என்கிறார். 'பிறவு மே' என்ற சொல்லாட்சியை இவ்வாசிரியர் சுட்டியிருப்பது கருப்பொருள்கள் பதினான்கைத் தவிர இன்னும் பிற உள்ளன''[57] என்பதைப் புலப்படுத்துகின்றது.

திணைகளுக்குரிய கருப்பொருட்கள் பற்றிப் பிற்கால அக இலக்கணங்கள்

தொல்காப்பியர் கருப்பொருட்கள் பத்தென வரையறுக்கின்றார். தி ணைக்குரிய கருப்பொருட்களில் தெய்வத்தை நானிலத்திற்கும் மக்களை இருதி ணைக்குமே சுட்ட, பிற்றைய இலக்கணங்கள் அன்பின் ஐந்திணைக்கு உரிய க ருப்பொருட்கள் பதினான்கை ஒவ்வொரு திணைக்கும் முழுமையாகச் சுட்டி, த னிநூற்பாவாகவே தருகின்றன. இது பிற்றைய இலக்கணங்களின் திணைக்கோ ட்பாட்டில் கருப்பொருள் சார்ந்த வளர்ச்சியாகும்.

தொல்காப்பியத்தில் உரிப்பொருள்

அகப்பொருள் நிகழ்ச்சிகளுக்கு இந்த முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மூன்றும் உறுப்புகளாக அமைகின்றன. ஒவ்வொரு திணைக்கும் தனித்தனியே இவை அமைய வேண்டும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் குறி ப்பிடுவர். உரிப்பொருள் தான் இவற்றுள் உயிர்நாடியாக இருப்பது;
காதல் நாடகத்தின் இயக்கம் இதுதான் என்று கூடத் துணிந்து கூறலாம். ''உரிப்

பொருள் அக ஒழுக்கத்திற்கு உரிய பொருள் ஒருவன், ஒருத்தியின் கூட்டு வாழ்வுக்கு உரிய பொருள்.''[58]

''உரிப்பொருளாகிய காதல் நிகழ்ச்சியை இன்ன நிலத்தில் இன்ன பொழுதில், இன்ன பொருள்களைச் சூழ்நிலையாக அமைத்துக் கவிஞர்கள் கவிதயை ஆக்கும் பொழுது இம்மூவகைப் பொருள்களும் காட்சியளிக்கும். ஒரு பாடலில் இந்தப் பொருள்கள் அனைத்தும் வரவேண்டும் என்ற வரையறை இல்லை. சில வரவுங்கூடும். சில வராமல் இருத்தலும் கூடும். ஆனால் உரிப்பொருள் மட்டும் கட்டாயம் வருதல் வேண்டும்.''[59] அத்தகைய உரிப்பொருள் பற்றித் தொல்காப்பியர்,

''புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேரும்காலை திணைக்கு உரிப்பொருளே''
(தொல்.பொருள்.அகத்.16)

என்னும் நூற்பாவில் உரைப்பர். இவ்வுரிப்பொருளைத் தொல்காப்பியர் வகைப்படுத்திய விதம் பற்றி புலவர் குழந்தை, ''புணர்ச்சி தலைவன், தலைவி இருவர்க்கும் ஒப்ப நிகழ்தலான் அதை முதலிலும், புணர்த்த பின் அல்லது பிரிவின்மையான் பிரிவை அதன் பின்னும், தலைவன் பிரியின் தலைவி ஆற்றியிருத்தல் அவன் பிரிவைப் பொறுத்து இருத்தல் முல்லையாதலின் இருத்தலை அதன் பின்னும், அங்ஙனம் ஆற்றியிராது தலைவி இரங்கலை அதன் பின்னும், இரங்கிய தலைவி, தலைவன் வரின் ஊடுவாளாதலின் ஊடலை அதன் பின்னும் வைத்தனர் ஆசிரியர்''[60] எனக் கூறுகின்றார். தொல்காப்பியர் ஐந்து திணைக்கும் உரிப்பொருளும் அவற்றின் நிமித்தமும் சேர்த்து அவை பத்து வகைப்படும் என்கிறார்.

''தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கணவிளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஆறு நூல்களும் தொல்காப்பியம் போலவே உரிப்பொருளை பத்தென மொழிகின்றது.''[61] மேலும் நம்பியகப்பொருள் உரிப்பொருள் பத்தையும் அந்தந்த நிலத்தொடு சேர்த்து,

''போக்கு எல்லாம் பாலை புணர்தல் நறும்குறிஞ்சி
ஆக்கம் சேர்ஊடல் அணிமருதம் - நோக்கும்கால்
இல்இருத்தல் முல்லை இரங்கல் நறுநெய்தல்
சொல்விரிந்த நூலின் தொகை''[62]

எனச் சிறப்பாகப் பொருத்திக் காட்டுகின்றது.

தொல்காப்பியத்தில் முதற்பொருள்

முதல், கரு, உரி என்னும் முப்பொருள்களில் ''முதற்பொருள், நிலம், பொழுது என இரண்டு வகைப்படும் என்றும், அவ்விரண்டின் தன்மையைச் சா ர்ந்தது''[63] என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார். இவர் இயற்கை நிலத்தையும் இயற்கைப் பொழுதையுமே முதற்பொருளாகக் கொள்கின்றார்.

''கருப்பொருளும் உரிப்பொருளும் தோன்றுவதற்கு முதலாகிய பொ ருள் என்பதாலேயே நிலம், காலம் என்னும் இரண்டும் முதற்பொருள் என அழைக்கப்பட்டது. கருப்பொருள் இருத்தற்கும் உரிப்பொருள் நிகழ்தற்கும் முதற்பொருளே உரியது''[64] எனப் புலவர் குழந்தை சுட்டுகின்றார். நிலமும், காலமும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும். இவற்றின் இன்றியமையாமை கருதியே அவற்றை முதற்பொருள் என்று அழைத்தனர்.

நிலம் பற்றிக் காசுப்பிள்ளை அவர்கள் கூறும்போது ''நிலமில்லாதவிடத்து மக்கள் யாண்டு வாழ்வர்? மக்கள் பிறப்பையும், இறப்பையும், பிறசெயல் களையும் வரையறுத்து நிற்பது காலந்தானே? நிலவுலகில் ஓரெல்லையுட்பட்ட காலத்தளவு வாழ்தலே மக்கள் வாழ்க்கையாமாதலின் காலத்தின் பெருமை வெளிப்படை''[65] உயிர்கள் நிலத்தை ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றன. இவ்வாறு உயிர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள நிலமும் அவ்விடத்துத் தோன்றும் காலமும் முதற்பொருள் ஆகும்.

பிற்கால இலக்கணங்கள் உரைக்கும் முதற்பொருள்

தொல்காப்பியத்திற்குப்பின் நம்பியகப்பொருள், மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற ஐந்து நூல்களும் முதற்பொருளைப் பற்றி உரைக்கின்றன.

திணையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைப் பாகுபாட்டைக் கையாண்ட தொல்காப்பியர், நிலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலப் பாகுபாட்டையே சுட்டியுள்ளார். அவர் ப

ாலையை ஒரு நிலம் எனக் கொள்ளவில்லை. ஏனெனில் தமிழ்நாட்டில் பாலை என்ற நிலப்பகுதி அக்காலத்தில் இல்லாமையே காரணம்.

''ஆசிரியர் தொல்காப்பியர் நால்வகை நிலத்தையுங் கூறுமிடத்தே அவற்றிற்குரிய தெய்வங்களையும் குறித்தார். காட்டிற்குத் தெய்வம் மாயோன் என்று பிற்காலத்தார் கருதினும் மாயோனாகிய கருநிறமுடைய அம்மையையே சிறப்பாகக் கொள்ள வேண்டும். மாயோள் மேய காடுறையுலகமும் என்ற பாடமே சிறந்தது. காடுகிழாஅள் என்றதுமது. நாட்டுப்புறங்களிலும், காடுகளிலும் பெருவழக்காக வழிபடப்படும் தெய்வம் சக்தியின் வேக வடிவாகிய காளியே ய, பிற்காலத்தே மரபொற்றுமை பற்றிக் கோவலர் மாயோன் வழிபாட்டைக் கைக்கொண்டனர். மாயோளும், மாயோனும் உடன் பிறந்தார் என்னுங் கொள்கையுங் காண்க.''[66]

மாயோனுக்கு மருமகனாகிய முருகன் வழிபாடு குறிஞ்சி நிலத்திற் சிறப்பாக நிகழ்ந்தது. ஆனைமுகக் கடவுளின் வழிபாடும் குறிஞ்சி நிலத்திற்கே உரியதாயினும் ஐந்திணைக் காதலொழுக்கத்திற்குச் சிறப்பாவது முருக வழிபாடேயாமென்பது பற்றி முருகனையே குறிஞ்சிக்குத் தெய்வமென்றார் போலும் 'வேந்தன் மேய தீம்புன லுலகம்' என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறினமையால் மருதநிலத்துத் தெய்வம் வேந்தன் என்பது வெளிப்படை. இந்திரனையே வேந்தனென்பதற்குக் காரணம் அவன் மழைத் தெய்வமாதல் பற்றியும் வயலுக்கு நீர் இன்றியமையாதது பற்றியமென்க. 'இன்திறன்' என்ற சொற்றொடரே இந்திரனென மருவிற்றென்ப. மன்திறம் என்றது மந்திரம் என மருவியது போல, மருதநிலத்துக்குரிய நகரங்களில் முதன்மையாக வழிபடப்பட்ட தெய்வம் சிவம் என்பது. 'நுதல்விழி நாட்டத் திறையோன் கோட்ட முதலாக' என்ற சிலப்பதிகார அடியாற் புலனாதலின் வேந்தனென்பானைச் சிவனென்பாருமுளர்.''[67]

நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் வண்ணன் என்பது, வண்ணன் என்ற சொல்லே வருணனாயிற்று. வண்ணன் என்பது கடல்நிற வண்ணனாகிய திருமாலினைக் குறிக்கும் என்ப. நீர்க்குத் தெய்வம் அவனாதல் காண்க.

பாலை நிலத்திற்குத் தெய்வம் கதிரவன், துர்க்கை என்பாருமுளர். போர்க்குத் தெய்வம் துர்க்கையாதலாலும், போர் பெரும்பாலும் பாலையில் நிகழ்ந்தமையாலும் துர்க்கையைப் பாலைக்குத் தெய்வமென்பர். துர்க்கையே கொற்றவை போலும். ''கடவுளுடைய சக்தியைக் கோர வடிவத்தில் வழிபடுவது காளி வணக்கமெனவும், சாந்த வடிவத்தில் வழிபடுவது உமை வணக்கமெனவும், பெயர் பெற்றது. போரில் நிகழ்ந்த வழிபாடே கொற்றவை வணக்கமாயிற்று. கடவுட் சக்தியை ஆண் வடிவமாக வழிபடுவது மாயோன் வணக்கமாகும்.''[68]

பெரும்பொழுது பற்றித் தொல்காப்பியர்

பெரும்பொழுதுகள் ஆறு என்பதை தொல்காப்பியரின் நூற்பாக்களால் அறிந்து கொள்ள முடிகிறது. அவர் ஒவ்வொரு திணைக்குரிய பொழுதுகளைச் சுட்டும்பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது இரண்டையும் சேர்த்தே சுட்டுகின்றார். கார்காலம், கூதிர்காலம், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என அறுவகைப் பெரும்பொழுதைக் கூறுகின்றார்.

அக இலக்கணங்களில் பெரும்பொழுதுகள்

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய பன்னிரு அக இலக்கண நூல்களில் ''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஆறு நூல்களிலும் பெரும்பொழுது பற்றிய செய்திகள் தொல்காப்பியம் போலவே''[69] சுட்டப்பட்டுள்ளன. தமிழ்நெறி விளக்கம் பெரும்பொழுதின் ஐவகைகளை,

''கூதிர் வேனில் கெழுங்கா ரொழிபனி
வேனில் முன்பனி மெய்யுயர் பொழுதே''

(தமி.நெறி.விள.4)

எனச் சுட்டுகின்றது. ''நம்பியகப்பொருள் இளவேனிலைச் சிறப்பு வாய்ந்த இளவேனில் எனச் சுட்டுகின்றது.''[70]

சிறுபொழுதுகள் பற்றித் தொல்காப்பியம்

பெரும்பொழுது ஆறு எனக் கூறிய தொல்காப்பியர் மாலை, யாமம், வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல் எனச் சிறுபொழுதையும் ஆறெனச் சுட்டுகின்றார். ''தொல்காப்பியத்தைப் பின்பற்றி மாறனகப்பொருள், இலக்கண

விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம் என்ற நான்கு இலக்கணங்களும் சிறுபொழுது ஆறெனவே''[71] சுட்டுகின்றன. சான்றாக அவ்வறுவகைச் சிறுபொழுதைப் பற்றி மாறனகப்பொருள்,

> ***''அவற்றுள்***
> ***காலை, நண்பகல், கதிர்மறை வென்றா***
> ***மாலை, யாமம், வைகறை யென்றா***
> ***நாளென் றறுபா னாழிகை பெறுமுதல்''   (மாற.அக.12)***

எனச் சுட்டுகின்றது. ''மாறனகப்பொருளும், இலக்கண விளக்கமும் அறுவகைச் சிறுபொழுதைப் பற்றிய செய்திகளோடு, சிறுபொழுதிற்குரிய கால எல்லையையும் கூறுகின்றது.''[72] சிறுபொழுது பற்றிய இலக்கண வளர்ச்சியாக இது விளங்குகிறது. மேலும் இத்தொன்னூல் விளக்கம் இச்சிறுபொழுதுகள் ஒவ்வொன்றிற்குரிய நிகழ்ச்சிகளையும் அறுவகைச் சிறுபொழுதைச் சுட்டியபின் அந்நூற்பாவிலேயே திணை அடிப்படையில் அடுத்தடுத்து மொழிகின்றன. சான்றாக முல்லைலத்திணையின் சிறுபொழுதாகிய மாலைக்குரிய நிகழ்ச்சிகளை,

> ***''மாலைக்கு உரிமை மலர்தல் உற்பலம் புள்***
> ***சோலை சேர்ந்து ஒலித்தல் சுரபி கரைதல்***
> ***துன்அடைத் தாமரை சுளித்துஎனக் கூம்பல்***
> ***கன்னடம் காம்போதி கனியப் பாடலே''***
> ***(தொன்.விள.173:3-6)***

எனச் சுட்டுகின்றது.

தொல்காப்பியத்தில் குறிஞ்சித் திணைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்

குறிஞ்சிநிலச் சோலை பசுமை நிறத்தால், தீந்தேனால், நறுமணத்தால், வண்டொலியால் ஐம்புலன்களுக்கும் இன்பம் அளிக்க ஏற்றதாதலால் தொல்காப்பியரும் இந்நிலத்தைக் காதலர்கள் சந்தித்து இன்பம் அனுபவிக்கும் இடமாகத் தேர்ந்தெடுத்தார். தொல்காப்பியர் குறிஞ்சித் திணைக்குரிய பெரும்பொழுது பற்றி,

> ***''குறிஞ்சி***
> ***கூதிர் யாமம் என்மனார் புலவர்''***
> ***(தொல்.பொருள்.அகத்.7)***
> ***''பனிஎதிர் பருவமும் உரித்தேன மொழிப''***
> ***(தொல்.பொருள்.அகத்.8)***

என இருநூற்பாக்களில் சுட்டுகின்றார்.

இப்பொழுதுகள் பற்றித் தொல்காப்பியர் சுட்டும் பொழுது "குறிஞ்சிக்குப் பெரும்பான்மையின் களவிற்புணர்ச்சி பொருளாதலின் அப்புணர்ச்சிக்குத் தனியிடம் வேண்டுமேன்றே. அது கூதிர்காலத்துப் பகலும், இரவும் நுண்துளி சிதறி இயங்குவார் இலராம் ஆகலின் ஆண்டு தனிப்படல் எளிதாகலின் அதற்கு அது சிறந்தது. நடுநாள் யாமமும் அவ்வாறாகலின் அதுவும் சிறந்தது என்கிறார்."[73]

"இலக்கியத்தின் சுவையை மிகுதிப்படுத்த இலக்கிய ஆசிரியர்கள் தம் கற்பனையால் பல உத்திமுறைகளைக் கையாளுவது வழக்கம். அந்த முறையில் புணர்தல் என்ற நிகழ்ச்சிக்கு இயற்கை வளமும் தனிமையும் மிக்க மலைநிலம் ஏற்றது. தனிமை குளிர்காலத்தில், நடுயாமத்தில் இயல்பாக அமைவது. எனவே குறிஞ்சி நிலத்தில், குளிர்காலத்தில் நள்ளிரவில் குறிஞ்சிக் கருப்பொருள்களின் சூழ்நிலையில் குறிஞ்சி உரிப்பொருளாகிய புணர்ச்சி நடைபெறுவதாகச் சொன்னால் கட்டாயம் நாம் அதன் தனிச்சுவையை உணரமுடியும்"[74] என்பதையெல்லாம் தொல்காப்பியர் நன்கு உணர்ந்ததால் தான் அவ்விடத்தில் தன்னையே குறிஞ்சிக் காதலராகப் பாவித்து இலக்கணம் படைத்தால் போதும். ஆதலால் இவ்வளவு சிறப்பாக காதல் செய்வதற்கான இடத்தை மலையைத் தேர்ந்தெடுத்துக் கூறியுள்ளார்.

இக்குறிஞ்சிக்குரிய பெரும்பொழுது சிறும்பொழுதுகள் பற்றி நச்சர் கூறும் பொழுது, "இனிக் குறிஞ்சியாவது புணர்தற்பொருட்டு அது இயற்கைப் புணர்ச்சி முதலியனவாம். இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின் அளவு நீட்டிப்பக் கருதுந் தலைவற்கு அக்களவினைச் சிறப்பிக்குங்கால், தலைவி அரியளாக வேண்டுமாகவே அவ்வருமையை ஆக்குவது ஐப்பசியுங் கார்த்திகையுமாகிய கூதிரும் அதன் இடையாமமு மென்பது, என்னை? இருள் தூங்கித் துளி மிகுதலிற் சேறல் அரிதாதலானும், பானாட் கங்குலிற் பரந்துடன் வழங்காது மாவும் புள்ளுந் துணையுடன் இன்புற்று வதிதலிற் காமக் குறிப்புக் கழியப் பெருகுதலானும் காதன் மிகுதி நோக்காது வருந்தலைவனைக் குறிக்கண் எதிர்ப்பட்டும் புணருங்கா

ல் இன்பம் பெருகுதலின், இந்நிலத்திற்குக் கூதிர்க்காலஞ் சிறந்ததெனப்படும்''[75] என்கிறார்.

பொதுவாகக் காதலர்கள் தம்முள் எப்போது கூடினாலும் எவ்வளவு நேரம் கூடினாலும் அவர்களுக்கு ஒரு மணிநேர அளவும் ஒரு நிமிடம் போலவே தோன்றும். பிரிவையே மனம் நாடாது. அவ்வாறு இருக்கையில் கூதிர்கலத்தில் இவ்வியல்பு இன்னும் மிகவே செய்யும். ஆதலால் தான் தொல்காப்பியரும் கூதிர்காலத்து யாமப்பொழுதைக் காதலர் கூடுவதற்கு ஏற்றதாகப் படைத்துள்ளார். தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய அக இலக்கணங்களில் ''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற ஐந்து நூல்களும்''[76] தொல்காப்பியர் சுட்டியதையே மொழிகின்றன

தொல்காப்பியம் சுட்டும் முல்லைத்திணைக்குரிய பொழுதுகள்

தொல்காப்பியர் ஆவணி, புரட்டாசி மாதங்களை உள்ளடக்கிய ''கார்காலமாகிய பெரும்பொழுதும் மாலைப் பொழுதாகிய சிறுபொழுதும்''[77] முல்லைத் திணைக்குரிய இரு பொழுதுகள் என்கிறார்.

இதற்கு விளக்கம், ''முல்லைக்குக் காரும் மாலையும் உரிய பொழுதென்றார். ஆவணியும், புரட்டாசியும் கார்காலம், முயற்சியின் பொருட்டு அயலூருக்குச் சென்ற தலைவர் மீளுங்காலம் அக்காலமே மீளும் சிறுபொழுது மாலையாகும். அவரை எதிர்பார்த்திருக்குங் காதலியின் கற்பொழுக்கம் முல்லைக் குரியதாதலின் அப்பொழுதுகளை முல்லைக்குரியனவாகக் கூறினர். நாள்தோறும் வெளிவேலை முடித்துத் தலைவன் வீட்டிற்கு மீளுங்காலம் மாலையே. தலைவியும் வீட்டு வேலை முடித்து ஓரிடத்திலிருக்குங் காலம் மாலையாதல் காண்க. இருத்தலாகிய தொழிலை முல்லையோடிணைப்பதற்கு ஏது என்னையெனின் முல்லை நிலமானது மாலைக் காலத்தில் தங்கிப் பொழுது போக்குவதற்கேதுவாய புற்றரையும் அதன்பால் நிழல்வீசும் மரங்களுங் கலந்த இடமேயாதலினென்க''[78] எனத் தருகின்றார்.

நாள்முழுதும் தலைவிக்கு இல்லப்பணிகளிலேயே ஆர்வம் உள்ளதால் அதைச் செய்வதிலேயே மனத்தைச் செலுத்துவாள். தன் கடமைகளை எல்ல

ாம் முடித்துவிட்டு பொழுது சாயும் நேரத்தில் வினையையே உயிராகக் கொண்டு சென்ற தலைவனின் வரவை எண்ணி அவனையே உயிராகக் கொண்டு ஆற்றியிருப்பாள் என்பதைக் கருத்தில் கொண்டே தொல்காப்பியரும் முல்லை நிலத்திற்கு மாலைப்பொழுதைச் சிறந்ததெனச் சுட்டியுள்ளார்.

பிற்றை இலக்கணங்களில் பெரும்பொழுதுகள்

பிற்றை அக இலக்கணங்களில் ''நம்பியகப்பொருள், மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஐந்து நூல்களும் தொல்காப்பியர் மொழிப்படியே கார்காலத்தை முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுதாகவும், மாலைப்பொழுதைச் சிறுபொழுதாகவுமே''[79] மொழிகின்றன.

மருதத்திற்குரிய சிறுபொழுதுகள்

மருதத்திணைக்கு, ''பின்னிரவுப் பொழுதும் விடியற்காலை நேரமும்''[80] சிறுபொழுதுகளாகும் என்கிறார். ''வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலப் பகுதி என்றும் வற்றாத நீரையுடைய ஆறு கால்வாய்களாகப் பிரிந்து பாயும் பகுதியாகும். இம்மருதநிலம் விளைபொருட்களைக் குன்றாது நல்கும். இங்கு வாழும் உழவர்கட்கு ஓய்வுநேரம் அதிகம் இருக்கும். ஓய்வு நேரத்தை இவர்கள் இன்பத்திலும் களியாட்டத்திலும் கழிப்பர். இத்தகைய வளமலிந்த மருதநிலத்தில் வாழ்பவர்களிடையே விலைமகளிருடன் இன்பம் நுகரும் வழக்கமும் இருக்கும். இதைக்கேட்ட தலைமகள் தன் கணவன் வீட்டிற்கு வருங்கால் ஊடல் கொள்வாள். அவனுடன் பிணங்கிக் கெள்வாள். அவள் பிணக்கைத் தீர்ப்பதற்கு வாயில்களாகச் சிலர் தோன்றுவர். இவ்வாறு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு மனக்களிப்பிற்காக நாடக வழக்காகக் கவிஞர்கள் பாடல்களை அமைப்பர். தலைவன் யாதாவது ஒரு வினையின் பொருட்டுத் தங்கிக் காலம் தாழ்ந்து வரினும் தலைவி அவன் பரத்தை வீடு சென்றாள் என்று படைத்து மொழிந்து ஊடுவதாகவும் கவிதைகள் ஆக்கம் பெறும்''[81] என மருதத் திணைக்குச் சிறுபொழுதுகள் பொருந்தும் விதம் பற்றியும் புலவர் கவிதைகள் புனையும் முறை பற்றியும் உரையாசிரியர்களும் பிற நூல் ஆசிரியர்களும் சுட்டுவர்.

''மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம் என்ற மூன்று நூல்களும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி இரண்டு பொழுதுகளை மருதத்திற்குரிய சிறுபொழுதுகளாகச் சுட்டுகின்றன.''[82] ஆனால் நம்பியகப்பொருள், ''இருள் புலர் காலை''[83] எனக் காலைப்பொழுது என்ற ஒன்றை மட்டும் சிறுபொழுதாகச் சுட்டுகின்றது.

தொல்காப்பியத்தில் நெய்தல் திணைக்குரிய சிறுபொழுது

தொல்காப்பியர் நெய்தல் திணைக்கு எற்பாடு என்ற பின்மாலைப் பொழுதே அறுவகைச் சிறுபொழுதில் நெய்தலுக்குப் பொருந்தும் சிறுபொழுதாகும் எனக் கூறுகின்றார். இவ்வெற்பாடு பகற்பொழுதின் பிற்கூறு ஆகும்.

''நெய்தலாகிய கடலும் கடல் சார்ந்த நிலத்தில் கடல் அலை உயர்ந்து, தாழ்தல், மிகுந்த துயரம் குறைந்த காலை ஏற்படும் இரக்கத்தினை ஒத்திருத்தலால் அச்சூழ்நிலையைத் தலைவி கண்ணுறும் போது அவளிடம் இரக்க உணர்ச்சியைத் தோற்றுவிக்கும். இதற்குரிய சிறுபொழுதே எற்பாடு ஆகையால், அந்நேரம் இவ்விரக்க உணர்ச்சியை மிகுதிப்படுத்திக் காட்டும்''[84] அதனால் தான் இவ்வெற்பாடாகிய சிறுபொழுது நெய்தலுக்குப் பொருந்துவதாக அமைந்தது. ''நெய்தற்குப் பெரும்பான்மையும் இரக்கம் பொருளாதலின் தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற்பொழுதினுள் இராப்பொழுது மிகுமாதலின் அப்பொழுது வருதற்கேதுவாகிய எற்பாடு கண்டார் இனி வருவது மாலையென வருத்தமுறுதலின் அதற்கு அது சிறந்தது என்க.''[85]

பிற்றைய இலக்கணங்கள் சுட்டும் நெய்தல் திணைச் சிறுபொழுது

தொல்காப்பியர் எற்பாடு எனக் கூறியதை மாறனகப்பொருள், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற மூன்று நூல்களும் உள்ளவாறே ஏற்றுக் கொள்ள நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும் எற்பாட்டை 'வெய்யோன் பாடு' என மொழிகின்றது. மருதம், நெய்தலுக்குரிய பெரும்பொழுதுகள் பற்றித் தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை.

பாலைத்திணைக்குரிய பொழுதுகள்

தொல்காப்பியர் பாலைத்திணையை நேரடியாக நூற்பாவில் கூறாவி ட்டாலும் அவற்றிற்குரிய நிலத்தைக் குறிப்பிடாவிட்டாலும் மற்ற திணைகளு க்குரிய பொழுதுகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, பாலைத் திணைக்குரிய பொழுதுகளை,

''நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே''
(தொல்.பொருள்.அகத்.11)

என்றும்,

''பின் பனிதானும் உரித்தென மொழிப''
(தொல்.பொருள்.அகத்.12)

என்றும் என இரண்டு நூற்பாக்களில் சுட்டுகின்றார். ''நால்வகை யொழுக்கங்க ளிலும் நிற்றலால் பாலைத்திணை நடுவுநிலைத் திணை எனப்படும்.''[86]

முதிர்வேனிற்காலம் ஆனியும், ஆடியுமாகிய திங்களிரண்டுமாம். இ தில் ''வேனிலென்பது முதிர்வேனிற் பருவத்தையே குறிக்கும். அதுவும் பிரிவுக் குரித்தாகலின், முதிர்வேனிலிற் பிரிந்தார் கார்காலத்தில் கூடுவர் இளவேனில் கூடுதலுக்கே உரிய பருவமாகும். பின்பனிக் காலத்தில் பிரிந்தார் இளவேனிலிற் கூடுவர்.''[87] மேலும் பாலைத்திணைக்கு பின்பனியான மாசித்திங்களும், பங்கு னித் திங்களும் உரியதெனக் கூறுகின்றார். எனினும் இளம்பூரணர் ''வேனில் ே பாலப் பின்பனி பாலைக்கு சிறப்பு இன்று''[88] எனக் கூறுகின்றார். பாலைத்திை ணக்குரிய இருபொழுதுகளைத் தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த ''நம்பியக ப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாத ம் என்ற ஐந்து நூல்களும் தொல்காப்பியர் கூறியதையே சுட்டுகின்றன.''[89]

தொல்காப்பியம் சுட்டும் திணைமயக்கம்

அன்பின் ஐந்திணைகளில் ஒரு திணை மற்றொரு திணையில் அதாவ து ஒவ்வொரு திணைக்கும், ஒவ்வொரு உரிப்பொருட்கள் உண்டு. குறிஞ்சித் தி ணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், மற்ற நான்கு திணை களில் ஒரு திணையில் மயங்கி வந்தாலும் அதை நீக்காது அவ்வாறே ஏற்றுக் ெ காள்வர் அறிவுடையோர். எனினும் ஒரு திணைக்குரிய நிலம் மற்றொரு திணை

க்குரிய நிலத்தில் மயங்காது (தொல்.அகத்.14) எனத் திணை மயக்கத்தைச் சுட்டுகின்றார். இதில் ''ஒவ்வொரு ஒழுக்கத்திற்கும் இன்ன நிலம், இன்ன பெரும்பொழுது, சிறுபொழுது, இன்னின்ன கருப்பொருட்கள் என வரையறை செய்யப்பட்டனவேனும் அவை அவ்வாறன்றி மாறியும் வருமென்பது கருத்து. வேறு நிலத்தொடு மயங்குதலென்பது அந்நிலத்துக் கருப்பொருளொடுங், காலத்தொடும் மயங்குதலே யாமென்றற்கு 'நிலனொருங்கு மயங்குதல் இன்று' என்றார்.

''பெரியரைக் கோங்கின் பொன்மருள் பசுவீ
விரியிணர் வேங்கையொடு வேறுபட மிலைச்சி
விரவுமல ரணிந்த வேனிற் கான்யாற்றுத்
தேரொடு குறுக வந்தோன்
போரொடு புணர்ந்தன் றன்னையிவ ளுயிரே'' (ஐங்.367)

'தேரொடு குறுக வந்தோன் பேரொடு புணர்ந்தன்று இவள் உயிரே' என்றது, போதுமலர் வரைவின்கண் செவிலிக்கு அறத்தொடு நின்றது. குறிஞ்சி, கோங்கு - கருப்பொருள், வேனில் -
பாலைக்குரிய காலம். எனவே, இது பாலைக்கண் குறிஞ்சி யொழுக்கம் நிகழ்ந்தது. கருவொடும், காலத்தொடும் மயங்கிற்றென்க என இளம்பூரணர் கருத்தையே புலவர் குழந்தையும்''[90] உரைக்கின்றார்.

திணை மயக்குறுதலும் என்னும் இந்நூற்பாவில் கருப்பொருளும் முதற்பொருளில் காலமும் மயங்குதல் பற்றியே தொல்காப்பியர் சுட்டுகின்றார். நச்சர் கூறுவது போல் உரிப்பொருள் மயக்கத்தை இங்கு சுட்டவில்லை. தொல்காப்பியர் சுட்டிய இத்திணை மயக்கத்தை மாறனகப்பொருள் ஆசிரியர்,

''நலனுடை யுரிப்பொருண் மயங்கினும் நால்வகை
நிலன்மயங் காதென நிகழ்த்தினர் புலவர்'' (மாற.அக.300)

எனச் சுட்டுகின்றார். இதில் தொல்காப்பியர் நிலன் மயங்காது என்று சொன்ன கருத்தை இவ்வாசிரியரும் ஏற்றுக் கொள்கின்றார். அதனொடு சேர்த்து உரிப்பொருள் மயக்கத்தையும் சுட்டுகின்றார். முத்துவீரியம் தொல்காப்பியர் சுட்டிய திணை மயக்கத்தையே''[91] சுட்டுகின்றது. எனினும் இவர் நிலம் மயங்குதல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

கருப்பொருள் மயக்கம்

தொல்காப்பியர் அகத்திணையியலில் கருப்பொருள் மயக்கம் பற்றிக் கூறும்பொழுது, ''ஒரு நிலத்திற்கு உரியதாகக் கூறப்பட்ட பூ, புள் என்ற கருப்பொருள்கள், அவ்வக் கருப்பொருட்கு உரிய நிலத்தொடும், பொழுதொடும் இயைந்து வந்திலவாயினும் கூறப்பட்ட ஒழுக்க நிகழிடத்தொடு பொருந்த அதற்கேற்ற பயன் தருவதாய் அமையும்''[92] எனக் கூறுகின்றார். இந்நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் கருப்பொருள் மயங்கி வந்தாலும் கடியப்படுதலில்லை எனக்கூறி கருப்பொருள் மயக்கத்தை ஏற்றுக் கொள்கிறார். கருப்பொருள் பெரும்பாலும் தத்தமக்குரிய நிலம், பொழுதொடு இயைந்து வருதலே சிறந்த முறை. அவ்வாறில்லாமல் பிறநிலத்துவரின் மயக்க மெனப்படாது அந்நிலத்திற்கும் அவை உரிய பொருளாகவே கொள்ளப்படும்.

தொல்காப்பியம் பூவும், புள்ளும் மயங்கும் எனக் கூறிய கருப்பொருள் மயக்கத்தை மாறனகப்பொருள், ''ஒரு நிலத்துக்கு உரிமையுடைய பூ, மரம், பொழுது, பறவை, விலங்கு, உணவு வகை என்பன மற்றொரு நிலத்திற்கு உரியனவாக வந்தாலும் அதனை நீக்காது ஏற்றுக்கொள்வர்''[93] எனச் சுட்டுகின்றது. இந்நூல் பூ, மரம், பறவை, விலங்கு, உணவு வகை என்ற கருப்பொருள்களோடு முதற்பொருளில் பொழுதும் மயங்கும் என்று கூறுகின்றது.

தொல்காப்பியர் சுட்டும் உவமம் பற்றிய செய்திகள்

உவமம் என்பது திணையுணர்வதற்குரிய ஒரு கருவியாகும். உவமத்தின் பொது இயல்புகளைத் தொல்காப்பியர் அகத்திணையியலிலும் பிற சிறப்பிலக்கணங்களை உவமையியலிலும் கூறுகின்றார். இத்தகைய திணை உணர்வதற்குரிய உவமத்தைத் தொல்காப்பியர்,

''உள்ளுறை உவமம் ஏனைஉவமம் எனத்
தள்ளாதாகும் திணையுணர் வகையே''

(தொல்.பொருள்.அகத்.49)

எனச் சுட்டுகின்றார். இதில் உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்னும் இவ்விரு உவமங்களில் திணையுணர்வதற்குச் சிறந்தது உள்ளுறை உவமமாகும். ஏனெனில் இவ்உள்ளுறை உவமம் ஐந்திணை உணர்த்தும் உரிப்பொருட் பகுதிகளில்

ஏனைய உவமம் போல் அருகாமல் வந்து பயிலும் என்றும் கூறுகின்றார். உள்ளுறை உவமம் அகத்திணைக்கே சிறந்ததாதலின் உள்ளுறை உவமம் பற்றிய மேற்கண்ட நூற்பா உவம இயலில் கூறப்பெறாது அகவொழுக்கம் கூறும் அகத்திணையியலில் கூறப்பட்டது.

உள்ளுறை உவமம்

அகச்செய்யுள்களில் ஒருவர்க்கு ஒருவர் பேசிக்கொள்ளும் போது தலைவன், தலைவி சார்ந்த காதல் நிகழ்வுகளை வெளிப்படையாக வெற்றி வர்ணனையாகச் சுட்டினால் அச்செய்யுள் சிறக்காது எனக் கருதிய தொல்காப்பியர் உள்ளுறைகளை அதனுள் அடக்கி ஒரு மரபாக்கியுள்ளார். இச்செய்யுளில் பயன்படுத்தப்படும் பொருட்களைக் கொண்டு திணையை உணரமுடியும் என்பதனைத் தொல்காப்பியர்,

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்"
(தொல்.பொருள்.அகத்.51)

என விளக்குகின்றார். உவம ஆற்றலால் குறிப்புப் பொருள் உணர்த்துவது உள்ளுறை உவமம் ஆகும். அகத்திணையியலில் பிரிவு வகைகளுக்குப்பின் கூற்று வகைகளைக் கூறவந்த தொல்காப்பியர் அக்கூற்றில் பயன்படும் உள்ளுறை உவமத்தை மேற்கண்டவாறு விளக்குகின்றார்.

தலைவன் ஒருவன் தலைவியோடு கொண்ட காதலைக் கற்பாக்க முயலாமல் தொடர்ந்து களவை நீட்டிக்கவே எண்ணம் கொள்கின்றான். இத்தகைய களவு நீட்டிப்பால் அலர் தோன்ற, தலைவி வருந்த அதனைக் கண்டு தலைவியின் வருத்தத்தைப் போக்க எண்ணிய தோழி தலைவனை வரைவு கடாவ எண்ணி ஒரு உவமையை,

"கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது

நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட!'' ***(அகம்.2)***

என்ற படலின் மூலம் சுட்டி தலைவனுக்கு உணர்த்த எண்ணம் கொள்கின்றாள்

தலைவனே உன்நாட்டு மலையில் செழுமையான பழுத்த வாழைப்ப ழங்களும் பெரிய சுளைகளையுடைய இனிப்பு மிகுந்த பலாப்பழங்களும் பறிப் பவர்க்கு ஆளின்றி வெடித்துச் சிதறி அதிலிருந்து பாயும் தேன் உன்நாட்டுப் பாறை இடுக்கில் வழிந்து நீரைப் போல் கிடக்க த ண்ணீருக்காக அங்கு வந்த குரங்கு அதை மிகுந்த நீர் வேட்கையால் அதிகம் பருகி அதன் போதை மிகுதியால் தன் மரம் விட்டு மரம் ஏறும் தொழி லை மறந்து சந்தனமர அடியில் மலர் படுக்கையில் வீழ்ந்து படுத்திருக்கும்.

அதைப்போல் நீயும் தப்பித்த மானைத் தேடிவந்த நீ மான்விழியாளை ளப் பார்த்து மையல் கொண்டு அவளிடம் துய்க்கும் களவு இன்பப் போதையி ல் வீழ்ந்து அவளைத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நிகழ்த்த வேண்டி ய அறத்தை மறந்து களவு வாழ்விலேயே காலத்தைப் போக்குகின்றாய். எனவே அதனைக் கைவிட்டு தலைவியை விரைவில் மணந்துகொள் என வரைவு கடா வுகிறாள். இப்பாடலில் பொதிந்துள்ள உள்ளுறையான மரம், விலங்கு, உணவு ப் பொருட்களையும் களவுக் கருத்தையும் கொண்டு இந்தப் பாடல் குறிஞ்சித் திணைக்கு உரியது என உணரமுடிகின்றது. தொல்காப்பியர் உள்ளுறை உவமங் கள் பற்றிக் கூறிய செய்தியை நம்பியகப்பொருளார், ''அகப்பாட்டினுள் பொதி ந்து கிடக்கும் உவமை உள்ளுறை உவமம், வெளிப்படை உவமம் என்னும் இரு வகைகளை உடையதாகும்''[94] எனக் கூறுகின்றார்.

உள்ளுறை உவமத்தின் நிலைக்களன்

''அகத்திணையில் பயின்று வரும் உள்ளுறை உவமம் கருப்பொருள்க ளுள் தெய்வம் என்ற ஒன்றை மட்டும் நீக்கி மற்ற பிற கருப்பொருள்களைத் தன க்கு ஏற்ற இடமாக நிலைக்களனாகக் கொண்டு வரும் என்று ஒப்பியலறிந்தோர் கூறுவர்.''[95] மேற்கண்ட அகநானூற்றுச் செய்யுளில் (அகம்.2) மரங்களும் தெய் வம் கழிந்த வாழை, பலா, தேன், குரங்கு போன்ற குறிஞ்சித்திணைக்குரிய கருப்

பொருள்கள் ஆகும். இங்கு இத்தகைய குறிஞ்சிக் கருப்பொருளை நிலைக்களன் களாக இச்செய்யுள் கொண்டுள்ளது.

''ஐம்புலன்களால் அறியத்தக்க கருப்பொருள்களை இடனாகக் கொள்ள வேண்டும் என்று கருதியே, 'தெய்வம் ஒழிந்ததை' என்றார். தெய்வம் புலன்களுக்கு எட்டாத ஒன்று என்று கருதியே தொல்காப்பியர் ஒதுக்கினார் போலும்''[96] இக்கருத்தையே புலவர் சிவலிங்கனாரும் ''உணவு முதலிய கருப்பொருள்கள் கண்ணுக்குப் புலப்படுவன. அவற்றின் தொழில்கள், அவற்றால் நடைபெறும், நடத்தப்பெறும், தொழில் கண்ணுக்குப் புலப்படுவன. ஐம்பொறிகளால் நுகரப்படுவன. ஆனால், தெய்வம் கண்ணுக்குப் புலப்படாதது. அதனால் நுகரப்படும் செய்தியும் புலப்படாதது. புலன்களால் உய்த்துணரப்படுவது. எனவே வெளிப்படையாக அறிய வராததாலும் ஞானிகளால் அல்லது மற்றவரால் அவ்வப்போது நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்டு அனுபவிக்கப் பெறுவதாலும், தெய்வக் கருப்பொருள் நிகழ்ச்சி வெளிப்படையாக நடைபெறாது. எனவே தான் , தெய்வத்தை நீக்கி மற்றைய கருப்பொருள்களை உள்ளுறைப் பொருளுக்கு நிலைக்களன் என்றார்.''[97]

தெய்வம் உள்ளுறை கூறுவதற்கு ஏற்றதல்ல. அஃறிணைப் பொருள்களுள் நிலமும் பொழுதுமல்லா பிற பொருள்கள் எல்லாம் கருப்பொருளாக வகுக்கப்பட்டதால் அதில் ஒன்றாக அடங்கிய தெய்வமும் கருப்பொருளானது. தத்துவங்களின் உருவகமாக அமைந்த தெய்வங்கள் மட்டும் அஃறிணையல்லாத உயர்திணையாதலின் அத்தகைய தெய்வத்திற்கு மக்களின் ஒழுக்கக் கூறுகளை ஏற்றிக் கூறல் ஆகாது என்பதால் தெய்வம் உள்ளுறை கூறுவதற்கு ஏற்றது அல்ல. எனவே உள்ளுறை உவமம் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு வருமென்றும், ஏனையயுவமம் முதல், கரு, உரி என்ற முப்பொருளையும் அடிப்படையாகக் கொண்டு வரும் என்பதும் தொல்காப்பியர் சொல்லாமல் சொல்லிய கருத்தாகும்.

உள்ளுறைக்கான நிலைக்களனும் பிற்றைய இலக்கணங்களும்

இத்தகைய உள்ளுறைக்கான நிலைக்களன் பற்றி ''நம்பியகப்பொருள், உள்ளுறை உவமம் உய்த்துணரக் கூடியது, அறிவு நுட்பத்தால் ஆராய்ந்து அ

றியக்கூடியது என்றும் பறவை, விலங்கு போன்ற கருப்பொருள்கள் அடிப்படையாய் அமைய இவ்உள்ளுறை உவமம் தோன்றும்''[98] என்றும் சுட்டுகின்றார். நம்பியாசிரியரின் இக்கருத்தில் இருந்து இவர் உள்ளுறை உவமம் என்றால் என்ன என்பதனைச் சுருக்கமாகவும், உள்ளுறைக்கான நிலைக்களன்களாக பறவை, விலங்கு போன்ற கருப்பொருள்களும் ஆகும் என்றும் கூறுகின்றார். நம்பியாசிரியரின் இக்கருத்தையே பின்னர் எழுந்த ''இலக்கண விளக்க ஆசிரியரும் உள்ளவாறே மொழிகின்றார்.''[99]

ஏனையுவமம்

மதி நுட்பத்தைக் கொண்டு உய்த்துணர இயலாது வெளிப்படையாகவே, இயல்பாகவே அனைவராலும் அறிந்து கொள்ளும் உவமம் வெளிப்படை உவமம் ஆகும். இத்தகைய ஏனைய உவமத்தைப் பற்றித் தொல்காப்பியர், ''ஏனைய உவமமானது தானாக உணரும் வகையை உடையது ஆகும்''[100] எனக் கூறுகின்றார். இவ்வேனைய உவமம் பற்றிச் சோமசுந்தர பாரதியார் கூறும்பொழுது ''உள்ளுறை ஒழிந்த பிற உவமம் நுணுகி உள்ளூறுத் துணர வேண்டாது பட்டாங்கே சொல்வழிப் பொருளறியக் கிடக்கும் கூறுபாட்டை உடைத்து''[101] எனக் கூறுகின்றார். எடுத்துக்காட்டாக,

''யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே'' ***(குறுந்.40)***

இப்பாடலில் செம்புலப் பெயல்நீர் போல என்னும் வினை பற்றி வந்த ஏனையுவமம் நெஞ்சக் கலப்பினை உணர்த்திக் களவின்கண் மெய்யுறு புணர்ச்சியாகிய உரிப்பொருளை விளக்கிக் குறிஞ்சித் திணையை உணர உதவிற்று. தொல்காப்பியர் சுட்டும் இவ்வேனை உவமத்தை நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும் எடுத்தியம்புகின்றன.

பிரிவுகள்

தலைவன், தலைவியோடு களவு வாழ்வில் ஈடுபடும் பொழுது தலைவியை விட்டு அவன் எத்தகைய காரணத்தின் பொருட்டோ, வினையின் பொருட்டோ பிரிந்து செல்வதில்லை. தோழியின் கடப்பாட்டால் வரைவிற்கான பொருளைத் திரட்டலின் காரணமாக வேண்டுமானால் பிரிந்து செல்வான். இங்கு தொல்காப்பியர் அத்தகைய களவுப்பிரிவைப் பொருட்படுத்தாமல், கற்பில் தலைவியை மணந்து கொண்டு இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் போது தலைவனுக்கு ஏற்படும் பிரிவுகளைப் பற்றியே அதிகம் கூறியுள்ளார்.

ஏனெனில் இத்தகைய பிரிவே தலைவனுக்கு முக்கியமானது. தலைவன் தான் கற்க வேண்டிய கல்வியின் பொருட்டும் நாடு காத்தற் பொருட்டும் இருபெரும் அரசர்கள் தம்முள் மாறுபாடு கண்டு பொருதும் போது அவர்களைச் சமாதானம் செய்தல் பொருட்டும் அரசனின் கட்டளைப்படியான ஒருவகை நிமித்தத்தின் பொருட்டும் பொருள் தேடுதற்பொருட்டும் என்ற ஐந்து வகைப் பிரிவோடு பரத்தையரிடம் இன்பந்துய்த்தல் பிரிவின் பொருட்டும் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் போது ஏற்படும் பிரிவுகளென அறுவகையைக் கூறுகின்றார்.

தொல்காப்பியம் சுட்டும் பிரிவுகள்

தொல்காப்பியர் பாலைத்திணையை குறிப்பிடாவிட்டாலும் பாலைத் திணைக்குரிய உரிப்பொருளுக்கான பிரிவு வகைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அகத்திணையியலில் ‘‘ஓதல், பகை, தூது’’[102] என்ற மூன்று வகைப் பிரிவுகளைப் பற்றிக் கூறுகின்றார்.

காவல், பொருள்வயிற் பிரிவுகள்

தொல்காப்பியர் ஓதல் முதலிய மூன்று பிரிவுகளை முதலில் கூறிப் பின் காவல், பொருள்வயிற் பிரிவுகளை,

‘‘மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையான்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே’’

(தொல்.பொருள்.அகத்.30)

என்றவாறு சுட்டுகின்றார். "அந்தந்த நிலம் வாழ் மக்களின் வேறுபாட்டாலும் அதிகாரிகளாலும் ஒழுக்ககேடு ஏற்படும். ஆகவே, அரசன் தன் அதிகாரிகளாலும் அலுவலாளரும் ஆளும் நாட்டை மேற்பார்வையிடுதற் பொருட்டும் வரி வாங்குதலை மேற்பார்வை யிடுதற் பொருட்டும் பிரிவான்.

நாட்டில் குற்றங்குறை யுண்டாகாமல் மேற்பார்வையிடவும் வரிவாங்குதலை மேற்பார்வையிடவும் அதிகாரிகள் பிரிவதும் அரசற்காகவே பிரிதலின் அரசன் பிரிவெனவேபடும். நாட்டில் குற்றங்குறை ஏற்படாமல் மேற்பார்வையிடப் பிரிதல் காவற்பிரிவாகும். வரி ஒழுங்காக வாங்கும்படி மேற்பார்வையிடப் பிரிதல் பொருட்பிரிவாகும்."[103]

"தொல்காப்பியர் அகத்திணையியலில் பிரிவுகளை ஐந்தாக வகைப்படுத்தினாலும் ஓதல், தூது, பகை, பொருள்வயின் பிரிவு என்னும் நான்கே பிரிவு சார்ந்த கலைச்சொற்களாக உள்ளன. காவல் பிரிவு என்றும் தேவர் பிரிவு என்றும் சுட்டும் கலைச்சொற்கள் எல்லாம் உரையாசிரியர்களால் சுட்டப் பெறுவனவாகும். பரத்தையிற் பிரிவு என்பது கற்பியலில் தொல்காப்பியரால் சுட்டப்பெறுகிறது."[104]

தொல்காப்பியர் இவ்வைவகைப் பிரிவுகளை அகத்திணையியலில் கூறினாலும் இவ்வைவகைப் பிரிவுகளுக்கான வரையறைகளைக் கற்பியலில் கூறுகின்றார். மேலும் இவர் ஐவகைப் பிரிவுகளை அகத்திணையியலில் நேரடியாகச் சுட்டிவிட்டு ஆறாவதான பிரிவான பரத்தையிற்பிரிவை,

> **"பூப்பின் புறப்பாடு ஈர் அறு நாளும்**
> **நீத்து அகன்று உரையார் என்மனார் புலவர்**
> **பரத்தையின் பிரிந்த காலையான"**
>
> **(தொல்.பொருள்.கற்.46)**

எனச் சுட்டியுள்ளர். இதற்கான காரணத்தை இளம்பூரணர், "இத்துணையும் பிரிவு அறுவகைப்படும் என்றவாறாயிற்று அஃதேல் பரத்தையிற் பிரிவு என்பதோ எனில், அது நிலம் பெயர்ந்து உறையாமையானும் இவை போல் சிறக்காமையானும் அறமுறைமை செய்யப் பிரிதலாலும், பொருள் காரணமாகப் பிரிதலுமின்றிப் பிரிதலினாலும் கற்பியலுள் கூறப்படும் என்க. ஈண்டும் சிறுபான்மை கூறுப என்பர்."[105]

பிற்றைய இலக்கணங்களில் பிரிவு வகைகள்

தொல்காப்பியரின் அறுவகைப்பிரிவை இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற ஏழு நூல்களும் சுட்டுகின்றன. ''தமிழ் நெறி விளக்கம், தொன்னூல் விளக்கம் என்ற இரண்டு நூல்களும் பிரிவுகளைப் பற்றிக் கூறினாலும் அவை தொல்காப்பியர் சுட்டிய அறுவகைப் பிரிவுகளன்றி வேறு பிரிவுகளாக''[105] அமைந்துள.

ஓதல் பிரிவுக்குரியோர்

தொல்காப்பியர் ஐவகைப் பிரிவில் முதற்பிரிவான ஓதல் பிரிவுக்கு உரியோரைக் குறிப்பிடும் பொழுது,

''அவற்றுள்,
ஓதலுந் தூதும் உயர்ந்தோர் மேன''

(தொல்.பொருள்.அகத்.28)

என்கிறது. ''அந்தணரும், அரசரும், வணிகரும், உழுவித்துண்ணும் வேளாளரும் உயர்ந்தோரேயாவர். அடியோரும், வினைவலரும் தமக்குரியரன்மையான் ஓதற்கும் தூதுக்கும் பிரிவிற்குரியராகார். அரசர் முதலிய மூவரும் முறையே அரசியல் முறை, வணிகமுறை, பயிர்த் தொழில் முறை கற்கவும், அந்தணர் அம்மூன்றையும் ஒருங்கு கற்கவும் பிரிவரென்க.''[107] தொல்காப்பியர் மற்றுமொரு நூற்பாவில் ஓதல் பிரிவு பற்றி,

''உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தின் ஆன''

(தொல்.பொருள்.அகத்.33)

எனச் சுட்டுகின்றார். ''மேல் அதிகரிக்கப்பட்ட பின்னோராகிய இருவகையோரிலும் உயர்ந்தோராகிய வணிகர்க்கு ஓதுதல் நிமித்தமாகப் பிரிதலும் உண்டு என''[108] இளம்பூரணர் சுட்டுகின்றார். பாடப்படுவது பாட்டு என்பது போல் ஓதப்படுவது ஓத்து ஆயிற்று (ஓத்து-நூல்). '' 'ஆன' என்பது அதில் கூறப்படும் ஒழுக்கங்களை என''[109] ஆ.சிவலிங்கனார் சுட்டுகின்றார். தொல்காப்பியர் தூதுப்பிரிவு பற்றிய மற்றுமொரு நூற்பாவில் ''வேந்தனுக்கு உரிய வினை இயற்கையாகிய தூது வேந்தனை ஒழிந்த வணிகர்க்கும் வேளாளர்க்கும் ஆகுமிடன் உடைத்து''[110] என்கிறார்.

பிற்றைய இலக்கணிகள் சுட்டும் ஓதல் மற்றும் தூதுப் பிரிவுக்குரியோர்

பிற்றைய இலக்கணங்களில் ''இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகிய ஐந்து நூல்களும் ஓதல், தூதுப்பிரிவுகளுக்கு உரிய மக்களைத் தொல்காப்பியம் போல வே''[111] சுட்டுகின்றது.

இறையனார் அகப்பொருள் காவல் பிரிவையும் உயர்ந்தோர்க்கு உரி யதாகக் கூறுகிறார். தூதுப் பிரிவும் உயர்ந்தோர்க்கு உரியன என்ற தொல்காப்பி யரின் கருத்தை உறுதி செய்யும் பொருட்டு, ''வேந்தர்க்கு சந்து செய்வித்தலாகி ய தூது போதல் தொழில் உயர்ந்தோரில் ஒருவராகிய பார்ப்பார்க்கும் உரித்தே ''[112] எனச் சுட்டுகின்றது.

நம்பியகப்பொருள் ''வேதக்கல்வி கற்றலாகிய ஓதலின் பொருட்டுப் பிரியும் பிரிவு அரசர், அந்தணர், வணிகர் ஆகிய மூவர்க்கும் உரியதாகும்''[113] '' இரண்டாவது பிரிவாகிய தூதுப்பிரிவு, வேதமாந்தர், வேந்தர் என்ற இருவருக் குமே உரியது''[114] என்கிறது. மேலும் போர்த் தொழிற்குரிய படைக்கலங்களை க் கற்றல், யானை, தேர், குதிரை ஆகியவற்றின் மீது ஊர்ந்து செல்லக் கற்றல் ஆ கியவை நால்வகை வருணத்தார்க்கும் உரிய தொழில் என்பர். நம்பியாசிரியர் கூறிய ''இப்பிரிவுகளைப் பற்றிய செய்திகளை மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம் என்னும் மூன்று நூல்களும் சுட்டுகின்றன.''[115] மேலும் முத்துவீரியம் அறுவகைப் பிரிவில் ஒவ்வொரு பிரிவிற்கும் உரிய சில வகைகளை ளக் கூறுகின்றது. சான்றாக ஓதற்பிரிவிற்குரிய நான்கு வகைகளை,

> ***''அவற்றுள்***
> **கல்விநலங் கூறலும் பிரிவுநினை வுரைத்தலும்**
> **கலக்கங்கண் டுரைத்தலுங் காதலர் தமது**
> **வாய்மொழி கூற லாகிய நான்கு**
> **மோதற் பிரிவென வுரைத்திசி னோரே''** ***(முத்.வீரி.856)***

எனச் சுட்டுகின்றது. மேலும் ''அத்திர, சத்திர வித்தைத் தொழிலைக் கற்றலும், யானையேற்றம், குதிரையேற்றம், தேரேறிச் செலுத்தல், நாவினாற் கற்குந் தொ ழில் அல்லாத தொழில்கள் அந்தண ரொழித்தொழிந்த மூவர்க்கும் உரியன''[116] என்றும் பிரிவு பற்றிய செய்திகளைக் கூறுகின்றது.

பிற்றைய இலக்கணங்களில் பகைவயிற் பிரிவு

அரசன் தன் பகைக்குத் தானே செல்லுதலும், தன்னோடு ஒத்த மற்றை அரசரோடு செல்லுதலும் பகைவயிற் பிரிவாகும் என்கிறார். ஓரரசன் தன்னோடு பகைத்தாரொடு பொரச்செல்லுதல், இது பகைதணிவினைப் பிரிவு எனப்படும். தன் நட்பரசனுக்குத் துணையாக அவன் பகைவனொடு பொரச்செல்லுதல், இது வேந்தற்குற்றுழிப் பிரிவு அல்லது, துணைவயிற் பிரிவு எனப்படும். தன் பகைமேற் செல்லல், தன் நண்பர்க்குந் துணையாகச் செல்லல் என வேந்தரின் பகைப் பிரிவு இருவகைப்படும். ஆனால் இவ்விருவகைப் பிரிவும் ஒரே காலத்தில் நிகழா.

தொல்காப்பியரின் இந்நூற்பாவிலிருந்து பகைவயிற் பிரிவுக்குரியோர் அரசன் மட்டுமே என்பது புலப்படுகின்றது. பிற்றைய அக இலக்கணங்களில் ''மாறனகப்பொருள் பகைவயிற்பிரிவு, துணைவயிற்பிரிவு ஆகிய இரு பிரிவுக்கும் உரியர் அரசனே என்றும் அது அவனுக்குரிய இயல்பு''[117] என்றும் தொல்காப்பியம் சுட்டியதையே வழிமொழிகின்றது. மேலும் ''இப்பகைவயின் பிரிவு, காவல்பிரிவு என்னும் இவ்விரண்டு பிரிவின் கண்ணும் தலைவன், தலைவியைத் தேர் முதலிய ஊர்திகளில் ஏற்றிக் கொண்டு அவளொடு சேறலும் உண்டு''[118] என மற்றொரு செய்தியை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

காவல், பொருள்வயிற் பிரிவுக்குரியோர்

தொல்காப்பியர் காவல், பொருள்வயிற் பிரிவுகளைப் பற்றி,

''மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையான்
பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே''

(தொல்.பொருள்.அகத்.30)

எனச் சுட்டுகின்றார். இதனையடுத்த, நூற்பாவில் ''மேற்சூத்திரத்துக் கூறப்பட்ட பிரிவுகளுள் ஒன்றான பொருள்வயிற் பிரிவு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வருக்கும் உரியதாகும்''[119] என்கின்றார். மற்றுமொரு நூற்பாவில் தொல்காப்பியர் ''உயர்ந்தோராகிய அந்தணர் பொருளின் காரணமாகப் பிரியும் போது ஒழுக்கத்துடனேயே செல்வர்''[120] என்கின்றார். ஏனெனில் ''

அந்தணர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோராதலின், பகைவயிற்சேறல், வாணிகம் புரிதல் முதலியவை அவர்க்கின்மையான் அவர்தம் ஒழுகலாறாகிய ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் வழிவருதலே அவர்க்கு ஈட்டமாம்.''[121] அவ்வழி வருதலே அவர் பொருளாதலின் அவர் பொருள்வயின் பிரிதலின் ஒழுக்கத்துடனேயே செல்வர் என்பர்.

பிற்றைய இலக்கணங்களில் பொருள்வயிற் பிரிவுக்கு உரியோர்

தொல்காப்பியப் பொருள்வயின் பிரிவிற்குரியோர் பற்றிய கருத்தை இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள் இலக்கண விளக்கம் என்ற மூன்று நூல்களும் அவ்வாறே சுட்டுகின்றன. மேலும் நம்பியகப்பொருளும் மாறனகப்பொருளும் பொருள்வயின் பிரிவு பல வகைப்படும் என்று சுட்டுகின்றது. ''முத்துவீரியம் பொருள்வயின் பிரிவு இருபது வகைப்படும்''[122] என்கின்றது.

தொல்காப்பியம், பிற்றை இலக்கணங்களில் காவற்பிரிவுக்குரியோர்

காவற்பிரிவுக்கு உரியோரைப் பற்றித் தொல்காப்பியர் கூறும்பொழுது மன்னர் மட்டுமின்றி மன்னனது ஏவல் வழி நடக்கும் வணிகரும், வேளாளரும் காவல் பிரிவுக்கு உரியர் என்கின்றார். இறையனார் அகப்பொருள் ''உயர்ந்தோர்க்கு உரியன''[123] என்றும், பின்னெழுந்த நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள், முத்துவீரியம் என்ற நான்கு நூல்களும் ''நாட்டை நன்முறையில் பாதுகாக்கும் தொழில் அரசர்க்கு மட்டுமே உரியது என்றும், அறப்புறங் காவல் அந்தணர் முதலிய நால்வர்க்குமே உரித்து''[124] என்றும் மற்றொரு செய்தியைக் காவல் பிரிவிற்கு உரியதாகச் சுட்டுகின்றது. மேலும் இம்மாறனகப்பொருள் காவல் பிரிவு பற்றிய கூடுதல் செய்தியாக ஒன்பது வகைகளை,

''போக்குஅறி வுறுத்தல் போக்குஉடன் படாமை
போக்குஉடன் படுத்தல் போக்குஉடன் படுதல்
போயுழிக் கலங்கல்வன் புறையே வன்பொறை
வரும்வழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி என்று
ஒருதலை யாக உரைத்த ஒன்பானும்
அருள்மலி காவல் முதலிய ஐந்தே'' ***(மாற.அக.234)***

எனச் சுட்டுகின்றது. ''முத்துவீரியம் இதில் இரண்டு வகைகளை மட்டும் சுட்டுகின்றது.''[125] இந்நூற்பாவில் ஐந்து பிரிவுகளிலும் தலைவன், தலைவியைப் பிரிந்

து செல்லும் போதும், பின் மீண்டு வந்த பின்னும் நிகழும் நிலைகள் ஆகும் என்னும் திருக்குருகைப்பெருமாள் கவிராயர் காவல் பிரிவை முதன்மைப்படுத்தியுள்ளார்.

தொல்காப்பியர் சுட்டும் பரத்தையிற் பிரிவுக்குரிய செய்திகள்

தலைவியுடன் தலைவன் மேற்கொள்ளும் கற்பு வாழ்க்கையில் அறு வகைப் பிரிவுகளை அவன் மேற்கொண்டாலும் பரத்தையர் பிரிவு தவிர்ந்த ஐந்து பிரிவுகளினாலும் தலைவனுக்குப் புகழ் ஏற்படும். பரத்தையிற் பிரிவினால் அவனுக்குத் தலைவியிடம் ஊடல் என்ற ஒன்றே ஏற்படும்.

தலைவி புதல்வனைப் பெற்ற போதும், மாதத்திற்கு மூன்று நாட்கள் வீட்டுக்கு விலக்காகும் போதும் தலைவன் பரத்தையரை நாடிச் சென்று இன்பம் காணுவான். இத்தகைய பரத்தையிற் பிரிவு நால்வருணத்தாருள் எவரெவர்க்கு உரியது என்பதைப் பற்றித் தொல்காப்பியர் ''தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் தலைவி ஊடுவதும் தலைவியின் அவ்வூடலைத் தீர்க்கத் தலைவன் வாயில்களை அனுப்புவதும் மரபு. இம்மரபு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வருணத்தார்க்கும் உரியது என்றும் அவ்வாறு தலைவன் பிரியும் பிரிவு தன்னூரகத்தே ஆகும். தன்னூரை விட்டு வேறு எங்கும் நிலம் பெயர்தல் இல்லை''[126] என்கிறார்.

''தலைவன் பரத்தையை நாடுவதும், அதனால் தலைவி ஊடுவதும், அவ்வூடலை உணர்த்தத் தலைவன் வாயில் விடுதலும் ஆகிய இந்நிகழ்வுகள் மருதநிலத்தின்கண் நிகழும் மருதநில ஒழுக்கமே எனினும், மற்றை எல்லா நிலத்தும், ஊடலும், கூடலும் நிகழ்வது வழக்கமே எனினும் புலனெறி வழக்கில் மருதநிலத்து நடந்ததாகச் செய்யுள் செய்வதே வழக்கமாம்.''[127]

தொல்காப்பியர் சுட்டிய பரத்தையர் பிரிவைப் பற்றிய அக்கருத்தையே இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள் ஆகிய நான்கு நூல்களும் மொழிகின்றன. ''பரத்தையிற் பிரிவு நால்வகைப்படும் என நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் என்னும் இரண்டு நூல்களும்''[128] சுட்டுகின்றன.

ஓதற்பிரிவுக்குரிய ஆண்டு தொல்காப்பியத்திலும்

பிற்றைய இலக்கணங்களிலும்

தொல்காப்பியர் ஓதல் பிரிவுக்குரிய ஆண்டைப் பற்றிக் குறிப்பிடும் போது "தாம் பெறவிரும்பும் கல்வியைக் கற்கப் பிரியும் ஆண்டுகள் மூன்றாண் டைத் தாண்டது"[129] எனக் குறிப்பிடுகின்றார். *"மூன்று யாண்டு என்பது பிரிந்து மீளும் எல்லையேயாகும். மூன்றாண்டுகட்குமேல் பிரிந்து சென்ற தலைவன் பி ரிவில் இருக்கக் கூடாதென்பதே. மூன்றாண்டுகட்குக் குறைவாகவரின் இழுக்கி ன்று."*[130]

"நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள் என்ற மூன்று நூ ல்களும் தொல்காப்பியரின் மேற்கண்ட கருத்தைப் பொன்னேபோல் போற்றி அவ்வாறே உரைக்கின்றது."[131]

காவல் பிரிவு, பொருள்வயிற் பிரிவுக்குரிய ஆண்டுகள்

தொல்காப்பியத்திலும் பிற்றைய இலக்கணங்களிலும்

அரசருக்கு உரிய பகைவயிற் பிரிவும் துணைவயிற் பிரிவும் ஓராண்டு க்குரியது என்பதைத் தொல்காப்பியர்,

"வேந்துறு தொழிலே யாண்டினது அகமே"

(தொல்.பொருள்.கற்.48)

என்று மொழிகின்றார். வேந்துறு தொழில் என்பது இருபெரு வேந்தரும் உறும் பிரிவும், அவருள் ஒருவற்காக மற்றொரு வேந்தனது பிரிவும் ஆகும். இவ்வகை ப் பிரிவுகளுக்கான எல்லை ஓராண்டே ஆகும். அதற்கு மேல் போகாது. "பிரி விற்குரிய வேனிற்காலத் தொடக்கமாகிய சித்திரை முதல் ஆவணி வரையுள்ள நான்கு திங்கள், அல்லது பின்பனித் தொடக்கமாகிய மாசி முதல் ஆவணி வரை யுள்ள ஆறு மாதங்களே இப்பிரிவிற்குரிய காலமாகும். மழைக்காலத்தில் போர் நடவா அப்போது, மதில் முற்றினோர் மட்டும் பாசறையிலிருப்பர். தலைவினை யப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டுவருங் காலம், ஆவணி, புரட்டாசி மாதங் களாகிய கார்காலமேயாகும். 'கூதிர்வேனில் என்றிரு பருவமும்' (புறத்.21) என் பதால் மதில் முற்றிய காலத்துக் கார்காலத்தைக் கடந்தும் இருப்பது பெற்றாம். எவ்வாறேனும் பிரிந்து சென்ற நாள் வருமுன் வரவேண்டுமென்பதாம்"[132] என

இப்பிரிவுக் காலத்திற்கான விளக்கத்தை புலவர் குழந்தை உரைக்கின்றார். தொல்காப்பியர் மற்றுமொரு நூற்பாவில்,

“ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்”

(தொல்.பொருள்.கற்.49)

என உரைக்கின்றார். இதற்கு விளக்கம் தர வந்த இளம்பூரணர் “பொருள்வயிற் பிரிவிற்கும் காலம் யாண்டினது அகம்”[133] என்கிறார்.

நச்சினாரோ தூதுப்பிரிவிற்கும், பொருள்வயிற் பிரிவுக்கும் உரிய காலம் ஓராண்டு என்கிறார். இப்பிரிவுக்குரிய காலமானது “மாசி முதல், ஆடியிறுதியாகிய ஆறு திங்களே யாம். பொருட்பிரிவில் காவற்பிரிவும் அடங்கும். பரத்தையற் பிரிவு ஒரு நாளிடையிட்டதாகையால் கூறிற்றிலர்”[134] எனவும் புலவர் குழந்தை மேற்கண்ட சூத்திரத்திற்கு விளக்கமளிக்கின்றார். நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் என்ற இரண்டு நூல்களும் தொல்காப்பியர் சுட்டிய கருத்தையே மொழிகின்றன.

அகப்பாடல் பாடும்முறை

உலகில் நடைமுறையில் உள்ள “நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்னும் இருவகை வழக்குகளிலும் கைக்கிளை, அன்பின் ஐந்திணை, பெருந்திணை என்னும் ஏழு திணைகளிலும் அமைந்துள்ள அகப்பொருள் பாக்களை கலிப்பா, பரிபாடல் என்னும் இருவகைப் பாக்களில் இயற்றுவதே பொருத்தமுடையதாகும் என்பர்”[135] தொல்காப்பியர், தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பின்னாட்களில் சங்க இலக்கியங்கள் தொடங்கி சிற்றிலக்கியங்கள் வரை எழுந்த அக நூல்களைப் பெரும்பாலும் ஆசிரியப்பா வகையிலேயே புலவர்கள் இயற்றியுள்ளனர்.

தொல்காப்பியர் சுட்டிய பாவகைப்படி சங்க இலக்கியத்தில் கலித்தொகையும், பரிபாடலுமே அமைந்துள்ளன. தொல்காப்பியர் காலத்தில் மிகுதியாக அக இலக்கியங்கள் இயற்றுவதற்குப் இப்பா வகைகள் பெரிதும் பயன்பட்டன போலும். தொல்காப்பியர் காலத்திற்குப் பின் இப்பாவகைகளில் இலக்கியங்கள் இயற்றுவது கடுமை காரணமாக விலக்கப்பட்டது போலும்.

பெயர் சுட்டா மரபு

களவு வாழ்க்கையை மேற்கொள்ளும் அக மாந்தர்களைப் பற்றி அக இலக்கியங்கள் இயற்றும் பொழுது அவர்களுக்கென உரிய அவர்களின் இயற்பெயர்களை (கண்ணகி, கோவலன்) என்பதை இலக்கியங்களில் சுட்டிச் செல்வதில்லை. அவர்கள் தலைவன், தலைவி என்ற பொதுப்பெயராலேயே சுட்டப்படுகின்றனர். இம்மரபு அன்பின் ஐந்திணையில் அமையப்பெற்ற அனைத்து அக இலக்கியங்களிலும் காணப்பெறும் என்பது தொல்காப்பியரின் பெயர் சுட்டா மரபு பற்றியமைந்த கருத்தாகும். பிற்காலங்களில் எழுந்த அக இலக்கியங்கள் பெரும்பாலும் தொல்காப்பியரின் இக்கருத்தைப் பின்பற்றியே அமைந்துள்ளன.

தொகுப்புரை

- ❖ அவிநயம், இறையனார் களவியல், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், களவியற்காரிகை, அறுவகை இலக்கணம் என்ற ஆறு நூல்களும் தொல்காப்பியர் சுட்டிய எழுதிணை மரபை ஐந்திணை மரபென மாறுபட்டு மொழிகின்றன.

- ❖ சுவாமிநாதம் பிரமம், பிராசபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்குவகைத் திருமணமுறைகளும் பெருந்திணைக்குரியது என்கிறது.

- ❖ தொல்காப்பியர் பத்தெனக் கூறிய கருப்பொருளோடு ஊர், நீர், பண், மக்களை இருவராகப் பிரித்து பிற்றைய இலக்கணங்கள் பதினான்காக உரைக்கின்றன. இது கருப்பொருள் வளர்ச்சியாகும்.

- ❖ சுவாமிநாதர் கருப்பொருள் பதினான்கைச் சுட்டிய பின் பிறவும் என்பதால் கருப்பொருளுக்கு வரையறை இல்லை என்பது பெறப்படும்.

- ❖ நம்பயகப்பொருள் இளவேனில் பொழுதைச் சிறப்பு வாய்ந்த இளவேனில் எனச் சுட்டுகின்றது.

- ❖ இருள்புலர் காலை எனச் சிறுபொழுதை ஒன்றென மருதத்திணைக்கு நம்பியகப்பொருள் மொழிகின்றது.

- கருப்பொருள் மயக்கத்தைத் தொல்காப்பியரும் உரிப்பொருள் மயக்கத்தை த மாறனகப்பொருளும் சுட்டுகின்றது.
- செய்யுளில் ஏனைய உவமம் என்பது தானாக உணரும் வகையிலேயே அமைந்திருக்கும்.
- முத்துவீரியம்கல்வி நலன் கூறல், பிரிவு நினைவுரைத்தல், கலக்கங்கண்டு உரைத்தல், காதலர் தமது வாய்மொழி கூறல் ஆகிய நான்கு வகைகளை ஓதற்பிரிவின் வகைகளென பிரிவைப் பற்றிய வளர்ச்சியாக மொழிகின்றது.

சான்றெண் விளக்கங்கள்

1. கா.சுப்பிரமணிய பிள்ளை, பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, ப,13.
2. கு.மங்கையர்க்கரசி, அக இலக்கியக் கோட்பாடுகள், ப.1.
3. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், ப.98.
4. இறை.அக.1, தமி.நெறி.விள.3, வீர.சோ.85,86, இலக்.வி.376, அறு.வகை 64.
5. நம்.அக.1, மாற.அக.1, இலக்.வி.376, தொன்.விள.199, முத்.வீரி.770, சுவாமி.71.
6. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.38.
7. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.16.
8. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், ப.308.
9. சே.செந்தமிழ்ப்பாவை, தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், தேசியக்கருத்தரங்கம், ப.11.
10. நம்.அக.1, மாற.அக.2, இலக்.வி.376, தொன்.விள.199.
11. சே.செந்தமிழ்ப்பாவை, தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், தேசியக்கருத்தரங்கம், ப.12.
12. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.48.
13. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.146.
14. மாற.அக.4.
15. சுவாமி.81.
16. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம், ப.438.
17. மேலது., ப.98.
18. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல் உரைவளம், ப.11.
19. மேலது., ப.143.
20. மாற.அக.131.

21. செ.வை.சண்முகம் (ப.ஆ.), சுவாமிக்கவிராயர், சுவாமிநாதம், ப.175.
22. தொல்.பொருள்.மெய்.22.
23. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும், ப.49
0.
24. மேலது., ப.555.
25. சே.செந்தமிழ்ப்பாவை, தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், தேசி
யக்கருத்தரங்கம், ப.17.
26. மாற.அக.6, இலக்.வி.377, முத்.வீரி.772, சுவாமி.71.
27. நம்.அக.6, மாற.அக.7, இலக்.வி.379, முத்.வீரி.776, சுவாமி.72.
28. நம்.அக.1, மாற.அக.2, இலக்.வி.376, தொன்.விள.199, முத்.வீரி.770, சுவா
மி.71.
29. இலக்.வி.591.
30. சே.செந்தமிழ்ப்பாவை, தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், தேசி
யக்கருத்தரங்கம், ப.84.
31. மேலது., ப.13.
32. இளம்பூரணர் உரை, தொல், பொருள், ப.126.
33. தொல்.பொருள்.மெய்., 23.
34. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் உரைவளம்,
ப.165.
35. தொல்.பொருள்.அகத்.3.
36. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், உரைவளம், அகத்திணையியல், ப.30
.
37. மேலது., ப.31.
38. மேலது., ப.40.
39. இரா.செகதீசன், தொல்காப்பியப் பொருளதிகார வழி அகநானூறு ஓர் ஆ
ய்வு, ப.122.
40. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக்.15,16.
41. தொன்.விள.200.
42. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.25.

43. இரா.செகதீசன், தொல்காப்பியப் பொருளதிகாரவழி அகநானூறு ஓர் ஆய்வு, ப.136.

44. தொல்.பொருள்.அகத்.20.

45. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.156.

46. மேலது., ப.160.

47. புலவர் குழந்தை, தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.13.

48. சி.இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப,138.

49. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.89.

50. சி.இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப,138.

51. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.176.

52. மு.இராகவையங்கார், தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, ப.25.

53. தொல்.பொருள்.அகத்.5.

54. தமி.நெறி.விள.6.

55. மாற.அக.23, இலக்.வி.387, தொன்.விள.175, முத்.வீரி.801, சுவாமி.73.

56. தொன்.விள.175, முத்.வீரி.801.

57. சுவாமி.73.

58. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.92.

59. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.27.

60. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.93.

61. தமி.நெறி.விள.13, நம்.அக.25, மாற.அக.30, இலக்.வி.393, முத்.வீரி.808, சுவாமி.80.

62. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.36.

63. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.348 .

64. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத்தமிழர், ப.68.

65. கா.சுப்பிரமணியப்பிள்ளை, பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பி யப் பொருளதிகாரக் கருத்து, ப.22.

66. மேலது., ப.27.

67. மேலது., ப.28.

68. மேலது., பக்.28, 29.

69. நம்.அக.11, மாற.அக.13, இலக்.வி.384, தொன்.விள.166, முத்.வீரி.779, சு வாமி.72.

70. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள்விளக்கம், ப.15.

71. மாற.அக.12, இலக்.வி.385, தொன்.விள.173, சுவாமி.72.

72. டி.வி.கோபால் ஐயர், (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவை யும், ப.7, வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம், ப.10.

73. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.16.

74. மேலது., ப.27.

75. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.58.

76. நம்.அக.13,14, மாற.அக.14,15, இலக்.விள.386, முத்.வீரி.783,784, சுவாமி. 73.

77. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.349 .

78. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.58.

79. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.17,
    டி.வி.கோபால் ஐயர், (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவை யும், ப.8
    வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம், ப.12
    முத்துவீரியர், முத்துவீரியம், ப.214.
    சே.வை.சண்முகம், (ப.ஆ.), சுவாமிநாதம், ப.165.

80. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.34 9.

81. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.35.

82. மாற.அக.18, இலக்.வி.386, முத்.வீரி.785.

83. நம்.அக.16.

84. ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.35.

85. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.86.

86. மேலது., ப.84.

87. மேலது., ப.84.

88. மேலது., ப.84.

89. நம்.அக.14, மாற.அக.15, இலக்.வி.386, முத்.வீரி.787, 788, சுவாமி.73.

90. புலவர் குழந்தை, தொல்காப்பியம் பொருளதிகாரம், பக்.17,18,19.

91. டி.வி.கோபால் ஐயர், (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவை யும், ப.288.

92. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.161.

93. டி.வி.கோபால் ஐயர், (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவை யும், ப.288.

94. ச.திருஞானசம்பந்தர், அகப்பொருள் விளக்கம், ப.145.

95. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.409.

96. இரா.செகதீசன், தொல்காப்பிய பொருளதிகார வழி அகநானூறு ஓர் ஆய் வு, ப.224.

97. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும், ப .5.

98. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.145.

99. இலக்.வி.586.

100. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.367 .

101. ச.சோமசுந்தரபாரதியார், தொல்காப்பியர் பொருட்படல புத்துரை, ப.13 2.

102. தொல்.பொருள்.அக.27.

103. புலவர் குழந்தை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.30.

104. ச.பாலசுந்தரம், தொல்காப்பியப் பொருளதிகாரம், ப.67.

105. தொல்காப்பிய அகவியற்கோட்பாடுகளும், பிற்கால அகவியல் இலக்கண ங்களும், ப.128.

106. தமி.நெறி.விள.24,25, தொன்.விள.151.

107. புலவர் குழந்தை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.28.

108. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத் திணையியல், ப.245.

109. மேலது., ப.245.

110. மேலது., ப.246.

111. இறை.அக.36, நம்.அக.69, மாற.அக.82, இலக்.வி.437,443, முத்.வீரி.811.

112. இறையனார், இறையனார் அகப்பொருள், ப.146.

113. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.139.

114. நம்.அக.75.

115. மாற.அக.79,80, இலக்.வி.437, 443, முத்.வீரி.812.

116. முத்துவீரியம் உபாத்தியாயர், முத்துவீரியம், ப.227.

117. டி.வி.கோபால் ஐயர், (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவை யும், ப.27.

118. மேலது., ப.27.

119. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.358.

120. தொல்.பொருள்.அக.35.

121. ச.பாலசுந்தரம், தொல்காப்பியப் பொருளதிகாரம், ப.70.

122. முத்.வீரி.860.

123. இறை.அக.36.

124. ச.திருஞானசம்பந்தர், அகப்பொருள் விளக்கம், ப.40.

டி.வி.கோபால் ஐயர், (உ.ஆ.) மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையும், ப.27.

வைத்தியநாததேசிகர் இலக்கண விளக்கப் பொருளியல், ப.510.

125. முத்துவீரிய உபாத்தியாயர் முத்துவீரியம், ப.368.

126. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.471.

127. புலவர் குழந்தை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.310.

128. நம்.அக.204, மாற.அக.229.

129. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.459.

130. புலவர் குழந்தை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.349.

131. நம்.அக.89, மாற.அக.107, இலக்.வி.457.

132. புலவர் குழந்தை, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப.350.

133. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், அகத்திணையியல், ப.287.

134. மேலது., ப.287.

135. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும், ப.369.

இயல்-3

செய்யுள் உறுப்புகள் கட்டமைப்பு இலக்கண வளர்ச்சி

அக்காலச் சான்றோர்கள் தாம் கண்ட கற்ற அரிய தகவல்களை தாம் இயற்றும் நூல்களில் பொதித்து வைப்பது என்பது தமிழர்கள் கடைப்பிடித்து வந்த ஒரு சிறந்த பண்பாட்டு முறை ஆகும். அவ்வகையில் தொல்காப்பியர் வாழ்வியலுக்கு மட்டும் பொருளதிகாரத்தைப் படைக்காது அகச்செய்யுள் இயற்றுவதற்கான முறை பற்றியும் கூறுவதற்காகப் பொருளதிகாரத்தில் செய்யுளியல் மட்டுமின்றி அகத்திணையிலும் சில பகுதிகளைப் படைத்துள்ளார். இதிலிருந்து தொல்காப்பியம் ஒரு காலப்பெட்டகம், வரலாற்றுப் பெட்டகம் என்பது தெளிவாகின்றது.

மனிதனின் புற உடலுக்குத் தலை, கண், காது, மூக்கு, வாய், கை, கால்கள், தோல் போன்ற உறுப்புகள் அமைந்து மனிதனை ஒரு அழகு வாய்ந்தவனாகக் காட்டுவதைப் போலத் தொல்காப்பியரும் ஒரு அகச்செய்யுளுக்கு இருக்க வேண்டிய உறுப்புகளைப் பற்றிச் செய்யுளியலில் விரிவாகக் கூறியுள்ளார். அச்செய்யுள் உறுப்புகள் பிற்றைய இலக்கணங்களில் பெற்றுள்ள வளர்ச்சி குறித்து விளக்குவதாக இவ்வியல் அமையும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல் களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல்களில் அக இலக்கண மரபுகளே மிகுதியும் பேசப்படுகின்றன. செய்யுளுக்குரியனவாகக் கூறப்படுவன உவமையியல், செய்யுளியல், மரபியல் போன்றன. செய்யுளியலின் முதல் சூத்திரத்தில் செய்யுள் உறுப்புகளும் பாவகைகளும் அகப்பாட்டு உறுப்புகளும் எண்வகை வனப்பும் கூறப்படுகின்றன.

முதலில் மாத்திரை, எழுத்து, அசை, சீர், தளை, அடி, யாப்பு, மரபு, தொடை, நோக்கு, பா, அளவியல் எனச் செய்யுள் உறுப்புகளையும் நால்வகைப் பாக்களையும் அவற்றது அடிவரையறை பற்றியும் கூறினார். பின்னர் பதின்மூன்றாம் உறுப்பாகிய திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள்வகை, துறை ஆகிய இருபத்திநா

ன்காம் உறுப்புவரை உள்ள பன்னிரெண்டு உறுப்புகளை அகஇலக்கியத்திற்கே உரிய உறுப்புகளெனக் கூறுகின்றார். ஒரு நாடகத்தில் களம், காட்சி, காலம், கதைமாந்தர் எல்லாம் உறுப்புகளாவது போல அகப்பாடல்களுக்கும் இவ்வுறுப்புகள் அமைந்தன.

தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த அக இலக்கணங்கள் பன்னிரெண்டனுள் இறையனார் அகப்பொருள், வீரசோழியம், நம்பியகப்பொருள், மாறன் அகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய ஆறு இலக்கண நூல்கள் அக இலக்கிய உறுப்புகளைப் பற்றி உரைக்கின்றன. தொல்காப்பியம் பன்னிரெண்டு எனக்கூறிய அகப்பாட்டு உறுப்புகளை இறையனார் அகப்பொருள் மட்டும் எண்ணிக்கையில் பத்து எனவும், மற்ற ஐந்து நூல்களும் பன்னிரெண்டு எனவும் மொழிகின்றன. இறையனார் அகப்பொருள்

“திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோள்என்று ஆங்கப் பத்தே
அகன்ஐந் திணையும் உரைத்தல் ஆறே” (இறை.அக.56)

என அகப்பாட்டு உறுப்புக்களை மொழிகின்றது.

இந்நூல் தொல்காப்பியர் கூறிய பன்னிரண்டு அக உறுப்புகளுள் கூறிய வரிசை முறையை மாற்றி, எச்சம், மெய்ப்பாடு என்ற இரண்டு உறுப்புகளைப் பயன் என்னும் உறுப்புக்கு முன் கூறுகின்றது. “வீரசோழியம் உரைகள் பற்றிக் கூறும் நூற்பாவில் பன்னிரு அக உறுப்புக்களைக் கூறுகின்றது.”[1] “இறையனார் அகப்பொருளும் வீரசோழியமும் இவ்வகப்பாட்டு உறுப்புக்களை அகனைந்திணையும் உரைக்கும் முறை”[2] என்றே கூறுகின்றன.

நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய மூன்று நூல்களும் அக இலக்கிய உறுப்புக்களை தொல்காப்பியர் சுட்டிய வரிசை முறையிலிருந்து வேறுபட்டுச் சுட்டுகின்றன. மேலும் அக இலக்கிய உறுப்புக்களை அகப்பாட்டு உறுப்புகள் என்றுரைக்கின்றன. மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் அகப்பாட்டு உறுப்புகளின் எண்ணிக்கையைத் தனியொரு நூற்பாவாக அவற்றுள் “உறுப்பெனத்தகுவது ஒரு பன்னி

ரெண்டாகும்”[3] என்றும், “அகப்பொருள் ஆறிரு வகைத்தாய்ப் பாட்டுறுப்பாய் வரும்”[4] எனவும் சுட்டுகின்றன. சுவாமிநாதம் இவ்வுறுப்புகளை,

“எண்ணும் திணை கைகோள்கூற் றொடுகேட்போர் காலம்
இடம் மெய்ப்பாடு எச்சம்முன்னம் பயன்பொருளே துறையாய்
நண்ணிரண்டாறு அகத்துறுப்பாம் இவற்றின் விரிவுஒழிபா”
(சுவாமி.124)

என்னும் சூத்திரத்தில் அகத்துறுப்புகள் என உரைக்கின்றது.

அகப்பாட்டு உறுப்புகளில் திணை

செய்யுள் உறுப்புகள் முப்பத்தைந்தனுள் பதின்மூன்றாகவும் அக இலக்கிய உறுப்புக்களின் எண்ணிக்கையில் பன்னிரெண்டாகவும் வரும் அகத்திற்குரிய உறுப்புகளுள் முதலாவதாக இடம்பெறும் திணை என்னும் உறுப்பைப் பற்றித் தொல்காப்பியர்,

“கைக்கிளை முதலாப் பெருந் திணையும்
முற்கிளந்தனவே முறை யினான”
(தொல்.பொருள்.செய்.177)

எனச் சுட்டுகின்றார். இதற்கு க.வெள்ளைவாரணர் “இது திணையாமாறு இதுவென உணர்த்துகின்றது. செய்யுட்குரிய உறுப்புக்களுள் ஒன்றாகிய திணையென்பது செய்யுளிற் பாடப்பெறும் ஒழுகலாறுகளை அகமும், புறமும் எனப் பாகுபடுத்தி அறிதற்குரிய கருவியாகும். கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை எனக் கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாகவுள்ள ஏழு திணைகளும் முறையே மேற்சொல்லப்பட்டன. முறைமையினாற் சொல்லுதலாவது பாடாண்திணை கைக்கிளைப் புறம், வஞ்சி முல்லைப்புறம், வெட்சி குறிஞ்சிப்புறம், வாகை பாலைப்புறம், உழிஞை மருதப்புறம், தும்பை நெய்தற்புறம், காஞ்சி பெருந்திணைப்புறம் என முன்கூறிய வகையே கொள்ளுதல் என்றும், இங்ஙனம் அகமும், புறமும் எனத் திணைகளை ஒன்றுபடுத்தவே பதினான்கு திணையும் ஏழு திணைகளாகி அடங்கின”[5] என்றும் கூறுகின்றார். இவர் கூற்றிலிருந்து கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல், பெருந்திணை என்னும் அகத்திணைகளுக்குப் புறமாக அமைந்த ஏழு திணைகளும் இவற்றுக்குப் பொதுவாகிய கரந்தைத் திணை ஒன்றுமெனச் சேர்ந்த பதினைந்து திணைகளும் ஏழு திணைகளுக்குள் அடங்குகின்றன. இப்பதினைந்து திணைகளுள் ஒன்று செய்யுட்குறுப்பாகி வரும் என்பது தெளிவாகின்றது.

அக இலக்கிய உறுப்பில் கைகோள்

அக உறுப்புகளில் இரண்டாவது உறுப்பான கைகோள் பற்றித் தொல்காப்பியர் மூன்று நூற்பாக்களில் உரைக்கின்றார். கைகோள் - ஒழுக்கம், அக வாழ்வில் தலைவன், தலைவி இருவரும் பின்பற்றி வாழும் வாழ்க்கையாகிய ஒழுக்கமுறை களவு, கற்பு என இரண்டு வகைப்படும். இதனையே தொல்காப்பியர் நூற்பாவில்,

"மெய்பெறும் அவையே கைகோள் வகையே"

(தொல்.பொருள்.செய்.180)

எனச் சுட்டுவர். இந்நூற்பாவைத் தொல்காப்பியர் கைகோள் பற்றிய செய்திகளைக் கூறும் நூற்பாக்களில் முதலில் கூறாமல், கைகோள் வகைகளாகிய களவு, கற்பு என்னும் இரண்டைப் பற்றிய நூற்பாக்களைக் கூறி அதற்குப்பின் மூன்றாவது நூற்பாவாக இறுதியில் சுட்டுகின்றார். கைகோள்களின் எண்ணிக்கையைப் பின்கூறி வகையை முன்கூறும் இந்நெறி தொல்காப்பியரின் உத்தி முறைகளுள் ஒன்றாகும்.

களவுக் கைகோள்

கைகோளின் வகைகளுள் ஒன்றாகிய களவைத் தொல்காப்பியர்,

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே"[6]

எனச் சுட்டுவர். மேலும், கைகோளின் இரண்டாவது வகையான கற்பொழுக்கம், "தலைவனும் தலைவியும் அன்பிற் கலந்து பழகும் களவொழுக்கம் வெளிப்பட்டுத் தெரிய வருவதும் சுற்றத்தார்கள் மணம் முடித்துத் தரப் பெற்றுக் கொள்வதும் ஆகிய இயல்பான வழிமுறைகள் மாறாது, இருவரும் கூடி மகிழ்தலும் கூடி இன்புறுதலும் பின்னர் பொய்க்கோபம் கொண்டு பாசாங்கு செய்வதும் ஊடல் தீர்ந்து பின் கூடி மகிழ்தலும் பொருள்தேடப் பிரிந்து போதலும் எண்ணும் இவையெல்லாம் சேர்ந்து அமைந்த இன்பஅற ஒழுக்கமே கற்பு எனப் போற்றப்படும்"[7] என்கிறார்.

பிற்றைய இலக்கணங்களில் திணை, கைகோள்

திணை, கைகோள் பற்றி ''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் தனித்தனி நூற்பாக் களில் சுட்டாமல் ஒரே நூற்பாவில் இவ்விரு உறுப்புக்களையும் சேர்த்தே சுட்டு கின்றன.''[8]

அக உறுப்பில் கூற்று

தொல்காப்பியர் அக இலக்கிய உறுப்புகளில் மூன்றாவது உறுப்பான கூற்று பற்றி ஆறு நூற்பாக்களில் கூறுகின்றார். நம்பியகப்பொருள் (20), மாறன கப்பொருள் (28), இலக்கண விளக்கம் (11), சுவாமிநாதம் (3) என்ற எண்ணிக்கை கயில் அடங்கிய நூற்பாக்களிலும் கூற்று பற்றிய செய்திகளைத் தருகின்றன.

தொல்காப்பியத்தில் களவில் கூற்றிற்குரியோர்

ஊழின் வசத்தால் தலைவனும், தலைவியும் மேற்கொள்ளும் களவு வாழ்வானது கற்பாக மாறுவதற்குத் ''தலைவனிடமும் தலைவியிடமும் உரைய ாடல் நடத்தி அவர்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள் தலைவியின் தோழி , வளர்ப்புத் தாயாகிய செவிலி, தலைவனின் தோழனாகிய பாங்கன், பார்ப்பா ன் என்ற நால்வரும் ஆவர். ஆக மொத்தம் தலைவன், தலைவியோடு சேர்த்து க ளவினில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் அறுவர்''[9] *என்று தொல்காப்பியர் உரைக்கின்றார்.*

பிற்றைய இலக்கணங்களில் களவுக் கிளவிக்குரியோர்

''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவா மிநாதம் ஆகிய நான்கு நூல்களும் தொல்காப்பியர் சுட்டிய அறுவரையே கூற் றிற்குரியோர்களாக மொழிகின்றன.''[10]

மாறனகப்பொருள் இக்களவுக் கிளவிக்குரிய மாந்தர்களை,

''இறைவன் பாங்கன் யிருபிறப் பாள
னிறைமக ளிகுளை செவிலியென் றுறுவருங்
கூறிய களவிற் கூற்றிற் குரியர்'' ***(மாற.அக.241)***

என்றுரைத்து விளக்கும்.

தொல்காப்பியத்தில் கற்பில் கூற்றுக்குரியோர்

தொல்காப்பியர் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டே
டார் என ஓர் அறுவரைச் சுட்டி, அவர்களோடு முன்னூற்பாவில் களவினில் கூ
ற்றிற்குரியவராகிய பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி எ
ன்ற அறுவரையும் சேர்த்துப் பன்னிருவரும் கற்பினுள் கூற்றிற்குரியவர் என்றும்,
இவ்வறுவருங் கூறியனவாகச் செய்யுள் செய்வது மரபு என்றும் உரைப்பர்.

பேராசிரியர் கற்புக் கூற்றுக்குரியோரை தொல்காப்பியர் நிரல்படி
வைத்தற்கான காரணத்தைப் பற்றிய மாந்தரது வைப்பு முறையை ‘‘இசையின்
பின்னரது நாடகமாகலிற் பாணன்பின் கூத்தனை வைத்தும், பெண் பாலாகலா
ன் விறல்பட ஆடும் விறலியைக் கூத்தன் பின் வைத்தும், அவ்வினத்துப் பரத்தை
தயரை அதன்பின் வைத்தும், பொருட்குச் சிறந்தாராகலின் நற்பொருள் உணரு
ம் அறிவரை அவர்பின் வைத்தும், ஏதிலராகிய கண்டோரை அவர்க்குபின் வை
த்துங் கூறினானென்பது’’[11] எனக் கூறுகின்றார்.

பிற்றைய இலக்கணங்கள் சுட்டும் கற்பினுள் கூற்றிற்கு உரியோர்

பிற்றைய இலக்கணங்களில் ‘‘இலக்கண விளக்கம் தொல்காப்பியர் க
ற்பினுள் கூற்றிற்குரியோராகக் கூறிய பன்னிருவரை நிரல்படி மொழிகின்றது.’’[12]
நம்பியகப்பொருளும் சுவாமிநாதமும் தொல்காப்பியர் சுட்டிய பன்னிருவரே
ாடு ‘‘நற்றாயையும்’’[13] சேர்த்துப் பதின்மூவராக மொழிகின்றன. இவ்விரு நூல்க
ளில் இருந்தும் வேறுபட்டு மாறனகப்பொருள் பாகரையும், தூதரையும் சேர்த்
துக் கற்பினுள் கூற்றிற்குரியோரை, ‘‘பதினைவராக’’[14] கூறுகின்றது.

**அகப்பாட்டினுள் செய்யுள் செய்தலில் கூற்றிற்குரியோர் அல்லாதோர் பற்றி
ய ஒரு மரபு**

தொல்காப்பியர் களவு, கற்பு என்னும் இவ்விரு கூற்றுகளிலும் இடம்
பெறாதோர் அறுவரின் கூற்றுக்களைப் பற்றி ஊரிலுள்ள பெண்டிரும் அயல் ம
னையகத்துப் பெண்டிரும் சேரிப்பெண்டிரும் தலைவன், தலைவியின் நோய்
அறியும் ஆடவரும் பெண்டிரும், தலைவியின் தந்தையும், ஐயனும் (அண்ணனு
ம்) என ‘‘இவ்வறுவரும் தலைவன், தலைவியது களவு ஒழுக்கத்தை முழுமையா
க அறிந்திருந்தாலும் நேரடியாக இவர்கள் தலைவன், தலைவியிடம் பேசியதா

கக் கூற்றுகள் அமைப்பது அகத்திணைச் செய்யுளுக்கு சிறந்த மரபல்ல. இவ்வ றுவர் கூற்றை இவர்கள் கூறியதாகப் பிறர் கொண்டெடுத்து மொழிவதே அகத் திணைச் செய்யுட்கள் செய்வதில் மரபாகும்''[15] என மொழிகின்றார்.

''தொல்காப்பியர் சுட்டிய இவ்வறுவரையே பின்னர் எழுந்த நம்பிய கப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், என்னும் மூன்று இலக்க ணங்களும் கூற்றிற்கு உரிமையற்றோராக''[16] மொழிகின்றது. எனினும் சுவாமிக் கவிராயர், தொல்காப்பியரின் கருத்தை உள்வாங்கிக் கொண்டு சுருக்கமாகத் த ன் நூலில் ''தந்தை, உடன் பிறந்த அண்ணன், நோய் அறிவோர், ஊரவர், அயே லார் ஆகியவர்கள் முன்னால் கூற்று நடைபெறாது''[17] எனக் கூறுகின்றார்.

நற்றாய் கூற்று

தலைவியை ஈன்ற தாய் நற்றாய் ஆவாள். இந்நற்றாய்க்குத் தலைமக்க ள் மேற்கொள்ளும் களவு தெரிவதில்லை. அவளது தோழியாகிய செவிலியே த லைவியை வளர்ப்பதில் உறுதுணையாக இருக்கின்றாள். செவிலியே தலைவியை ய வளர்ப்பதில் முக்கியப்பங்கு கொள்வதால் தலைவி தலைவனோடு கொண்ட காதலைத் தன் மகளாகிய தோழியின் மூலம் முதலில் அவரே அறிகின்றாள். எ னவே தலைவன் தலைவியோடு களவில் கூற்றிற்குரிய அறுவருள் செவிலியும் ஒ ருத்தி ஆவாள். தலைவியும் தலைவனும் மேற்கொள்ளும் களவு வாழ்வில் நற்றா ய் நேரிடையாகப் பேசுதல் என்ற வாய்ப்பு இல்லை. இதனைப் பற்றித் தொல்க ாப்பியர்,

''கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது''
(தொல்.பொருள்.செய்.184)

என உரைக்கின்றார். ''இந்நற்றாய் கூற்றின் இயல்பைப் பற்றி பின்னெழுந்த நம் பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் தொல்காப்பியர் கூற்றைச் சிறிது சொல்மாற்றி, பொருளை ம ாறாமல் அவ்வாறே மொழிகின்றன.''[18] மேலும் தொல்காப்பியர்,

''தலைவன், தலைவியை உடன்போக்கில் அழைத்துச் சென்றதை உ ணர்ந்த பின் தலைவியை ஈன்ற நற்றாய் தெய்வம், அந்தணர், தன் நோயை அறி

ந்து அதற்கு இரங்குபவர்கள், பாங்கி, செவிலி, அறிவர், கண்டோர் ஆகியோரு டன் தன் அவல நிலையைக் கூறி அவர்களின் அன்போடு கலந்த அனுதாபத்தை எதிர்பார்த்து கூற்று நிகழ்த்துதல் சுட்டப்பெறுகிறது''[19] என நற்றாய் பற்றிய மற்றொரு செய்தியைக் கூறுகின்றனர். இதனையே இலக்கண விளக்க ஆசிரியரும் சுவாமிநாதரும் மொழிந்தாலும் அவர் ''நற்றாயோடு செவிலித்தாய்க்கும் உரிய கூற்றென அதனை மொழிகின்றனர்.''[20] இது கூற்றுக் கோட்பாட்டில் நற்றாய் கூற்றின் வளர்ச்சி ஆகும்.

கண்டோர் கூற்று

தலைவன், தலைவி ஆகிய இருவரும் உடன்போக்கில் செல்லும் பொழுது எதிரே தென்பட்டு அறிவுரை கூறுபவரே கண்டோர் ஆவர். இத்தகைய கண்டோரின் கூற்றைப் பற்றித் தொல்காப்பியர்,

''ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப''

(தொல்.பொருள்.செய்.185)

என மொழிகின்றார். இதற்கு இளம்பூரணர் ''ஒண்தொடி மாதராவர் நற்றாயுந், தோழியுஞ், செவிலியும் இவரொடுந் தலைவனொடுநீ, தலைவியொடுங் கண்டோர் கூற்று காணப்பட்டது என்கின்றார்.''[21] ''இளம்பூரணர் கூறிய கண்டோர் கூற்று பற்றிய கருத்தையே பின்னெழுந்த நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய மூன்று நூல்களும் நூற்பாவாக மொழிகின்றன.''[22] எனினும் சுவாமிநாதம், ''தலைவி, தோழி, பெற்றோர் ஆகியோருடன் கண்டோர் பேசுவதாகவும் அவர்கள் தலைவியின் சுற்றத்தாரைப் பாலைவனத்தில் கண்ட போது தலைவன், தலைவி பற்றிக் கூற்று நிகழ்த்துபவராகவும் சுட்டுகின்றது.''[23]

தலைவன் கூற்று

தலைவன் களவில் தலைவியோடு நேராகப் பேசுவதில்லை. எனினும் உடன்போக்கில் தலைவியை அழைத்துச் செல்லும்போது இடைச்சுரத்தில் தலைவன் தலைவியோடு பேசுவதாக ஒரு கருத்தைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். ''தொல்காப்பியரின் இக்கருத்தை

உள்வாங்கிய நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்னும் மூன்று நூல்களும் அவ்வாறு அக்கருத்தை மொழிகின்றன. சான்றாக நம்பியகப்பொருளும், இலக்கண விளக்கமும் இதனை நூற்பாவில்,

''தமர்வரின் இடைச்சுரம் தன்னில் கிழத்தியோடு
அமர்தரு கிழவோன் ஆணையும் கூறும்''

(நம்.அக.216, இலக்.வி.567)

எனச் சுட்டும். மாறனகப்பொருள் ''தலைவன், தலைவியோடு உடன்போயவழி , இவர்கள் சென்று கொண்டிருக்கும் பாலை நிலத்து இடைவழியிலே அவர்கள் உடன்போக்குக்கு இடையூறு செய்யும் வகையில் தலைவி தமர் பின் தொடர்ந்து வருதலைக் கண்டபோது சற்றும் வருந்துதல் இல்லாத தலைவன், தலைவியிடம் ஆணையிட்டு உரைத்தற்கும் உரிமை உடையவன் ஆவான். ஆணையாவது 'அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென், நுமர்வரின் மறைகுவென மாஅயேஈயே' என்றாற் போல்வன''[24] என்பனவாகும்.

ஏனையோர் கூற்று

கூற்றுக்குரியோரில் தனியாகக் கூற்று இல்லாத சிலர் தலைவன், தலைவியோடு பேசும் மரபை உடையவர் என்பதைத் தொல்காப்பியர்,
''களவு, கற்புக் கூற்றுக்குரிய பன்னிருவருள் தலைவனும் தலைவியும்
ஒழிந்த பதின்மரும் தலைவன், தலைவியொடு குறிப்பாகப் பேசுதற்கும்
உரியர் என்ற கருத்தை மொழிகின்றார்.''[25]

இதற்கு இளம்பூரணர் ''தலைவனையுந் தலைவியையும் ஒழிந்த பதின்மரும் அத்தலைவனொடுந், தலைவியொடுஞ் சொல்லிப் போந்த மரபினாற் சொல்லப் பெறுவர் என்றும், அறம், பொருளின் பங்கட்குத் தகாத சொற்களையெடுத்துக் கூறுதல். அஃதாவது தலைவனைப் பார்ப்பானும், பாங்கனும் கழறலும், தோழி இயற்பழித்தலும், தலைவியைச் செவிலி யலைத்தலும், பாணர், கூத்தர் பாசறையிற் சென்று கூறுதலும், தோழி தலைமகனை வற்புறுத்தலும் முதலாயின''[26] என்றும் மொழிகின்றார்.

''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்னும் மூன்று நூல்களும் தொல்காப்பியர் கோடிட்டுக் காட்டிய கூற்றிற்குரிய ஏனையோரை''[27] விரித்துத் தெளிவாக எழுவர் என்பதை,

"பார்ப்பான் பாங்கன் பாணன் விறலி
கூத்தர் பரத்தையர் குறைவில் அறிவர் என்று
ஏத்தும் எழுவரும் இறைவன் இறைவியொடு
ஏற்பக் கூறுவர் இடந்தொறும், இடந்தொறும்"

(மாற.அக.268)

என்றவாறு சுட்டியிருப்பது கூற்றுக் கோட்பாட்டின் வளர்ச்சியாகும்.

கேட்போர்

நான்காவது உறுப்பாகக் கேட்போர் என்னும் உறுப்பு அமைந்துள்ளது. ஒருவர் ஒன்றைக் கூற அதனைச் செவிமடுப்போர் கேட்போர் எனப்படுவர். அக இலக்கணத்தில் மனையோளாகிய தலைவி கூறுவனவற்றையும் கிழவனாகிய தலைவன் கூறுவனவற்றையும் கேட்போர் களவு, கற்பில் கூற்றிற்குரியோராகிய பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி, பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்னும் பன்னிருவருள் தலைவன், தலைவி ஒழிந்த பதின்மரும் (பத்துப்பேரும்). இதனைத் தொல்காப்பியர்,

"மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியும்
நினையுங் காலைக் கேட்குநர் அவரே"

(தொல்.பொருள்.செய்.188)

எனச் சுட்டுகின்றார். தொல்காப்பியரின் இக்கருத்தையே "நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் அவ்வாறே மொழிகின்றன."[28] தொல்காப்பியத்திலிருந்து வளர்ச்சி பெற்றதாக, "சுவாமிநாதம் தலைவி பேச்சையும், தலைவன் பேச்சையும் கூற்றிற்குரிய எல்லோரும் கேட்பர். அவ்வாறே ஏனையோருடைய பேச்சையும் இடம் அறிந்து தலைவனும், தலைவியும் கேட்பர்"[29] என்றுரைக்கும். பார்ப்பார், அறிவர் ஆகியோரின் கூற்றைக் கேட்போர் பற்றிச் சுட்டும்பொழுது தொல்காப்பியர்,

"பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே"

(தொல்.பொருள்.செய்.189)

என மொழிகின்றார். தொல்காப்பியரின் இக்கருத்தையே "நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்க ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர்."[30]

பரத்தை வாயில்கள் கூற்றைக் கேட்பவர்

பரத்தை, வாயில்கள் என்னும் இருவரும் தலைவியைச் சுட்டிக்கூறும் கூற்றுக்களைத் தலைவியை நோக்கியே கூற வேண்டும். அவ்வாறு கூறும் பொழுதுதான் அவர்கள் கருதிக் கூறிய பயனை அக்கூற்றுகள் பெறும். இல்லையெனில் அக்கூற்றுகளால் எந்தப் பயனும் இல்லை எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். இச்செய்தியைப் பிற்றைய இலக்கணங்கள் எவையும் மொழியவில்லை.

வாயில்களுக்கு உரிய மரபு

வாயில்களுக்குரிய மரபைப் பற்றித் தொல்காப்பியர் வாயில்களாக வரும் இப்பத்துப் பேரும் தலைவி கேட்கும்படி கூறுதலோடு, தம்முள் தாமே ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ளலும், வினவியறிதலும் உண்டு என்கின்றார். இதனைத் தொல்காப்பியரின்

''வாயில் உசாவே தம்மு ளுரிய'' **(தொல்.பொருள்.செய்.191)**

எனும் நூற்பா உணர்த்தும். வாயில்களுக்குரிய இம்மரபைப் பற்றிப் பிற்றைய இலக்கணங்களுள் மாறனகப்பொருள்,

''தம்முள் தாமே வாயில் உசாஉரை
கொம்மை வெம்முலைக் குலக்கொடி கேட்கும்''
(மாற.அக.271)

எனச் சுட்டும். இதில் தொல்காப்பியர் சுட்டிய படியே வாயில்கள் தமக்குள் தானே கூறிக்கொள்ளலும் வினவியறிதலும் உண்டு என்று கூறியதோடு ''வாயில்கள் இவ்வாறு தமக்குள் தானே பேசிக்கொள்வதைத் தலைவி செவிமடுப்பாள்''[31] எனச் சுட்டுகின்றது. மேலும் முந்நூற்பாவில் பரத்தை, வாயில் இருவர் கூற்றும் தலைவியைச் சுட்டிக் கூறாவிட்டால் பயனில்லை என்றதை இந்நூல் மறுத்து வாயில்கள் கூற்றைத் தலைவி கேட்பள் என உறுதியாகக் கூறுகின்றது.

கேட்டல் மரபவழுவமைதி

கேட்டல் பற்றிய மரபு வழுவமைதியான செய்தியைப் பற்றித் தொல்காப்பியர் ஞாயிறு முதல் நெஞ்சம் ஈறாக உள்ள மக்களல்லாத பதினோர் அஃறிணைப் பொருட்களும் தலைவன், தலைவி ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்து துன்பமுற்ற தனிமைப் பொழுதில் தம்மைப் பார்த்துக் கேளாத இப்பொருட்கள் கேட்பன போலவும், சொல்லாத இப்பொருட்கள் சொல்லுவன போலவும் செய்யுள் செய்வது புலனெறி வழக்கம் எனச் சுட்டுகின்றார். தொல்காப்பி

யர் கூறிய இச்செய்திகளைப் பிற்றைய
அக இலக்கணங்கள் எவையும் எடுத்தாளவில்லை.

களன்

ஓர் இலக்கியத்தைப் படிக்கும் போது இதன் கண் கூறப்பெறும் பொருள் நிகழ்ச்சி இன்ன இடத்து நிகழ்ந்தது என அறிதற்கு ஏதுவாகியதோர் உறுப்பு இடம் எனப்படும். இது களன் எனவும் அழைக்கப்படும். அகப்பொருள் இலக்கியங்களில் ஐந்திணை எனப்படும் ஐவகையான காதல் ஒழுக்கங்கள் நிகழ்வனவாகக் கூறப்படும் குறிஞ்சி, முல்லை முதலிய இடங்கள் களன் அல்லது இடம் ஆகும். ஒரு செய்யுளைக் கேட்டால் இதன்கண் கூறப்படும் பொருள் நிகழ்ச்சி இன்ன இடத்து நிகழ்ந்தது என அறிதற்கு ஏதுவாகியதோர் உறுப்பு இடம் எனப்படும். இத்தகைய இடத்தைப் பற்றித் தொல்காப்பியர்,

“ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங்
கரும நிகழ்ச்சி இடமென மொழிப”

(தொல்.பொருள்.செய்.193)

என மொழிகின்றார். இவ்வுறுப்பை நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும் சுருக்கமாக “முறைப்பட்ட காரியம் நிகழும் நிலம், இடம் என்னும் உறுப்பாகும்”[32] என மொழிகின்றது. மாறனகப்பொருள் “இருவகைக் கருமமும் நிகழுகின்ற களமாகிய பகுதியே இடனாகும்”[33] என்கின்றார்.

காலம்

காலம் என்னும் உறுப்பைப் பற்றித் தொல்காப்பியர் சுட்டியதற்கு வெள்ளைவாரணார் “இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் கூறப்பட்டு இயலும் மூன்று காலத்தினும் நிகழ்கின்ற நிகழ்ச்சியினை ஆராய்ந்து உணருமாறு செய்யுளுள் தோன்றச் செய்யின் அது காலம் என்னும் உறுப்பாகும் என்றும் பெரும்பொழுதும், சிறுபொழுதும் ஆகிய பருவ காலங்கள் முதல், கரு, உரிப்பொருள் என்பவற்றோடு கூடித் திணையென அடங்குமாதலின் அவற்றின் வேறாகிய பொருள் நிகழ்ச்சியை ஈண்டுச் செய்யுட்குரிய ‘காலம்’ என்னும் உறுப்பாகக் கொண்டார் ஆசிரியர்”[34] எனக் கூறுகின்றார்.

தொல்காப்பியர் காலமென்னும் இவ்உறுப்பை பற்றி “நம்பியகப்பொருள், சுவாமிநாதம் என்னும் இரண்டு நூல்களும் தொல்காப்பியர் இவ்வுறுப்பி

ற்குச் சுட்டிய கருத்தை சிறிது குறைத்தும்'' [35] ''இலக்கண விளக்கம் தொல்காப்பியர் கருத்தை அதில் உள்ளபடியேயும் உரைக்கின்றது.'' [36] மாறனகப்பொருள்,

''திறம்தரு சிறுபொழு தொடுபெரும் பொழுதுஇவை
இறந்ததும் நிகழ்வதும் எதிர்வதும் எனமுறை
சிறந்திடக் கருமம் செய்யுளின் அமைவரக்
காட்டுதல் ஆகும் காலம்என் பதுவே'' (மாற.அக.275)

எனச் சுட்டுகின்றது. இதில் பலவாகப் பகுக்கப்பட்ட சிறுபொழுது ஆறும் பெரும்பொழுது ஆறும் என்ற இவை, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் ஆகிய மூன்று நிலைகளிலும் செய்யுளில் பொருந்தி வருவதனைக் குறிப் பிடும் உறுப்புக் காலம் ஆகும் எனச் சுட்டுகின்றது. இக்காலம் என்னும் உறுப்பை பத் தொல்காப்பியர் சுட்டியதில் இருந்து சிறிது விரிவுபடுத்தி மாறனகப்பொரு ளாசிரியர் உரைக்கின்றார். இது பன்னிரெண்டு அக உறுப்பில் காலம் என்னும் உறுப்பு பெற்ற வளர்ச்சி ஆகும்.

பயன்

ஓர் இலக்கியத்தில் ஒன்றைக் கூறும்பொழுது அதன் பயன் இது என் று அதனுடன் சேர்த்து வெளிப்படையாகச் சொல்லப்படாமல் மறைவாக நின் று அப்பயனைப் படிப்போர் உணரும்படிச் செய்வது பயன் எனப்படும். இப்ப யன் என்னும் உறுப்பைத் தொல்காப்பியர்,

''இதுநனி பயக்கும் இதன்மா றென்னுந்
தொகுநிலைக் கிளவி பயனெனப் படுமே''
(தொல்.பொருள்.செய்.195)

எனச் சுட்டுகின்றார். இந்நூற்பாவிற்கான விளக்க உரையில், ஆ.சிவலிங்கனார் '' இக்கூற்று இதன்பின் இன்ன பயனை மிகவும் தரும் என்னும் பொருளை விளங் கக் கூறாமல் சொல்லிய சொற்றொடரிலேயே பெறவைத்தமைவது பயன் என் னும் உறுப்பாம். இயற்கைப் புணர்ச்சியைப் பற்றி ஒரு செய்யுளில் கூறினால், அதன்பின் அவ்வியற்கைப் புணர்ச்சியால் தலைவனும் தலைவியும் மகிழ்ச்சிை ய எய்துவர் என்பது இயற்கைப் புணர்ச்சியால் விளையும் பயன்'' [37] ஆகும். இப் பயனுறுப்பை ''நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் எ ன்ற மூன்று நூல்களும் தொல்காப்பியரின் கருத்தையே மொழிகின்றன.'' [38]

மெய்ப்பாடு

இலக்கியத்தில் ஏதேனும் ஒரு சொல்லைக் கூறிய உடனேயே அதை ஆராய்ந்து உணராமலேயே அப்பொருள் தானே வெளிப்பட்டுத் தோன்றுவது போல கண்ணீர் அரும்பல், உவகை பூத்தல் முதலியனவற்றை வெளிப்படும்படிச் செய்வது மெய்ப்பாடு என்னும் உறுப்பாகும். இச்செய்யுள் உறுப்பைப் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியர் இரண்டு நூற்பாக்களில் சுட்டுகின்றார். முதல் நூற்பாவில் மெய்ப்பாடு என்ன என்பதைப் பற்றி,

''உய்த்துணர்வு இன்றி தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு ஆகும்''
(தொல்.பொருள்.செய்.196)

எனச் சுட்டுகின்றார்.

இம்மெய்ப்பாட்டைப் பற்றி பல்வேறு உரையாசிரியர்களும் பல கருத்துக்களை மொழிகின்றனர். இம்மெய்ப்பாடு என்பதற்கு இளம்பூரணர் சுட்டும் பொழுது ''யாதானு மொன்றைக் கூறியவழி யதன்கட் பொருண்மையை விரித்துணர்தலன்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்.

''ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார் பெடுக்கவல்லேன்
என்போற் பெருவிதுப் புறுக நின்னை
இன்னா துற்ற அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்தினிற்சிற் சிறிதே'' (புறம்.259)

என்பதனுள் அழுகையாகிய மெய்ப்பாடு புலப்பட வந்தவாறு''[39] எனக் கூறுகின்றார்.

இம்மெய்ப்பாட்டுச் செய்யுளுறுப்பை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் மொழிகின்றன.

இம்மெய்ப்பாடு பற்றித் தொல்காப்பியர் மேலும் ஒரு நூற்பாவில்,

''எண்வகை இயல்நெறி பிழையாதாகி
முன்னும் கிளந்த முடிவினது அதுவே''

(தொல்.பொருள்.செய்.197)

எனக் கூறுகின்றார். இந்நூற்பாவிற்குக் க.வெள்ளைவாரணன் ''செய்யுட்கு உறுப்பாக இங்குக் கூறப்படும் மெய்ப்பாடு முன் மெய்ப்பாட்டியலிற் கூறப்பட்ட அவ்விலக்கணத்தேயன்றி அதற்குப் பிறிதான இலக்கணத்தன்று''[40] *எனத் தன் ஆய்வுரையில் கூறுகின்றார். இவ்வெள்ளைவாரணர் கருத்தை நோக்குகையில் தொல்காப்பியர், மெய்ப்பாட்டியலில் 28 நூற்பாக்களில் மெய்ப்பாடுகள் பற்றி விரிவாகக் கூறுகின்றார். அவர் முதலில் நகை,*

அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எண்வகை மெய்ப்பாடுகள் பற்றிக் கூறிப் பின் அவற்றிற்கான நாநான்கு நிலைக்களன்களையும் தனித்தனி நூற்பாக்களில் விளக்குகின்றார்.

பின்மேற்சுட்டப்பட்ட 32 வகை மெய்ப்பாடுகளும் நிகழாதவிடத்து நிகழும் மெய்ப்பாடுகளாக உடைமை, இன்புறல் தொடங்கி நடுக்கு வரை உள்ள 32 வகை மெய்ப்பாட்டை மொழிகின்றார். அடுத்து களவிற்குரிய மெய்ப்பாடுகள், கைக்கிளை, பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்,

அழிவில் கூட்டத்து மெய்ப்பாடுகள், கற்பிற்குரிய மெய்ப்பாடுகள், தலைவன், தலைவியரிடையே இருக்க வேண்டிய ஒப்புமைப் பண்புகள், தவிர்க்க வேண்டிய இழிவான பண்புகள் போன்றவற்றை இவ்வியலில் விரிவாகக் கூறிய இலக்கணமே அன்றி இம்மெய்ப்பாடு என்னும் செய்யுளுறுப்பைப் பற்றிப் பிற செய்திகள் இனி கூறுவதற்கு இல்லை என்ற கருத்து புலப்படுகின்றது. இதனை நம்பியகப்பொருள்,

''நகை முதலாம் இருநான்கு மெய்ப்பாடும்
நிகழ்பொருள் மெய்ப்பட நிற்ப மெய்ப்பாடே''

(நம்.அக.231)

எனச் சுட்டுகின்றது. மாறனகப்பொருள் பதினைந்து நூற்பாக்களில் மிக விரிவாக இவ்வுறுப்பை மொழிந்துள்ளது.

எச்சம்

ஓர் இலக்கியத்தில் தனித்தனிப் பாடல்களாகிய சில செய்யுள் முடிவடைந்தாலும் முற்றுப்பெறாமல் எச்சமாக இருக்கும். ஒரு சொல்லோ அல்லது ஒரு குறிப்புப் பொருளோ வந்து முடியும்படியாக அது அமைந்திருக்கும். இதுவே

வ எச்சம் என்னும் உறுப்பாகும். இதனைத் தொல்காப்பியர் ஒரு செய்யுள் பிறிதொரு சொல்லொடும் பிறதொரு குறிப்பொடும் முடிவுபெறுமாறு படைக்கப்படுவது எச்சம் என்றழைக்கப்படும் என்கிறார். சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இஃது இரண்டு வகைப்படும். தொல்காப்பியரின் இவ்வுறுப்பை இறையனார் அகப்பொருள் மூன்று நூற்பாக்களில் மொழிகின்றது. அந்நூல் செய்யுளின் அக உறுப்புகள் பத்து என முன்பு மொழிந்தன. அப்பத்துறுப்பில் ''எச்சமும், கோளும் இல்லாமலும் செய்யுள் அமையும்''[41] என்றும், ''சொல்லெச்சம், குறிப்பெச்சம் என எச்சம் இரண்டு வகைப்படும்''[42] என்றும் கூறுகின்றது. மேலும் இவ்வெச்சம் பற்றி ''தொல்காப்பியர் சுட்டிய செய்தியையே நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் மொழிகின்றன.''[43]

முன்னம்

இன்ன சூழலில் இன்ன சொற்கள், இன்னார் கூறுவதற்கு உரியவர் என்று அறிந்து அவரவர்க்கு உரிய சொற்களை இலக்கியத்தில் அமைப்பது முன்னம் என்னும் உறுப்பாகும். இவ்வுறுப்பினைத் தொல்காப்பியம்,

> **''இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியவென்**
> **றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்''**
> **(தொல்.பொருள்.செய்.199)**

என மொழிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக,

> **''செம்புலப் பெயல்நீர் போல**
> **அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே**

என்னும் வரிகளைக் குறிப்பிடும் தமிழண்ணல் இது தலைவன் கூறியது. தலைவிக்குக் கூறியது. முதற்கூட்டத்து இறுதியில் மகிழ்ந்து நலம் பாராட்டிக் கூறியது என்பன இப்பாடலை வைத்து உய்த்துணரப்படுகின்றன''[44] என்பர். ''நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய மூன்று நூல்களும் தொல்காப்பியர் சுட்டியது போலவே எவ்வித வேறுபாடின்றி முன்னத்தை மொழிகின்றன.''[45]

பொருள்வகை

தலைவனும், தலைவியும் மேற்கொள்ளும் களவைச் சொல்லும் அக இலக்கியச் செய்யுட்களில் இருக்க வேண்டிய பொருட்கள் முதல், கரு, உரி என்னும் மூன்று பொருட்கள். இம்மூன்று பொருட்களும் ஒரு அகச்செய்யுளில் இடம் பெற்றிருந்தால் அச்செய்யுள் சிறப்பு வாய்ந்ததாகும். எனினும் இம்மூன்று பொருட்களுள் ஒன்றோ, இரண்டோ குறைந்தும் ஒரு செய்யுளில் காணப்பட்டாலும் உரிப்பொருள் என்ற ஒரு பொருளன்றி எவ்வகச் செய்யுளும் இடம் பெறாது. இம்மூன்று பொருட்களும் செய்யுளுக்கு அடிப்படை எனினும் செய்யுள் செய்வோனின் கற்பனை, செய்யுளின் உள்ளடக்கம், வர்ணனை, உவமை, விளக்கம், இலக்கணக்குறிப்பு போன்ற பல துணைப் பொருட்களையும் புலவன் தன் பாடலில் கையாளுவது அவரவர் புலமைக்குரியதே. ஒரு செய்யுளில் உரிப்பொருளே அன்றி இத்தகைய பலவகைத் துணைப் பொருட்களையும் கொண்டு அமைவதே பொருள்வகை எனப்படும். செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகிய இத்தகைய பொருள் வகையைப் பற்றித் தொல்காப்பியர்,

''இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி இன்றி
இதுவாகித் திணைக்கு உரிப்பொருள் எனாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப''
(தொல்.பொருள்.செய்.200)

எனக் குறிப்பிடுகின்றார். ''இவரின் கருத்தையே நம்பயகப்பொருள், மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் கூறுகின்றன.''[46]

துறைவகை

பல்வேறு வகையான பகுதியைச் சார்ந்த மக்களும் விலங்குகளும் நீரை உண்ணவும், நீராடவும் வரும் ஒரு குளத்தில் உள்ள துறை போல தலைவனும், தலைவியும் மேற்கொள்ளும் அக வாழ்க்கையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, அறத்தொடு நிற்றல் போன்ற நிகழ்வுகள் அகத்துறை என்ற ஒரே பொருளின்கீழ் சுட்டப்படுவதுண்டு. அகம் சார்ந்த பல செய்திகள் வரினும் அவை ஒரு குளத்தில் நீருண்ணும் துறை போல ஒருமுகப்பட்டு, ஒரு செய்தியாவ

து அது பாடல்களில் அவ்வவற்றிற்குரிய மக்களும் விலங்கும் அல்லாமல் பிற மக்கள், விலங்குகள், பறவைகள் முதலியன வரினும் திறம்பட ஆராய்ந்து, தத்த மக்குரிய இயல்பொடு மரபு மாறாமல் முடியின் அவ்வாறு வரும் இலக்கியத்தி றனே 'துறை' எனப்படும். பல்வேறு வகைப் பொருள்கள் வரலாம். ஆயினும் அவை ஒரு கருத்தையே நோக்கி நிற்கின்ற போது துறை எனப்படும்.

''புறப்பாடல்கள் துறை எனப்படும். கூற்றுக்களாலான அகப்பாடல்க ளிலும் அறத்தொடு நிலை, இற்செறிப்பு, கழற்றெதிர்மறை எனத் துறைப் பெயர்கள் சுட்டடப்படுவதுண்டு.''[47] இத்துறைவகையைத் தொல்க ாப்பியர்,

''அவ்வம் மாக்களும் விலங்கும் அன்றிப்
பிற அவண் வரினும் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந் தானேதுறை எனப் படுமே''
(தொல்.பொருள்.செய்.201)

எனச் சுட்டுகின்றார். ஆ.சிவலிங்கார் துறை பற்றி, ''ஒரு திணைக்குரிய தலைவ ன் தலைவியரேயன்றித் தலைவி ஒரு நிலத்துக்குரியளாகவும் கூறப்படும் கருப்பெ பாருள் அவள் நிலக்கருப்பொருளன்றி வேற்றுநிலக் கருப்பொருளாகவும் உரிப் பொருளும் அவள் நிலத்துக்குரியதன்றி வேற்று நிலத்துக்குரியதாகவும் ஒரு செ ய்யுளில் வரின் உரிய பொருளடிப்படையில் அதனை ஒரு துறைப்பாற் படுத்து வதே துறையெனப்படும்''[48] எனச் சுட்டுகின்றார்.

இத்துறையுறுப்பை நம்பியகப்பொருள் ''செய்திகளின் தொடர்ச்சி அ றாத வகையில் கூறுவோரோ, கேட்போரோ இல்லாத நிலையில், பொருள் தெ ாடர்பு நெகிழ்ச்சியின்றி நிலைபெறத் தொடர்நிலைச் செய்யுள் பாடும் புலவே ன குறிப்பினால் கூறுவது துறைவகையாகும்''[49] எனவும், ''முல்லை முதலிய ஐவ கை நிலங்களுக்கும் உரியவராகும் மக்களையும் விலங்கு முதலியவற்றையும் தொன்றுதொட்டு வந்த மனநிறைவு தரும் இயல்புகளை விடுத்து வேற்று வகைய ாகப் புலவன் படைத்துக்கொண்டு செய்யுள் இயற்றினாலும் கூறப்பட வேண்டி ய அத்திணைக்கு உரிய உரிப்பொருள் தவறாத வகையில் செய்யுளை நிறைவு செ

சய்வதும் துறைவகையாகும்.''[50] ''இலக்கண விளக்கமும், சுவாமிநாதமும் இத்து றை பற்றி தொல்காப்பியம் மொழிந்ததையே''[50] எடுத்துரைக்கின்றன.

தொகுப்புரை

- தொல்காப்பியர் செய்யுளியலில் 34 செய்யுள் உறுப்புகளுள் பதின்மூன்றாம் உறுப்பு தொடங்கி, இருபத்து நான்காம் உறுப்பு வரை உள்ள பன்னிரெண்டு உறுப்புகளை அக இலக்கிய உறுப்புக்களாகக் கூறுகின்றார்.
- திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை ஆகியன செய்யுளுக்குரிய பன்னிரெண்டு அக உறுப்புகளாகும்.
- தொல்காப்பியர் சுட்டிய இப்பன்னிரு அக இலக்கிய உறுப்புகளைப் பின்னெழுந்த அக இலக்கணங்களும் இறையனார் அகப்பொருள், வீரசோழியம், அகப்பொருள் விளக்கம், மாறன் அகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய ஆறு நூல்களும் சுட்டுகின்றன.
- அகநூல்களில் இறையனார் அகப்பொருள் மட்டும் செய்யுளுக்குரிய அக உறுப்புக்களைப் பத்தென மொழிகின்றது. இறையனார் அகப்பொருளும் வீரசோழியமும் இவ்வகப்பாட்டு உறுப்புக்களை அகனைந்திணையும் உரைக்கும் முறை என்றே கூறுகின்றன.
- கைக்கோளைத் தொல்காப்பியர் களவுக் கைகோள் கற்புக் கைகோள் என இரண்டாக மொழிகின்றார். பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன்,தலைவி ஆகிய அறுவரும் களவில் கூற்றுக்குரியோர் ஆவர்.
- மாறனகப்பொருள் பதினைந்து நூற்பாக்களில் மெய்ப்பாட்டுச் செய்யுளுறுப்பை மொழிகின்றது.
- சொல்லெச்சம், குறிப்பெச்சம் என எச்சத்தின் இரண்டு வகைகளை இறையனார் அகப்பொருள் மொழிகின்றது.
- நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், சுவாமிநாதம் ஆகிய மூன்று நூல்களும் இன்ன சூழலில் இன்ன சொற்கள், இன்னார் கூறுவதற்கு உரியவர் என்று அறிந்து அவரவர்க்கு உரிய சொற்களை செய்யுளில் அமைப்பது முன்னம் என்ற தொல்காப்பியரின் கருத்தையே மொழிகின்றன.

சான்றெண் விளக்கம்

1. புத்தமித்திரர், வீரசோழியம், பொருட்படலம், ப.67.
2. இறை.அக.56, வீர.சோ.88.
3. டி.வி.கோபால் ஐயர், (உ.ஆ.), திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறன் அகப்பொருளும் திருப்பதிக்கோவை, ப.267.
4. இலக்.வி.560.
5. க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம்-பொருளதிகாரம்-உரைவளம் செய்யுளியல், ப.935.
6. தொல்.பொருள்.செய்.179.
7. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும் ப.556.
8. நம்.அக.212, மாற.அக.240, இலக்.வி.561, சுவாமி.124.
9. தொல்.பொருள்.செய்.181.
10. நம்.அக.213, மாற.அக.241, இலக்.வி.562, சுவாமி.124.
11. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம் செய்யுளியல் பகுதி 4, ப.66.
12. இலக்.வி.562.
13. நம்.அக.211, சுவாமி.124.
14. மாற.அக.242, 243.
15. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும் ப.558.
16. நம்.அக.215, மாற.அக.250.
17. சுவாமிக்கவிராயர், சுவாமிநாதப் பொருளதிகாரம், ப.217.
18. நம்.அக.218, மாற.அக.263, இலக்.விள.564, சுவாமி.125.
19. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும் ப.558.
20. இலக்.வி.565, சுவாமி.125.
21. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம் செய்யுளியல் பகுதி 4, ப.72.
22. நம்.அக.221, மாற.அக.267, இலக்.வி.556.
23. சுவாமி.125.

24. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாற
ன் அகப்பொருளும், திருப்பதிக்கோவையும், ப.272.

25. ஞா.மாணிக்கவாசகன், தொல்காப்பியம் மூலமும் விளக்கவுரையும் ப.559
.

26. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம் செய்யுளி
யல் பகுதி 4, பக்.76,77.

27. நம்.அக.222, மாற.அக.268, இலக்.வி.569.

28. நம்.அக.225, மாற.அக.269, இலக்.வி.573, சுவாமி.126.

29. சுவாமி.126.

30. நம்.அக.226, மாற.அக.270, இலக்.வி.573.

31. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாற
ன் அகப்பொருளும், திருப்பதிக்கோவையும், ப.278.

32. நம்.அக.227, இலக்.வி.574.

33. மாற.அக.272.

34. வெள்ளைவாரணனார், தொல்காப்பியம் பொருளதிகாரம் உரைவளம் செ
ய்யுளியல், ப.988.

35. நம்.அக.228, சுவாமி.127.

36. இலக்.வி.575.

37. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம் செய்யுளி
யல் பகுதி 4, ப.98.

38. நம்.அக.229, மாற.அக.276, இலக்.வி.576. சுவாமி.127.

39. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம் செய்யுளி
யல் பகுதி 4, ப.96.

40. வெள்ளைவாரணார், தொல்காப்பியம் பொருளதிகாரம் உரைவளம் செய்
யுளியல், ப.995.

41. நக்கீரர் உரை, இறையனார் அகப்பொருள், ப.182.

42. மேலது., ப.183.

43. நம்.அக.232, இலக்.வி.581, மாற.அக.293, சுவாமி.127.

44. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், ப.507.

45. நம்.அக.230, இலக்.வி.577, சுவாமி.127.

46. நம்.அக.233, மாற.அக.295, இலக்.வி.582, சுவாமி.128.

47. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், ப.509.

48. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம் செய்யுளி யல் பகுதி 4, ப.107.

49. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாற ன் அகப்பொருளும், திருப்பதிக்கோவையும், ப.287.

50. மேலது., ப.287.

51. இலக்.வி.583, சுவாமி.128.

இயல்-4

கூற்றுக்கோட்பாட்டு வளர்ச்சி

முன்னுரை

ஒருவருக்கொருவர் தம்முள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள உதவும் முறைக்குக் கூற்று என்று பெயர். சொல்பவரிடம் இருந்து கேட்பவருக்கு ஒரு செய்தியை எடுத்துச் செல்வதும் கூற்றே ஆகும்.
வினா, விடை முறையில் பாடப்படுகின்ற வாய்மொழிப் பாடல்களில் இருந்து பெறப்பட்டதும் கூற்று ஆகும்.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகப்பொருளை விளக்கும் போது மாந்தர்களின் கூற்று அடிப்படையில் விளக்கினார். ஏனெனில் அகச்செய்திகளைப் பொதுமையாகச் சொல்வதைவிட மாந்தர்களின் கூற்றுகள் மூலமாக ஒருவர் கூற மற்றவர் அதற்குப் பதில் இறுக்க என வெளிப்படுத்தினால் உடனே அது படிக்கும் வாசகனால் பின்பற்ற முடியும், பல நூற்றாண்டு காலம் தாண்டியும் நிலைத்து நிற்கும் என எண்ணியே மாந்தர்களின் கூற்றுமுயையில் அகச்செய்திகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தொல்காப்பியர் செய்யுள் செய்வதற்குரிய உறுப்புகளுள் கூற்று என்ற ஒன்றையும் களவு, கற்புக் காலத்தில் கூற்று நிகழ்த்துவோர் ஒரு பன்னிருவர் எனவும் செய்யுளியலில் சுட்டுகின்றார். மேலும் ஒவ்வொரு மாந்தர்களின் கூற்றுக்களை ஆங்காங்கே பல இயல்களிலும் விரவிக் கொடுத்துள்ளார். இப்பொருளதிகாரம் வெற்றிபெற தொல்காப்பியர் மேற்கொண்ட முயற்சி அதனைப் பற்பல நூற்றாண்டுகளாக நம் தமிழ் உலகம் படித்துப் பயன்பெறுவதில் இருந்தே அறிந்து கொள்ளலாம். அத்தகைய கூற்றுகள் தொடர்பான கோட்பாடுகள் அக இலக்கணங்களில் அகமாந்தர்களின் கூற்றுமுறை அமைந்திருக்கும் முறையை விளக்குவது இவ்வியலின் நோக்கமாகும்.

கூற்று தோன்றிய முறை

விலங்குகளால் மனிதனைப் போல் பேச இயலாது. ஆரம்ப காலத்தில் மனிதனும் விலங்குகளைப் போல பேச இயலாதவனாகவும் பேசுவதற்குச் சக்தியற்றவனாகவுமே இருந்தான். புகைமூட்டியும் அம்பு எய்தும் சைகை மூலமா

கவும் தன் கருத்தை மற்றவருக்குப் புலப்படுத்தி வந்த மனிதன் நாளடைவில் கூற்றுகள் மூலம் தன் கருத்தை வெளிப்படுத்தத் தொடங்கினான். எனவே கூற்று என்பதே மனிதனை விலங்குகளில் இருந்து பிரித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

கூற்றுகளின் முக்கியத்துவம்

கூற்று என்ற ஒன்றிலிருந்து தான் மனிதன் தனக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொள்கின்றான். பேச்சாகிய கூற்றினால் தான் மனிதன் ஒருவனை ஒருவன் நண்பனாக்கிக் கொள்கிறான். கூற்றால் நட்பும், நட்பால் ஒற்றுமையும் தோன்றுகின்றது. இக்கூற்றினால் தான் மனிதன் இன்று உலகினையே கட்டி ஆளும் திறன் பெற்றுள்ளான்.

தொல்காப்பியத்தில் கூற்று

கூற்று என்னும் சொல் தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில் ஐந்து இடங்களிலும் பொருளதிகாரத்தில் ஒன்பது இடங்களிலும் இடம்பெற்றுள்ளது. கிளவி, கிளந்த, கிளத்தல், கூற்று, கூறல், மொழிதல் என்ற சொற்களைக் கூற்று என்னும் பொருள் படவே தொல்காப்பியர் மொழிந்துள்ளார்.

செய்யுள் உறுப்புகளுள் கூற்று

செய்யுளியலில் செய்யுளுக்குரிய உறுப்புகள் முப்பத்து நான்கில் பதினைந்தாம் உறுப்பாக கூற்று என்னும் அக இலக்கிய உறுப்பு சுட்டப்பட்டுள்ளது.

கூற்று என்னும் உறுப்பு

தொல்காப்பியர் கூற்றுறுப்பு பற்றிய செய்திகளை ஆறு நூற்பாக்களில் கூறுகின்றார். இதில் களவில் கூற்று நிகழ்த்துவோர், கற்பில் கூற்று நிகழ்த்துவோர், நற்றாய், கண்டோர், தலைவன், ஏனையோர் கூற்றுக்களைப் பற்றிய இயல்புகளைச் சுட்டுகின்றார். இக்கூற்று உறுப்பு பற்றிய செய்திகள் செய்யுளியலில் கூறப்பட்டிருந்தாலும் இக்கூற்றுறுப்புக்கு உடையவர்களான மாந்தர்களின் கூற்றுக்கள் பற்றி அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், உவமையியல் ஆகிய ஐந்து இயலிலும் தொல்காப்பியர் விரிவாகச் சுட்டியுள்ளார்.

கூற்றுக்குரிய தலைமை மாந்தர்கள் பலரில் முக்கியத்துவம் வாய்ந்த முதன்மையான மாந்தர், தலைவனாவான். இவனே களவு, கற்பு வாழ்க்கையின் கதாநாயகன் ஆவான். இவனைச் சுற்றியே வாழ்க்கை பின்னப்படுகின்றது. மாந்தர்களின் கூற்றுகளுக்கு முக்கியத்துவம் தந்து பொருளதிகாரத்தைப் படைத்த தொல்காப்பியர் களவு, கற்பு என இரண்டு வகை ஒழுக்கங்களிலும் எழும் கூற்றுக்களை ஐந்து நூற்பாக்களின்வழி எண்பத்தைந்து இடங்களில் சுட்டுகின்றார்.

கூற்றுக்குரிய மாந்தர்கள்

தொல்காப்பியர் கூற்றுக்குரிய மாந்தர்கள் பன்னிருவரை ''களவில் கூற்றிற்குரியோர், கற்பில் கூற்றிற்குரியோர்''[1] எனப் பிரித்துச் சுட்டுகின்றார்.

தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடு

தொல்காப்பியர் தலைவன், தலைவிக்கு இருக்க வேண்டிய பண்பு நலனைக் கூற்று முறையினைக் கொண்டே விளக்குகின்றார். ''கூற்றின் மூலம் பேச்சு மாந்தரின் எண்ணம், பண்பு, செய்கை ஆகியன வெளிப்படுகின்றது. அத்தயை வலு கூற்றுக்கு இருப்பதனால் தான் அகப்பாடல்கள் கூற்றினால் படைக்கப்பட்டன எனலாம். அதனாலேயே தொல்காப்பியர் திணை, கூற்று, கேட்போர், களன் முதலிய செய்யுள் உறுப்புக்களை மொழிகின்ற''[2]தாக இரா.ஈஸ்வரி கூறுகின்றார்.

பன்னிரு மாந்தர்களின் கூற்றுக்கள்

தொல்காப்பியர் கூறும் கூற்று நிகழ்த்தும் மாந்தர்களையும் அவர்கள் கூற்று நிகழ்த்தும் இடங்களின் எண்ணிக்கையையும் பின்வருமாறு

1.	பார்ப்பான்	…	9
2.	பாங்கன்	…	0
3.	தோழி	…	61
4.	செவிலி	…	17
5.	கிழவன்	…	85
6.	கிழத்தி	…	72
7.	பாணன்	…	2
8.	கூத்தன்	…	10

9.	விறலி	...	0
10.	பரத்தை	...	8
11.	கண்டோர்	...	7
12.	அறிவர்	...	2

எனச் சுட்டுகின்றார். அக இலக்கியத்திற்குரிய கோட்பாடுகளில் இப்படித்தான் இருக்க வேண்டும் எனச் சில விதிகளைக் கட்டாயமாக்கியுள்ளார். சில இடங்களில் அவ்விதிகளைத் தகர்த்தும் வழுவமைதிகளாக, புறநடைகளாகச் சில கருத்துக்களை இயற்றியும் உள்ளார். அவ்வகையில் களவு, கற்புக் கூற்றுக்குரிய மாந்தர்களை பன்னிருவர் எனக்கூறியும் அவர்களுக்குரிய கூற்றுக்களின் எண்ணிக்கையையும் கூறி கோட்பாடு வகுத்தவர் அம்மாந்தர்களில் சிலருக்கு எந்தக் கூற்றுக்களையும் சுட்டாது கூற்றற்ற மாந்தர்கள் போலவே படைத்துள்ளார். ஆனால் கூற்றுக்குரிமையில்லாத நற்றாய், இளையோர், வாயில்கள் என்னும் கூற்றற்ற மாந்தர்களுக்கும் கூற்றுகளை அமைத்துள்ளார்.

நற்றாய் என்னும் மாந்தர் தலைவன், தலைவியிடம் கூற்றுரைத்தல் கூடாது என்பதையும்,

> **“கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்**
> **நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது”**
> **(தொல்.பொருள்.செய்.493)**

என்ற நூற்பாவில் சுட்டியுள்ளார்.

கூற்றிற்கு உரிமையற்றோர்

கூற்றிற்கு உரிமையில்லா மாந்தர் குறித்து “ஊரில் உள்ளவர்கள், அயலவர்கள், சேரியில் வாழ்பவர்கள், நோயை அறிபவர்கள், தந்தை, தமையன் போன்றோர் நேரடியாக அகப்பொருள் இலக்கணத்தில் கூற்று நிகழ்த்துவதில்லை என்றும், இவர்களின் கூற்று பிறரால் கொண்டெடுத்து மொழியப்படுமேயன்றித் தானாக நிகழ்த்தப் பெறுவதில்லை”[3] என்பர் தொல்காப்பியர்.

கூற்றும் துறையும்

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுளுக்குரிய 34 உறுப்புகளைச் சுட்டும்பொழுது, அதில் பன்னிரு உறுப்புகளை அக இலக்கியங்களுக்கே

உரிய உறுப்புகளாகச் சுட்டுகின்றார். இதில் கூற்று என்னும் உறுப்பும், துறை என்னும் உறுப்பும் வேறு, வேறு விளக்கங்களைப் பெறுவதாக மொழியப் பட்டாலும் தொல்காப்பியர் சுட்டிய மாந்தர்களின் கூற்றுக்களை துறைகளின் ஒரு சில வகைக்குள் அடக்குவதாகத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறிச் சென்றுள்ளனர். இதனடிப்படையிலேயே
பிற்றைய அக இலக்கணங்களில் கூற்றுகள் துறைகளாக வடிவம்
பெற்றுள்ளன.

பார்ப்பான்

நன்கு கல்வியறிவு பெற்றவர்களாகவும் தங்கள் அறிவுப் புலமையால் அரசர்க்கு அடுத்த இடத்தில் வைத்துப் போற்றக்கூடியவர்களாகவும் பார்ப்பா ன் அக்காலத்தில் சிறப்பு பெற்றவர்களாக விளங்கியுள்ளனர். கூற்றுக்குரிய மாந் தர்களில் முதலாவதாக வைத்து எண்ணப்படுபவர் இப்பார்ப்பானே ஆவார். உ டல் வலிமையால் தலைவனுக்குத் துணையாய் நிற்பர். தலைவனது வாழ்வில் அனைத்து நிகழ்வுகளிலும் தலைவனுக்குப் பாங்காக நிற்பவரே பாங்கர். இவரு ள் ஒரு வகையினர் பார்ப்பனச் சாதியுள் தோன்றியதால் பார்ப்பனப் பாங்கர் எ னப்பட்டார்.

தொல்காப்பியத்தில் பார்ப்பான்

களா.1, கற்.5, பொரு.36,52, செய்.181,182,189, மர.72,82 ஆகிய ஒன் பது நூற்பாக்களில் பார்ப்பான் பற்றிய செய்திகள் சுட்டப்பட்டுள்ளது. பிற்றை ய இலக்கணங்களில் பார்ப்பானைப் பற்றி இறையனார் அகப்பொருள், நம்பிய கப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய ஐந் து நூல்களும் மொழிகின்றன.

பார்ப்பானுக்குரிய பெயர்கள்

தொல்காப்பியம் இருவகைப் பாங்கர்களுள் பார்ப்பனப்பாங்கனை, பார்ப்பான், அந்தணர், ஐயர், அந்தணாளர், மறையோர் போன்ற சொற்களால் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் போலவே இறையனார் அகப்பொருள் அந்த ணர் என்றும், நம்பியகப்பொருள் மறையோர், பார்ப்பான் என்றும், மாறனகப் பொருள் பார்ப்பனப்பாங்கன், பார்ப்பான், இருபிறப்பாளன், அந்தணர் போன்

ற சொற்களையும் இலக்கண விளக்கம் மறையோர் எனவும், சுவாமிநாதம் முக்கோற்பகவர், பார்ப்பான், இருபிறப்போர் எனவும், பார்ப்பனப் பாங்கனுக்கு உரிய பெயர்களை மொழிகின்றன.

கூற்று வாயில் மாந்தர்களில் பார்ப்பான்

தலைவன், தலைவியின் களவு, கற்பு வாழ்க்கை என்ற இரு நிகழ்வுகளிலும் பல மாந்தர்கள் கூற்றுக்குரியோர்களாக இடம்பெறுகின்றனர். அவருள் பார்ப்பான் என்பவர் முக்கியத்துவம் பெறுவதால் ''களவுக் கூற்றுக்குரியோரில் முதலாவதாக''[4] வைத்துச் சுட்டப்படுகின்றார். மேலும் ''கற்புக் கூற்றுக்குரியோரில் ஒருவராகவும்'', ''வாயில் மாந்தர் பன்னிருவருள் ஒருவராகவும்''[5], பார்ப்பானைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. தொல்காப்பியம் போலவே நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களிலும் ''கூற்றுக்குரியோரில் ஒருவராகவும்''[6], ''வாயில் மாந்தர்களில் ஒருவராகவும்''[7] பார்ப்பனை மொழிகின்றது.

பார்ப்பானுக்குரிய கூற்றுகள்

பார்ப்பான் என்பவர் தலைவன், தலைவியின் களவு, கற்பு என்ற இரு நிகழ்வுகளிலும் இடம்பெறுபவர். இருவரிடத்தும் கூற்றுகள் நிகழ்த்துபவர் என இளம்பூரணர் சுட்டுவர். தலைவன் தலைவிக்குரிய நன்மை, தீமைகளை ஆராய்ந்து கூறக்கூடியவராகவும் பார்ப்பான் செயல்படுகின்றார். பார்ப்பானுக்கு உரியனவாக அறுவகைக் கூற்றுக்களைத் தொல்காப்பியர் மொழிகின்றார். அதில் தலைவி உன்மேல் அதிகம் அன்பு கொண்டுள்ளாள். அவள் உன்மேல் கொண்ட அன்பால் நீ பொருள்தேடப் புறப்படும் தேரினை நீரற்ற சுனையில் உள்ள வாடும் மலர்களே தடுத்து நிறுத்தும். நீ தலைவியைப் பிரிந்து சென்றால் உன் பிரிவினைத் தாங்காது அந்த வினாடியே தலைவி இறந்துபடுவாள் என்பதனை உணர்த்தும்.

காமநிலை உரைத்தல், தேர்நிலை உணர்த்தல், செலவழுங்கு கிளவி என்ற மூன்று கூற்றுகளும் தலைவனை நோக்கிப் பார்ப்பான் கூறுவனவாகவும், தலைவனிடம் உமது ஓயாத அன்பைக் கூறிவிட்டேன், அவன் பொருள்தேடும் செலவைத் தவிர்த்து உம்மிடம் திரும்பிவிடுவான், அவன் என் சொற்களைக் கே

ளாது பொருள்தேடச் சென்றுவிட்டான் என்பதற்குரிய கிழவோன் குறிப்பினை எடுத்துக்கூறல், செலவுறுகிளவி என்ற இரு கூற்றுகளும் பார்ப்பான் தலைவியிடம் சுட்டுவன என்றும், நம் வீட்டுப் பசு இன்று பால் கலம் நிறையத்தந்துள்ளது. அது நல்ல சகுனம். இன்றே நாம் சென்ற பொருளீட்டலைச் செய்து தலைவியைக் காணச்செல்வோம் என்று தவைனுக்கும், நம்பசுவின் கலம் நிறையப் பால் தந்த செயலால் தலைவன் பொருளீட்டும் செயலை முடித்து இன்றே ஊருக்குத் திரும்புவான் என்று தலைவிக்கும் உரிய பொதுவான கூற்றென ''ஆவொடு பட்ட நிமித்தம்''[8] கூறலை இளம்பூரணர் சுட்டுகின்றார்.

நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும்

> ***''இளமையும், யாக்கையும் வளமையும் ஏனவும்***
> ***நிலையாத் தன்மை நிலையெடுத்து உரைத்தலும்***
> ***செலவு அழுங்கு வித்தலும் செலவுஉடன் படுத்தலும்***
> ***பிறவும் எல்லாம் மறையோர்க்கு உரிய'' (நம்.அக.100)***

என நான்கு கூற்றுகளைப் பார்ப்பனப் பாங்கனுக்குரிய கூற்றுகளாக மொழிகின்றது. மேலும் மாறனகப்பொருள் உடன்போக்கு இடையீட்டு விரியின் துறை வகைகளில் ''நற்றாய்க்கு அந்தணர் தலைவியின் உடன்போக்கினை அறிவித்தல்''[9] என்ற கூற்றையும் சுவாமிநாதம் கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரிகளுக்குரிய துறைகளில், ''உடன்போக்கு சென்ற தலைவியைப் பற்றி எதிரே வரும் முக்கோற்பவராகிய பார்ப்பனப் பாங்கன் செவிலியிடம் சுட்டும் கூற்றையும் சுட்டுகின்றது. அது முக்கோற்பவர் செவிலி கவலைப்படாமல் இருப்பதற்குரிய காரணத்தை எடுத்துச் சொல்வதாகிய தலைவி நல்லாடவனுடனே சென்றுள்ளாள். அவன் தலைவியை நன்றாகக் காத்து இல்லறம் நிகழ்த்துவான். மலையிலே பிறப்பினும் சந்தனம் அம்மலைக்கு என்ன பயனைத் தரும்? என்பன போன்ற கருத்துகளை எடுத்துக்கூறி செவிலியைத் தெளிவித்தல்''[10] என்ற கூற்றையும் சுட்டுகிறது. தலைவன் தலைவியோடு வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் எழுவரில் பார்ப்பானும், பாங்கனும் முன்னிலை பெறுகின்றனர் எனப் பார்ப்பான் பற்றிய செய்தியை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

பாங்கன்

தலைவிக்குத் தோழி போலத் தலைவனுக்கு உற்ற தோழன் பாங்கன் ஆவான். தலைவனது களவு நிகழ்வுகளில் அதிகம் பங்கு கொள்வதால் அவன் பாங்கன் என அழைக்கப்படுகின்றான். எனினும் தொல்காப்பியத்தில் தோழிக்கு உள்ள முக்கியத்துவம் பாங்கனுக்குச் சுட்டப்படவில்லை. பாங்கன் பற்றிய செய்திகள் சில நூற்பாக்களிலேயே சுட்டப்பட்டுள்ளன.

தலைமக்களுக்கிடையே உண்டான களவு வாழ்வை முதலில் அறிந்து அதனை நீட்டிக்க ஒரு வகையில் துணையாக நிற்கும் தலைவனுக்குத் தோழனான பாங்கன் பற்றிய செய்திகள் ஏழு நூற்பாக்களில் தொல்காப்பியத்தில் (களவியல்-13, பொருளியல்-41,42,52 செய்யுளியல் - 178.181,182) சுட்டப்பட்டுள்ளது. மற்றைய இலக்கணங்களான இறையனார் களவியல், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களில் பாங்கன் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

கூற்றுக்குரியோர் வாயில் மாந்தர்களில் பாங்கன்

பாங்கன் ‘‘களவு, கற்புக் கூற்றுக்குரியோரில் ஒருவராகவும் வாயில் மாந்தர்கள் பன்னிருவரில் ஒருவராகவும்’’[11] சுட்டப்பட்டுள்ளார். தொல்காப்பியம் போலவே நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களிலும், ‘‘களவுக் கூற்றுக்குரிய மாந்தருள் ஒருவராகவும், வாயில் மாந்தர்களில் ஒருவராகவும் பாங்கன்’’[12] சுட்டப்படுகின்றான்.

களவொழுக்கத்தில் பாங்கொடு தழாஅல்

தொல்கப்பியச் செய்யுளியலில், களவு ஒழுக்கங்களுக்கு உரிய நான்கு வகைகளில் ‘‘பாங்கொடுதழாஅல்’’[13]
என்ற பாங்கனின் செயல் விளக்கப்படுகின்றது.

பாங்கர் நிமித்தம்

இயற்கையில் புணர்ச்சியுற்று, இடந்தலைப்பட்டு, பாங்கனால் கூட்டம் பெற்றுத் தலைவியைப் பெற்ற நிகழ்விற்குக் காரணமான பாங்கனால் இடம்பெறும் நிமித்தம் பன்னிரெண்டு வகைப்படும் எனத் தொல்காப்பியர் சுட்டுகி

ன்றார். தொல்காப்பியர் சுட்டிய இக்கருத்தையே ''பாங்கனோரிற் குறிதலைப் பெய்தலும்''[14] என இறையனார் அகப்பொருளும் ''வினாதல், விடுத்தல், கழறல் , மறுத்தல் நோதல், யாண்டென வின்னுழியென்றல், மாதரைக்காண்டல், மன் னிய வகுத்தல், கிழவோற்கு இசைதல், மாற்றான் கிளத்தல் பழவரைவிடுத்தல்''[15] என்பனவற்றைத் தமிழ்நெறி விளக்கமும் சுட்டுகின்றன. ''சார்தல், கேட்டல், ச ாற்றல், எதிர்மறை, நேர்தல், கூடல், பாங்கிற்கூட்டல்''[16] என ஏழு வகையாக ந ம்பியகப்பொருளும் மொழிகின்றது.

களவியற்காரிகை களவொழுக்கத்தின் பலவகைகள் பற்றிச் சுட்டும் பொழுது இரண்டாவதாகப் ''பாங்கனிற் கூட்டம், என்பதையும், வினா, உற்றது உரை, கழறல், எதிர்மறுத்தல், பாங்கன், தனது உளந்தனை உரைத்தல், வினவுத ல், வியத்தல், திருவேயெனல், கிளத்தல், மருங்கணைதல், மகிழ்தல், இருத்தல்''[17] எனப் பன்னிரெண்டையும் மொழிகின்றன. ''நம்பியகப்பொருள் கூறிய கருத் தையே மாறனகப்பொருள் இலக்கண விளக்கம், சுவாமிநாதம் போன்ற நூல்க ளும்''[18] மொழிகின்றன.

களவில் தலைவனோடு பாங்கர்

பாங்கனால் தலைவனுக்கு நிகழும் கூட்டங்களின் போதும், தலைவ ன் பாங்கனிடம் கூற்று நிகழ்த்தும் போதும் அக்கூற்றிற்கு மறுமொழி கூறுதலா கிய ''மொழி எதிர்மொழிதல்'' பாங்கனுக்குரிய செயலெனவும் அவ்வாறு தலை வனுக்கு மறுமொழி கூறும் நிகழ்வு அதிக இடங்களில் அல்லாமல் குறைந்த இ டங்களிலே நிகழும் எனவும் கோட்பாடு ஒன்றைத் தொல்காப்பியர் சுட்டுகின்ற ார்.

உயிர்த்துணைப்பாங்கர்

தலைவனுக்குப் பார்ப்பான், பாங்கன் என்ற இருபாங்கரும் தலைவனை னவிட்டுப் பிரியாது அவன் கூடவே இருக்கும் இன்னுயிர்த்துணை போன்றவர். ''அவ்விருவரும் தலைவனுக்கு அவர் தம் தாய், தந்தையரால் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையுடையவர்கள்''[19] என நம்பியகப்பொருள் சுட்டுகின் றது.

பாங்கனின் சிறப்பு

தலைவனும் தலைவியும் மேற்கொண்ட காதலைத் தோழி தன் மதியு டம்படுத்தலின் மூலம் அறிவதையே அனைத்து அகநூல்களும் குறிப்பிடுகின்ற ன. ஆனால் தோழிக்கு முன் பாங்கனே தலைவன், தலைவியின் காதலை முதலா வதாக, அறிவதனை ''தோழியின் புணர்வுக்கு முன் பாங்கொடுதலாலும்''[20] என் னும் தொல்காப்பியரின் கருத்தை,

''ஆங்கவர் முன்உறு புணர்ச்சியை ஆருயிர்ப்
பாங்கி உணருமுன் பாங்கன் உற்றுஉணரும்''

(மாற.அக.337)

என்று மாறனகப்பொருள் மொழிகின்றது. மேலும்,

''பாங்கன் இறைவியைக் கண்டமை பகர்தலும்''

(மாற.அக.338)

என்னும் புதிய கூற்று ஒன்றையும் சேர்த்துச் சுட்டுகின்றது.

பாங்கனுக்குரிய கூற்றுக்கள்

பாங்கனாகிய பார்ப்பனப் பாங்கன் தவிர்த்து சூத்திரப் பாங்கனுக்குரி ய கூற்றுக்களை, ''நன்மையான செயல்களைச் செய்யத் தூண்டுதல், தீய செயல் களில் ஈடுபடாமல் பாதுகாத்தல்''[21] என்றவாறு நம்பியகப்பொருள் சுட்டுகின்ற து. மேலும் பாங்கர் கூட்டத்தின் விரியில் ''தலைவனின் துன்பத்திற்குரிய கார ணத்தைப் பாங்கன் கேட்டல், எதிர் உரையாடிய தலைவனைப் பாங்கன் பழித் தல், நீ கண்ட தலைவி எவ்விடத்தாள், எவ்வியல்பினள் எனப் பாங்கன் வினவுத ல், தலைவியைக் கண்டு வருகிறேன் எனப் பாங்கர் தலைவனைத் தேற்றுதல், த லைவியின் கண் வலையில் சிக்கிய தலைவன் அவளிடமிருந்து தப்பித்து நம்மி டம் வந்திருப்பது வியப்புக்குரியது எனக் கூறுதல், தலைவியைப் பாங்கன் வியந் து போற்றுதல், பாங்கன் சொற்படி தலைவன் குறியிடத்துச் செல்லல்''[22] என முன்னைய கூற்றுக்கள் இரண்டினொடு சேர்த்து பாங்கனுக்குரிய கூற்றுக்கள் ஒ ன்பதினை நம்பியகப்பொருள் சுட்டுகின்றது. ''இந்நம்பியகப்பொருள் போலவே வ மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும்''[23] பாங்கனுக்குரிய கூற்றுக்கை ளச் சுட்டுகின்றன.

தோழி

பெருமையும் உரனும் கொண்ட தலைவனும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு கொண்ட தலைவியும் மேற்கொள்ளும் களவு வாழ்க்கையில் தோழி என்பவள் முக்கியத்துவம் பெறுகின்றாள். தோழியே களவு நிலையில் இருக்கும் அவர்களது வாழ்வைக் கற்பு நிலைக்கு மாற்றுவதில் பெரிதும் பங்காற்றுகின்றாள். தலைவிக்குப் பல தோழியர் இருப்பினும் அவர்களுள்ளும் சிறப்பு வாய்ந்தவளாக நெருங்கிய தோழியாக செவிலியின் மகளாகிய தோழியே இடம்பெறுகின்றாள். தலைவிக்குத் தோழி மட்டுமின்றி, அவளது தாயாகிய செவிலியும் அவளது வாழ்க்கையில் அக்கறை மிகுந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

தோழி என்பவள் தலைவியின் மற்றொரு தாய் போலவே தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளாள். ஏனெனில் தலைவியின் மீது மிகுந்த அக்கறை உள்ளவளாக தலைவியின் ஈன்ற தாயைக் காட்டிலும் தோழி செயல்படுகின்றாள். தனக்கும் தலைவியின் ஒத்த வயதே எனினும் தானும் மற்றோர் ஆடவன் மேல் காதலாகிய களவு கொள்ளாமல் காதல் கொண்ட தலைவியின் மேல் பொறாமை கொள்ளாமலும் ஒரு தாய் போல் செயல்பட்டு சேய் போல் உள்ள தலைவியின் களவுச் செயல்பாடுகளைக் கூர்ந்து நோக்கிக் கண்காணித்து தலைவன் தலைவியை இயற்கைப் புணர்ச்சியாகிய கூட்டத்தால் ஒருங்கிணைத்து, அவர்களின் செயல்களைச் செம்மைப்படுத்தி, அவர்களது களவை உரிய நேரத்தில் தலைவியின் வீட்டாரிடம் சுட்டிக் கற்பாக்க முயலுபவள். அத்தகைய தோழியின் கூற்றுகளைத் தொல்காப்பியர் மூன்று (தொல்.பொருள்.அகத்.39, கள.23, கற்.9) நூற்பாக்களில்
62 இடங்களில் சுட்டுகின்றார்.

தலைவன், தலைவியின் களவு, கற்பு ஒழுக்கங்களில் தோழிக்கு நிகழும் இக்கூற்றுகளை,

1.	‘‘தோழியற்கூட்டம்	…	2
2.	சேட்படை	…	9
3.	குறைநயப்பு	…	2
4.	இருவகைக்குறி	…	6

5.	ஒருவழித்தணத்தல்	...	1
6.	வரைவு கடாதல்	...	4
7.	வரைவு வேட்கை	...	1
8.	வரைவு நீட்டிப்பு	...	1
9.	அறத்தொடு நிற்றல்	...	4
10.	வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிவு	...	1
11.	வரைவு மலிவு	...	1
12.	உடன்போக்கு	...	6
13.	மலிவு	...	3
14.	ஊடல்	...	15
15.	பிரிவு	...	2

என்பனவாக வரையறுப்பர்"[24] இரா.செகதீசன்.

1. தோழியற்கூட்டம்

தோழியின் துணையால் தலைவன், தலைவி கூடுங்கூட்டம் தோழியிற்கூட்டமாகும். தோழி, தலைவன், தலைவி ஆகிய இருவர் தம் உள்ளக்கருத்தினையும் தன் கருத்தோடு ஒன்றுபடுத்தி உணர்தல் தோழியிற்கூட்டம் ஆகும். இது குறையுற உணர்தல், முன்னுற உணர்தல், இருவரும் உள்வழி அவன்வர உணர்தல் என மூவகைப்படும். இப்பகுதியில் தோழி நிகழ்த்தும் கூற்றுக்களாகச் சுட்டப்படுவன இரண்டு.

1. வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
   பொறுத்த காரணங் குறித்த காலையும்
2. நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
   செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
   புணர்ச்சி யெதிர்ப்பாடு உள்ளூறுத்து வரூஉம்
   உணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை
   மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
   பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்

எனத் தொல்காப்பியரின் தோழியற்கூட்டம் பற்றிய ஒன்பது கூற்றுக்களை இர ா.செகதீசன் (தொல்காப்பியப் பொருளதிகார வழி அகநானூறு ஓர் ஆய்வு, ப.2 79) அவர்கள் இரண்டு துறைகளில் அடக்குகின்றார். அவ்விரண்டில் இரண்டா வது கூற்றுத்துறையாகிய, 'நாற்றமும் தோற்றமும்' எனத் தொடங்கும் கூற்றைப் பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்க ண விளக்கம், சுவாமிநாதம் போன்ற நான்கு நூல்களும் மொழிகின்றன. ''நம்பி யகப்பொருளும் மாறனகப்பொருளும் பாங்கிமதி உடன்பாட்டின் துறைகளைச் சுட்டும் பொழுது முன்னுற உணர்தலில் இவற்றைச் சுட்டுகின்றன.''[25] *இவற்று ள் ''சுவாமிநாதம் மட்டும் செலவு ஒழுக்கம், உண்டி, மணம், பயிற்சி, தோற்றம் எனச் சுருக்கமாக மொழிகின்றது.''*[26]

2. சேட்படை

சேட்படை என்ற பகுப்பில் ஒன்பது கூற்றுகள், 1) குறையுறற் கெதிரி ய கிழவனை மறையுறப் பெருமையிற் பெயர்ப்பினும், 2) உலகுரைத் தொழிப் பினும், 3) அருமையின் அகற்சியும், 4) .... அவளறி வுறுத்தப் பின்வர வெ ன்றலும், 5) பேதைமை யூட்டலும், 6) முன்னுறு புணர்ச்சி முறை நிறுத்துரைத் தலும், 7) அஞ்சியச்சுறுத்தலும், 8) எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும், 9) உரைத்துழிக்கூட்டம் போன்றவை துறைகளாக இட ம்பெற்றுள்ளன.

தொல்காப்பியத்தில் கூற்றுகளாக இடம்பெற்றுள்ள இச்சேட்படைத் துறைகள் பற்றி நம்பியகப்பொருள் (19), மாறனகப்பொருள் (20), இலக்கண விளக்கம் (19), சுவாமிநாதம் (19) ஆகிய ஐந்து நூல்களும் பாங்கியற்கூட்டத் து றைகளிலும் முத்துவீரியம் மட்டும் சேட்படைத் துறைகளிலும் (26) சுட்டுகின் றன. இவற்றில் நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சு வாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் தொல்காப்பிய சேட்படைத் துறைகளில், ''பாங்கி பேதமை ஊட்டல், பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல், பா ங்கி அஞ்சி அச்சுறுத்தல், பாங்கி உலகியல் உரைத்தல், அவள் ஆற்றுவித்து அக றல் என்ற ஐந்து துறைகளை''[27] *மொழிகின்றன. இவ்வைந்து துறைகள் போக மீ தமுள்ள நம்பியகப்பொருள் (14), மாறனகப்பொருள் (15), இலக்கண விளக்கம்*

(14), சுவாமிநாதம் (14) துறைகள் சேட்படையில் தோழியின் கூற்றில் இடம்பெற்றுள்ள வளர்ச்சித் துறைகள் ஆகும்.

முத்துவீரியத்தில் சேட்படை என்ற பிரிவில் கூறப்பட்டுள்ள, "1.தழை கொண்டு சேறல், 2.தகாதென மறுத்தல், 3.நிலத்தின்மை கூறல், 4.நினைவறிவு கூறல், 5.படைத்து மொழிதல், 6.நாணுரைத்தல், 7.இசையாமை கூறல், 8. செவிலி இலள் என்றல், 9.சேட்பட நிறுத்தல், 10.அவ்வினிய மொழி அவட்கு உரை என்றல், 11.குலமுறைகிளத்தல், 12.கோதண்டத்தொழில் வலிசொல்லி மறுத்தல், 13.மற்றவற்கு இரங்கல், 14.சிறப்பின்மை கூறல், 15.சிறியள்என்று உரைத்தல், 16.மறைத்தமைகூறி நகைத்துரை செய்தல், 17.நகைகண்டு மகிழ்தல், 18.நான் அவள் தன்னை அறியேன் என்றல், 19.அவயவங்கூறல்,20.கண்ணயந் துரைத்தல், 21.கையுறை எதிர்தல், 22.முகம்புக உரைத்தல், 23.முகங்கண்டு கூறல், 24. வகுத்துரைத்தல், 25.மிகுத்துரை செய்து விரும்பிக் கொடுத்தல், 26.தழைவிருப்புரைத்தல்"[28] என 26 துறைகள் கூறப்பட்டுள்ள போதும் இவற்றில் ஒன்றுகூட தொல்காப்பியச் சேட்படைத்துறையில் இடம்பெறவில்லை.

3. குறைநயப்பு

தொல்காப்பியத்தில்

1. "குறைந்தவட் படரினும்

2. ..... மறைந்தவ ளருகத் தன்னொடு மவளொடு முதன்மூன்
றளைஇப் பின்னலை நிகழும் பல்வேறு மருங்கினும்"[29]

என்ற இரண்டு கூற்றுகள் குறைநயப்புத் துறையில் இடம்பெறுகின்றன. பிற்றைய இலக்கணங்களில் எவையும் குறைநயப்புத் துறையைக் கையாளவில்லை.

4. இருவகைக்குறி

தலைவன் தலைவியைத் தன்னோடு கூட்டுவிக்க தோழியை இரந்து குறையுறும் பொழுது தோழி அவர்கள் இருவரையும் பகல் இரவுப் பொழுதுகளில் சந்திக்கச் செய்யும் நிகழ்வாகிய இருவகைக்குறியில் தோழிக்கு அறுவகைக் கூற்றுக்கள் இடம்பெறுகின்றன. அவை, "1.நன்னயம் பெற்றுழி நயம்புரியிடத்தினும் 2. புணர்ச்சி வேண்டினும் 3. புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும் 4. வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்

5. புணர்ந்துழி யுணர்ந்த அறிமடச் சிறப்பினும் 6. என்புநெகப் பிரிந்தோள் வழி ச்சென்று கடைஇ அன்புதலையடுத்த வன்புறைக் கண்ணும்''[30] என்பதாகும். இ ருவகைக் குறியில் தமிழ்நெறி விளக்கம் (48), நம்பியகப்பொருள் (79), களவிய ற்காரிகை (63), மாறனகப்பொருள் (60), இலக்கண விளக்கம் (78), முத்துவீரிய ம் (65), சுவாமிநாதம் (108) என்ற எண்ணிக்கையில் கூற்றுக்களை மொழிந்த ே பாதும் இவற்றில் சுவாமிநாதம் மட்டும் இருவகைக் குறியில் ஆறாவது கூற்றுத் துறையை, ''இறையைச்சகி இறைவி துயர்கிளந்து விடுத்தல்''[31] என்ற கூற்றை ம ட்டும் சுட்டுகின்றது. மற்றைய இலக்கணங்களில் இருவகைக்குறி தொடர்பான அனைத்துக் கிளவித்துறைகளும் இருவகைக்குறி சார்ந்த வளர்ச்சியே ஆகும்.

5. ஒருவழித்தணத்தல்

களவில் ஒழுகும் தலைவன் ஒரு காரணத்தின் பொருட்டுத் தலைவி யச் சிறிது நாட்கள் பிரிந்து இருக்கும் இந்நிகழ்வின் கீழ் ''வேண்டாப் பிரிவினு ம்''[32] எனும் ஒரு கூற்று இத்துறையின்கீழ் தொல்காப்பியத்தில் பகுக்கப்பட்டுள் ளது. ஆனால் இத்தகைய ''ஒருவழித்தணத்தல் துறையை நம்பியகப்பொருள், ம ாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற நூ ல்கள் முறையே (12,12,12,13,11) என்ற எண்ணிக்கையில் மொழிந்தாலும்''[33] தெ ால்காப்பியக் கூற்றுத்துறை எந்நூலிலும் இடம்பெறவில்லை.

6. வரைவு கடாதல் துறை

இனியும் தொடர்ந்து களவைக் கைவிட்டு தவைியை வந்து விரைந்து மணந்துகொள் எனத் தலைவனை இடித்துக்கூறும் இத்துறையின்கீழ் தோழிக்கு நான்கு கூற்றுகள், ''*1. ஆற்றாது தீமை யறிவுறு கலக்கமும் 2. காப்பின் கடுமை கையுற வரினும் 3. களனும் பொழுதும் வரைநிலை விலக்கி காதல் மிகுதி யுளப் படப் பிறவும் அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும் 4.ஐயச்செய்கை தாய்க்கெதிர் மறுத்துப் பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்''*[34] என் றவாறு அமைந்துள்ளது.

இக்கூற்றுக்களை வரைவுகடாதல் துறையின் கீழ் தமிழ்நெறி விளக்க ம் (7), நம்பியகப் பொருள் (20), மாறனகப்பொருள் (19),
இலக்கண விளக்கம் (20), சுவாமிநாதம் (19), வகைகளாகச் சுட்டிய போதிலும்,

காப்பின் கடுமை கையுற வரினும் என்ற ஒற்றைத்துறை மட்டும் தமிழ்நெறி விளக்கத்தில் ‘‘காப்பு இடையீட்டின் கையறுகிளவி’’[35] நம்பியகப்பொருள் ‘‘காவல் மிக உரைத்தல்’’[36] மாறனகப்பொருள் ‘‘காவண்மிகுதல்’’[37] முத்துவீரியம் ‘‘காவல் மிக உரைத்தல்’’[38] சுவாமிநாதம் ‘‘காவல்மிகுதி’’[39] எனச் சுட்டுகின்றது.

7. வரைதல் வேட்கைத் துறைகள்

தோழி தலைவன், தலைவியை வரைந்து கொள்ள வேண்டி பல்வேறு சூழலில் கூற்று நிகழ்த்துவாள். அப்பொழுது தலைவியும் தலைவனின் வரையாமைக் கருதி துன்புறுவாள். அவளைத் தோழி தேற்றும் பொழுது தோழிக்குச் ‘‘செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும்’’[40] என்ற ஒற்றைக்கூற்று வரைதல் வேட்கைத் துறையில் இடம்பெறும் கூற்றாகும். இவ்வரைதல் வேட்கைத்துறை நம்பியகப்பொருள் (18), களவியற்காரிகை (12), மாறனகப்பொருள் (19), இலக்கண விளக்கம் (18), சுவாமிநாதம் (19) என்றவாறு எண்ணிக்கையில் பிற்றைய இலக்கணங்களில் சுட்டப்பட்டுள்ளன. இந்நூல்களில் சுவாமிநாதம் மட்டும் ‘‘சகி நாயகிபால் துன்பம்
வினாதல்’’[41] என்ற கிளவித்துறையைத் தொல்காப்பியர் கூறியது போல் சுட்டுகின்றது.

8. வரைவு நீட்டிப்பு

தோழி பலமுறைத் தலைவனை வரைவு கடாவியும் தலைவன் மீண்டும், மீண்டும் வரைவை நீட்டிக்கும் பொழுது தோழிக்கு இடம்பெறும் ‘‘வரைவுடன் பட்டோற் கடாவல் தோன்றினும்’’[42] என்னும் ஒரு கூற்றைத் தொல்காப்பியர் சுட்ட, இக்கூற்று சார்ந்த கிளவித்துறைகள் மற்றைய இலக்கணங்கள் எதனிலும் காணக்கிடைக்கவில்லை.

9. அறத்தொடு நிற்றல்

தலைவிக்குச் செவிலியாலும், நற்றாயாலும் இச்செறிப்பு போன்ற இன்னல்கள் நிகழும் போது அதனைப் பொறுக்காத தோழி தலைவியின் காதலைக் கூறி அறத்தொடு நிற்பாள். தொல்காப்பியத்தில் அறத்தொடு நிற்றலில் நான்கு வகைக் கூற்றுக்கள் உள்ளன. பிற்றைய இலக்கணங்கள் அறத்தொடு நிற்றலுக்குரிய கிளவித்துறைகளை தமிழ்நெறி விளக்கம் (17), நம்பியகப்பொருள் (13), க

ளவியற்காரிகை (18), மாறனகப்பொருள் (12), இலக்கண விளக்கம் (13), சுவா மிநாதம் (17) போன்றவை உரைக்கின்றன. தொல்காப்பிய, 1. அவன் விலங்குறி னும் 2. களம்பெறக் கட்டினும்

3. பிறன்வரை வாயினும் 4. அவன் வரைவு மறுப்பினும் முன்னிலை அறனென ப் படுதலென் றிருவகைப் புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும் என்ற கூற்று களில் இவ்வறத்தொடு நிற்றல் வகையில் நான்காம் கூற்றாகிய அவன் வரைவு ம றுப்பினும் என்ற கூற்றை, தமிழ்நெறி விளக்கம் ''வரைவு எதிர்மறுத்தல்''[43], கள வியற்காரிகை ''வரைவு மறுத்தல்''[44] என இரண்டு நூல்கள் மட்டும் சுட்டுகின்ற ன.

10. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு

தலைவன் தலைவியை மணந்து கொள்வதற்காகத் தலைவி வீட்டிற்கு க் கொடுக்க வேண்டிய பொருளை ஈட்டுவதற்காகப் பிரியும் பிரிவே இப்பிரிவு ஆகும். இப்பிரிவில் ''ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்''[45] என்ற தொல் காப்பியத் தோழியின் கூற்றைப் பிற்றைய இலக்கணங்களில் எந்நூலும் மொழி யவில்லை. ஆனால் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு என்னும் இப் பிரிவில் நம்பியகப்பொருள் (21), களவியற்காரிகை (3), மாறனகப்பொருள் (23), இலக்கண விளக்கம் (21), முத்துவீரியம் (23), சுவாமிநாதம் (20) என்னும் அ டிப்படையில் பிற்றைய நூல்களில் கிளவித்துறைகள் இடம் பெற்றுள்ளன. அவை அனைத்தும்

புதுத்துறைகளே.

11. வரைவு மலிவு

வரைவிற்காகப் பொருளீட்டச்சென்ற தலைவன் பொருளீட்டி விரை ந்து வருகின்றான் என்ற தகவலை மகிழ்வுடன் தோழி தலைவியிடம் கூறும் பொழுது ''ஆங்கதன் தன்மையின் வன்புறை''[46] என்னும் துறையின் கீழ் தோழிக்கு ஒரு கூற்று உள்ளது. பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள், மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் இத்துறையின்கீழ் தலா ஏழு, ஏழு துறைகளை மொழிகின்றன. சான்றாக நம்பியகப்பொ ருள் ''1. காதலன் முலை விலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உணர்த்துதல், 2.

காதலி நற்றாய் உள்ள மகிழ்ச்சி உள்ளல், 3. பாங்கி தமர் வரைவு எதிர்ந்தமை த லைவிக்கு உணர்த்தல், 4. அவள் உவகை ஆற்றாது உளத்தொடு கிளத்தல், 5. த லைவனைப் பாங்கி வாழ்த்தல், 6. தலைவி மணப்பொருட்டாக அணங்கைப் ப ராநிலை காட்டல், 7. கண்டோன் மகிழ்வு''[47] எனச் சுட்டுகின்றது.

12. உடன்போக்கு

தலைவன் தலைவியை மணந்து கொள்வதற்கு அவனூர்க்கு (உடன்போக்கு) அழைத்துச் செல்வதற்குப் பெரிதும் உதவுபவள் தோழி. அந்நிலையில் தொல்காப்பியத்தில் உடன்போக்கு சார்ந்த தோழி கூற்றுகளாக,

''1. தலைவரும் விழுமநிலை எடுத்துரைப்பினும் 2. போக்கற்கண்ணும்

3. விடுத்தற்கண்ணும் 4. நீக்கலின் வந்த தம்முறு விழுமமும் 5. வாய்மையும், பொய்மையும் கண்டோர் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப் பெயர்த்துக் கொளினும் 6. நோய் மிகப் பெருகித் தன்நெஞ்சு கலுழ்ந்தோளை யழிந்தது களைஎன மொழிந்தது கூறி வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோ டென்றிவை யெல்லா மியல்புற நாடின்''[48] என மொழிகின்றார். இவ்உடன்போக்குத் துறையை தமிழ்நெறி விளக்கம் (16), நம்பியகப்பொருள் (18), களவியற்காரிகை (27), மாறனகப்பொருள் (18), இலக்கண விளக்கம் (18), முத்துவீரியம் (56), சுவாமிநாதம் (19) என்ற நான்கு நூல்களும் மொழிகின்றன.

எனினும், தமிழ்நெறி விளக்கம் ''கண்டோர் கூற்று''[49], களவியற் காரிகை ''செவிலியை ஆற்றல்''[50], நம்பியகப்பொருள் ''பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல் தலைவி நாண் அழிவு இரங்கல் வைகிருள் விடுத்தல் கண்டோர் அயிர்த்தல்''[51], மாறனகப்பொருள் ''வாணுதல் நாணழிவு இரங்கல் மையிருள் விடுத்தல் கண்டோர் அயிர்த்தல் சுரத்திடை விலக்கல்''[52], ''இலக்கண விளக்கம் நம்பியகப்பொருள் கூறிய கருத்துக்களை அவ்வாறே மொழிகின்றன.''[53] முத்துவீரியம் ''கொடியாளைக் கொண்டு சென்று உய்த்தல்''[54], சுவாமிநாதம் ''நாண் அழிபு இரங்கல் வைகிருள் விடுத்தல் அவர் விலக்கல்''[55] என்னும் குறைவான கிளவித்துறைகளே தொல்காப்பியரின் உடன்போக்குக் கூற்றைப் பின்பற்றியுள்ளன.

13. மலிவு

மலிவு என்னும் இத்துறையைப் பற்றித் தொல்காப்பியர் "1.பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த தெறற்கரும் மரபிற் சிறப்பின் கண்ணும் 2. அற்றமழி உரைப்பினும் 3. .... அற்ற மில்லாக் கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்"[56] என்று கூறுகின்றார். இம்மலிவு தொடர்பான இத்தகைய துறைகள் பிற்றைய இலக்கணங்களில் எதிலும் காணப்படவில்லை.

14. ஊடல்

சிற்றின்பத்தின் காரணமாக பரத்தையரிடம் பிரிந்த தலைவன் வாயில்களைத் தலைவியிடம் தூதுவிடும் பொழுது தோழியும் வெகுண்டு, பின் உலக இயற்கையாகிய மனைவி கணவனோடு சேர்ந்து வாழுதலே கற்பிற்கு சிறந்த தன்மை என எண்ணித் தலைவியைத் தலைவனோடு கூட்டுவிக்க முயலுகையில் தோழிக்கு இச்சூழலில் ஊடல் என்னும் துறைப்பகுப்பில் தோழிக்கென பதினைந்து கூற்றுகள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன."[57]

ஊடல் என்னும் இப்பரத்தையர் பிரிவில் நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஐந்து நூல்களில் முத்துவீரியம் தவிர்த்த நான்கு நூல்களும் உணர்த்த உணரும், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளில் முறையே 11,11,11,11 என்றென்ற துறைகளின் கீழும் முத்துவீரியம் 11 துறைகளின் கீழும் சுட்டுகின்றன. தொல்காப்பியரின் 15 கூற்றுகளில் இரண்டு கூற்றுகள் "வணங்கிய பின் மொழியான் வணங்கற் கண்ணும் அணிவளைப் பாங்கி அன்பிலை கொடியோன் என்று இணர்த்தார் மார்பனை இகழ்தல்"[1] என்ற இரண்டு கூற்றுகளையுமே பிற்றைய இலக்கணங்களில் மொழிகின்றன. பிற
ஒன்பது கூற்றுகளும் ஊடல் சார்ந்த தோழியிற் கூற்றுத்துறையின் வளர்ச்சிகளாகும்.

15. பிரிவு

தலைவன் தலைவியை விடுத்துப் பொருள், பகை, காரணங்கொண்டு பிரியும் நிலையில் தோழிக்குக் கூற்றுகள் நிகழும். அவை,

1. பிரியுங் காலை யெதிர்நின்று சாற்றிய
மரபுடை யெதிரும்

2. பிறவும் வகைபட வந்த கிளவி
மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப
கற்புங் காமமும் நாற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய

(தொல்.பொருள்.கற்.9:29–31)

என்ற இரண்டாகும். தமிழ்நெறி விளக்கத்தில் 12 துறைகளிலும் (தமி.நெறி.விள .24) முத்துவீரியத்தில் 42 துறைகளிலும் (முத்.வீரி.855,856,857, 858,859,860) இடம்பெற்றுள்ளன. எனினும் தொல்காப்பியர் சுட்டிய இரண்டு கூற்றுகளும் இக்கிளவித் துறைகளில் காணப்படவில்லை.

செவிலி

தொல்காப்பியரால் தாய் என்றே செவிலியும் அழைக்கப்படுகின்றாள். தலைவியிடம் மிக நெருக்கமாக இவள் பங்கு இருந்ததால், தலைவியின் அனைத்து நுணுக்கங்களையும் தெளிவாக உணரக்கூடியவள். தலைவிக்குத் தோழியான தன் மகளின் உதவியுடன் தலைவியின் களவு, கற்பு என்னும் இருவகைக் கைக்கோள்களிலும் முக்கியப் பங்கு வகிப்பவளாகிறாள். தலைவி தலைவனுடன் உடன்போகும் காலத்து வருந்தி அவளைத் தேடிச்செல்வாள். சுரத்தில் எதிரில் வரக்கூடிய அந்தணர், கண்டோர் ஆகியவர்களிடம் தன் மகளைப் பற்றி வினவுவாள். நற்றாயுடன் சேர்ந்து கொண்டு தலைவியின் தோற்ற வேறுபாடுகளின் காரணத்தை அறியக் குறத்தி முதலியோரைக் கொண்டு குறி பார்த்து ஆராய்வாள். இவள் தலைமகளைப் பெற்ற நற்றாயினும் அன்பும் அந்தரங்கமும் உடையவள

ாதலால், இக்களவு வரலாற்குச் சிறந்தவளாய்த் தாய் என்றே சிறப்பித்துக் கூறப் பெறுவாள்''[58] என்பர்.

பெண் மாந்தர்களில் செவிலி

தொல்காப்பியரின் கூற்றுக்குரிய தலைமை வாய்ந்த பெண் மாந்தர்கள் தலைவி தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரில் நற்றாயோடு தலைவிக்கு மற்றைய இருவருமே தாய் போன்று இருந்து காப்பவர்கள். எனினும், தாய் போன்று காப்பதில் செவிலியே பெற்ற தாயினும் சிறந்த தன்மையுடையவளாக தொல்காப்பியத்தில் சுட்டப் பெறுகின்றாள்.

இவள் தோழியை ஈன்றாலும் தலைவியையே தான் ஈன்ற மகளாகக் கொண்டு தலைவியைக் காப்பவள். இத்தகைய ''செவிலியின் கூற்றுக்களாகத் தொல்காப்பியர் என பதின்மூன்று கூற்றுகளை மொழிகின்றார்.''[59]

மேலும் களவியலில் மற்றுமோர் கூற்றைத் ''தலைவி தலைவனை நன்கு அறிந்து நட்பு கொள்ளக்கூடிய அறிவு வளர்ச்சி இல்லாதவளென எண்ணி இருவகைத் தாயாரும் குற்றமற்ற சிறப்பினை உடைய பெரியவர்களிடம் தங்கள் ஐயங்களை வினவி அறிவதற்கும் உரியவள்''[60] என்பதில் சுட்டுகின்றார். மேலும், கற்பில் செவிலி கூற்றுகளாக ஓர் இரண்டைத் தொல்காப்பியர்,

> **''கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள**
> **நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**
> **செவிலிக் குரிய ஆகும் என்ப''** **(தொல்.பொருள்.கற்.12)**

எனக்கூறி மொத்தக் கூற்றுகளை செவிலிக்கு என 13+1+2=16 என்ற எண்ணிக்கையில் மொழிகின்றார்.

பொதுவான செய்திகள்

செவிலியின் கூற்றுகள் தவிர்த்து பன்னிரு நூற்பாக்களில் செவிலி பற்றிய பொதுவான செய்திகள் சுட்டப்பட்டுள்ளன. (கள.1,13, கற்.5, பொரு.36,41,42,52, செய்.181,182,189, மர.72,82)

''தாய் எனப்படுபவள் செவிலி'' (கள.34) ''செவிலி மகள் தோழி''[61] என்பதிலும், ''வாயில் மாந்தர்களில் ஒருவராகவும்''[62], ''தலைவனும், தலைவியு

ம் உடன்போக்கு சென்றுவிட்ட நிலையில் தாய்க்கு கனவு ஏற்படும்''[63] அவள் மனநலம் குறித்து என்ற பொழுதும், உவமை கூறலில் ''தோழியும், செவிலியும் உவமை கூறும்போது பொருத்தமான இடம் அறிந்து, கேட்பவர் மனம் கொள் ளத்தக்க வகையிலேயே கூறுவர்''[64] என்றும், கூற்றுக்குரிய மாந்தர்கள் பற்றியதி ல் ''களவில்''[65], ''கற்பில்''[66] கூற்றுக்குரியோரில் ஒருவராகவும் செவிலி சுட்டப் படுகின்றார்.

நம்பியகப்பொருளில் செவிலி கூற்றுக்கள்

நம்பியகப்பொருளில் 1.''அறத்தொடு நிற்கும் வகையில் செவிலி நற் றாய்க்கு அறத்தொடு நிற்கும் 2.''செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும் கால த்துத் தலைவியின் நிலையை விளங்க எடுத்துரைப்பதில்'' செவிலியின் ஒரு கூற் று உள்ளது. 3.''செவிலி பாங்கியை வினவும் போது'', செவிலி, அறிவர் ஆகிய இருவர்க்கும் உரிய கூற்றுகளான, 4) அறத்தின் வழி நடக்க வேண்டியதன் இன் றியமையாமையைத் தலைவன், தலைவிக்கு விளக்குவது, 5) அதனால் பின்வரு ம் பெருமையைக் கூறுவது, 6) மக்களின் வாழ்க்கை முறைகளை எடுத்துரைப்ப து, 7) பிற நல்ல செயல்களையும் தலைவன், தலைவியர்க்குத் தெளிவாகக் கூறு வது என்ற நான்கு கூற்றுகளும் செவிலிக்கு உரிய கூற்றுகளாகும். மேலும் தலை வியின் களவு குறித்துத் தன்னைச் செவிலி வினவியதாகப் பாங்கி தலைவனிடம் கூறுகையில் 8) செவிலியின் வினவல் என்ற ஒரு கூற்று உள்ளது.

''மின்னல் போன்ற இடையை உடைய தலைவியின் வேறுபாடு கண் டு நற்றாய் செவிலியை வினவிய இடத்து அச்செவிலித்தாய் 9) தலைவியின் கா தலை வெளிப்படையாகக் கூறுவாள் என்பதில் செவிலி கூற்று உள்ளது. நற்றாய் புலம்பலின் விரியில் தலைவியின் உடன்போக்கைச் செவிலி வழி அறிந்த நற்ற ாய் வருத்தமுற்று உயிர்த்தோழியிடம் வினவுதல், என்பதில் 10) செவிலி வழி அ றிதல் என்ற செவிலியின் கூற்று உள்ளது. செவிலி பின்தேடிச் செல்லலின் விரியி ல் 11) அஃறிணைப் பொருளாகிய குராமரத்திடம் தலைவியைப் பற்றிச் செவிலி புலம்புதல். செவிலியின் இலக்கணம் பற்றிச் சுட்டுகையில் தலைவிக்கு 12) ''ந ல்லறிவையும், ஒழுக்கங்களையும் கற்பித்து வளர்த்த தாயாக விளங்குபவள்'' எ ன்பதில் செவிலியின் கூற்று உள்ளது. (கற்பித்து) 13) தலைவியின் களவு குறித்து

த் தன்னைச் செவிலி வினவ அதனைத் தான் மறைத்து மொழிந்ததாகப் பாங்கி தலைவனிடம் கூறுதலில் செவிலி வினவியதான கூற்று உள்ளது. தலைவனுடன் , தலைவி உடன் போனதை அறிந்த பின்னர் 14) செவிலி நற்றாயோடும், பாங் கி முதலானவரோடும் கூற்று நிகழ்த்துவாள்.

செவிலி புலம்பலின் விரியில் பாங்கியை வினவி உடன்போக்கை அ றிந்த செவிலித்தாய் புலம்பும் போது அதனைக் கண்டு 15) தன்னை ஆற்றுப்படு த்துவோரிடம் செவிலி மனம் நொந்து கூறுதல். தலைவியின் குறிப்பால் 16) உ டன்போக்கை அறிந்து கொள்ள முடியவில்லையே எனத் தன் அறிவின்மையை நொந்து செவிலி கூறுதல். உடன்போக்கில் சென்ற தலைவி மீண்டு வரவேண்டு ம் எனத் 17) தெய்வத்தை வணங்கித் துதித்து வாழ்த்துதல் ஆகிய இம்மூன்றும் செவிலி புலம்புதற்கு உரியனவாம்.

18) செவிலி பின்தேடிச் செல்லலின் விரியில் தலைவியின் பிரிவால் ஆற்றாது துன்பமுறும் நற்றாய்க்குச் செவிலி ஆறுதல் கூறுதல். 19)தலைவியைத் தேடிச் செல்லுகின்ற செவிலி வழியில் முக்கோலுடைய அந்தணரை வினவுதல். 20) பாலை நிலத்துச் செல்லும் செவிலி அந்நிலப் பெண்ணாகிய எயிற்றியிடம் புலம்பிக்கூறுதல். 21)உடன்போக்கில் கூடிவரும் தலைவன், தலைவியரைக் க ண்டு செவிலி தன் தலைவி பற்றி வினாதல்.

22) மீட்சியின் விரியில் தலைவி நீண்ட தொலைவுக்குச் சென்றமை யைச் செவிலித் தாய்க்கு உணர்த்துதல். தன் மனை வரைதலின் விரி பல வகைக ளில் தலைவிக்குத் திருமணம் நிகழ்ந்ததைத் தோழி செவிலிக்குக் கூற 23) அதை னச் செவிலி நற்றாய்க்கு உணர்த்துதல்.

24) இல்வாழ்க்கையின் விரியில் தலைவியின் வீட்டிற்குச் சென்று வ ந்த செவிலி தலைமகளின் கற்புத் திறத்தை நற்றாய்க்கு உணர்த்தல். 25)தலைமக ளின் மனை வாழ்க்கைச் சிறப்பைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதல். 26) தலைவ ன், தலைவியரின் ஒத்த அன்புத் திறத்தைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதல் என இருபத்தாறு கூற்றுகளைக் கூறினாலும் இவை தொல்காப்பியக் கூற்றுக்களைே ய விரித்து மொழிகின்றன.

முத்துவீரியம்

முத்துவீரியத்தில் நான்கு நூற்பாக்களில் செவிலி பற்றிய செய்தி சுட்டப்பட்டுள்ளது. (847, 848, 850, 852) இதில் குறைநயப்பித்தலின் விரியில் தாயச்சங்கூறல் என்ற துறையும், இரவுக்குறியின் வகையில் தாய் துயிலறிதலும் என்ற வகையும் செவிலி பற்றிய செய்திகள் எனினும் செவிலியின் கூற்றுகளல்ல.

சுவாமிநாதத்தில் செவிலியின் கூற்றுகள்

தலைவி உடன்போக்கில் சென்றதை எண்ணிச் செவிலி புலம்பும் போதும், தலைவியின் உடன்போக்கு நிகழ்வை நற்றாய்க்குக் கூறும் பொழுதும் ஆற்றாத்தாயைத் தேற்றும் பொழுதும், தலைவி உடன்போக்கில் நீண்ட தூரம் சென்றதைத் தாய்க்கு உணர்த்தும் பொழுதும், தலைவி தலைவன் இல்லில் மணம் செய்து கொண்டமையைத் தோழி வழி அறிந்த செவிலி நற்றாய்க்குக் கூறும்பொழுதும், தலைவி கற்பு வாழ்வில் இல்லறம் நிகழ்த்தும் இயல்பை நற்றாய்க்குக் கூறும்பொழுதும், தலைவியின் கற்பின் வழுவாத தன்மையை விளம்பும் போதும், கற்பு வாழ்வில் தலைவன், தலைவியின் மேம்பட்ட அன்பை நற்றாயிடம் விளக்கும் போதும் என எட்டுவகைக் கூற்றைச் செவிலிக்குரியனவாகச் சுவாமிநாதம் சுட்டுகின்றது. இவ்வெட்டுக் கூற்றுகளில் தலைவியின் கற்பின் வழுவாத தன்மை, தலைவன், தலைவியின் மேம்பட்ட அன்பு ஆகியவற்றை நற்றாயிடம் செவிலி விளம்பும் கூற்றுகள் இரண்டும் தொல்காப்பியத்திலிருந்து வளர்ந்த நிலையில் உள்ள கூற்றுகள் ஆகும்.

தொல்காப்பியத்தில் தலைவன்

பெருமையும் உரனும் மிக்கவனான தலைவன் களவு, கற்பு கூற்றுக்குரிய மாந்தர்களுள் ஒருவனாகவும் சுட்டப்படுகின்றான். களவில் தான் விரும்பிய தலைவியையே கற்பிலும் கைபிடித்து இல்லறம் நடத்த மடலேறிக் கூட அவளைப் பெற முயற்சி செய்யும் மாந்தனாகவும், பொருள்வயிற் பிரிவில் கடல் கடந்து செல்லும் போது, தலைவியைத் தன்னுடன் அழைத்துச் சென்ற வேற்று நாட்டில் இல்லறம் நிகழ்த்தி நம் நாட்டுப் பண்பாட்டை மீறாதவனாகவும் செயல்படுகின்றான். அத்தகைய தலைவனைப் பற்றித் தொல்காப்பியர் பொருளதிக

ாரத்தில் ஐந்து நூற்பாக்களிலும் 85 இடங்களிலும் களவு, கற்பு எனும் இரு நிகழ்வுகளிலும் கூற்று நிகழ்த்துகின்றார். (அகத்.44, கள.10, கள.11, கள.12, கற்.5)

தலைவன் கூற்றுகள்

1. இயற்கைப் புணர்ச்சி

பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு, உருவு நிறுத்த காமவாயில், நிறை, அருள், உணர்வு, திரு ஆகிய பத்து வகையாலும் ஒத்த தலைவன், தலைவி இருவரும் ஊழின் காரணமாக முதன் முதலாகச் சந்தித்து கூடுகின்ற நிகழ்விற்கு இயற்கைப் புணர்ச்சி என்று பெயர்.

தொல்காப்பியத்தில் தலைவனுக்குரிய கூற்றுகளில் இயற்கைப் புணர்ச்சி நிகழ்வுகளின்கீழ் எட்டுக் கூற்றுத்துறைகள் உள்ளன. 1)முன்னிலையாக்கல், 2) சொல்வழிப்படுத்தல், 3) நன்னயம் உரைத்தல், 4)நகைநனியுறாஅ தன்னிலை அறிதல், 5) மெலிவு விளக்குறுதல், 6)தன்நிலை உரைத்தல், 7) தெளிவு அகப்படுதல், 8) பிரிந்தவழிக்கலங்கல் பிற்றைய இலக்கணங்களில் தமிழ்நெறி விளக்கம் (8), நம்பியகப்பொருள் (24), களவியற்காரிகை (7), மாறனகப்பொருள் (26), இலக்கண விளக்கம் (24), முத்துவீரியம் (11), சுவாமிநாதம் (23) ஆகிய ஏழு நூல்கள் இயற்கைப் புணர்ச்சித் துறைகளை மேற்கண்ட எண்ணிக்கையில் மொழிகின்றன. இவற்றில் தொல்காப்பியத்தின் முன்னிலையாக்கல் என்னும் இயற்கைப் புணர்ச்சியின் முதல் கூற்றுத்துறையை ‘‘நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்னும் மூன்று நூல்களும் தலைவியிற் புணர்ச்சியின் விரிகளில் ஒரு துறையாக’’[67] சுட்டுகின்றன. மேலும் தமிழ்நெறி விளக்கம் தொல்காப்பியத்தின் நன்னயம் உரைத்தல் என்பதைத் ‘‘தன்னயம் உரைத்தல் என்றும், தெளிவு அகப்படுத்தலைத் தெளிதல்’’[68] என்றும் உரைக்கின்றன.

2. இடந்தலைப்பாடு

முதல் நாள் சந்தித்த இடத்திற்குத் தலைவனும், தலைவியும் சென்று மறுநாளும் கண்ணுற்றுக்கூடும் நிகழ்விற்கு இடந்தலைப்பாடு என்று பெயர். தலை நாள் தந்த தெய்வம் இந்நாளும் தலைவியை தன்னிடத்தில் சேர்ப்பிக்கும் எனக்கருதி தலைவன், தலைவியைக் கண்ட இடத்திற்குச் சென்று அவளைக் கூடுதல் என்னும் இந்நிகழ்வில் தலைவனின் செயல்பாடே மிகுந்துள்ளது.

இடந்தலைப்பாடு என்னும் கூற்றுத்துறைகளின்கீழ் தலைவனுக்குரிய கூற்றுக்களில் ஒன்பது கூற்றுக்கள் துறைகளாக,

1. மெய்தொட்டுப்பயிறல்
2. பொய் பாராட்டல்
3. இடம்பெற்றுத் தழாஅல்
4. இடையூறு கிளத்தல்
5. நீடுநினைந்திரங்கல்
6. கூடுதல் உவதல்
7. சொல்லிய நுகழச்சி வல்லே பெற்றுழி
8. தீராத்தேற்றம்
9. பெற்றவழி மகிழ்தல்

என்றவாறு வருகின்றன.

தொல்காப்பியரின் இத்தகைய இடந்தலைப்பாட்டுக் கூற்றுத் துறை களை களவியற்காரிகை (18), நம்பியகப்பொருள் (5), மாறனகப்பொருள் (5), இலக்கண விளக்கம் (5), முத்துவீரியம் (12), சுவாமிநாதம் (5) ஆகிய ஆறு நூல் களும் என்ற எண்ணிக்கையில் சுட்டுகின்றன. இதில் நம்பியகப்பொருள், இலக் கண விளக்கம், மாறனகப்பொருள் ஆகிய மூன்று நூல்களிலும் இயற்கைப் புண ர்ச்சியாகிய தலைவியிற் புணர்ச்சியிலேயே தொல்காப்பியர் சுட்டிய இடந்தை லப்பாட்டுத் துறைகளில் சில இடம்பெற்றுள்ளன.

அவை தலைவியற் புணர்ச்சியின் 16 வகைகளில் மெய்தொட்டுப் ப யிறல், பொய்மைபாராட்டல் இடம்பெற்றுத் தழாஅல், இடையூறதனை இயல் புறக்கிளத்தல், நீட்டம் நினைந்து இரங்கல், முயங்குதல் உறுதல், கலவியின் மகி ழ்தல் என ஏழு துறைகளையும் இடந்தலைப்பாட்டுத் துறைகள் ஐந்தில் ''புகழ்த ல், ஆயத்து உய்த்தல் என்பதனையும் தொல்காப்பியரின் பெற்றவழி மகிழ்ச்சி, கூடுதல் உறுதல்''[69] என்பதற்கு ஈடாகவும் சுட்டுகின்றன.

களவியற்காரிகை ''புணர்ச்சி மகிழ்தல்''[70] என்ற துறையை தொல்கா ப்பியரின் பெற்றவழி மகிழ்ச்சிக்கு ஈடாகச் சுட்டுகின்றது. முத்துவீரியம் ''நலம் புனைந்து உரைத்தல்''[71] துறையையும், சுவாமிநாதம் ''மெய்தீண்டல், பொய்ம மபாராட்டு, இடம்பெற்று அணைதல், இடையூறு சொல்லல், நீடுநினைந்து இ ரங்கல்''[72] என்ற துறைகளையும் சுட்டுகின்றன. மேலும் சுவாமிநாதம் இடந்தை லப்பாட்டுத் துறைகள் ஐந்தில் புகழ்தல் என்ற ஒரு துறையைத் தொல்காப்பியக் கூற்றுத் துறையாகச் சுட்டுகின்றன.

பாங்கற்கூட்டம்

மூன்றாம் நாள் தலைவன் பாங்கனின் உதவியால் தலைவியைக் கூடும் கூட்டம் பாங்கற்கூட்டம் ஆகும். அக்கூட்டம் பன்னிரெண்டு நிமித்தங்களை உடையது என சுட்டினாலும் என்னென்ன என்பதைச் சுட்டவில்லை. தொல்காப்பியர் பாங்கற் கூட்டத்தில்

1. நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்

2. குற்றங் காட்டிய வாயில் பெட்டினும்

என இரண்டு கூற்றுத்துறைகளைச் சுட்டுகின்றார். இதில் தொல்காப்பியரின் துறைகளில் ''நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்'' என்பதை களவியற் காரிகை, தனக்குரிய பாங்கற் கூட்டத்துறைகளின் ''உற்றது உரைத்தல், நின்று நிலைகூறு கிளவி''[73] என இரண்டு துறைகளாக மொழிகின்றன. மேலும் புணர்ச்சி மகிழ்தல் என்ற துறை தொல்காப்பியரின் இடந்தலைப்பாட்டுத் துறைகள் ஒன்பதில் ஒன்பதாவதாக இந்நூல் சுட்டுகின்றன. இதனையே நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் இரண்டு நூல்களும் ''கலவியின் மகிழ்தல்''[74] எனச் சொல்லை மட்டும் மாற்றி இடந்தலைப்பாட்டுத் துறையை பாங்கற் கூட்டத்தின் 21 வகைகளில் இறுதியாகச் சுட்டுகின்றன. மேலும் தலைவன் உற்றது உரைத்தல் என்ற துறையை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய அனைத்து நூல்களும் சுட்டுகின்றன.

4. தோழியற்கூட்டம்

தலைவனும், தலைவியும் இயற்கைப் புணர்ச்சியில் கூடும் கூட்டம் காமக்கூட்டம் ஆகும். இக்காமக் கூட்டம் மூன்று நாள்கள் மட்டுமே பிறர் துணையின்றி நிகழும். பின்னர் தலைவனின் தோழனாகிய பாங்கன் மூலம் அல்லது தலைவியின் தோழியாகிய பாங்கியின் உதவியுடனே கூடுவர். இவ்வாறு பாங்கியின் உதவியுடன் கூடும் கூட்டத்திற்கு பாங்கியிற்கூட்டம் என்று பெயர். தோழியற்கூட்டம் என்னும் கூற்றின் கீழ் உள்ள துறைகளில் தொல்காப்பியம் மூன்று கூற்றுகளை மொழிகின்றது. அவை,

1. பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்,
2. ஊரும், பேரும் கெடுதியும், பிறவும் நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித் தோழியைக் குறைவுறும் பகுதியும்,
3. தோழி குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்

என்பனவாகும். தோழியிற் கூட்டத் துறைகளைக் களவியற்காரிகை (5), நம்பியகப்பொருள் (8), மாறனகப்பொருள் (8), இலக்கண விளக்கம் (8), முத்துவீரியம் (22), சுவாமிநாதம் (27) என்ற எண்ணிக்கையில் ஆறு நூல்களும் சுட்டுகின்றன. தொல்காப்பியர் சுட்டியுள்ள மூன்று துறைகளில் இரண்டாவது துறையை களவியற்காரிகை பதிவினா, வேழம் வினாதல், கலை வினாதல் என்றும், நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள் ஆகிய மூன்று நூல்களும் தொல்காப்பியர் சுட்டியதைச் சொல் மாறாமலும், முத்துவீரியம் சிந்துரம் (யானை) வினாதல், பெருமான் (கலைமான்) வினாதல், வழிவினாதல், பதி (ஊர்) வினாதல் என்றும் சுவாமிநாதம் கையுறை கொண்டு ஊர், பேர் வினவல், கெடுதி வினவல், மெய்யுணர்த்தல் என்றும் சுட்டுகின்றன. இந்நூல்கள் தொல்காப்பியரின் ஒரு கூற்றை நான்கு கூற்றுகளாக மொழிகின்றன.

5. சேட்படை

தோழி தலைவனுக்குக் குறையுணர்வாள். ஆயினும் உடனே அதை முடிக்கமாட்டாள். தலைவியின் அருமையைத் தலைவன் உணர வேண்டி தலைவன் தலைவியின் பால் கொண்ட அன்பைத் தான் உணர வேண்டியும் தலைவனைச் சேட்படுத்துவாள். அவ்விடத்து தலைவனுக்கு ஏழு கூற்றுகள் நிகழும். அவை, 1. தண்டாது இரப்பினும், 2. மற்றைய வழியும், 3. செல்லவற் சார்தலிற் புல்லிய வகையினும், 4. அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கிற் கேடும், பீடும் கூறலின், 5. தோழி நீக்கலினாகிய நிலைமையை நோக்கி மடன்மா கூறும் இடனும், 6. பண்பிற் பெயர்ப்பினும், 7.அன்புற்று நகினும் என்பனவாகும். பிற்றைய இலக்கணத்தில் சேட்படைத் துறையை நம்பியகப்பொருள் (20), மாறனகப்பொருள் 20, இலக்கண விளக்கம் (20), முத்துவீரியம் (26), சுவாமிநாதம் (20) என்ற எண்ணிக்கையில் சேட்படைக் கூற்றுத் துறையை ஐந்து நூல்களும்

விளம்பினாலும் தொல்காப்பியச் சேட்படைத் துறைகள் ஏழில் எதுவும் இந்நூலில் இடம்பெறவில்லை.

6. இருவகைக் குறியீடு

தலைவனும், தலைவியும் பகலிலும், இரவிலும் ஓரிடத்தில் சந்தித்துத் தங்கள் களவை நீட்டிப்பர். அத்தகைய இடத்திற்குக் குறியிடம் என்று பெயர். பகலில் சந்திக்கும் இடத்திற்குப் பகற்குறி என்றும், இரவில் சந்திக்கும் இடத்திற்கு இரவுக்குறி என்றும் பெயர். இத்தகைய குறியிடத்தைத் தலைவியும், தோழியுமே தேர்ந்து எடுப்பர். பகற்குறி என்பது தலைவியின் வீட்டைக் கடந்து சோலையிலும், பூங்காவிலும் இரவுக்குறியானது வீட்டை விட்டுத் தாண்டாதது என்றும் தொல்காப்பியர் சுட்டுவார். தொல்காப்பியம் இருவகைக் குறியீடு என்னும் கூற்றுத்துறையில் 1. பரிவுற்று மெலியினும், 2. அவட்பெற்று மலியினும், 3. ஆற்றிடை உறுதலும் என்ற மூன்று கூற்றுக்களை மொழிகின்றன.

இக்கூற்றுத் துறையைத் தமிழ்நெறி விளக்கம் (48), நம்பியகப்பொருள் (85), மாறனகப்பொருள் (80), இலக்கண விளக்கம் (85), களவியற்காரிகை (63), முத்துவீரியம் (65), சுவாமிநாதம் (80) என்ற எண்ணிக்கையில் சுட்டுகின்றன. தொல்காப்பியரின் இம்மூன்று கூற்றை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் மூன்று நூல்களும் அவ்வாறே மொழிகின்றன. இவை தவிர்ந்த பிற கூற்றுத் துறைகள் இருவகைக்குறி சார்ந்த வளர்ச்சித் துறைகளாகும்

7. உடன்போக்கு

தலைவனுக்குத் தலைவியைக் களவில் வந்து சந்திக்கவும், அவளைக் கூடவுமே அதிக ஆவல் இருக்கும். ஆகவே களவை நீட்டிப்பான். அவ்வாறன்றி சில சமயங்களில் தலைவன் கற்பில் தலைவியை இணைய விரும்பினாலும் ஊராரின் அலர்ப்பேச்சால் தலைவியின் பெற்றோரும் தலைவியை இற்செறித்துத் தலைவனுக்கு வரைவு செய்து கொடுக்க மறுத்து வேற்று வரைவில் தலைவியை ஈடுபடுத்தவே முயல்வர். இத்தகைய சூழலையும், தலைவன் தலைவியின் மன ஓட்டங்களையும் கருத்தில் கொண்ட தோழி ஓர் இரவில் யாரும் அறியாதபடி தலைவனிடம் தலைவியை உன் ஊருக்கு அழைத்துச் சென்று மணமுடித்துக்கொள் எனத் தலைவியைத் தலைவனோடு அனுப்பி வைக்கும் நிகழ்விற்கு உடன்ே

பாக்கு என்று பெயர். இதனைத் தொல்காப்பியர் ''கொண்டுதலைக் கழிதல்''[75] என்பர். 1. ஒன்றா தமரினும், 2. பருவத்தும், 3. சுரத்தும், 4. ஒன்றிய தோழியோடு வலிப்பினும், 5. விடுப்பினும், 6. இடைச்சுரமருங்கின் அவள்தம ரெய்திக் கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞரெய்திக் கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட அப்பாற்பட்ட ஒருதிறத் தானும் என ஆறு கூற்றுகள் தொல்காப்பியத்தில் உள்ளன.

உடன்போக்கு மேற்கொள்ளும் தலைவனுக்கென ஆறு கூற்றுக்கள் உள்ளன. இவ்உடன்போக்குத் துறையைத் தமிழ்நெறி விளக்கம் (16), களவியற் காரிகை (27), நம்பியகப்பொருள் (18), மாறனகப்பொருள் (18), முத்துவீரியம் (55), இலக்கண விளக்கம் (18), சுவாமிநாதம் (19) என்ற ஏழு நூல்களும் சுட்டுகின்றன.

தொல்காப்பியரின் சுரத்தும் என்ற கூற்றுத்துறையைத் தமிழ்நெறி விளக்கம் செல்துரத்திரங்கல், சுரம் செலவு ஆற்றும் நின்னோடு என்றல் என்ற இரண்டு துறைகளாகவும், களவியற்காரிகை சுரத்துஉய்த்தல், (நம்பியகப் பொருள்) விருப்புடைப்பாங்கி சுரத்து இயல்உரைத்துழிச் சொல்லல், (மாறனகப்பொருள்) அருஞ்சுரத்து உய்த்தல், இலக்கண விளக்கம் விரும்புடைப் பாங்கி சுரத்து இயல் உரைத்துழிச் சொல்லல், (முத்துவீரியம்) சுடரோடு இரத்தல், (சுவாமிநாதம்) சுரத்து இயல்பு சொலல், அவன் சுரத்தின் உய்த்தல் என இரண்டு கூற்றுக்களாகவும் சுட்டுகின்றன. தொல்காப்பியம் விடுப்பினும் எனச்சுட்டிய கூற்றுத் துறையை மாறனகப்பொருள் மட்டும் ''அருஞ்சுரத்து உய்த்தல்''[76] எனச் சுட்டுகின்றது. உடன்போக்கு தொடர்பான இக்கூற்றுத் துறையை பிற்றைய இலக்கணங்கள் அதிக அளவில் மொழிந்தாலும் தொல்காப்பியரின் மற்ற ஐந்து கூற்றுத் துறைகள் அந்நூல்களில் காணப்படவில்லை.

8. மலிவு

தலைவியை உடன்போக்கில் அழைத்துச் சென்று தன் ஊரில் வைத்து மணமுடித்து அவளோடு கூடி மகிழ்ந்து இல்லறம் நிகழ்த்தும் நிகழ்வுக்கு மலிவு என்று பெயர். சில சமயங்களில் தலைவியின் தமர் தலைவனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பெற்று மகிழ்தலும் மலிவு ஆகும். இதனைப் பேராசிரியர் ''

மலிதலென்பது இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாயவற்றான் மகிழ்தல்''[77] *எனச் சுட்டுவர். இக்கூற்றுத்துறையில் ''தலைவன் கூற்றில் 15 துறைகள் உள்ள ன.''*[78] *பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள் (7), மாறனகப்பொருள் (7), இலக்கண விளக்கம் (7), சுவாமிநாதம் (7) என்ற நான்கு நூல்களும் இத்தகை ய எண்ணிக்கையில் மொழிந்தாலும் மலிவுத்துறைகளில் தொல்காப்பியத்தின் பதினைந்து துறைகளில் தலைவனுக்கு உரியதாக எதுவும் இடம்பெறவில்லை.*

9. ஊடல் – பரத்தையற் பிரிவு

சிற்றின்பம் காரணமாகத் தலைவியைப் பிரிந்து பரத்தையரிடம் செ ன்ற தலைவன் சிறிது காலம் கழித்துத் தலைவியிடம் மீண்டு வரும்பொழுது த லைவிக்குத் தலைவன் மேல் கோபம் தோன்றும். சிறிது நேரமே காணப்படும் அத்தகைய பிணக்காகிய கோபமே ஊடல் எனப்படும்.

தலைவன் கூற்றுகளில் பரத்தையிற் பிரிவில், 1. பரத்தையின் அகற்சி யின் பிரிந்தோர் குறுகி இரத்தலும், 2. தெளித்தலும், 3. உயங்குவள் கிடந்த கிழ த்தியைக் குறுகிப் புல்கென முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென் சீறடி பு ல்லிய இரவினும், 4. ஊரலருங் குண்மையி னூடல் மிகுத்தோளைப் பிறபிற செ பண்டிரிற் பெயர்த்தற் கண்ணும், 5. ஏனை வாயில் எதிரொடு என்ற ஐந்து கூற் றுகள் இடம்பெற்றுள்ளன. பிற்றைய இலக்கணங்கள் ''இப்பரத்தையர் பிரிவுத் துறையை உணர்த்த உணரும் ஊடற்கிளவிகள், உணர்த்த உணராத ஊடற்கிள விகள் என்னும் துறைகளின் கீழ் நம்பியகப்பொருள், மாறனகப் பொருள், இலக் கண விளக்கம், சுவாமிநாதம்''[79] *ஆகிய நான்கு நூல்களும் சுட்டுகின்றன.*

உணர்த்த உணரும் ஊடற்கிளவிகளை நம்பியகப்பொருள், மாறனக ப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் தலா பதினொரு துறைகளாகவும், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளை நம்பிய கப்பொருள் 19, மாறனகப்பொருள் 16, இலக்கண விளக்கம் 19, சுவாமிநாதம் 2 6, உணர்வதொடு உணரா ஊடற்கிளவிகளை மாறனகப்பொருள் ஐந்து துறைக ளிலும் சுட்டுகின்றன. எனினும் தொல்காப்பியக் கூற்றுத்துறையான, பயிங்கெ ழு துணையணை புல்லிய புல்லாத என்னும் ஒரு துறையை மட்டும் (நம்பியகப்

பொருள்) உட்பட மூன்று நூல்களுள் மொழிகின்றன. வெளிப்பட நோக்கிச்சீறேல் என்று அவள் சீறடி தொழல் எனவும் மொழிகின்றன.

10. பிரிவிடம்

தலைவன் களவிலும் கற்பிலும் தலைவியை விடுத்துச் சிறிது காலம் ஓதல், பகை, தூது, வேந்தற்கு உற்றுழி உதவல், காவல், பொருள்வயிற் பிரிவு போன்ற அறுவகைப் பிரிவின் வகைகளில் ஏதாவது ஒன்றன் காரணமாகப் பிரிந்து சென்று தங்கியிருக்கும் இடத்திற்குப் பிரிவிடம் என்று பெயர். மற்றொரு பிரிவாகிய பரத்தையிற் பிரிவின் காரணமாகவும் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான் எனினும் முன்னைய ஐந்து பிரிவின் காரணமாகச் சென்ற இடத்திலேயே தலைவியைப் பிரிந்து வந்ததை எண்ணி வருந்துவான். பரத்தையிற் பிரிவின் போது தலைவியை நினைத்து வருந்தமாட்டான்.

இக்கூற்றுத்துறையில் தலைவனுக்கென தொல்காப்பியத்தில் பதினெட்டுத் துறைகள் உள்ளன. அவை 1. நூல்களால் பெறும் பயனைக்கருதி ஓதல் காரணமாகப் பிரியுமிடத்தும் 2. பிரிவால் வரும் புகழும் பிரியாமையால் வரும் குற்றமும் எடுத்துக்கூறித் தலைமகளைத் தான் வரும் வரை ஆற்றியிருக்குமாறு கூறுமிடத்தும் 3.தன்வலி, வினைவலி, துணைவலி ஆகிய மூன்றனையும் ஆராயுமிடத்தும் 4. பகைவர் தம்மை வளைத்துக் கொண்ட அரியவிடத்தும் 5. மிகுதியை உடைய பகைவரது உயர்ச்சியை நினையுமிடத்தும் 6. தனக்கு வேண்டிய அரசர்களுக்கு உதவியாகச் செல்லும் பிரிவிடத்தும் 7. முரண்பட்ட அரசர் இருவரையும் பகைநீக்கி உறவு வளர்த்தற் பொருட்டுத் தூதாகச் செல்லுமிடத்தும் 8. கொடிய விலங்குகளை வேட்டையாடி நாடுகாத்தற் பொருட்டும் 9. பிரிவின் போது வருத்தமுறும் தலைவி, காமக்கிழத்தி ஆகிய இருவரையும் அவ்வருத்தம் நீங்க யான் செல்வேன் என்னும்போது 10. உம்முடன் வருவேன் எனத் தலைவியும் உடன்கூட்டிச் செல்க எனத் தோழியும் கூறும்போது தலைவன் அவர்களிடம் வழி ஏதங்களைக் கூறும்பொழுதும், 11. தன்னறியாமை தோன்றக் கூறிவந்த தோழியிடமும் 12. தலைவன் வேற்றுநாடு பிரியும்போது தலைவியின் மிகுந்த துன்பங்கருதும் போதும் 13. மிகுந்த தொலைவு பிரியும் பிரிவின்கண் தலைவன் அஞ்சிய வருத்தத்தின் கண்ணும் 14. முன்பு பிரிந்து சென்று சுரத்திடை வருந்

திய தலைவன் மீண்டும் அந்நெறியின்கண் போதற்குக் கருதிய பொழுதும் 15. காமம் சிறத்தலின் ஆற்றாமை வாயிலாகச் சென்று வலியது என நெருங்கிக் கூறும் பொழுதும் 16. தலைவி தான் உணர்த்தவும் உணராமல் தன்னைக் கைவிட்டுப் பிரியின் தான் அவளை நீங்குவதற்கு அஞ்சிய அச்சத்தின் போதும் 17. தலைவிக்குத் தான் கூறிய உறுதிமொழியைப் பிழைத்துப் பிரிதலைத் துணியும் போதும் 18. நாளது சின்மையு மிளமைய தருமையுந் கருதும் பொழுதும் என்பனவாகும். இப்பிரிவு பற்றிய துறைகளை பிற்றைய இலக்கணங்களில் (தமிழ்நெறி விளக்கம் 12, முத்துவீரியம் 44) இரண்டு நூல்களும் மொழிந்தாலும் தொல்காப்பியர் சுட்டிய கூற்றுக்கள் அவற்றில் காணப்படவில்லை.

11. இடைச்சுரத்தழுங்கல்

ஓதல் முதல் பொருள்வயின் பிரிவு வரை உள்ள ஐந்து பிரிவில் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் தான் செல்லும் சுரமாகிய பாலை நிலத்தில் தலைவியைப் பிரிதலை எண்ணி வருந்தி பொருள் தேடுதல் பிரிவைக் கைவிட்டுத் தலைவியை மீண்டு வந்து சேருவதற்கும் உரியவன் ஆவான். இந்நிகழ்விற்கு இடைச்சுரத்தில் நின்று வருந்தி அழுதல் என்றும், செலவைக் கைவிடுதல் என்றும், தலைவனின் இத்தகைய அழுங்கும் செயலானது இல்லமாகிய வீட்டிலேயே அழுங்கல், இடைச்சுரத்து அழுங்கல் என இரண்டு வகைப்படும். அழுங்கல் என்பதற்கு தடுத்தல் என்று பெயர். இந்தத் துறையில் 'மீட்டு வரவு ஆய்ந்த வகையின் கண்ணும்' என்னும் ஒரு கூற்று இடம் பெற்றுள்ளது. பிற்றைய இலக்கணங்களில் இத்துறை காணப்படவில்லை.

12. வினையிடம்

நாட்டுப் போரின் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் போரை முடித்து இரவில் பாசறையில் வீரர்களோடு தங்கியிருக்கும் அவ்விடத்தில் தலைவியை எண்ணி வருத்தப்படுவான். தலைவன் வினையை மேற்சென்று தங்கியிருக்கும் அவ்விடம் வினையிடம் ஆகும்.

வினையிடம் என்னும் இக்கூற்றுத்துறையில் தொல்காப்பியர் 1) பாசறைப் புலம்பலும், 2) ..... முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும், 3)அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும் என்னும் மூன்

று கூற்றுக்களை மொழிகின்றார். இக்கூற்றுத் துறையை பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஆறு நூல்களும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின் கீழ் (21,3,23,21,33,20) என்ற எண்ணிக்கையில் என்ற துறையின் கீழ் கூறினாலும்,

"அவன் அவண் புலம்பல்
அவன வருங்கால் பாகன் தன்னொடும் சொல்லல்"[80]

என்ற இரண்டு கூற்றுத்துறைகளை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்னும் நான்கு நூல்களும் மொழிகின்றன.

13. வினைமுற்றி மீளல்

போரின் காரணமாகவோ அல்லது பொருள் தேடலின் காரணமாகவோ தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தான்மேற் சென்ற வினையை முடித்து வெற்றி பெற்றுத் திரும்பும் போது தலைவியை விரைந்து சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தால் தன் மன ஓட்ட, நினைவிற்கு ஏற்ப பாகனை வண்டியை விரைந்து செலுத்தக் கூறும் நிகழ்விற்கு வினைமுற்றி மீளல் என்று பெயர். இத்துறையின் கீழ் தொல்காப்பியத்தில் 1. பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும், 2. அருந்தொழில் முடிந்த செம்மற்காலை விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும் என்னும் இரண்டு கூற்றுகள் உள்ளன. இக்கூற்றுத்துறைகள் பிற்றைய இலக்கணங்களில் சுட்டப்படவில்லை.

14. இனிதிருத்தல்

வினையே ஆடவர்க்கு உயிரே என்ற தொல்காப்பிய காலத்தில் தான் மேற் சென்ற வினையை மிக்க வெற்றியுடன் முடித்துத் திரும்பிய தலைவன் தலைவியுடன் தன் வீட்டில் மகிழ்ந்து இருந்து வாழ்வதற்கு இனிதிருத்தல் என்று பெயர். தொல்காப்பியத்தில் இக்கூற்றுத்துறையின்கீழ்

"காமக்கிழத்தி மனையோ ளென்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி

இன்றிச் சென்ற தந்தலை கிளப்பினும்
மாலை யேந்திய பெண்டிரு மக்களுங்
கேளி ரொழுக்கத்துப் புகழ்ச்சிக் கண்ணும்''[81]

என்ற மூன்று கூற்றுகள் உள்ளன. இக்கூற்றுத்துறைகள் எவையும் பிற்றைய இலக்கணங்களில் இடம்பெறவில்லை.

தொல்காப்பியத்தில் தலைவி கூற்றுகள்

களவு, கற்பு வாழ்வுக்கு இன்றியமையாதவளான தலைவி பற்றிய செய்திகளைத் தொல்காப்பியம் மிகுதியாகக் கூறினாலும், தலைவியின் கூற்றுகளாக எழுபத்தி இரண்டு கூற்றுகள் ஐந்து (தொல்.பொருள்.கள. 16,20,21,22,கற்.6) நூற்பாக்களில் சுட்டடப்பட்டுள்ளன. தலைவியின் இக்கூற்றுக்களைக் கிளவித் துறைகளின் கீழ்,

''1.	தோழியிற்கூட்டம்	...	1
2.	குறைநயப்பு	...	2
3.	இருவகைக்குறியீடு	...	15
4.	ஒருவழித்தணத்தல்	...	6
5.	வரைவு வேட்கை	...	20
6.	உடன்போக்கு	...	1
7.	வழுவமைதிக் கூற்றுகள்	...	2
8.	பிற களவுக் கூற்றுகள்	...	4
9.	மலிவு	...	3
10.	ஊடல்	...	16
11.	பிரிவு	...	2
			72

என மொழிகின்றது.''[82]

கூற்றுகளின் எண்ணிக்கை

தொல்காப்பியர் அகமாந்தர்களின் கூற்றுக்கள் இத்தனை என எண்ணிக்கையில் சுட்டடவில்லை. உரையாசிரியர்களே தலைவன் கூற்று, தலைவி கூற்று இத்தகையன மாந்தர்களின் கூற்றுக்களை எண்ணிக்கையில் சுட்டுகின்றனர்.

கூற்று எண்ணிக்கையில் மாறுபாடு

தொல்காப்பியத்திற்கு சிறந்த உரையாசிரியர்கள் பத்திற்கு மேற்பட்டவர்கள் இருப்பினும் இளம்பூரணர், நச்சர் உரையையே சிறந்த உரைகள் என இலக்கணச் சான்றோர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இவரிருவருள்ளும் பல இடங்களில் மாறுபட்ட கருத்துகள் காணக்கிடைக்கின்றன. உதாரணமாகக் களவியலில் ''இருவகைக் குறிபிழைப்பாகியவிடத்தும்''[83] எனத் தொடங்கும் நூற்பாக் கூற்றுக்களை இளம்பூரணர் ''தலைவனுக்குரிய கூற்றுகள்''[84] என்றும், நச்சினார்க்கினியர் ''தலைவிக்குரிய கூற்றுக்கள்''[85] என்றும் வேறுபட்டுச் சுட்டுகின்றனர். இதனால் தலைவிக்குரிய மொத்தக் கூற்றுக்களின் எண்ணிக்கையை இளம்பூரணர் அறுபது என்றும், நச்சினார்க்கினியர் மேற்கண்ட நூற்பாவைத் தலைவிக்கு உரியதாகக் கொண்டு எழுபத்தி இரண்டு என்றும் சுட்டுகின்றார்.

தலைவன் கூற்றாகவும் தலைவி கூற்றாகவும்

இருவகைக் குறிபிழைப்பாகியவிடத்தும் என்ற நூற்பாவை நாற்கவிராச நம்பி, பேராசிரியர் க.வெள்ளைவாரணன், க.ரத்தினம் ஆகியோர் இளம்பூரணர் போலவே தலைவன் கூற்று என்றும், கா.சுப்பிரமணியபிள்ளை, சி.இலக்குவனார் ஆகியோர் நச்சினார்க்கினியர் போலத் தலைவி கூற்று என்றும் சுட்டுகின்றனர்.

தலைவி கூற்றாகவே

''இருவகைக் குறி பிழைப்பாகிய என்னும் நூற்பாவில் 'புரைபட வந்த மறுத்தலொடு' என்னும் கூற்றிற்கு இளம்பூரணர், 'தலைவி தமர்மறுத்தற் கண்ணும் தலைமகன் மாட்டுக் கூற்று நிகழும்' என்று உரை விளக்கம் தருகிறார். இவ்வாறு கூறுவது அகத்திணையியலின்கண் தலைவன் கூற்றில் உடன்போக்காக வரும் 'ஒன்றாத் தமரினும்' என்னும் கூற்றிலேயே அடங்கிவிடும். அக்கூற்றிற்கு அவர் ஆண்டு, 'வரைவு உடன்படாத தமர்கண்ணும்' என்று உரைவரைகின்றார். இதனால் இக்கூற்றைத் தலைவி கூற்றாகக் கொள்ளலாம். நச்சினார்க்கினியர்,

''புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்''

என்னும் கூற்றுக்குக் கலித்தொகைப் பாடல் ஒன்றையும்,

"நாணு நெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும்"

என்னும் கூற்றுக்குக் குறுந்தொகைப் பாடல் ஒன்றையும் எடுத்துக்காட்டி அவைகட்கு விளக்கங்கள் தந்துள்ளார். அவை அப்பாடல்களின் பொருள் அமைப்போடும், துறைகளோடும் இயைந்து விளங்குகின்றன. இவற்றால், மேற்கண்ட நூற்பாவைத் தலைவன் கூற்றாகக் கொள்வதைக் காட்டிலும் தலைவி கூற்றாகக் கொள்வதே பொருந்தும் எனலாம்"[86] என்பதை எடுத்துக்கூறி பேராசிரியர் இரா. செகதீசனும் இந்நூற்பா தலைவி கூற்றே என உடம்படுகிறார். இவரின் கருத்துப் பொருத்தத்தின் அடிப்படையில் தலைவிக்கு 72 கூற்றுகள் என்பதே பொருந்தும்.

தலைவி கூற்றுத்துறைகள்

இரா.செகதீசன் அவர்கள் தலைவி கூற்றுத்துறைகளில் தோழியற்கூட்டம், குறைநயப்பு இருவகைக் குறியீடு, ஒருவழித் தணத்தல், வரைவு வேட்கை, உடன்போக்கு,வழுவமைதிக் கூற்றுகள், பிற களவுக் கூற்றுக்கள், மலிவு, ஊடல் ஆகிய துறையின் கீழ் பகுக்கின்றார்.

1. தோழியற்கூட்டம்

தோழி தலைவியின் உடல் உள்ள வேறுபாடுகளை ஆராய்ந்து வினவும் பொழுது தலைவி கூற்று நிகழ்த்துவாள். இத்தோழியற் கூட்டத்தில் 'நெறிபடு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்' எனும் ஒரு கூற்றுத்துறை உள்ளது. இதனை, மாறனகப்பொருள் "பாங்கிடைத் தலைவி மறைத்தல்"[87] "நம்பியகப்பொருள் பாங்கியைத் தலைவி மறைத்தல் இலக்கண விளக்கம் இகுளை அறியாது இறைவி மறைத்தல்"[88] சுவாமிநாதம் "சகியை மின்னாள் மறைத்தல்"[89] என நான்கு நூல்களும் விளம்புகின்றன. இத்துறைக்கு நம்பியகப்பொருள் 60, மாறனகப்பொருள் 62, இலக்கண விளக்கம் 60, சுவாமிநாதம் 60 என்ற எண்ணிக்கையில் துறைகளைப் பிற்றைய இலக்கணங்கள் சுட்டினாலும் தொல்காப்பியரின் ஒரு கூற்றுத்துறை கழிய மீதமுள்ள அறுபதும் தோழியிற் கூட்டம் சார்ந்த கூற்றுத்துறையின் வளர்ச்சிகளாகும்.

2. குறைநயப்பு

தலைவியை மீண்டும் சந்திக்க வழிவகை செய்ய வேண்டும் எனத் தலைவன் தோழியிடம் தன் குறையைத் தீர்க்க வேண்டுவதற்குக் குறைநயப்பு என்று பெயர். தலைவனின் இத்தகைய வேண்டல்களைத் தோழி தலைவியிடம் எடுத்துக்கூறித் தலைவனுடனான கூட்டத்திற்கு உடன்படுமாறு தலைவியிடம் வேண்டுவாள். இதற்கும் குறைநயப்பு என்று பெயர். தோழியின் இக்குறைநயப்பை மறுக்கும் பண்பு தலைவிக்கு உண்டு. ''1. தலைவியைத் தலைவனது குறைநயக்கச் செய்ய வேண்டித் தோழி தலைவன் நின்பொருட்டு மடலேறுவேன் என்கிறான் என்று கூறியவிடத்துத் தலைவி அதனைப் பொய்யெனக் கூறுமிடத்தும் 2. ஊழ்வயத்தால் மனமொத்த காதலராகிய பொழுது தலைவனுக்குள்ள குறையைத் தெளிவித்து மனதை அழியவிடாது பெருமை சான்ற இயல்புடன் நிற்கும் போதும்''[90] *என இத்துறையில் தலைவிக்கென இருகூற்றுகள் உள்ளன. இக்கூற்றுத்துறையில் அமைந்த துறைகள் பிற்றைய இலக்கணங்களான நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் ஆகிய இரண்டு நூல்களிலும் பன்னிரெண்டு, பன்னிரண்டு என்ற எண்ணிக்கையில் துறைகளாகக் காணப்படினும் அவற்றில் ஒரு துறைகூடத் தொல்காப்பியத் தலைவியின் குறைநயப்பு தொடர்பான கூற்றுத்துறயில் இடம்பெறவில்லை.*

3. இருவகைக் குறியீடு

பகற்குறி, இரவுக்குறி ஆகிய இரண்டு குறியிடங்களின் போது தலைவனும், தலைவியும் சந்திக்கும் இடத்திற்கு இருவகைக் குறியீடு என்று பெயர். இக்கூற்றுத்துறையில் 1. இருவகை குறிபிழைப்பாகியவிடத்தும் 2.காணா வகையிற் பொழுதுநனி யிகப்பினும், 3.தானகம் புகாஅன் பெயர்த லின்மையின் காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கி வேட்கையின் மயங்கிய கையறு பொழுதினும், 4.குறியி னொப்புமை மருடற் கண்ணும், 5.புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப் பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும், 6.வேளா ணெதிரும் விருந்தின் கண்ணும், 7.மறைந்தவற் காண்டல், 8.தற்காட்டுறுதல், 9.நிறைந்த காதலின் சொல்லெதிர் மழுங்கல், 10.நாணுமிக வரினும், 11.பிரிந்தவழிக் கலங்கலும், 12.பெற்றவழி மலியினும், 13.வருந்தொழிற் கருமை வாயில் கூறினும், 14.கூறிய வா

யில் கொள்ளாக் காலையும், 15.ஏமஞ்சான்ற உவகைக் கண்ணும் எனத் தலைவிக்குரிய கூற்றுகள் 15 ஆகும். இவ்விருவகைக் குறியீட்டுத் துறைகளில் பிற்றைய இலக்கணங்களான தமிழ்நெறி விளக்கம் (48), நம்பியகப்பொருள் (79), களவியற்காரிகை (63), மாறனகப்பொருள் (80), இலக்கண விளக்கம் (79), முத்துவீரியம் (65), சுவாமிநாதம் (80) என்ற நூல்கள் மேற்கண்ட எண்ணிக்கையில் துறைகளைச் சுட்டுகின்றன.

நம்பியகப்பொருள் ‘‘உலகியல் மேம்பட விருந்து விலக்கல், பெருந்தகை விருந்திறை விரும்பல், கிழவோன் பிரிந்துழிக்கிழத்தி மாலையம் பொழுது கண்டு இரங்கல், பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடு சென்று இரங்கல், வறுங்கள நாடி மங்கல், குறுந்தொடி வாழும் ஊர் நோக்கி மதிமயங்கல், பெருமகள் ஆற்றினது அருமை நினைத்து இரங்கல், பெருமகன் மயங்கல், தான் குறி மருண்டமை தலைவி அவளுக்குணர்த்தல், புலர்ந்த பின் வறுங்களம் தலைவி கண்டு இரங்கல் அவள் குறி மருண்டமை அவள் அவற்கு இயம்பல்’’[91] ஆகிய பன்னிரெண்டு துறைகளைத் தலைவிக்கு உரியனவாகச் சுட்டுகின்றன. நம்பியகப்பொருள் ஆசிரியரின் இக்கருத்தையே மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களும் மொழிகின்றன. எனினும் தொல்காப்பியர் கூறிய கூற்றுத்துறை சில இவற்றில் இடம்பெற்றில. ஆனால் அதற்கு மாறாக இந்நூற்கள் அளவுக்கதிகமான துறைகளைச் சுட்டுகின்றன.

4. ஒருவழித்தணத்தல்

தணத்தல் -

பிரிந்து இருத்தல். தலைவன், தலைவியின் களவொழுக்கம் ஊரார் பலருக்கும் தெரிந்து அலர் ஏற்படும். எனவே இவ்அலர் மறையச் சிறிது காலம் தலைவன் தன் ஊருக்குச் சென்று தங்கி வருவதாகக்கூறி தலைவியை விட்டுச் சிறிது நாட்கள் பிரிந்து இருப்பான். தலைவனின் இத்தகைய சிறுபிரிவு ஒருவழித்தணத்தல் ஆகும். தொல்காப்பியர் இப்பிரிவை ‘‘இட்டுப்பிரிவு’’[92] எனத் தலைவியின் கூற்றில் கூறுவார். இத்துறையின்கீழ் 1.இட்டுப் பிரிவிரங்கினும் 2.அருமைசெய் தயர்ப்பினும் 3.வந்தவழி யெள்ளினும் 4.விட்டுயிர்த் தழுங்கினும் 5.நொந்து தெளிவொழிப்பினும் 6.அச்சம் நீடினும் (தொல்.கள.20:6-

9) என்ற ஆறு கூற்றுக்கள் தலைவிக்குச் சுட்டப்பட்டுள்ளன. இத்தகைய ஒருவழித்தணத்தலை நம்பியகப்பொருள் (12), மாறனகப்பொருள் (12), இலக்கண விளக்கம் (12), சுவாமிநாதம் (11), முத்துவீரியம் (3) ஆகிய எண்ணிக்கைகள் கொண்ட கிளவித்துறைகளில் சுட்டுகின்றன.

இத்தகைய கூற்றுத்துறைகளில் மாறனகப்பொருள் தலைமகன் தன்பதிக்கு அகற்சி சாற்றல் எனக் கூறுவதை நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்னும் மூன்று நூல்களும் உள்ளவாறே சுட்டுகின்றன. முத்துவீரியம் மட்டும் இத்துறையை "அன்னமொடு ஆய்தல்"[93] என வேறு சொல்லாட்சியில் சுட்டுகின்றது. மேலும் "அவன் வந்தமை உணர்த்தல், வந்தோன் தன்னோடு நொந்து வினாதல், தலைவி நெஞ்சொடு புலத்தல்"[94] ஆகிய மூன்று கிளவித்துறைகளையும் ஐந்து நூல்களும் மொழிகின்றன. தொல்காப்பியம் சுட்டும் கூற்றுகளில் வந்தவழி எள்ளல், அச்சம் நீடல் ஆகிய இரண்டு துறைகளும் பிற்றை இலக்கணங்களில் சுட்டப்படவில்லை.

5. வரைவு வேட்கை

தலைவன் களவு வாழ்வை நீட்டிக்கவே எண்ணம் கொள்வான். தலைவனின் இத்தகைய எண்ணத்தால் தலைவிக்குப் பல இடையூறுகள் ஏற்படும். தலைவியை அலர், இற்செறிப்பு, வேற்றுவரைவு போன்ற இடையூறுகளில் இருந்து காக்கத் தலைவன், தலைவியினரை வரைவில் கூட்டி வைக்கத் தோழி விருப்பம் கொள்வாள். இத்தகைய விருப்பத்திற்கு வரைவு வேட்கை என்று பெயர். தலைவியின் விருப்பமும் தலைவனை விரைவில் மணந்து கொள்ளுதலே என்பதைத் தோழி அறிவாள்.

வரைவு வேட்கை என்னும் இத்துறையின் கீழ் தொல்காப்பியத் தலைவிக்கு இருபது கூற்றுக்கள் இடம்பெற்றுள்ளன. (இரா.செகதீசன் தொல்காப்பியப் பொருளதிகார வழி அகநானூறு ஓர் ஆய்வு, ப.275,276) பிற்றைய நூல்களில் நம்பியகப்பொருள் (18), களவியற்காரிகை (11), மாறனகப்பொருள் (19), இலக்கண விளக்கம் (18), சுவாமிநாதம் (19) என்ற எண்ணிக்கையில் துறைகள் சுட்டப்பட்டுள்ளன. எனினும், 1. தன் துயர் தலைமகற்கு உரைத்தல் வேண்டலும், 2. துன்புறல் பாங்கி சொல் எனச் சொல்லல், 3. காமம் மிக்க கழிபடர் கிளவி

, *4. தன்னுள் கையாறு எய்திடு கிளவி, 5. குறி விலக்கு வித்தல், 6. வெறி விலக்கு வித்தல், 7. குரவரை வரைவு எதிர் கொள்ளுவித்தல்''*[95] நம்பியகப்பொருளின் இவ்வேழு துறைகளையே களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் மொழிகின்றன. இக்கிளவித் துறைகள் தொல்காப்பியரின் கூற்றுத் துறைகளில் சிலவற்றை விடுத்துச் சுட்டுகின்றன

6. உடன்போக்கு

தான் விரும்பிய தலைவனுக்குத் தலைவியின் வீட்டார் மணமுடித்துக் கொடுக்க மறுத்த நிலையில், தோழியின் அறிவுரைப்படி தலைவியைத் தலைவன் மணந்து கொள்வதற்காக பிறர் அறியாதபடி அவனூர் அழைத்துச் செல்லும் நிகழ்விற்கு உடன்போக்கு என்று பெயர். இத்துறையில்.

''நாணு நெஞ்சலைப் பவிடுத்தற் கண்ணும்
எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே''[96]

என்னும் தொல்காப்பிய கூற்றுத்துறையை தமிழ்நெறி விளக்கம் (10), நம்பியகப்பொருள் (16), களவியற்காரிகை (8), மாறனகப்பொருள் (18), இலக்கண விளக்கம் (13), முத்துவீரியம் (10), சுவாமிநாதம் (14) என்ற எண்ணிக்கையின் கீழ் ஏழு நூல்களும் மொழிகின்றன. இதில் ''நாண் அழிவு இரங்கல், வைகிருள் விடுத்தல் என்ற இரண்டு நம்பியகத்துறைகளை மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய மூன்று நூல்களும் வழி மொழிகின்றன. முத்துவீரியம் நாண்விடல் என்றும் மொழிகின்றன.''[97] *இவை தவிர்த்து பிற்றைய இலக்கணங்களில் கூறப்பட்டுள்ள துறைகள் அனைத்தும் தலைவி கூற்றுத்துறையில் உடன்போக்கு சார்ந்த வளர்ச்சித் துறைகளாகும்.*

7. வழுவமைதிக் கூற்றுகள்

''தொல்காப்பியத்தில் வழுவமைதிக் கூற்றுக்களாக இரண்டு கூற்றுக்கள் தலைவிக்கு உரியனவாக''[98] *சுட்டப்படுகின்றன. தொல்காப்பியர் சுட்டிய இவ்வழுவமைதிக் கூற்றுக்களை பிற்றைய இலக்கணங்கள் எவையும் மொழியவில்லை.*

8. பிற களவுக் கூற்றுகள்

தலைவிக்குரிய நான்கு கூற்றுகளை இத்துறையின் ஆசிரியர் சுட்டுகி ன்றார். இதில் ''வழிபடு மறுத்தல், மறுத்து எதிர்கோடல், வறிது நகை தோற்றல் ''[99] என்ற மூன்று கூற்றுகளை இயற்கைப் புணர்ச்சித் துறையில் நம்பியகப்பொ ருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல் களும் மொழிகின்றன. கைப்பட்டுக் கலங்கல்
எனும் தொல்காப்பிய மற்றொரு துறையை பிற்றைய இலக்கணங்கள் மொழிய வில்லை.

9. மலிவு

கற்பொழுக்கத்தில் இல்லத் தலைவியான பின்பு தலைவி கூற்று நிகழ்த் தும் மலிவு என்னும் இத்துறையில் ஒரு மூன்று கூற்றுகளை 1.அவனறிவு ஆற்ற அறியு மாகலின் ஏற்றற்கண்ணும் 2.நிறுத்தற் கண்ணும் 3.உரிமை கொடுத்த கிழ வோன் பாங்கில் பெருமையில் திரிய அன்பின் கண்ணும் என தொல்காப்பியர் தலைவிக்கு மொழிகின்றார். ''இம்மலிவுத்துறையைப் பிற்றைய இலக்கணங்களி ல் வரைவு மலிதல் என்னும் துறையின் கீழ் ஏழேழு துறைகளாக நம்பியகப்பொ ருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற நூல்கள்''[100] சுட்டுகின்றன. எனினும் தொல்காப்பியரின் மலிவுத் துறைகளின் கீழ் இடம்பெ றும் ஒரு கூற்றைக்கூட மேற்கண்ட இலக்கணங்கள் சுட்டவில்லை.

10. ஊடல்

பரத்தை இன்பத்தின் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு தலைவியிடம் வந்து வாயில் வேண்டும் பொழுது தலைவிக்கு எழும் ஊடல் எ ன்னும் இக்கூற்றுத்துறைகளின்கீழ் தொல்காப்பியர் 16 கூற்றுகளைத் தலைவிக்கு உரியதாக மொழிகின்றார். (தொல்.கற்.6:8-
42) ஊடல் சார்ந்த பரத்தையர் பிரிவில் நம்பியகப்பொருள் (7), மாறனகப்பொ ருள் (9), இலக்கண விளக்கம் (7), முத்துவீரியம் (7), சுவாமிநாதம் (7) என்ற ஐந் து நூல்களும் முறையே என்றென்ற எண்ணிக்கையில் துறைகளை மொழிகின்ற ன. இவற்றில் நம்பியக்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகி ய மூன்று நூல்களும் ''1.இஃது எங்கையர் காணின் நன்றன்று என்றல், 2.வந்த ப

ாங்கியோடு இணங்கிய மைந்தனை இனிதிண் புகழ்தல், 3.தலைவனைப் புகழ்தல்''[101] என்ற மூன்று கிளவித் துறைகளையும், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய இரண்டு நூல்களும் ''அணைத்தவழி ஊடல், புறங்காட்டல்''[102] என்ற ஒரு துறையையும் மேலும் சுவாமிநாதம் ''பாலனைப் பழித்தல்''[103] என்ற ஒரு துறையையும் மொழிகின்றன. தொல்காப்பியரின் 16 கூற்றுகளில் இந்நான்கு கிளவித் துறைகளே இடம்பெற்றுள்ளன. எனினும் பிற்றைய இலக்கணங்கள் தொல்காப்பியரின் பிற 12 துறைகளைக் கூறாது அதனோடு கூடிய தொடர்பு வாய்ந்த பல புதுத்துறைகளை மொழிகின்றன.

பிரிவு

பிரிவு என்னும் கூற்றுத்துறையில் தலைவிக்கென இரண்டு கூற்றுகளை 1.பிரியுங்காலை யெதிர்நின்று சாற்றிய மரபுடை யெதிரும் 2.பிறவும் வகைப் பட வந்த கிளவி எனத் தொல்காப்பியம் மொழிய தொல்காப்பியரின் கிழவனை மகடூஉப்புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதியும் என்ற துறையை முத்துவீரியம் மட்டும் ''பிரிவு ஆற்றாமையான் இரவுறு துயரத்திற்கு இரங்கி உரைத்தல்''[104] என மொழிகின்றது.

பாணன்

பாணர் பண்டைத் தமிழ்க்குடிகளுள் ஒருவர். ஆடல், பாடல், மத்தளங்கொட்டல் ஆகியவற்றில் வல்லவர். இவர்கள் தாங்கள் செய்யும் தொழிலுக்கு ஏற்பப் பல வகையினர் ஆவர். தொல்காப்பியத்தில் சுட்டப்படும் பாணர் இனத்தவர் இசைப்பாணராகிய யாழ்ப்பாணரே ஆவர். ''பண்ணுக்கு உரியவரானமையால், இவர்க்கு இப்பெயர் வழங்கியது. இவர் யாழ் வாசித்தல் முதலியவற்றால் தமிழ்த் தலைவரை மகிழ்வுறுத்துபவர்''[105] என்று பாணரைப் பற்றி மு.இராகவையங்கார் சுட்டுகின்றார்.

தொல்காப்பியத்தில் பாணர்

இத்தகைய சிறப்பிற்குரிய பாணரைப் பற்றித் தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் ஐந்து இடங்களில் சுட்டுகின்றார். ''கற்பில் கூற்றிற்குரிய பன்னிரு வகை மாந்தருள் முதலாமவராகவும் வாயில்களில் ஒருவராகவும் ஆற்றுப்படுத்தும் மாந்தர்களில் ஒருவராகவும்''[106], கற்பியலில் தோழி கூற்றில் இரண்டிட

த்திலும் கூத்தர், பாணர்க்குரிய கூற்றுகள் பற்றிச் சுட்டும் பொழுதும் பாணர் பற்றிய செய்தி சுட்டடப்பட்டுள்ளது.

பாணரின் கூற்றுகள்

பாணர்க்குரிய கூற்றுக்களாகத் தொல்காப்பியர் தனித்ததாக எதனையும் சுட்டடவில்லை. எனினும் கூத்தர், பாணர் என்ற இருவருக்கும் உரிய கடமைகளைச் சுட்டும் பொழுது “தலைவன், தலைவியைத் தொழிலீட்டலின் காரணமாகப் பிரிந்து சென்ற பொழுது இங்கு தலைவி, தலைவனைப் பிரிந்து அனுபவிக்கும் துன்பத்தைப் பற்றிப் பொருள்தேடச் சென்ற ஊரிலிருக்கும் தலைவனுக்கும் பின் அங்கு வினைமேற் சென்ற இடத்தில் உள்ள தலைவனின் நிலையையும், அவன் என்று வருவான், எப்பொழுது வருவான் என்ற நிலைமையினையும் தலைவியிடம் மீண்டு வந்து கூறுவதும் நாடகத் தொழிலில் வல்ல கூத்தருக்கும் பாடலில் வல்ல பாணர்க்கும் உரியன”[107] என்ற இரண்டு கூற்றுகளைப் பாணர்க்கு உரியனவாகக் கூறுகின்றார்.

மற்றை இலக்கணங்களில் பாணன்

தொல்காப்பியர் பாணர் பற்றிச் சுட்டிய செய்திகளைச் சுவாமிநாதம் மட்டும் மொழிகின்றது.”[108] மாறனகப்பொருள் மட்டும் “நெருக்கமான வாயில்கள் நால்வரில் ஒருவராக பாணனும்”[109] இடம்பெறுவதைக் கூடுதல் செய்தியாக மொழிகின்றது.

பாணர்க்குரிய கூற்றுகள்

தொல்காப்பியம் பாணர்க்கு இரண்டு கூற்றுகள் என மொழிந்ததை நம்பியகப்பொருள்,

> **“வாயில் வேண்டலும், வாயில்நேர் வித்தலும்,**
> **சேயிழை ஊடல் தீர்த்தலும், போயுழி**
> **அவள்நலம் தொலைவுகண்டு அழுங்கலும், அவன்வயின்**
> **செல்ல விரும்பலும், சென்றுஅவற்கு உணர்த்தலும்,**
> **சொல்லிய கூற்றுஎனச் சொல்லலும், கிழவோன்**
> **வரவு மீண்டுவந்து அரிவைக்கு உணர்த்தலும்,**
> **அணிநலம் பெற்றமை அறியான் போன்றுஅவள்**
> **பணிவொடு வினாதலும், பாணற்கு உரிய” (நம்.அக.95)**

ஒன்பது கூற்றுக்களாக மொழிகின்றது. இலக்கண விளக்கமும் இதையே உரைக்கின்றது. ''பாணர்க்குரிய செயல்கள் என்பதை பாணர்க்குரிய வாயில்கள்''[110] என மொழிகின்றது. மாறனகப்பொருள், சுவாமிநாதம் என்ற இரண்டு நூல்களும் உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளாகிய துறைகளில் ''தலைவி பாணன் முதல் பாங்கன் ஈறாக வந்த வாயிலோர் கூற்றுக்களை மறுத்துரைத்தல், பாணர் வாயிலாக வந்த திறத்தைத் தோழி பழித்தல் என்ற இரண்டு கிளவித் துறைகளும் முறையே தலைவி, தோழிக்கு உரியவை. பாணன் தோழியிடம் தன் வாழ்க்கையை வெறுத்துப் பணிவாகக் கூறுதல்''[111] என்னும் கூற்றை பாணனுக்கு உரியதாக உரைக்கின்றது.

தொல்காப்பியத்தில் கூத்தர்

ஆணினத்தவரான, ஆடும் தொழிலில் வல்லவரான கூத்தர் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியம், ''கற்பினில் கூற்றுக்குரியோர், வாயில்மாந்தர்கள் என இரு நிலைகளிலும் இடம்பெறும் மாந்தராகவும் தலைவன், தலைவியிடம் தனக்குரிய பத்துவகைக் கூற்றுக்களைச் சுட்டும் பொழுதும் தோழிகூற்றில் ஓரிடத்தில் ஆற்றுப்படுத்தலின் போது இடம்பெறும் மாந்தர்களில் ஒருவராகவும்''[112] குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியர் சுட்டும் கூத்தர்க்குரிய கூற்றுகள்

கூத்தர் கூற்றுகளைத் தொல்காப்பியர், ''கற்பியலில் கூத்தர்க்குரிய எட்டுக் கூற்றுகள் பாணர்க்கும் கூத்தருக்கும் உரிய கூற்றுகளென இரண்டு''[113] எனச் சேர்த்துப் பத்துக் கூற்றுகளை மொழிகின்றார்.

i) தலைவன், தலைவி என்னும் இருவர் மேற்கொள்ளும் களவு வாழ்க்கையில் இவர்களுக்கு முன்பு, முன்னோர் இன்னின்ன சிறந்த முறைகளில் இன்பம் துய்ந்தனர் என்பதை எடுத்துக் கூறும்போதும்,

ii) எனினும் அத்தகைய முன்னோர்களைக் காட்டிலும் நீங்கள் துய்க்கும் இவ்வின்பமுறை அவர்களினும் சிறந்தமுறை என்று புகழும் போதும்,

iii) தலைவன், தலைவியரிடையே ஏற்பட்ட பிணக்கத்தினால் உண்டாகிய ஊடலைப் போக்க இவ்வாறு கோபம் கொள்ளுதல் குற்றம் என்றும், அ

ன்பு உடையவர்கள் இவ்வாறு செய்ய முற்படுவது இல்லை என்றும், அறிவுரை கூறிப் பல வழிகளிலும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட ஊடலைத் தணிக்க முய லும்போதும்,

iv) நிலையற்ற வாழ்க்கையில் செய்யும் தவறை உணர்ந்து, ஊடலை க் கைவிட்டு இருவரும் சேர்ந்து வாழ்ந்து குழந்தைப்பேற்றைப் பெறுதல் போன் ற இல்வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் செயல்களை எடுத்துக் கூறும்போதும்,

v) கற்றறிந்த அறிவின்படி நடந்துகொள்ளுங்கள், பரத்தமை தீது, ஊ டல் தீது இருவரும் சேர்ந்து வாழ்வதே நன்று என அதற்கான வழிமுறைகளைக் கூறும்பொழுதும் (கற்றதன் பயன் அதற்குத்தக நிற்றல் என அவர்தம் அறிவினை மெய்ப்பொருள்களின் நிலைபெற உரைத்தலும்)

vi) தலைவன், தலைவியருள் ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்தபோது அதற்கு ஒரு காரணத்தை எடுத்துக்காட்டி நீ கோபம் கொண்டால், ஊடல் ஏற் படும் என்றும், அன்பு காட்டினால் அது பல மடங்காகப் பெருகும் என்றும் ஒ ரு காரணத்தை (முன்பு நிகழ்ந்ததை) எடுத்துக்கூறி அவ்வாறு தீமை செய்யாதீர் என அறிவுறுத்தும் போதும்,

vii) தலைவியைத் துறந்து பரத்தையரிடம் இன்பந்துய்த்து இனிய இ ல்லறத்தை, இழந்தவர்களையும், ஊடலால் வாழ்வை இழந்தோரையும் எடுத்து க்காட்டி அவர்கள் போலல்லாது சிறந்திருக்க வேண்டுமிடத்தும்,

viii) தலைவியின் மார்பு, தோள், முகத்திலும் தொய்யில் எழுதி மகி ழ்வு கொள்ளும் முறையைத் தலைவனிடம் உரைக்கும் பொழுதும்

viii) நிலம் பெயர்ந்து உரைத்தல்,

x) அவன் நிலை உரைத்தல்

எனக் கூத்தர்க்குக் கூற்று நடைபெறும் பத்து இடங்களைத் தொல்காப்பியர் வி ளக்குகின்றார்.

கூற்றுக்குரிய மாந்தராகக் கூத்தர்

கூற்று மாந்தர்களில் ஒருவராவும், “கூத்தர் பற்றிப் பதிவு செய்துள்ள இச்செய்தியைப் பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள், மாறனகப்பெ

ாருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் மொழிகின்ற ன.''[114] மேலும் கூற்றுக்குரிய மாந்தர்கள் ஒவ்வொரு நூலுக்கும் வேறுபடுதல் பே ால அப்பலவகை மாந்தர்களுள் கூத்தருக்கு உண்டான இடமும் ஒவ்வொரு நூலிலும் அந்நூலுக்கு ஏற்றாற்போல மாற்றமடைந்துள்ளன.

பிற்றைய இலக்கணங்களில் கூத்தர்

பிற்றைய இலக்கணங்களில் அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொ ருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் கூத்தரை, ''ஊ டல் தீர்க்கும் வாயில்களில் ஒருவராகவும் கற்பினில் கூற்றுக்குரிய மாந்தர்களில் ஒருவராகவும் இடம்பெறுவதை மொழிகின்றன.''[115] மேலும் நம்பியகப்பொரு ள் கூத்தர்க்குரிய அறுவகைக் கூற்றுகளை,

> ***''செல்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலும்***
> ***கலன்அணிபு உணர்த்தலும் காமநுகர்பு உணர்த்தலும்***
> ***புலவிமுதிர் காலைப் புலங்கொள ஏதுவில்***
> ***தேற்றலும் சேய்மை செப்பலும் பாசறை***
> ***மேற்சென்று உரைத்தலும் மீண்டுவரவு உணர்த்தலும்***
> ***கூற்றரு மரபின் கூத்தர்க்கு உரிய''*** ***(நம்.அக.97)***

என மொழிகின்றது. ''நம்பியகப்பொருள் சுட்டிய கூத்தர்க்குரிய இக்கூற்றுக்கனை ள உள்ளது உள்ளவாறே இலக்கண விளக்கம் மொழிகின்றது''[116] மாறனகப்பொ ருள், சுவாமிநாதம் என்னும் இரண்டு நூல்களில் கூத்தர் பற்றிய கூற்றுகள் இட ம்பெறவில்லை.

விறலி

இப்பெண்கள் விறல்பட (திறம்பட) ஆடுபவள் என்ற குறிப்பாலேயே ய விறலியர் என அழைக்கப்பட்டனர். பாண்மகனின் இசைப்பாடலுக்குச் சிறி தளவும் குறைவு ஏற்படாது தான் மனதில் கொண்ட கருத்தைத் தெளிவாக அக ம், புறம் என்ற இரு நிலைகளிலும் ஆடலின் மூலம் நடித்துக்காட்டும் இச்சிறுகு டிப்பெண்கள் ஒரு ஆடல் கலைஞர்கள் ஆவர். சில சூழல்களில் பாடல்கள் பா டவும் செய்வர். இவர்கள் பாணர்களுடன் சென்று ஆடிப் பிழைப்பை நடத்தும் தொழில் செய்தாலும் பாணர்களுக்கு மனைவி என்ற நிலையில் இல்லாதோர் ஆவர். பாடும் பாணர்களோடு ஆடும் ஒரு பெண் கலைஞர்கள் இவர்கள்.

தொல்காப்பியத்தில் விறலி

தொல்காப்பியத்தில் விறலி ''கூற்றுக்குரிய மாந்தர்களில் ஒருவராகக் குறிக்கப்பட்டுள்ள போதும்,''[117] இவருக்கான தனிக்கூற்றுக்களைத் தொல்காப்பியர் ஓரிடத்திலும் மொழியவில்லை. ''ஆற்றுப்படுத்தல் என்ற துறையில் இடம்பெறும் நால்வரில் ஒருவராகவும் ஊடலைத் தீர்க்கும் மாந்தர்களில் பத்தாம் மாந்தராகவும் கற்பினில் கூற்றுக்குரியோரில் மூன்றாம் மாந்தராகவும் தோழி கூற்றில் ஓரிடத்திலும் என''[118] விறலி நான்கிடங்களில் இடம்பெறுகின்றார்.

நம்பியகப்பொருளில் விறலி

நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்னும் நான்கு நூல்களும் ''கற்பினில் கூற்றுக்குரிய மாந்தர்களில் ஒருவராக விறலியைச்''[119] சுட்டுகின்றன. மேலும் விறலிக்குரிய கூற்றுக்களாக ஒரு நான்கை நம்பியகப்பொருள்

''செலவில் தேற்றலும், புலவியில் தணித்தலும்
வாயில் வேண்டலும் வாயில்நேர் வித்தலும்
தெரியழை விறலிக்கு உரிய ஆகும்'' **(நம்.அக.96)**

என கிளவித் தொகைகளில் மொழிகின்றது. இதனையே ''இலக்கண விளக்கமும்''[120] சுட்டுகின்றது.

இந்நான்கு கிளவித் தொகைகளில் இறுதி இரண்டான வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல் போன்ற இரண்டு கூற்றுகளிலும் வாயிலாக விறலி தலைவன், தலைவியிடம் செயல்படுவதாகச் சுட்டப்பட்டாலும் வாயில்களையும் மாந்தர்கள் பதினைவரில் விறலியைப் பற்றி எங்கும் நம்பியகப்பொருள் கூறாதது வியப்பாகவே உள்ளது.

ஊடல் தணிக்கும் வாயில்கள் பதினைவரில் நம்பியகப்பொருள் இரண்டாம் மாந்தராகப் பாடினி என்பவரைச் சுட்டுகின்றது. இப்பாடினியை விறலியராகக் கொள்ளலாம் என்று கருதினாலும் தொல்காப்பியர் வாயில்கள் பன்னிருவரில் ஆறாம் மாந்தராகப் பாட்டி என்பதனை மொழிகின்றார். இதற்கு விளக்கம் கூற வந்த இளம்பூரணர் ''பாட்டி என்பது பாடினி''[121] என்றவாறு விளக்கம் தருகின்றார். இப்பாடினியே விறலி எனக்கொள்ளலாம் என்றாலும், மற்ற ப

தினோர் வாயில்களில் விறலி என்ற மாந்தரையும் அவர் சுட்டியிருக்கையில் பாட்டியாகிய பாடினியும், விறலி என்ற பெண்மாந்தரும் ஒருவரல்லர். இருவரும் தனித்தனிப் பெண்களே ஆவர். ஆதலால் விறலி வாயில் மாந்தர்களில் நம்பியகப்பொருளில் ஒருவராகச் சுட்டப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

மாறனகப்பொருளில் விறலி

மாறனகப்பொருள் விறலி பற்றிய மற்றொரு கூடுதல் செய்தியாக ''தலைவன், தலைவியிடம் இருவகை ஒழுக்கங்களிலும் கூற்று நிகழ்த்தும் எழுவரில் நான்காம் மாந்தராக விறலியைச்''[122] சுட்டுகின்றது. சுவாமிநாதம் ''பண் விறலி''[123] என விறலியைச் சுட்டுகின்றது. இதற்குப் பாடலில் வல்லவள் என்பது பொருளாகும்.

தொல்காப்பியத்தில் பரத்தையர்

தொல்காப்பியத்தில் பரத்தையர் பற்றிய சொல்லாட்சி பன்னிரெண்டு இடங்களில் சுட்டப்பட்டுள்ளன. அவை பரத்தையர் என ஆறிடங்களிலும் மாயப்பரத்தை என ஓரிடத்திலும், காமக்கிழத்தி என மூன்றிடங்களிலும், எங்கையர், காதல் எங்கையர் என இரண்டிடங்களிலும் வந்துள்ளன. தொல்காப்பியத்தில் ''பரத்தையர் பற்றிய செய்திகள் எட்டு நூற்பாக்களில்''[124] சுட்டப்பட்டுள்ளன.

தலைவன், தலைவி கூற்றில் பரத்தையர்

கற்பு வாழ்வில் தலைவன் பிரிந்தபோது ஒரே இல்லில் இருந்து வாழ்க்கை நடத்தும் ''காமக்கிழத்தியும் மனைவியும் பிரிவில் தமக்குப் பாதுகாவலாகச் சொன்ன சொல்லிற்குத் தலைவன் மறுமொழி கூறும் போதும் அவனுக்குக் கூற்றுகள் நிகழும் என்பதில் காமக்கிழத்தி பாதுகாவலாகச் சொன்னது''[125] எனக் கூறுவதில் காமக்கிழத்தியின் கூற்று உள்ளது. ஆனால் என்ன கூறினாள் என்பது சுட்டப்படவில்லை.

காமக்கிழத்தியாரின் கூற்றுக்கள்

தலைவனுக்கு உரிமையுடைய தலைவியருக்குப்பின் தலைவனால் முறையாக வரைந்து கொள்ளப்பட்ட பரத்தையரே, (இரண்டாம் மனைவியரே) காமக்கிழத்தி ஆவார். இவள் தலைவியுடனேயே ஒரே இல்லில் வாழும் தகுதி

படைத்தவள். காமத்தின் காரணமாகத் தலைவிக்குப் பின் வரையப்படுபவளே இக்காமக்கிழத்தியர் ஆவார். இக்காமக்கிழத்தியர்க்கும் உரிய கூற்றுக்களைத் தொல்காப்பியர் தலைவியர்க்கு நிகராகப் படைத்துள்ளார். பரத்தையர் மூவகையினர் எனினும் காமக்கிழத்தியர் கூற்றுக்குரியோராக படைக்கப்படாதவர் எனினும், பரத்தையர் கூற்றுக்குரியோரில் ஒருவராகப் படைக்கப்பட்டிருப்பினும் இங்கு அதற்கு விதிவிலக்காகக் காமக்கிழத்தியரின் கூற்றே தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. காமக்கிழத்தியர்க்கென உரிய எட்டு கூற்றுகளைத் தொல் காப்பியம்,

> **“புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்**
> **இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்**
> **பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்**
> **மறையின் வந்த மனையோள் செய்வினை**
> **பொறை இன்று பெருகிய பருவரற்கண்ணும்**
> **காதல் சோர்வின் கடப்பாட்டு ஆண்மையின்**
> **தாய்போல் தழீஇக் கழறி அம் மனைவியைக்**
> **காய்வு இன்று அவன்வயின் பொருத்தற்கண்ணும்**
> **இன் நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து**
> **பின்னர் வந்த வாயிற் கண்ணும்**
> **மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர்**
> **மிகை எனக் குறித்த கொள்கைக் கண்ணும்**
> **எண்ணிய பண்ணை என்று இவற்றொடு பிறவும்**
> **கண்ணிய காமக்கிழத்தியர் மேன” (தொல்.பொருள்.கற்.10)**

என்றவாறு சுட்டுகின்றது. இவ்வெட்டுக் கூற்றுகளோடு முன்னர் தலைவன் கூற்றில் காமக்கிழத்தியர் மறுமொழி கூறியதாகக் கூறப்பட்டுள்ள கூற்று என ஆக மொத்தம் ஒன்பது கூற்றுகள் காமக்கிழத்தியர்க்கென சுட்டப்பட்டுள்ளன.

பிற்றைய இலக்கணங்களில் பரத்தை

இறையனார் அகப்பொருள் ஐந்து நூற்பாக்களில் பரத்தையர் பற்றிச் சுட்டுகின்றது. எனினும் பரத்தையர் கூற்றாக எதனையும் இந்நூல் மொழியவில்லை. இந்நூலில் கற்புப்பிரிவில் ஆயிடைப்பிரிவு, சேயிடைப்பிரிவு என பிரிவை

ப் பற்றி இரண்டு நூற்பாக்கள் உள்ளன. எனினும் தொல்காப்பியம் சுட்டும் பரத்தையர் பற்றிய செய்திகள் இல்லை. இந்நூல் சுட்டும் பிரிவுகளைப் பற்றி, இரா.இளங்குமரன் பிரிவுகளைச் சேயிடைப்பிரிவு, ஆயிடைப்பிரிவு என இரண்டாக்கிக் கூறுதல் தனிப்பகுப்பு முறையாகும். சேயிடைப்பிரிவு, அயலிடப்பிரிவு, ஆயிடைப்பிரிவு அவ்விடத்துப்பிரிவு. ஓதல், பொருள், தூது, துணை, பகை ஆயபிரிவுகள் சேயிடைப்பிரிவு, பரத்தையிற் பிரிவு ஊரும் சேரியும் பிரியும் பிரிவாகலின் ஆயிடைப்பிரிவு.

இளங்குமரனின் கருத்துப்படி ஆயிடைப்பிரிவு என்பதே பரத்தையிற் பிரிவு என்பது தெளிவாகின்றது.

"வாயின் மறுத்தலும் வாயில் கூறலும்
தோழி மாற்றலும் புலவி தோற்றலும்
கிழவன் புலத்தலுங் கிழவி புலத்தலும்
விழைகுநன் விழையா னிவனென விளம்பலும்
தாய்கண் டுரைத்தலுந் தாங்கிய காதலின்
ஆயின பிறவு மாயடைப் பிரிவே" (தமி.நெறி.விள.25)

எனினும் ஆயிடைப் பிரிவிற்கான இந்நூற்பாவில் பரத்தையிற் பிரிவிற்கான பரத்தையுடன் இருத்தலுக்கான செய்திகள் எதுவும் இல்லை. பரத்தையிற் பிரிந்து மீண்டபின் தலைவியிடம் தலைவன் வேண்டும் செயல்கள் வாயின் மறுத்தல் போன்ற தொடர் நிகழ்வுகளே சுட்டடப்பட்டுள்ளன. "ஆயிடைப் பிரிவு வாயில் மறுத்தல் முதல் செவிலி கூற்று ஈறாக எட்டும் பிறவுமாகிய துறைகளைக் கொண்டது என்று கூறும் இந்நூல் இவை பரத்தையர் பிரிவாம், பிறவும் என்றதனால் பரத்தையர் கூற்றும் பூப்புணர்த்துதலும் உள்ளிட்டனவெல்லாம் கொள்க"[126] என்று கூறுவதோடு அமைகிறது.

களவியற்காரிகை

களவிற்காரிகையின் கற்புப் பகுதியில் "குவிமுலை யாயப் பரத்தையிற் போதல்"[127] என்ற வரி பரத்தையிற் பிரிவைப் பற்றிச் சுட்டுகின்றது. பரத்தையர் கூற்றைப் பற்றிய பிற செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.

கூற்றுக்குரியோரில் பரத்தையும், பரத்தையின் கூற்றுக்களும்

கற்பில் கூற்றுக்குரிய மாந்தர்களில் ஒரு மாந்தராக ''பரத்தையை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஐந்து நூல்களும் சுட்டுகின்றன. மேலும் பரத்தையர் மூவகையாக அழைக்கப்படுகின்ற பொழுது அவர்களுக்குரிய கூற்றையும் பரத்தையர்க்குரிய ஆறு கிளவித் தொகைகளாகிய கூற்றுகளையும் காமக்கிழத்திற்கு உரிய நான்கு கூற்றுக்களென மொத்தம் பத்துக் கூற்றுகளை நம்பியகப்பொருள்''[128] மொழிகின்றது.

அகத்திணையியல் நம்பியகப்பொருள் பொதுநிலையில் பரத்தையர்க்கு உரிய செயல்களாக மூன்றைச் சுட்டும் பொழுது அதில் முதலிரண்டு வகையும் பரத்தையரின் கூற்றுகளாக,

i) ''தலைவன் தன்னை ஒதுக்கி தலைவியிடம் செல்ல நினைக்கின்றானே, இவன் நல்லவனில்லை எனத் தலைவனை இகழ்தல், தலைவன் இவ்வாறு தன்னைவிட்டுச் செல்வதற்குத் தலைவியே காரணம் என அவளைப் பழித்துக் கூறுதல்,''[129] ii) சரி தலைவன் போனால் போகட்டும். அவன் இவ்வளவு நாள் தலைவியை விட்டுத் தன்னிடம் தங்கியிருந்ததற்குத் தன் அழகே எனத் தன்னையும், தன் அழகையும் எண்ணிப் புகழ்தலும் பரத்தையர்க்கு உண்டு''[130] என்று சுட்டுகின்றார்.

மேலும் மற்றொரு நூற்பாவில் பரத்தையர்க்குரிய இரண்டு கிளவித் தொகைகளையும் iii) ''காதல் பரத்தையர் மட்டும் எப்போதும் எப்படித் தன் அன்பினால் பண்பினால் தலைவனைக் கூடியே இருக்கின்றனர் என எண்ணிப் பரத்தையர் அவர்களைப் புகழ்தலும்,''[131] iv) தன்னால் தலைவனைத் தன்னிடம் தக்க வைத்துக்கொள்ள இயலவில்லையே எனத் தனக்குத் தானே நொந்து கூறிக்கொள்ளுதலும், மேலும் கூற்றுக்களும் உணர்த்த உணரும் ஊடற்கு உரிய கிளவிகளில் v) ''தலைவியின் நிலையைச் செவ்வணி மூலம் உணர்த்தும் சேடியைப் பரத்தையர் பழித்தல்''[132] என்ற ஒரு கூற்றுமென ஐந்து கூற்றுக்கள் பரத்தைக்குரியதாக நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் என்னும் இரண்டு நூல்களும் சுட்டுகின்றன.

காமக்கிழத்தியும், அவர்க்குரிய கூற்றுகளும்

காமம் காரணமாகத் தலைவனால் தலைவிக்குப்பின் திருமணம் செய்து கொள்ளப்படுபவளே காமக்கிழத்தி. இவள் சேரிப்பரத்தையர் போலப் பலருக்கும் உரிமையாகாமல் தலைவன் ஒருவனுக்கே உரிமை பூண்டு வரும் குலப் பரத்தையரின் மகளே ஆவார். மூவகைப் பரத்தையருள் காமக்கிழத்தியர் பற்றி நம்பியகப்பொருள் நான்கு நூற்பாக்களில் சுட்டுகின்றது. ஊடல் தணிவிக்கும் வாயில் மாந்தர்களில் ஒரு மாந்தராகக் காமக்கிழத்தியை நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற மூன்று நூல்களும் சுட்டுகின்றன. கூற்றுக்குரிய மாந்தருள் ஒருவராகக் காமக்கிழத்தியை நம்பியகப்பொருள் சுட்டவில்லை. ஆனால் காமக்கிழத்திக்கு உரிய கிளவித்தொகைகளான கூற்றுக்கள் மூன்றை i) "நல்லகுடியில் பிறந்த தலைவன் தன்னை வரைந்து கொண்டாலும், இப்போது தன்னை மறந்து தலைவியிடம் செல்வதால் அவனை குற்றம் உண்டாகும்படி கூற்று நிகழ்த்துதலும்,

ii) தலைவனின் மனைவியாகிய இற்கிழத்தியைப் பழித்துக் கூறுதல்,

iii) குறைவில்லாத ஊடலில் தலைவனை இடித்துரைத்துக் கூற்று நிகழ்த்துதல்"[133] என காமக்கிழத்தியருக்கான நான்கு செயல்களில் முதல் மூன்றை காமக்கிழத்தியருக்கான மூன்று கூற்றுக்களில் முதலிரண்டு கூற்று பரத்தையருக்கும் உரியதென சுட்டப்பட்டுள்ள முதலிரண்டு கூற்றுக்களே ஆகும். மூன்றாவது கூற்று வாயிலாகத் தலைவனிடம் செல்லும்போது அவனைத் தலைவியின் பொருட்டு இடித்துரைக்கும் கூற்று ஆகும். நம்பியகப்பொருளும், இலக்கண விளக்கமும் உரைக்கின்றன.

பரத்தையரை கூற்றுக்குரியோரில் ஒருவராகச் சுட்டியுள்ள நம்பியகப்பொருள் பரத்தையரை பரத்தையர், காமக்கிழத்தி, சேரிப்பரத்தை என மூவகையாக அழைத்தபோதும் பரத்தையர்க்கென ஐந்து கூற்றையும், காமக்கிழத்தியருக்கான மூன்று கூற்றையும் சேரிப்பரத்தையர்க்கென மூன்று கூற்றையும் i) ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரை நாடித் தன் வாழ்நாளை கழிக்கும் சேரிப்பரத்தையர், ஒருவனுடையே வாழும் காதல் பரத்தையரைப் புகழுதல் என்பதும், ii) தம்மை தனக்குத்தானே இகழ்ந்து கொள்ளுதல் என்பதும் பரத்தையர்க்கான இ

ரண்டு கூற்றுக்களாகும். பின் உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகளின் வகைகள் பதினொன்றில் ஏழாம் வகையான

iii) ''செவ்வணி அணிந்து வந்தவளைக் கண்ட பரத்தையர் பழித்துப் பேசுதல் என்பதனோடு சேர்த்து மொத்தம் பன்னிரு வகையான கூற்றைப் பரத்தையருக்கென பொதுநிலையில் வைத்துச் சுட்டியுள்ளது.

காமக்கிழத்தியரின் கூற்றுக்கள்

நம்பியகப்பொருளைப் போலே காமக்கிழத்தியரைப் பற்றிப் பல்வேறு செய்திகளை மாறனகப்பொருளும் (68,70,73,111,112,113,114,231) ஆகிய எண் கொண்ட எட்டு நூற்பாக்களில் சுட்டுகின்றது. கற்பினுள் நிகழும் தலைவிக்குரிய பண்புகளுள் காமக்கிழத்தியர்க்கென உரிய ஒரு கூற்றை

i)''தன்னைப் பாதுகாத்தலுக்கு உரிய தலைவன், தலைவி சேடி ஒருத்தியைச் செவ்வணி அணிவித்துத் தன்பால் செலுத்திய செயலை மனங்கொண்டு அவளது இல்லத்தை நோக்கி எழும்போது, அதுகண்டு பொறாது காமக்கிழத்தி தலைவனை இடித்துரைத்தலும்''[134] உண்டு என்பதைச் சுட்டுகின்றாள். மேலும் காமக்கிழத்தியர்க்கென உரிய பண்புகளான

ii) குற்றமற்ற குடிப்பிறப்புடைய மகளிரைப் பழித்துப் பேசுதலும்,

''iii) தலைவனொடு பொருந்திய இல்லறத் தலைவியைத் தாழ்த்திப் பேசுதலும், iv) தம்மொடு கலவி கருதி வந்த தலைவனைக் குறைகூறுதலும், v) தலைவியைப் போலத் தாமும் ஊடலும், ஊடல் உணர்த்தலும்'' நான்கும் கூற்றுகளாக இடம்பெறுகின்றன.

நம்பியகப்பொருள் சுட்டிய பரத்தை பற்றிய நிகழ்வுகளையே மாறனகப்பொருளும் சுட்டுகின்றது. இலக்கண விளக்கம் பரத்தை பற்றிய செய்திகளை இருபத்தி நான்கு நூற்பாக்களில் சுட்டுகின்றது. முத்துவீரியத்தில் மூன்று இடங்களில் பரத்தையைப் பற்றியச் செய்திகள் வருகின்றன. எனினும் இவை பரத்தையர் கூற்றாகச் சுட்டப்பெறவில்லை. முன்னைய இலக்கணங்களான நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் போல பல செய்திகள் பரத்தையரைப் பற்றி சுவாமிநாதத்தில் சுட்டப்பட்டு இருந்தாலும் ''தலைவி செவ்வணி அணிந்து அனுப்

பிய சேடியைப் பழித்தலும்''[135] என்ற ஒரு கூற்றே பரத்தையர்க்கான கூற்றாகச் சுட்டப்பட்டுள்ளது.

அறிவர்

அறிவர் என்பவர் பார்ப்பனரைப் போல முக்காலமும் உணர்ந்தவராவார். இவர் தலைவன், தலைவியின் கற்பு வாழ்வில் மட்டுமே இடம்பெறும் ஆண் மாந்தராவார். முக்காலத்தை அறியும் ஆற்றல் உடைய இப்பெரியோரே அறிவர். தலைவனுக்கும், தலைவிக்கும் உடைய இல்லறமாகிய கற்பு வாழ்வில் இருவர் தம் இயல்புகளும் நடைமுறைக்கு மாறாக இருக்கும் பொழுது அவர்களுக்கு உபதேசமாகிய அறிவுரை காட்டி நல்வழிப்படுத்தும் ஒருவராவார். இவரைப் பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் ஐந்து இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

அறிவர் சுட்டப்படும் இடங்கள்

தொல்காப்பியத்தில் அறிவர் பற்றி புறத்திணையியலில் ஓரிடத்திலும் (தொல்.பொரு.புற.16), கற்பியலில் (கற்.13,14,52) மூன்று இடங்களிலும், செய்யுளியலில் (182, 189) இரண்டு நூற்பாக்களிலும்
என ஐந்து இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

கற்பியலில் அறிவர்

தொல்காப்பியம் அறிவர் பற்றி,

''சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய''

(தொல்.பொருள்.கற்.13)

என்று கூறிய நூற்பாவில் கூறியதை நோக்கும்பொழுது சொல்லப்பட்ட கூற்று அறிவர்க்கும் உரிய என்பதாகும். இந்நூற்பாவின் கருத்தின்படி இதற்குமுன் சுட்டிய ''இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலத்துக்கும் பொருந்தும்படி தலைவன், தலைவியின் குடும்ப இயல்புகளுக்கு ஏற்ற நல்ல செயல்களைக் கையாளும்படிக் கூறுதலும், நல்லவையற்ற தீச்செயலைச் செய்யாது நீக்கும்படியும் தலைவன், தலைவிக்குக் கற்பித்தல் செவிலிக்கு உரிய கூற்றுக்களாகும்.''[136] இத்தகைய செவிலிக்குரிய நான்கு கூற்றுக்களையே அறிவர்க்கும் உரியனவாகச் சுட்டுகின்றார் எனக் கொள்ளலாம். இதற்குப்பின் உள்ள நூற்பாவில் தொடர்ச்சியாக மேலும் அறிவர்க்குரிய ஒரு கூற்றைத் தொல்காப்பியர்,

"இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்
கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்"

(தொல்.பொருள்.கற்.14)

என்றவாறு சுட்டுகின்றார். ஆக மொத்தம் அறிவர்க்குரிய கூற்றுக்கள் ஐந்தாகும்

.

செய்யுளியலில் அறிவர்

தொல்காப்பியர் கற்பில் கூற்றுக்குரியோரில் ஐந்தாம் மாந்தராக அறி வரைச் சுட்டுகின்றார். தலைவன், தலைவி கூற்றை பார்ப்பார், அறிவர் என்ற கூ ற்றுக்குரிய பன்னிருவரும் கேட்கலாம் என்கிறார்.

பிற்றைய இலக்கணங்களில் அறிவர்

நம்பியகப்பொருள் "ஊடல் தீர்க்கும் வாயில்கள் பதினைவரில் ஒரு வராக அறிவரைச் சுட்டுகின்றது."[137] மேலும் அறிவரை நம்பியகப்பொருள், மா றனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் "க ற்பினில் கூற்றுக்குரிய பதின்மூன்று மாந்தர்களில் ஒருவராகச் சுட்டுகின்றன. இ ன்னவர் அறிவர் என்பதைப் பற்றி மாறனகப்பொருள்,

"இருவர்மன் உயிர்க்கும் ஈறுஇல்பே ரின்பத்து
அருள்பெருங் குரவர் அறிவர்என் பவரே"

(மாற.அக.122)

என்றவாறு அறிமுகம் செய்கின்றது.

கண்டோர்

தொல்காப்பியத்தில் கண்டோர் பற்றிய செய்திகளை ஏழு நூற்பாக்க ளில் ஆசிரியர் சுட்டுகின்றார். பின்னெழுந்த இலக்கணங்களுள் தமிழ்நெறி விள க்கம், களவியற்காரிகை, நம்பியகப்பொருள், மாறனகப் பொருள், இலக்கண வி ளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஏழு நூல்களும் கண்டோர் பற்றிய செய்தியை விளம்புகின்றன. தமிழ்நெறி விளக்கத்தில் உடன் செலவுத்துறையில் "கண்டோர் கூற்று, கண்டோர் தெளித்தல்"[138] என்னும் இரண்டு துறைகளும் க ண்டோர் நிகழ்த்திய கூற்றுக்கள். எனினும், அவை என்னென்னவென்று இந்நூ ல் சுட்டவில்லை.

களவியற்காரிகை

உடன்நிலைச் செலவுத்துறையில் கண்டோர் பற்றிய செய்திகளை ஏழு இடங்களில் விருந்து விலக்கு, பதியின் அளவுரைத்தல், செவிலி சுரத்து வினாதல், ஐயுற்றுக் கூறுதல், ஐயங்கிளத்தல், சேர்விடம் உரைத்தல், துடரகத்தணித்தல், வரவு முந்துறுத்தல் என மொழிகின்றது.

கண்டோர் கூற்றுகள்

தலைவன், தலைவியரிடையே நிகழும் ஊடலைத் தீர்த்து வைக்கும் வாயிலாகச் செயல்புரியும் இவர்களைத் தொல்காப்பியர் கற்புக் காலத்தில் கூற்று நிகழ்த்துபவராகச் சுட்டுகின்றார். எனினும் அகத்திணையியலில் இவர்களுக்குரிய கூற்றுக்களை நோக்கும்பொழுது இவர்கள் தலைவன், தலைவியின் களவு ஒழுக்கத்தில் கூற்று நிகழ்த்துவதாகவே தென்படுகின்றது. அக்கூற்றுகள்,

i) உடன்போக்கு செல்லும்மாலைப் (பொழுது) ஆறு (வழியின்) தன்மை இவற்றை எடுத்துக் கூறுவர். ii) தலைவன், தலைவி செல்ல வேண்டிய ஊரின் அணிமையையும், செல்லும் தேயத்தின் சேய்மையையும் சுட்டிக்காட்டி கூற்று நிகழ்த்துவர். iii) தலைவன், தலைவியரின் நிலையை இடைச்சுரத்தில் கண்டு மனன் அழிந்து கூற்று நிகழ்த்துவர். vi) இடைச்சுரத்தில் தேடிச்செல்லும் தாயின் நிலை கண்டு அவளைத் தேடிப் பின் சேராமல் தடுத்துக் கூற்று நிகழ்த்துவர். v) பின் தாயைத் தலைவன், தலைவியைத் தேடிச்செல்லுமாறு கூற்று நிகழ்த்தி விடுப்பர். vi) சேய் நிலைக்கு அகன்றோர் செலவினைக் கண்டு அவர்களிடத்தில் கூற்று நிகழ்த்துவர். vii) சேய் நிலைக்கு அகன்று சென்று மீண்டவரிடத்தும் கூற்று நிகழ்த்துவர் என்பதாகும்.

பிற்றைய இலக்கணங்களில் கண்டோர்

கண்டோரை "நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்ற மூன்று நூல்களும் ஊடல்தணிவிக்கும் வாயில்களில் ஒருவராகவும், கற்பில் கூற்றுக்குரிய மாந்தர்களில் ஒருவராகவும்"[139] சுட்டுகின்றது. கண்டோர்க்கு உரிய செயல்களான, "தீமையைத் தருகின்ற பெரும் ஊடலைத் தீர்த்து வைத்தல், பிரிந்து சென்ற தலைவனின் வரவினைத் தலைவிக்கு உரைத்தல்" என்ற இரண்டு கிளவித்துறைகளும் கண்டோர்க்கு உரிய கூற்றுத் துறைகள் ஆகும்.

பின் இக்கண்டோர் கூற்று நிகழ்த்துவதற்குரிய ஒரு மரபையும், யார், யாரோடு இவர் கூற்று நிகழ்த்துவர் என்பதனையும் நம்பியகப்பொருள்,

''தாயர் பாங்கியர் தலைவன் தலைவியோடு
ஏயும் என்ப கண்டோர் கூற்றே'' **(நம்.அக.221)**

என்றவாறு சுட்டுகின்றது. மேலும் கண்டோர் இரக்கம் பற்றிய மற்றொரு செய்தியையும் நம்பியகப்பொருள், ''தலைமகள் ஆயத்தாரும், நற்றாயும் தலைவி உடன்போக்கில் எத்தகைய துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு கொடுமை நிறைந்த பாலை வழியில் நடந்து சென்றாளோ எனக்கூறி வருந்துதலைக் கண்டு தாமும் வருந்துவது கண்டோர்க்கு உரிய இரக்கம் என்னும் பண்பாகும்''[140] என்றவாறு சுட்டுகின்றது. எனவே கண்டோர் கூற்றாக நம்பியகப்பொருள் மொழிவது இவ்விரண்டு கூற்றுக்களே ஆகும்.

மாறனகப்பொருளில்

உடன்போக்கின் விரிகளான துறைகளில் ''சுரத்திடை அவ்விருவரையும் கண்டோர் இவர் தேவரோ? மானுடரோ? என்று ஐயுறுதல், பொழுது போயிற்று; இனி இவ்வழி போதற்கு உரியது அன்று என்று கண்டோர் கூறி அவர்கள் மேலே செல்லுதலை அன்புடன் தடுத்து விலக்குதல், ஊர் அருகில் உள்ளது என்பதனை அவர்களுக்குக் கூறுதல்''[141] என்ற மூன்றும்
கண்டோருக்குரிய கூற்றுகளாகும்.

இலக்கண விளக்கம்

இந்நூல் கண்டோர்க்குரிய கூற்றுகளாக ஐந்து கிளவித்துறைகளைச் சுட்டினாலும் அது தொல்காப்பியக் கூற்றுத் துறைகளே ஆகும். (இலக்.வி.536)

முத்துவீரியத்தில் கண்டோர்

முத்துவீரியத்தில் கண்டோர் பற்றி உடன்போக்கு விரி, பரத்தையிற் பிரிவு என்னும் இரண்டு நூற்பாக்களில் கண்டோர் பற்றிய செய்தி சுட்டடப்பட்டுள்ளது. களவொழுக்கவியலில் உடன்போக்கு விரியின் ஐம்பத்தாறு வகைகளில், ''1. கண்டவர் விலக்கல், 2. கண்டவர் மகிழ்தல், 3.நெறியிடைக்கண்டவர் செறிவெடுத்துரைத்தல், 4.எழில் நகரணிமை சுட்டல், 5. வேட்ட மாதரைக் கேட்டல், 6. விரதியரை வினவல், 7. வேதியரை வினவல், 8. புணர்ந்துடன் வருடே

வாரை வினவல், 9. இயைபெடுத்துரைத்தல், 10.மீளவுரைத்தல், 11. உலகியல்பு உரைத்தல், 12. அழுங்கு தாய்க்கு உரைத்தல்''[142] என்னும் பன்னிரண்டு வகைகள் கண்டோரின் கூற்றுப் பற்றிய கிளவித் துறைகளாகும். மேலும் பரத்தையிற் பிரிவில் ''கண்டவர் கூறல்'' என்னும் ஓர் துறை கண்டோரின் கூற்றுப்பற்றி வந்துள்ளது. ஆக மொத்தம் பதின்மூன்று கூற்றுக்கள் கண்டோர் பற்றி முத்துவீரியத்தில் இடம்பெற்றுள்ளன.

சுவாமிநாதத்தில் கண்டோர்

சுவாமிநாதமும் நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய மூன்று நூற்களும் கண்டோர் பற்றிச் சுட்டிய செய்திகளையே ஏழு நூற்பாக்களில், ''ஊடல் தீர்க்கும் வாயில்களில் ஒருவராகவும், கற்பினுள் கூற்றுக்குரிய மாந்தர்களுள் ஒருவராகவும்''[143] உடன்போக்கு விரியில் ''கண்டோர் அயிர்த்தல் அவர் விலக்கல், பதி அணிமை சொலல்''[144] என்ற மூன்று கூற்றுக்களையும் சுட்டுகின்றன. மேலும் கற்பொடு புணர்ந்த கவ்வையில் கண்டோர் இரங்குதல் என்பதனையும் சுட்டுகின்றது.

பரத்தையிற் பிரிவின் விரி கண்டோர்க்கு உரிய கூற்றைக் காவலன் நீங்குழிப் புலவி இவட்கு ஏது இது என்றே கண்டோர் கூறுதல் (தலைவன் நீங்குவதைக் கண்டோர்கள் தலைவியின் புலவிக்குக் காரணம் அதுதான் அவன் பிரிவு தான் என்று கூறும்) (சுவாமி.119) துறை கண்டோர்க்குரியது. இக்கூற்று மற்றைய இலக்கணங்களில் இல்லாதது கண்டோர் கூற்றின் வளர்ச்சியாகும்.

வாயில்கள்

கற்பில் தலைவன், தலைவியிடையே ஊடல் ஏற்படும்போது, அதனைத் தீர்த்து அவர்களை ஒன்று கூட்டும் மாந்தர்களாகச் செயல்படுபவர்களே வாயில்கள் என்போராவார். இவர்கள் பன்னிருவர் எனத் தொல்காப்பியம் சுட்டும். தொல்காப்பியத்தில் வாயில்கள் பற்றி இருபத்தேழு நூற்பாக்களில் செய்திகள் சுட்டப்பட்டுள்ளது. இவ்வாயில்கள் கற்பு வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதவர்கள். இவர்கள் கூற்றுக்குரிய மாந்தர்கள் பதின்மூவரில் ஒருவராகச் சுட்டப்படாதவர். எனினும் இவ்வாயில்களுக்குரிய கூற்றுகளாக இரண்டு கூற்றுகள் தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளன.

வாயில் மாந்தர்கள்

“தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாட்டி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்”[145] என்ற இவ்வாயில் மாந்தர்களைப் பற்றிப் பிற்றைய இலக்கணங்களில், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் சுட்டுகின்றன. இதில் “நம்பியகப்பொருள் மட்டும் பதின்மூன்று மாந்தர்கள் என்றும், பிற்றைய மூன்று நூல்களும் ஊடல் தீர்க்கும் மாந்தர்கள் பதினைவர் என்றும்”[146] சுட்டுகின்றன.

வாயில்கள் பற்றிய மரபு

தொல்காப்பியர் வாயில்கள் பற்றிய மரபாக, வாயில்களுக்குரிய கடமையாகச் சில செயல்களை எட்டு நூற்பாக்களில் விரிவாகச் சுட்டுகின்றார். “i) தலைவி தலைவனின் புறத்தொழுக்கத்தை எண்ணி ஊடல் கொண்ட நிலையில், அவளிடம் செல்லும் வாயில்கள், அவள் சினக்கும் போது தலைவனின் புறத்தொழுக்கத்தைப் பற்றித்தவறாக ஏதும் கூறுவதில்லை.

ii) இருவருக்கும் நல்வாழ்வு அமையுமாறு செய்யும்வழியிலேயே கூறுவர். இல்லற வாழ்வில் ஊறுநேரக் கூற்று நிகழ்த்தமாட்டார்.”[147]

iii) “தலைவன், தலைவி இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட ஊடலைத் தீர்த்து வைக்க வாயில்களை வேண்டும் பொழுது அவ்வாயில்கள் ஊடலைப் போக்க தலைவன் அல்லது தலைவியின் முகத்துக்கு நேராகக் கூற்று நிகழ்த்தாது (முன்னிலையாக), பிறரைக் கூறுவது போலக் (முன்னிலைப் புறமொழியாக) கூறி ஊடலைப் போக்குவதும் அவர்தம் கடமையாகும்.”[148]

iv) “வாயில்கள் அனைவரும் தலைவன், தலைவி ஆகிய இருவரிடமும் கூற்று நிகழ்த்தும் பொழுது மகிழ்ச்சி பொருந்திய சொற்களையே பேசுவர்.”[149]

v) “அவ்வாறு அன்பான சொற்களை மகிழ்ச்சியான சொற்களைக் கூற இயலாத சூழலில், கடுஞ்சொற்களைக் கூற வேண்டிய சூழல் ஏற்பட்டால் சிறைப்புறமாக (முன்னிலைப் புறமொழியாகவே) கூறுவர்.”[150]

vi) “இவ்வாறு வாயிலாகச் செல்பவர்கள் தலைவன் அல்லது தலைவியிடம் எதையும் மறைக்காது வெளிப்படையாகவே கூறவேண்டும். அவ்வாறு

வெளிப்படையாகக் கூறும் கூற்றுக்களும் குற்றம் ஆகாது.

vii) பரத்தை, வாயில் என்ற இருவர்க்கும் உரிய கூற்றானது தலைவியைப் பற்றியே இருக்க வேண்டும். தலைவியைப் பற்றிச் சுட்டாத கூற்று பயனற்ற கூற்றே ஆகும்.''[151]

viii) ''தலைவியைப் பற்றிய கூற்றை வாயில்கள் கூறுவதில்லை என்பதால், வாயில்கள் பன்னிருவரும் தத்தமக்குள் பேசிக்கொள்வதற்கும் உரியர்.''[152]

இறையனாரிலும் வாயில்களின் மரபு

''தொல்காப்பியரின் வாயில்கள் பற்றிய மேற்கண்ட கருத்தில் இறையனார் அகப்பொருள் மட்டும் மூன்று இடங்களில் மொழிகின்றன.''[153]

வாயில்களாக சுட்டப்படும் மாந்தர்களின் செயல்களில் இடம்பெற்றுள்ள கூற்றுக்கள்

தொல்காப்பியர் வாயில்களில் செவிலி, அறிவர், தோழி, கூத்தர், பாணர், இளையர், பார்ப்பான் என்ற அறுவருக்கும் உரிய தன்மைகளைக் கிளவித் துறைகளாகச் சுட்டுகின்றார். அவை, செவிலிக்கேன, i) நல்லவை உரைத்தல், ii) அல்லவை கடிதல் என்பனவும், அறிவர்க்கென,

iii) நல்லவை உரைத்தல், iv) அல்லவை கடிதல், v) தவறுகள் செய்யும் போது இடித்துரைத்துத் திருத்துதல், தோழி, தலைவனும், தலைவியும் பிணங்கி ஊடல் கொண்ட நிலையில் அவர்களது பிணக்கும் ஊடலும் தீரத்தக்க இனிய மொழிகளைக் கூறுதல் போன்றவையும் கூத்தர்க்கென தொல்லவை உரைத்தல், நுகர்ச்சி ஏத்தல், ஊடலின் தகைத்தல், உறுதி காட்டல், அறிவு மெய்ந்நிறுத்தல், ஏதுவின் உரைத்தல், துணிவு காட்டல், அணிநிலை உரைத்தல், நிலம் பெயர்ந்து உரைத்தல், அவள்நிலை உரைத்தல் என்பனவும், பாணர்க்கென நிலம் பெயர்ந்து உரைத்தல், அவள் நிலை உரைத்தல், இளையோர், ஆற்றது பண்பு, கருமத்து விளைவு, ஏவல் முடிவு, வினா, செப்பு, ஆற்றிடைக்கண்ட பொருள், இறைச்சி, தோற்றம் சான்ற அன்னவை, உழைக்குறுந்தொழில், காப்பு, உயர்ந்தோர் நடக்கை என்பனவற்றையும், பார்ப்பார்க்கென, காமநிலை உரைத்தல், தேர்நிலை உரைத்தல், கிழவோன் குறிப்பினை எடுத்துக்கூறல், ஆவொடு பட்ட நிமித்தம் கூறல், செலவுறு கிளவி, செலவழுங்கு கிளவி என ஆகியோருக்கும் உரிய கூற்றுகள்

(செவிலி - 2, அறிவர் - 3, தோழி - 1, கூத்தர் - 10, பாணர் - 2, இளையர் - 11, பார்ப்பான் - 6) என்ற எண்ணிக்கையில் அமைந்தாலும் இத்தகைய கிளவித்துறைகள் அனைத்தும் தலைவன், தலைவிக்கு ஊடல் ஏற்படும் நிலையில் கூறும் கூற்றுக்கள் அல்ல. மற்ற நேரங்களில் கூறும் கூற்றுக்களே ஆகும்.

பிற்றைய இலக்கணங்களில் வாயில்களாகிய மாந்தர்களின் கிளவித்துறைகள்

பாணர், விறலி, கூத்தர், இளையோர், கண்டோர், பார்ப்பனப் பாங்கர், சூத்திரப்பாங்கர், பாகர், பாங்கி என்னும் ஒன்பது வகை வாயில் மாந்தர்களின் கிளவித் தொகைகளுள் சில தலைவன், தலைவியின் கற்பு வாழ்வில் ஏற்படும் ஊடல் என்னும் நிகழ்வில் நிகழ்வனவாக வருகின்றன. அக்கூற்றுக்கள், பாணர்க்குரிய செயல்கள் ஒன்பதில், ‘‘வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல்’’[154] இரண்டு வகை, விறலிக்குரிய செயல்கள் நான்கில், ‘‘வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல்’’[155] இளையோர்க்கு உரிய பத்து வகை செயல்களில், ‘‘மடந்தையை வாயில் வேண்டல் வாயில் உடன்படுத்தல் ஆகிய இரண்டும்’’[156] பாகற்கு உரிய செயல்கள் நான்கில்,‘‘சேயிலைக் கிழத்தியை வாயில் வேண்டலும், வாயில்நேர்வித்தலும் வயங்குதுணி தீர்த்தலும்’’[157] ஆகிய இரண்டும் என வரும் எண்வகை கிளவித் தொகைகளும் வாயில்களின் கூற்றுக்களாக நேரடியாக வருவன. வாயில் மாந்தர்களான கூத்தர் (6), கண்டோர் (2), பார்ப்பனப் பாங்கர் (4), சூத்திரப் பாங்கர் (2), பாங்கி (4) ஆகியோர்க்கு உரிய கிளவித் தொகைகளெல்லாம் ஊடல் தீர்த்தலின் போது கூறும் கிளவித் தொகைகள் அல்ல.

பிறர் கூற்றுகளில் வாயில்கள் தொடர்பான செய்தி

தலைவன், தலைவி, தோழி, காமக்கிழத்தி ஆகிய நால்வர் கூற்றுக்களில் சில இடங்களில் வாயில்கள் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. எனினும் இவற்றில் வாயில்களாகத் ‘‘தோழி இரண்டிடங்களிலும்’’[158] ‘‘புதல்வன் ஓரிடத்திலும்’’[159] சுட்டப்பட்டுள்ளான். ஆயினும் இவை வாயில்களுக்குரிய கூற்றுக்களல்ல.

தொல்காப்பியத்தில் வாயில் கூற்றுகள்

வாயில் மாந்தர்கள் பன்னிருவருக்கும் உரிய பொதுவான இரண்டு கூற்றுக்களைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். அவற்றுள் முதல் கூற்று தலைவியின் இல்லறப் பண்புகளாகிய, i) "தலைவியின் கற்பொழுக்கம், காதல் பண்பு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, பொறுமை, விருந்தினர் உபசரிப்பு, சுற்றம் பாதுகாத்தல் போன்ற தலைவியின் மேம்பட்ட பண்புகளைத் தலைவனுக்குக் கூறுதல். ii) இரண்டாவது வாயில்கள் தனக்குத்தானே தலைவியின் இத்தகைய பண்புகளை உரைத்துக் கொள்ளுதல்"[160] என்பனவாகும்.

பிற்றைய இலக்கணங்களில் வாயில் கூற்றுக்கள்

பிற்றைய இலக்கணங்களில் இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஏழு நூல்களில் வாயில்கள் பற்றிய செய்திகளைச் சுட்டினாலும், வாயில் மாந்தர்களின் கூற்றுக்களைத் தொல்காப்பியர் சுட்டியது போலவே மாறனகப்பொருள் மட்டுமே சுட்டுகின்றது. அவை, i) "தலைவியிடம் தலைவனை ஏற்றுக் கொள்ளுமாறு வாயில் வேண்டடல். ii) தலைவனை ஏற்றுக் கொள்ளச் செய்தல். iii) தலைவியின் வெகுளியைப் பல காரணங்கள் காட்டிப் போக்குதல். iv) அவள் சினம் தணியாத நிலையில் தலைவனுடைய நிலைக்கு அஞ்சி வருந்துதல்.

v) தலைவன் பிரிந்த காலத்தில் தலைவிக்கு அவளுடைய செவிலித்தாய் போல ஆறுதல் மொழிகளைக் கூறுதல். vi) தலைவன் ஊருக்கு மீண்டு வரும் செய்தியை முன்கூட்டியே அறிவித்தல். viii) வந்தவழிஅவன் வரவினை உணர்த்தல். viii) இளமை, செல்வம், யாக்கை, இன்பம் இவற்றின் நிலையாமையைத் தேவைப்பட்ட போதெல்லாம் எடுத்து இயம்புதல்.

ix) நன்மை தருவனவற்றைத் தொடர்ந்து செய்து, தீமை தருவனவற்றைச் செய்யாது விடுத்தல். x) சான்றோர் குறிப்பிட்ட நேரிய செய்திகளை நூல்களின் ஆதாரங்களோடு தலைவன், தலைவியருக்கு எடுத்து இயம்புதல் போன்றன பன்னிரு வாயிலின் தொழில்கள்"[161] என்பதாகும். இப்பத்துக் கூற்றுக்களும் தொல்கா

ப்பியர் சுட்டிய இரண்டு கூற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. புதிதானவை. இவை வாயில்கள் பற்றிய கூற்றுக் கோட்பாட்டின் வளர்ச்சியே ஆகும்.

பிற்றைய இலக்கணங்களின் கிளவித்துறைகளில் மாந்தர்களின் கூற்றுக்களில் வாயில் பற்றிய செய்தி

பிற்றைய இலக்கணங்களில் இறையனார் அகப்பொருளில் 53, 54, 55 ஆகிய மூன்று இடங்களிலும், தமிழ்நெறி விளக்கத்தில் 25 என்ற ஓரிடத்திலும், நம்பியகப்பொருளில் 68, 95, 96, 98, 99, 100, 101, 102, 206, 207 என்ற பத்து இடங்களிலும், மாறனகப்பொருளில் 77, 111, 118, 119, 160, 230, 231, 271 என்ற எட்டு இடங்களிலும், இலக்கண விளக்கத்தில் 436, 463, 464, 465, 466, 467, 468, 469, 470, 472, 473, 476, 554, 555, 556 பதினைந்து இடங்களிலும், சுவாமிநாதத்தில் 84, 89, 120, 122 என்ற நான்கு இடங்களிலும் வாயில்கள் பற்றிய செய்தி சுட்டப்பட்டுள்ளது.

தமிழ்நெறி விளக்கத்தின் ஆயிடைப்பிரிவில் ''வாயின் மறுத்தல், வாயில் கூறலும்''[162] என்ற இரண்டு கிளவித் துறைகளில் வாயில் கூறல் என்பதிலேயே வாயில் மாந்தரின் கூற்றுக்கள் உள்ளது. ஆனால் வாயில்கள் பலரில் எந்த மாந்தரின் கூற்று எனச் சுட்டாது பொதுவாகவே சுட்டுகின்றன. நம்பியகப்பொருளில் குறையுற உணர்தலின் இரண்டு வகைகளில் முதல்வகையான ''பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுத்தோன் கண்ணியும், தழையும் ஏந்தி நண்ணி ஊர், பெயர், கெடுதி வினவுழி''[163] என்ற கிளவித்துறையில் வாயில் என்ற சொல்லுக்குரியவள் தோழி. எனினும் இக்கிளவித்துறையில் வாயிலாகிய தோழியிடம் தலைவன் வினவுவதாகவே உள்ளது. தோழியாகிய வாயில் வினவுதாக இல்லை. மேலும் நம்பியகப்பொருளில் கூட்டல், கூடல் ஆயங்கூட்டல் வேட்டல் பற்றிய துறைகளின்கீழ் களவொழுக்கத்தில் வாயில்கள் பதினைவரில் ஒன்றான விருந்து என்ற வாயில்பற்றிய இரண்டு கிளவித் தொகைகள் பதின்மூன்று வகைகளில் இறுதி இரண்டு ''விருந்துண்ண வருமாறு அழைத்துப் பாங்கி பகற்குறி விலக்கல், விருந்தினைத் தலைவன் விரும்புதல்''[164] விருந்துண்ண தலைவியை அழைத்துப் பாங்கியாகிய வாயில் கூற்று நிகழ்த்துகின்றாள்.

பரத்தையிற் பிரிவின் வகை நான்கில் வாயில் வேண்டல், வாயில்மறுத்தல், வாயில் நேர்வித்தல், வாயில் நேர்தல் என்ற நான்கு கிளவித் தொகைகளில் இரண்டாவது கிளவித் தொகையை விடுத்து மற்ற மூன்றும் வாயில்கள் பற்றிய கூற்றுத்துறைகள் ஆகும். ஆனால் எம்மாந்தர்
எனத் தெளிவில்லை. இச்செய்தியை ''நம்பியகப்பொருள் மட்டுமன்றி மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம்''[165] ஆகிய நூல்களும் சுட்டுகின்றன.

முத்துவீரியத்தில் பரத்தையிற்பிரிவு பற்றிய நாற்பத்தொன்பது கிளவித்துறைகளில், ''i) வாயில் மறுத்தல், ii) செவ்வணி கண்ட வாயிலவர் கூறல், iii) மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல், iv) வாயிலவர் வாழ்த்தல், v) வாயிற் பெறாது மகன்திறம் நினைதல், vi) வாயிற் கணின்று தோழிக்குரைத்தல், vii)வாயில் வேண்டத் தோழி கூறல், viii)
மண்ணிய தோழி வாயில் வேண்டல், ix) வாயில் மறுத்தல், x) விருந்தொடு செல்லத் துணிந்தமை கூறல்'' இப்பத்துத் துறைகளில் வாயில்கள் பற்றிய செய்திகள் சுட்டப்பட்டுள்ளது. வாயில்களின் கூற்றைச் சுட்டவில்லை.

நற்றாய்

தலைவியை ஈன்றெடுத்த தாயே நற்றாய் ஆவாள். ஒரு குடும்பத்தில் தாய் என்பவள் முதன்மையானவள், முக்கியமானவள், தாயும், தந்தையும் குடும்பத்தை உருவாக்குபவர்கள் எனினும் கணவனின் வருவாய்க்கு ஏற்ப குடும்பத்தையும், குழந்தைகளையும் நன்முறையில் பேணிப்பாதுகாத்து அவர்களை ஒழுக்கசீலர்களாய் நன்மை சார்ந்த அனைத்துச் செயல்களிலும் முதன்மையானவர்களாய் உருவாக்க முயலுவதில் தாயின் பங்கு அளவிடற்கரியது. தாய் என்றாலே அது செவிலியையே குறிக்கும் என்பதால், தலைவியை வளர்த்து எடுத்த அச்செவிலித்தாயிடம் இருந்த ஈன்ற தாயை மாறுபடுத்திக் காட்டவே ஈன்றவளைத் தொல்காப்பியர் நற்றாய் எனச் சுட்டுகின்றார்.

நற்றாயின் இடம்

நற்றாய் தலைவி தலைவனோடு கொண்ட களவை அவர்களின் உடன்போக்கின் முன்னரே அறிந்து கொள்கின்றாள். தலைவியின் களவை செவிலி,

தோழி என்ற இருவரின் மூலமாகவே நற்றாய் அறிந்து கொள்கிறாா். தலைவியின் களவு ஒழுக்கத்தைக் குறிப்பால் அறிந்தவுடனே நற்றாய் தலைவியை, வெளியில் செல்லவிடாதும் களவைத் தொடா்ந்து நீட்டிக்க விடாதும் செய்து இல்லத்திலேயே அடைத்து வைத்து இற்செறிக்கின்றாள். ஈன்றவளின் இவ் இற்செறிப்பாலேயே தலைவிக்கு உடன்போக்கு செல்லும் எண்ணம் அரும்பியிருக்கலாம், என்பதனை உறுதி செய்யும் வகையிலே தான் "உடன்போக்குத்துறை பற்றிய பாடல்களைத் தொகுத்து வைத்து நோக்கின் அப்போக்குக் காரணள் தாய் என்பது தெளிவாம்"[166] என்று வ.சுப.மா.வின் கருத்தை எடுத்தாள்கிறார் இரா.செகதீசன்.

நற்றாயின் கூற்றுக்கள்

தலைவியைப் பெற்றெடுத்ததற்குப்பின் தன் இல்லறக் கடமைகளிலேயே கவனம் செலுத்தி வந்த நற்றாய், தன் தோழியாகிய செவிலியிடமே தலைவியை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பைக் கொடுக்கின்றாா். தலைவி வளா்ந்து பெரியவளானதும், தனக்கான தலைவனைத் தோ்ந்தெடுத்து அவனோடு களவு கொண்டு மணம் செய்து கொள்வதற்காக உடன்போக்கை மேற்கொள்கின்றனா். தலைவி உடன்போனதைச் செவிலி, தோழி வழி, அறிந்த நற்றாய் தலைவியை எண்ணி வருந்திக் கூற்று நிகழ்த்துகின்றாள். அத்தகைய கூற்றுகளாகத் தொல்காப்பியா்,

i)

தலைவி உடன்போக்கில் சென்றதைப் பெற்ற தாயான தான் கவனிக்காமல் இருந்துவிட்டேனே, ii) தலைவன், யாரும் அறியாதவாறு என் மகளை உடன்போக்கில் அழைத்துச் சென்றுவிட்டானே, iii) என் மகளும் தலைவன் அழைத்தவுடன் என்னை நினைத்துப் பாராமல் அவனோடு உடன்போக்கில் சென்றுவிட்டாளே எனப் புலம்பி, iv) காக்கை கரைதல், பல்லி ஒலி எழுப்புதல் போன்ற செயல்களைக் கண்டு அதனை நன்னிமித்தமாக எண்ணித் தாய் திரும்பி வந்துவிடுவாள் என மற்றவா்களிடம் கூறுவாள்.

v) எதற்கோ, எங்கேயோ, எவரோ கூறக்கூடிய அவள் வந்து விடுவாள் என்ற சொல்லைத் தலைவியின் தாய் தனக்காகத் தன் மகளைப் பற்றிக் கூறிய

சொல்லென எண்ணி மகிழ்ச்சி கொள்ளும் போதும் (நிமித்தம் காரணமாக), vi) தெய்வ அடியார்களான குறி கூறுபவர், கழங்கு பார்ப்பவர், தெய்வம் தன்மேல் வந்ததென ஆடும் தெய்வமாந்தர்கள் போன்றோர்களிடம் தன் மகள் வந்துவிடுவாளா என வினவும் போதும், vii) உடன்போக்கில் தலைவி தன் மனங்கவர்ந்த தலைவனுடன் செல்வதால் தலைவிக்கு ஏற்பட்ட மனமகிழ்ச்சியை எண்ணியும், தலைவி உடன்போக்கில் செல்லும்போது நிழல் நிறைந்த மரங்களும், நீர் உடைய குளங்களும் தலைவிக்கு இருந்து உதவவேண்டும், தலைவன் அவளை அன்போடு, எவ்விதத் துன்பங்களும் தலைவிக்கு ஏற்படாதவாறு நற்பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு அழைத்துச் சென்ற தலைவன் என்றும் அவளிடம் இப்போது உள்ளது போலவே அன்பு செலுத்த வேண்டும் என்றும்,

viii) தலைவி உடன்போக்கு செல்லும் இடம் வெப்பம் மிகுந்த காடாக இருக்குமோ என்று எண்ணி வருத்தங்கொள்ளும் போதும், ix)தலைவனும், தலைவியும் உடன்போக்கில் செல்லும் போது ஆறலைக்கள்வர், விலங்குகள் போன்றவற்றாலும் தலைவியைத் தேடிச் சென்ற தன் ஐயர், தமர் போன்றோரால் தலைவனுக்கும், தலைவிக்கும் துன்பம் ஏதும் நேர்ந்திருக்குமோ என்றெண்ணி அஞ்சி வருந்தும் போதும், x) உடன்போக்கில் சென்ற தலைவி, தலைவனுடைய ஊரை அடைந்ததையும் அல்லது தன் தலைவனும், மகனும் தலைவனையும், தலைவியையும் தன் இல்லிற்கு மீட்டு வந்த செய்தியை அறிந்து தாய் மகிழ்ச்சி கொள்ளும் போதும் எனப் பத்திடங்களில் கூற்று நிகழ்வதாகத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

இதுகாறும் கண்ட பத்துக் கூற்றுக்களில் முதல் எட்டுக் கூற்றுக்களை நோக்கும் பொழுது நற்றாய் தணிமையுற்றுத் தன் நெஞ்சுடன் புலம்புவனவாகவும், இறுதி இரண்டு கூற்றுக்கள் நற்றாய் பிறரிடம் நிகழ்த்தும் கூற்றுப் புலம்பலாகவும் அமைகின்றன. நற்றாயின் கூற்றுக்களாக அமைந்த மேற்கண்ட செய்திகளுக்கான நூற்பாவின் இறுதி மூன்று அடிகளான,

> **“................................ கண்டோர் பாங்கினும்**
> **போகிய திறத்து நற்றாய் புலம்பலும்**
> **ஆகிய கிளவியும் அவ்வழி யுரிய”**

இவ்வடிகளை உரையாசிரியர்கள் ஒரே கூற்றாகக் கொண்டுள்ளனர். நற்றாய் புலம்பலும் கிளவியும் போகிய திறத்து உரியவென முடிக்க என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். ஆயின் இவ்வடிகளைக் கூர்ந்து நோக்கின் 'கண்டோர்' என்ற சொல் சுரத்திடைக் கண்டோர் எனப் பொருள்படும். சுரத்திடைக் காணும் நெறி நற்றாய்க்கு இல்லை. எனவே, ஒரு கூற்றாகக் கொள்ளவே இலக்கண மரபுக்கு ஏற்புடையதாகும். உரையாசிரியர் சோமசுந்தரனாரும் போகிய திறத்து நற்றாய் புலம்பலும் என்னும் அடியைத் தனிக் கூற்றாகவே கொண்டுள்ளார். xi) போகிய திறத்து நற்றாய் புலம்பும் வழியும் கூற்று நிகழும். xii)

எஞ்சி யோர்க்கும் எஞ்சுத லிலவே முன்னர்க் கூற்று நின்ற பலருள்ளும் செவிலிக்கும், தலைவிக்கும், ஆயத்தோர்க்கும் அயலோர்க்கும் கூற்று நிகழும். செவிலிக்கு உண்டான கூற்றுகளே நற்றாய்க்கும் நிகழும். ஆதலால், ஈண்டு நற்றாய்க்கும் பொருந்தியது.

xiii) **ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்**

தாமே செல்லும் தாயாரும் உளரே

பதியெழுவறியாப் பேரூரின் தெருவின் கண்ணும், அருவழிக் கண்ணும், தந்தையும், தன்னையரும் உணரா முன்னம் எதிர்ப்பட்டு மீட்டற்குத் தாமே போகும் தாயாரும் உளர். அவ்வாறு செல்கையில் தாயரிடத்துக் கூற்று நிகழும். ஆக நற்றாய்க்கு உரிய கூற்றுக்கள் இதனொடு சேர்த்து பதின்மூன்றாகும்.

செவிலியின் கூற்றுகளும்

களவியலில் செவிலிக்கு உரியதாகக் கூறப்பட்ட பன்னிரு கூற்றுக்களும் நற்றாய்க்கும் உரியதென "செவிலியுடன் உணர்வு ஒன்றுபடுமிடங்களில் பெற்ற தாய்க்கும் செவிலிக்குக் கூறிய கூற்றுக்கள் நிகழும்"[167] எனத் தொல்காப்பியர் சுட்டுகிறார். ஆக செவிலிக்கு உரியதான,

"களவு அலர்ஆயினும், காமம் மெய்ப்படுப்பினும்
அளவு மிகத் தோன்றினும், தலைப்பெய்து காணினும்
கட்டினும் கழங்கினும் வெறி என இருவரும்
ஒட்டிய திறத்தான் செய்திக் கண்ணும்
ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்
காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்

தோழியை வினவலும் தெய்வம் வாழ்த்தலும்
போக்கு உடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற்கண்ணும்
பிரிவின் எச்சத்தும் மகள் நெஞ்சு வலிப்பினும்
இருபால் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியோடு
அன்னவை பிறவும் செவிலி மேன''

(தொல்.பொருள்.கள.25)

என்ற இப்பதின்மூன்று கூற்றுக்களோடு சேர்த்து நற்றாய்க்கு மொத்தம் இருபத்தாறு கூற்றுகள் தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளன.

இறையனார் களவியலில் இடம்பெறும் நற்றாய்

இறையனார் அகப்பொருள் நூலில் நான்கு நூற்பாக்களில் (26,27,28, 30) நற்றாய் பற்றிய செய்தி சுட்டப்பட்டுள்ளது. தலைவி உடன்போக்கில் சென்றவுடன் ஏனெனில் ''தாய் தான் தலைவியின் களவைத் தந்தை, தன் ஐயருக்குக் குறிப்பிடுவள். அவ்வகையில் தந்தை, தன் ஐயர் என்ற இருவரும் அறிந்து கொள்வது தாயின் கூற்றுக்களால் அல்ல, குறிப்பாலேயே ஆகும்.''[168]

தமிழ்நெறி விளக்கத்தில் நற்றாய்

தமிழ்நெறி விளக்கத்தின் கற்புப்பிரிவில் நற்றாய் பற்றிய செய்தி நான்கிடங்களில் சுட்டப்பட்டுள்ளது. அறத்தொடு நிலையில் ''கிளந்த தமர்வயின் நற்றாய் கிளத்தலும் தமர்க்கு அறத்தொடு நற்றாய் நிற்பாள் என்ற துறையில் நற்றாயின் ஒரு கூற்று உள்ளது. (கிளத்தல் சொல்லுதல்) மேலும் உடன்நிலைச் செலவு என்னும் துறையில் நைவுடைச் செவிலி நற்றாய் மொழியே, தாயர் கூற்றே என்னும் இரண்டு இடங்களிலும், ஆயிடைப்பிரிவில் தாய் கண்டுரைத்தல்''[169] என்னும் ஒரு துறையுமென நான்கு கூற்றுக்கள் தமிழ்நெறி விளக்கத்தில் நற்றாய்க்குச் சுட்டப்பட்டுள்ளன. நற்றாய் பற்றிய செய்திகள் பன்னிரு நூற்பாக்களில் நம்பியகப் பொருளில் சுட்டப்பட்டுள்ளது. இதில் எட்டு நூற்பாக்களில் நற்றாயின் கூற்று இடம்பெற்றுள்ளது.

நம்பியகப்பொருள் கூற்றுகளில் நற்றாய்

தலைவியின் தோற்றம், செய்கைகள் போன்றவற்றில் மாற்றம் காண ப்படும் போது தோழி தலைவியையும், தோழியைச் செவிலியும், நற்றாயும் வின வும்போது அதற்கான காரணத்தைத் தலைவி சொல்ல முற்படுகையில் அறத்தெ ாடு நிற்றல் நிகழும். அப்போது வினா ஏற்படும். அதில் செவிலி தோழியை வி னவும் துறையில் செவிலியும், நற்றாயும் வினவுவதாக அமைந்துள்ளது. ஆனால் வினவுதல் என்ற துறையே இடம்பெற்றுள்ளது. என்ன வினவினர் என்பதை நம் பியாசிரியர் சுட்டடவில்லை.

இதில் "நற்றாயும் வினவினார் என்பது நற்றாயின் ஒரு கூற்றாக"[170] *கொள்ளப்படுகின்றது. மேலும் தலைவி தலைவனோடு உடன்போக்கில் சென்ற பின் அது பலராலும் அறியப்பட்டு ஆரவாரமாகும் அந்நிகழ்வான கற்பொடு பு ணர்ந்த கௌவையில் "நற்றாய் புலம்பல், கவர்மனை மருட்சி (தலைவியின் உ டன்போக்கால் வீட்டிலிருந்து நற்றாய் புலம்புதல்)"*[171] *என்னும் இரண்டும் நற் றாய்க்குரிய கூற்றுத் துறைகளாகும்.*

"தன் தோழியாகிய செவிலியின் வழி தலைவியின் உடன்போக்கை ந ற்றாய் அறிந்தவுடன், தலைவி சென்றதைப் பற்றி வருத்தத்துடன் பல வினாக்க ள் தலைவியின் தோழியிடமும், பிற தோழியர் கூட்டத்துடனும், அயலாராக உள்ளோரிடமும், தலைவி பழகி விளையாடிய இடங்களுடனும் என நான்கு துறைகளில் தலைவியைப் பற்றிப் புலம்பி கூற்று நிகழ்த்துதல்"[172] *நற்றாய்க்கு உ ரியதாகும்.*

மனைமருட்சி என்ற அனைமருட்சியில் நற்றாய் கூற்றுகள்

நற்றாய் தலைவியின் உடன்போக்காகிய பிரிவால் கவலையுற்று வீட் டில் இருந்தபடியே பல்வேறாகப் புலம்பும் மனைமருட்சி அல்லது அன்னை ம ருளுதலாகிய அனைமருட்சி என்னும் துறையின்கீழ் உள்ள கூற்றுகளாகிய கிள வித்துறைகள்,

"நிமித்தம் போற்றலும் சுரம்தணி வித்தலும்
தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கலும்
இளமைத் தன்மைக்கு உளம்மெலிந்து இரங்கலும்

அச்சத் தன்மைக்கு அச்சமுற்று இரங்கலும்
எனஇவை ஐந்தும்மனை மருட்சிக்கு உரிய'' (நம்.அக.186)

என ஐந்தாகச் சுட்டப்பட்டுள்ளது.

மீட்சித்துறையில் நற்றாய் கூற்றுக்கள்

இம்மீட்சி என்னும் துறையின் விரிகள் ஆறுவகைப்படும். அதில் தலைவன் தன் மகளை அழைத்துக்கொண்டு தன் இல்லத்திற்குத் திரும்பி வருவானோ என்ற ''தலைவனின் மனக்கருத்தை அறிய நற்றாய் வேலனை வினாதல்''[173] என்னும் கிளவித்துறையில் நற்றாயின் கூற்று இடம்பெற்றுள்ளது. மேலும் தன் மனை வரைதல் துறையில் ''தன் இல்லில் தலைவிக்கும், தலைவனுக்கும் மணம் செய்து வைக்கலாமா என்பதை விருப்புடன் செவிலியிடம் வினவுதல்''[174] என்பதும் நற்றாய்க்கு உரிய கூற்றுத் துறைகளாகும்.

நற்றாய் கூற்று நிகழ்த்தும் மாந்தர், கூற்று நிகழ்த்தா மாந்தர்

தலைவி உடன்போக்கிற்குப்பின் நற்றாய்,

''புணர்ந்துஉடன் போயது உணர்ந்த பின்னர்
அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர்,
சிந்தைநோய் அறிவோர், செவிலி, பாங்கியொடு
கண்டோர்க்கு உரைக்கும் பண்புடை நற்றாய்''
(நம்.அக.219)

இத்தகைய எண்மரிடம் கூற்று நிகழ்த்துவதாக நம்பியகப்பொருள் சுட்டுகின்றது. மேலும் கூற்று நிகழ்த்தாத மாந்தர் எனத் தலைவனையும், தலைவியையும் சுட்டுகின்றது.

களவியற்காரிகையில்

உடனிலைச் செலவில், i) சூரியன் உடன்போக்கில் சென்ற தன் மகளை வாட்ட வேண்டா என அதனைப் பார்த்துக் கூறுதல், ii) தன் மகள் எவ்வாறு வாட்டும் வெயிலடங்கிய இப்பாலை வழியில் சென்றாளோ எனச் செவிலியிடம் வினாதல், iii) தலைவியின் சேர்விடங்கூறிய செவிலியை ஆற்றுவித்தல், iv) தலைவி தன் ஊர் வருவதை மகிழ்ந்து சுற்றத்தாரிடம் கூறுதல், v) வேலனைத் தலைவி தன் ஊர் வருவாளோ என முன் வினவியதை நினைத்து இப்போது தலைவனும், தலைவியும் தன்இல் வந்ததற்காக இது

உன் செயலே என வேலனைப் புகழ்தல், இவ்வைந்து கூற்றுகளும் நற்றாய்க்கு உரியனவாகச் சுட்டுகின்றது. மாறனகப்பொருளில் நற்றாய் பற்றிய செய்திகள் பதினெட்டு நூற்பாக்களில் சுட்டப்பட்டுள்ளன.

மாறனகப்பொருளில் நற்றாய் கூற்றுக்கள்

தலைவியிடம் வேறுபாடு கண்டு அதற்குக் காரணம் யாது என நற்றாய் வினவும் இடத்துத்தோழி, செவிலி, தலைவி மூவரும் விடை கூறுவர் என்றும் சுட்டுகின்றது. இதில் நற்றாய் வினவுதல் என்பது நற்றாயின் ஒரு கூற்றாகக் கணக்கிடப்படுகிறது. தலைவியின் உடல் வேற்றுமையைக் கண்ணால் கண்டும், மன வேறுபாட்டைத் தன் உள்ளத்தால் உணர்ந்தும் நற்றாய் செவிலியை வினவிய இடத்து என்பதில் நற்றாயின் ஒரு கூற்று சுட்டப்பட்டுள்ளது. இந்நூல் ‘‘நற்றாய் தமர்க்கு எனத் தனியாக அறத்தொடு நிற்றல் என்ற ஒரு நூற்பாவைச் சுட்டியுள்ளது.’’[175]

கற்பொடு புணர்ந்த கௌவையில்

இத்துறையின் ஐந்து வகையில் ‘‘நற்றாய் புலம்பல் நன்மனை மருட்சி’’ என்னும் இரண்டு வகைகள் நம்பியகப்பொருள் போலவே நற்றாய்க்கு உரிய இரண்டு கூற்றுத்துறைகளாகும்.

நற்றாய் புலம்பலில் கூற்றுக்கள்

இந்நூற்பாச் செய்தியிலும் நம்பியகப்பொருள் போலவே,

‘‘அறன்அறி செவிலி அறத்தொடு நின்றபின்
சேடி தன்னொடும், சேடியர் தம்மொடும்
அயலார் தம்மொடும் பயிலிடம் தன்னொடும்
புரிகுழல் நற்றாய் புலம்பற்கு உரியள்’’ (மாற.அக.213)

என்ற நான்கு இடங்களில் நற்றாய் புலம்பலாகக் கூறப்பட்டுள்ளவை நற்றாய்க்குரிய நான்கு கூற்றுகளாகிய கிளவித் துறைகளாகும். மேலும் ‘‘தலைவி தலைவனோடு உடன்போக்கு சென்றபின் அந்நிகழ்வினைப் பற்றி தலைவியின் தந்தை, தமையரிடம் கூற்று நிகழ்த்துவோராக உள்ள மூவரில் நற்றாயும் ஒருவராவார்’’[176] என்பர். ஆனால் என்ன கூற்று எனச் சுட்டப்படவில்லை.

வரைவு பற்றிய நிகழ்வில் தாய்

திருமணமாகிய வரைவு என்பதைப் பற்றி தலைவன், தலைவியின் இருவீட்டுத் தாய், தந்தை, மாமன், அண்ணன், ஏனைய உறவுகள் என அனைவரும் அனைத்து வேள்விச் சடங்கினைத் தவறாது செய்து மணஞ்செய்து கொடுப்பதாகும் எனச் சுட்டுகின்றது. இந்நூற்பாவில் இருவரது உறவினர்கள் பற்றிச் சுட்டுகையில் தாய் இடம்பெறுகிறாள். எனினும் இந்நூற்பாவில் நற்றாய் பற்றிய குறிப்பே உள்ளது. கூற்றல்ல.

நற்றாய் மருட்சி

''என் மகள் சென்ற பாலை நிலத்தை மிகவும் வெப்புறுத்தாதே என்று சூரியனை இரந்து வேண்டுதல்''[177] *என்னும் ஒரு கூற்றையும் சேர்த்து நற்றாய்க்கு உரிய கூற்றுக்கள் ஆறென மாறனகப்பொருள் மொழிகின்றது.*

நம்பியகப்பொருள் செய்திகளை

மாறனகப்பொருள் கண்டோர் இரங்களில் நற்றாய் பற்றிய குறிப்பு, மீட்சியின் விரி ஆறில் ஆறாம் வகையான ''நற்றாய் உணர்ந்து அவன் உளங்கொள வேலனை வினாதலும்''[178] *என்ற ஒரு கூற்று, தன்மனை வரைதலின் ஐந்து வகையில் முதல் வகையான*

> ***''கவினுடை நற்றாய் முதல்வகையான***
> ***செவிலியை வினாதலும்''***[179]

என்ற கூற்று, கற்பில் கூற்றுக்குரிய பதின்மூவரில் ஏழாம் மாந்தராக இடம்பெறும் நற்றாய் பற்றிய செய்தி, தலைவன், தலைவியோடு நற்றாய்க்குக் கூற்று நிகழாத செய்திகள், நற்றாய்க்குக் கூற்று நிகழும் ஏழு மாந்தர்கள் என அனைத்துச் செய்திகளையும் நம்பியகப்பொருள் செய்தியையே சுட்டுகின்றன.

இலக்கண விளக்கத்தில் நற்றாய்

இந்நூல் பெரும்பாலும் நம்பியகப்பொருள் நூற்பாச் செய்தியையே தன்நூலில் முழுவதுமாகக் கையாண்டுள்ளது. நற்றாய் பற்றி நம்பியாசிரியரின் பதினொரு நூற்பாக்களை உள்ளவாறே கையாளுகின்றது. ''கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரியின் வகைகள் ஆற்றாத் தாயைக் கண்டோர் தேற்றல், நற்றாய் தன்னுள்ளே இரங்கல், நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல், நற்றாய் புலம்பல்,

என்ற நான்கு கூற்றும் நற்றாய் பற்றியது எனினும் முதல் செய்தி தவிர்த்து மற்ற மூன்று கூற்றுக்களும் நற்றாய்க்கு உரிய கூற்றுக்களே''[180] ஆகும். இக்கூற்றுக்கள் நம்பியகப்பொருள் சுட்டாத இலக்கண விளக்கம் மட்டுமே சுட்டும் புதுக்கூற் றுக்கள் ஆகும்.

முத்துவீரியம் சுட்டும் நற்றாய்

முத்துவீரியத்தில் நற்றாய் பற்றிய செய்தி நான்கு நூற்பாக்களில், ஆறி டங்களில் சுட்டப்படுகின்றது. எனினும் தலைவி உடன்போக்கில் சென்ற நிலை யில்

''நாடத் தணிதலு நற்றாய் நயந்தவர்
கூடக் கரையெனக் கொடிக்குறி பார்த்தலும்''

(முத்.வீரி.850)

என்ற துறை ''தலைவியும், தலைவனும் உடன்போக்கில் சென்றபின், அவ்வுட ன் போக்கில் சென்றவர்கள் இந்தக் கணமே, இந்நொடியே திரும்பி வருவார்க ள் என நீ கரைந்தால் கடவுளுக்குப் படைக்கும் உணவுகள் அனைத்தையும் உன க்கே படைப்பேன் எனக்கூறி காகத்தின் கரைதலாகிய செயலை எதிர்பார்த்தல் என்ற துறை நற்றாய் காகத்திடம் கரையுமா எனப் பார்த்தலால்''[181] இது ஒன்றே நற்றாய்க்குரிய முத்துவீரியம் சுட்டும் ஒரு கூற்றாகும்.

சுவாமிநாதத்தில் நற்றாய்

சுவாமிநாதத்தில் நற்றாய் பற்றி ஏழு நூற்பாக்களில் செய்தி சுட்டப்ப ட்டுள்ளது. இதில் நற்றாய் பற்றிய கூற்றல்லா செய்தி ஒரு நூற்பாவிலும், கூற்றுக் கள் அடங்கிய செய்தி ஆறு நூற்பாக்களிலும் சுட்டப்பட்டுள்ளது. கற்புக்காலக் கூற்றுக்குரிய எழுவரில் மூன்றாம் மாந்தராகத் தாய் எனப்படும் நற்றாய் இடம் பெறுகின்றாள். மேலும், ''செவிலி அறத்தொடு நிற்றலில் வகையான அறம் உ ணர்தாய் செவிலியைப் பெண் வேற்றுமை வினாதல் கற்பொடு புணர்ந்த கவ்வை வயின் வகைகளில் நற்றாய் புலம்புதல், மனையின்கண் இருந்து நற்றாய் வருந்து தல் ஆகிய இரண்டு கூற்றுக்கள், கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரிகளில் நற் றாய் தோழியிடம் வருத்தப்படுதல் என்ற ஒரு கூற்றும். மீள்வரைவின் வகையில்

நற்றாய் செவிலியை வினவுதல்"[182] என மொத்தம் ஐந்து கூற்றுக்கள் சுவாமிநா தத்தில் நற்றாய்க்கு உரியனவாகச் சுட்டப்பட்டுள்ளன.

பாடினி

இசைப்பாடல்களைப் பாட வல்லவள் பாடினி ஆவாள். தொல்காப் பியத்தில் பாடினி என்ற சொல் எந்த மாந்தருக்கும் நேரடியாகப் பயன்படுத்தப் படவில்லை. எனினும் ஊடல் தீர்க்கும் வாயில்களாக வரும் பன்னிருவரில் ஆற ாம் மாந்தரான பாட்டி என்ற மாந்தரை "பாட்டி என்பது பாடினி"[183] எனக் கெ ாண்டு உரை எழுதியுள்ளார் இளம்பூரணர். வாயில்களில் ஒருவராக இப்பாட்டி யாகிய பாடினி இடம்பெறுகிறாரே தவிர வேறு செய்திகளைத் தொல்காப்பிய ம் குறிப்பிடவில்லை.

பிற்றைய நூல்களில் பாடினி

நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவா மிநாதம் ஆகிய நான்கு நூல்களும் "ஊடல் தணிவிக்கும் வாயில் மாந்தர்களில் பாணருக்குப்பின் பாடினியை ஒருவராக"[184]
மொழிகின்றது. எனினும் ஊடல் தீர்க்கும் வாயில்களில் பாடினி என்பதை நெ ருக்கமான வாயிலோரில் "பாணி"[185] என மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

இளையோர்

தலைவர்க்கு உரிய தோழர்கள் பலருள் இளையோரும் ஒருவர். இவ் விளையோர் பற்றித் தொல்காப்பியம் மூன்று நூற்பாக்களில் மொழிகின்து. இ ளையோர் பற்றிய கூற்றுக்களாக ஓர் ஏழினை மொழிகின்றார் தொல்காப்பியர். எனினும் இவர் இளையோர் என்பவர் யார் என்பதனையும் களவு, கற்பு ஒழுக்க க் கூற்றுக்குரிய பன்னிருவரில் இடம்பெறுபவராகவும் இளையோரைத் தொல் காப்பியர் மொழியவில்லை. ஆயினும்
"பன்னிரு வாயில்களில் ஏழாம் மாந்தராக மட்டும் இளையோரைச்"[186] சுட்டுகி ன்றார். ஏனெனில் வாயில்களும் தலைவன், தலைவியிடம் ஊடலின் போது உ ரையாடுதற்கு உரியவர் ஆகையால் அவரது கூற்றுக்களாக,

"ஆற்றது பண்பும், கருமத்து விளைவும்
ஏவல் முடிவும், வினாவும், செப்பும்,

ஆற்றிடைக் கண்ட பொருளும், இறைச்சியும்,
தோற்றம் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க்கு உரிய கிளவி என்ப''

(தொல்.பொருள்.கற்.29)

இவ்வேழினை உரைக்கின்றார். மேலும் இளையோர்க்குரிய தொழில்களைத் தொல்காப்பியர் தலைவன் அருகில் இருந்து அவனுக்குத் தேவையான சிறுசிறு வேலைகளைச் செய்வதும், அவனுக்கு இடையூறு ஏதும் நேராமல் பாதுகாப்பதும், உயர்ந்தோர்களாகிய பெரியவர்களுக்கு அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளைத் தலைவனுக்குச் செய்வதும் ஆகும் என்கின்றார்.

பிற்றைய இலக்கணங்களில் இளையோர்

பிற்றைய அக இலக்கணங்களில் தமிழ்நெறி விளக்கம், அகப்பொருள் விளக்கம், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் போன்ற ஐந்து நூல்களும் இளையோரைப் பற்றி மொழிகின்றன. "தமிழ்நெறி விளக்கம் அறத்தொடு நிலையில் உள்ள ஒரு துறையான 'இளையோர்க் கெதிர்தலும்' என்பதில் இளையோரைப்பற்றி மொழிகின்றது. ஆனால் இதில் இளையோர் கூற்று நிகழ்த்தியதாகச் சுட்டவில்லை. இளையோருக்கு அறத்தொடு நிற்கும் மாந்தர் கூற்று உரைப்பதாகவே''[187] சுட்டப்பட்டு உள்ளது. நம்பியகப்பொருளும், இலக்கண விளக்கமும் தொல்காப்பியர் மொழிந்ததைப் போலவே இளையோரைப் பற்றிய செய்திகளை மூன்று நூற்பாக்களில் மொழிகின்றது.

"இளையோர்க்குரிய இலக்கணமாக அகப்பொருள் விளக்கமும் இலக்கண விளக்கமும் தலைவனை விட்டு இரவு, பகலாகிய எந்நேரமும் பிரியாத உடலோடு ஒட்டிய ஆடையைப் போன்ற கவசமானவர்''[188] எனச் சுட்டுகின்றது.

மேலும் இவ்விரண்டு நூல்களும் "இளையோர்க்கு உரிய கூற்றுத்துறைகளை, i) தலைவியிடம் சென்று தலைவனின் வாயிலை ஏற்றுக் கொள்ளுமாறு கூறுதல், ii) வாயில் அமைத்துக் கொடுத்தல், iii) தலைவன் மீது தலைவி கொண்ட ஊடலைத் தீர்த்து வைத்தல், iv) ஊடல் நீங்கிய தலைவியின் செயலை தலைவனிடம் சென்று உரைத்தல், v) ஏவல் தொழில் செய்தல், vi)தலைவன் வருகையைத் தலைவியிடம் கூறுதல், vii) தலைவனின் நிலையை அவனது இயல்லை

ப அவன் பக்கம் நின்று பேசுதல், viii) தலைவன் மேற்கொண்ட வினையின் முடிபினைக் கூறுதல், ix) தலைவன் வந்த வழியின் இயல்பினைக் கூறுதல், x) வழியிடைக் கண்டவற்றைக் கூறுதல் என்றவாறு பத்தாக மொழிகின்றது.''[189] மாறனகப்பொருள் இளையோர்க்கு உரிய கிளவித் தொகைகளை மொழியவில்லை. சுவாமிநாதம் ''ஊடல் தீர்க்கும் வாயில்களாகிய பதினைந்து மாந்தர்களில் ஒன்பதாம் மாந்தராக இளையோரைச்''[190] சுட்டுகின்றது.

பாகன்

தலைவனின் பொருள்வயிற் சூழலில் யானை, குதிரை போன்ற மாக்களை (விலங்குகளை) இயக்குபவன். இவன் விலங்குகளின் இயல்பிற்கேற்பவும் தலைவனின் மனத்திற்கேற்பவும் வண்டியை விரைந்து செலுத்தும் வல்லமை படைத்தவன். இவன் குதிரை, யானை பூட்டிய தேரைச் செலுத்துபவன். ஆயினும் தொல்காப்பியத்தில் பாகன் என்றே சுட்டப் பெறுகின்றான். அகத்திணையியல் கற்பியலில் என இரண்டிடங்களில் பாகனைப் பற்றிய செய்தி சுட்டப்பட்டுள்ளது.

தலைவன் கூற்றில்

தொல்காப்பியத்தில் பாகனைப் பற்றி தனித்த விதமாக எவ்விடத்திலும் செய்திகள் சுட்டப்பெறவில்லை. தலைவன் கூற்றில் மட்டுமே ஈரிடங்களில் பாகன் பற்றித் தொல்காப்பியம் சுட்டுகின்றது. அதிலும் தலைவன் பாகனிடம் கூற்று நிகழ்த்துவதாகவே ''விரைந்து தேரைச் செலுத்துக, தலைவி தனியே காத்திருப்பாள்''[191] என்று கூறுமிடத்தும், ''பேர் இசை ஊர்திப் பாகர் பாங்கினும்''[192] (மிக்க சிறப்புடைய ஊர்திகளை ஓட்டும் பாகர்களிடம் பேசுதல்) வெற்றி பெற்றுத் திரும்பும் நிலையில் மகிழ்வுடன் பேசும் போதும் என வரும் இரண்டு கூற்றுக்களிலும் தலைவனே பாகர்களிடம் கூற்று நிகழ்த்துவதாகச் சுட்டப்பட்டுள்ளது. இது தலைவனின் கூற்றே தவிர, பாகனின் கூற்றல்ல. பாகனைப் பற்றிய செய்தி மட்டுமே தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளது.

பிற்றைய இலக்கணங்களில் பாகன்

நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூற்களில் மும்மூன்று நூற்பாக்களில் பாகனைப் பற்றி செ

சய்திகள் சுட்டப்பட்டுள்ளன. அதில் பாகனுக்குரிய நாநான்கு கூற்றுகளானதை "i)தலைவியிடம் வாயிலை ஏற்றுக் கொள்ளக்கூறுதல், ii)வாயிலைத் தக்க வித த்தில் அமைத்துக் கொடுத்தல், iii)தலைவன் மேல் தலைவி கொண்ட ஊடலை த் தீர்த்தல், iv)வினையின் பொருட்டு அதனை முடித்து மீளும் தலைவன் தன் ஊர் தொலைவில் உள்ளதே, தலைவியைக் காண இன்னும் நேரம் அதிகமாகுே ம எனக் கூறும்போது வருந்தாதீர். தலைவரே விரைவில் சென்றுவிடலாம் என ப் பாகன் கூற்று நிகழ்த்துவதாக"[193] நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமு ம் சுட்டுகின்றன.

வாயில்களில் ஒருவராக

தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே நிகழும் ஊடலைத் தீர்த்து வைக்கும் வாயில்களாக வரும் பதினைந்து மாந்தர்களில் "எட்டாம்"[194] மாந்தர ாகப் பாகனை நம்பியகப்பொருளும், இலக்கண விளக்கமும் சுட்டுகின்றது. சுவ ாமிநாதம் பதின்மூவரில் "ஐந்தாம்"[195] மாந்தராகவும் சுட்டுகின்றது.

கூற்றுக்குரிய மாந்தருள் பாகன்

கற்பினுள் கூற்றுக்குரிய மாந்தர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு அக இலக்கணங்களும் வேறுபடுத்திக் காட்ட மாறனகப்பொருள் கூற்றுக்குரிய பதினைவரில் பாகரையும் பதினான்காம் மாந்தராக,

"பாகரும் தூதரும் உரியர்பகர் தற்கே"[196]

என்றவாறு சுட்டுகின்றது. பாகரையும் கூற்றுக்குரியோராக இந்நூல் மட்டுமே சுட்டுகின்றது.

பிரிவுழி மகிழ்ச்சித் துறையில் பாகன்

களவில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் எ ன்றவாறு செல்லும் பல துறைகளில் ஒரு துறையாகப் பிரிவுழி மகிழ்ச்சி சுட்டப் படுகின்றது. தலைவி, தலைவனைப் பிரிந்து தன் தோழியர் கூட்டத்தை நோக்கி ச் செல்லும்போது தலைவனைப் பலமுறை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொ ண்டு செல்வதை எண்ணி மகிழ்ந்து தலைவன் தலைவிக்குத் தன்மேல் உள்ள மி குதியான காதலை வியந்து தனக்குத்தானே கூறிக்கொண்டும், "பாகனிடம் தலை லவியைப் பற்றி தலைவியின் அச்செயலைப் பற்றிக்கூறும் பொழுதும் பாகன் இ

டம்பெறுகின்றான்''[197] என நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் சுட்டுகின்றது. இப்பாகனை மாறனகப்பொருள் மட்டும் ''தேர்ப்பாகன்''[198] எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் இப்பிரிவுழி மகிழ்ச்சியின் இக்கூற்றில், இவ்விடத்தில் தலைவனே பாகனொடு உரையாடுகின்றான், பாகன் கூற்று நிகழ்த்தவில்லை.

தலைவன் பாகனை முனிதல்

வினைமுடித்து தலைவியைக் காணச்செல்லும் ஆவலில், தலைவன் சினம் கொள்ளும் போது, அத்தலைவனின் சினத்திற்கு உள்ளாகுவதாக எனப் பாகனைப் பற்றி, ''தன் தேரை முந்திக்கொண்டு எல்லாத் தேர்களும் செல்லத் தன் தேர் விரைவின்றி அப்பல தேர்களின் பின்னே ஏன் செல்கிறது என''[199] மாறனகப்பொருள் மற்றுமோர் புதுச்செய்தியைச் சுட்டுகின்றது.

தொகுப்புரை

- கூத்தர்க்கு உரிய கூற்றுக்களில் தலைவன் தலைவியின் செல்வநிலையை வாழ்த்தல், தலைவன் தொலைவில் உள்ளதை உணர்த்தல் என்ற இரண்டு கூற்றுகளும் நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் சுட்டும் புதுக்கூற்றுகள் ஆகும்.

- நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் என்ற இரண்டு நூல்களும் விறலிக்கென நான்கு, நான்கு கூற்றுகளைச் சுட்டியிருப்பது விறலி சார்ந்த கூற்றுக்கோட்பாட்டு வளர்ச்சியாகும்.

- கூற்றுக்குரியோரில் பரத்தை ஒருவராகச் சுட்டப்பட்டுள்ள போதும் அவர்க்கெனக் கூற்றுகளைத் தனியாக அமைக்காததும் கூற்றுக்குரியோரில் ஒருவராகக் காமக்கிழத்தியரைச் சுட்டாத போதிலும், அவர்க்கெனத் தனியாகக் கூற்றுக்களைச் சுட்டியிருப்பதும் தொல்காப்பியத்தின் சிறப்பாகும்.

- நம்பியகப்பொருள் பரத்தையர்க்கென ஐந்து கூற்றையும், காமக்கிழத்தியர்க்கென மூன்று கூற்றையும் சுட்டுவதையே எண்ணிக்கையில் நிரல் மாற்றி மாறனகப்பொருள் மொழிகின்றது.

- நம்பியகப்பொருளும், இலக்கண விளக்கமும் அறிவர்க்கு என ஐந்து கிளவித் தொகைகளைச் சுட்டினாலும் தொல்காப்பியர் சுட்டிய இரண்டு கூற்

றுக்களுக்குள்ளே தான் இவ்வைந்து கிளவித் தொகைகளும் அடக்கம் என லாம். கால மாற்றத்தால் ஏற்பட்ட விரிவே எனினும் வளர்ச்சி இல்லை.

- நற்றாய் கூற்று நிகழ்த்தும் மாந்தருள் கண்டோரும் ஒருவர் என்ற ஒரு செய் தியை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.
- நம்பியகப்பொருள் வாயில்களுக்கு உரியதாகச் சுட்டிய பத்துக் கூற்றுகளு ம் தொல்காப்பியர் சுட்டிய இரண்டு கூற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வை, புதிதானவை. இவை வாயில்கள் பற்றிய கூற்றுக் கோட்பாட்டின் வ ளர்ச்சி.
- நற்றாய் தன்னுள்ளே இரங்கல், நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல், நற்ற ாய் புலம்பல் என்ற மூன்று கூற்றுக்களும் இலக்கண விளக்கம் சுட்டும் புது க்கூற்றுகள் ஆகும்.
- தமிழ்நெறி விளக்கம் அறத்தொடு நிலையில் இளையோர்க்கெதிர்தலும் எ ன்ற ஒரு கிளவித்துறையை இளையோர்க்குரிய கூற்றாகச் சுட்டினாலும் இ க்கூற்று இளையோர்க்கு அறத்தொடு நிற்கும் மாந்தர் உரைக்கும் கூற்றாக வே சுட்டப்பட்டுள்ளது.
- பாகனைத் தொல்காப்பியர் தலைவன் கூற்றில் ஓரிடத்தில் மட்டும் சுட்ட நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், இரண்டு நூல்களும் நான்கு கூற் றுக்களை சுட்டுவது பாகன் சார்ந்த கூற்றுக் கோட்பாடு வளர்ச்சியாகும்.

சான்றெண் விளக்கம்

1. தொல்.பொருள்.செய்.181.
2. இரா.ஈஸ்வரி, தொல்காப்பியத்தில் கூற்றுக்கோட்பாடு, ப.13.
3. தொல்.பொருள்.செய்.183.
4. மேலது., 181.
5. மேலது., 182, தொல்.பொருள்.கற்.52.
6. நம்.அக.213,214, 68, மாற.அக.241, 242, 77, இலக்.வி.562,436, சுவாமி.1 24,84.
7. நம்.அக.68, மாற.அக.77, இலக்.விள.436, சுவாமி.124.
8. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் பொருளதிகாரம், களவியல் உரைவ ளம், ப.307.
9. மாற.அக.216,
10. சுவாமி.113.
11. தொல்.பொருள்.செய்.181,182, தொல்.பொருள்.கற்.52.
12. நம்.அக.213,214,68, மாற.அக.241,242,77, இலக்.வி.562,436, சுவாமி.124 .84.
13. தொல்.பொருள்.செய்.179.
14. இறை.அக.3.
15. தமி.நெறி.விள.16.
16. நம்.அக.136.
17. கள.கா.23.
18. மாற.அக.157, இலக்.வி.504, சுவாமி.91.
19. நம்.அக.109.
20. தொல்.பொருள்.செய்.178.
21. நம்.அக.101.
22. நம்.அக.137.
23. மாற.அக.157, இலக்.வி.505.
24. இரா.செகதீசன், தொல்காப்பியப் பொருளதிகார வழி அகநானூறு – ஓர் ஆய்வு, ப.279.

25. நம்.அக.139, மாற.அக.159.

26. சுவாமி.91.

27. நம்.அக.144, மாற.அக.164, இலக்.வி.509, சுவாமி.93.

28. முத்.வீரி.78.

29. தொல்.பொருள்.களா.23:17–19

30. தொல்.பொருள்.களா.23:20,22,16,23,24,27,28.

31. டாக்டர் செ.வை.சண்முகம் (ப.ஆ.), சுவாமிநாதம், ப.187.

32. தொல்.பொருள்.களா.23:22.

33. நம்.அக.168, மாற.அக.188, இலக்.வி.524, முத்.வீரி.850, சுவாமி.105.

34. தொல்.பொருள்.களா.23:29–38.

35. தமி.நெறி.விள.19.

36. நம்.அக.166.

37. மாற.அக.186.

38. முத்.வீரி.851.

39. சுவாமி.105.

40. தொல்.பொருள்.களா.23:26.

41. சுவாமி.103.

42. தொல்.பொருள்.களா.23:43.

43. தமி.நெறி.விள.22.

44. களா.கா.48.

45. தொல்.பொருள்.களா.23:25.

46. தொல்.பொருள்.கற்.9:1–4.

47. நம்.அக.174.

48. தொல்.பொருள்.அகத்.39:1–8.

49. தமி.நெறி.விள.23.

50. களா.கா.53.

51. நம்.அக.182.

52. மாற.அக.208.

53. இலக்.வி.536.

54. முத்.வீரி.850.

55. சுவாமி.111.

56. தொல்.பொருள்.கற்.9:1–4.

57. தொல்.பொருள்.கற்.9:5–28.

58. தொல்.பொருள்.கள.34.

59. மேலது., 25.

60. ஞா.மாணிக்கவாசகன்,தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும், ப.42 5.

61. தொல்.பொருள்.கள.35.

62. தொல்.பொருள்.கற்.52.

63. தொல்.பொருள்.பொருளி.3.

64. தொல்.பொருள்.உவமை.33.

65. தொல்.பொருள்.செய்.181.

66. மேலது., 182.

67. நம்.அக.127, மாற.அக.147, இலக்.வி.495.

68. தமி.நெறி.விள.15.

69. நம்.அக.127, மாற.அக.147, இலக்.வி.495.

70. கள.கா.28.

71. முத்.வீரி.836.

72. சுவாமி.87.

73. கள.கா.26,27.

74. நம்.அக.137.

75. தொல்.பொருள்.அகத்.17.

76. மாற.அக.208.

77. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், செய் யுளியல்–4, ப.187.

78. நம்.அக.205,206, மாற.அக.230,231, இலக்.வி.554,555, சுவாமி.120,121,1 22.

79. நம்.அக.206, மாற.அக.232, இலக்.வி.555.

80. நம்.அக.170, மாற.அக.190, இலக்.வி.527, சுவாமி.107.

81. தொல்.பொருள்.கற்.5:49–50,51–52,55–56.

82. இரா.செகதீசன், தொல்காப்பியப் பொருளதிகார வழி அகநானூறு – ஓர் ஆய்வு, ப.273.

83. தொல்.பொருள்.களவ.17.

84. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், உரைவளம், களவியல், ப.157.

85. மேலது., ப.16.

86. இரா.செகதீசன், தொல்காப்பியப் பொருளதிகார வழி அகநானூறு – ஓர் ஆய்வு, ப.38.

87. மேலது., ப.38.

88. மாற.அக.167.

89. நம்.அக.147, இலக்.வி.495.

90. சுவாமி.95.

91. நம்.அக.141,154.

92. தொல்.பொருள்.கள.21.

93. முத்.வீரி.849.

94. நம்.அக.168, மாற.அக.188, இலக்.வி.525, முத்.வீரி.849, சுவாமி.105.

95. நம்.அக.164.

96. தமி.நெறி.விள.23, நம்.அக.182, கள.கா.50, மாற.அக.208, இலக்.வி.547, முத்.வீரி.850, சுவாமி.111,112.

97. முத்.வீரி.850.

98. தொல்.பொருள்.கள.22:1–5.

99. நம்.அக.127, மாற.அக.147, இலக்.வி.495, சுவாமி.87.

100. நம்.அக.174, மாற.அக.198, இலக்.வி.537, சுவாமி.108.

101. நம்.அக.206,207, மாற.அக.231, 232, இலக்.வி.535.

102. முத்.வீரி.861, சுவாமி.121.

103. சுவாமி.122.

104. முத்.வீரி.861.

105. மு.இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப.31.

106. தொல்.பொருள்.செய்.182, தொல்.பொருள்.கற்.52, தொல்.பொருள். புற.30, தொல்.பொருள்.கற்.9.

107. தொல்.பொருள்.கற்.28.

108. சுவாமி.122.

109. மாற.அக.77.

110. இலக்.வி.463.

111. மாற.அக.230, சுவாமி.123.

112. தொல்.பொருள்.செய்.182, தொல்.பொருள்.கற்,52, தொல்.பொருள்.கற்.2 7,28,29, தொல்.பொருள்.புற.30.

113. தொல்.பொருள்.கற்.27,28.

114. நம்.அக.214, மாற.அக.242, இலக்.வி.562, சுவாமி.124.

115. நம்.அக.68,214, மாற.அக.77, 242, இலக்.வி.436,465, சுவாமி.84,124.

116. இலக்.வி.465.

117. தொல்.பொருள்.செய்.182.

118. தொல்.பொருள்.புறத்.30, தொல்.பொருள்.கற்.52, தொல்.பொருள்.செய்.1 82, தொல்.பொருள்.கற்.9.

119. நம்.அக.214, மாற.அக.242, இலக்.வி.562, சுவாமி.124.

120. இலக்.வி.464.

121. ஆ.சிவலிங்கனார், பொருளதிகாரம், உரைவளம், கற்பியல், ப.293.

122. மாற.அக.268.

123. சுவாமி.124.

124. தொல்.பொருள்.கற்.5,6,10,31,46, பொருளி.28,37,39, செய்.182,190.

125. தொல்.பொருள்.கற்.6.

126. தமி.நெறி.வி.25.

127. கள.கா.45.

128. நம்.அக.105,106.

129. நம்.அக.105,106,107, இலக்.வி.473, 474,475.

130. நம்.அக.106, இலக்.வி.474.

131. நம்.அக.107, இலக்.வி.475.

132. நம்.அக.205, இலக்.வி.554.

133. நம்.அக.105, இலக்.வி.473.

134. மாற.அக.230.

135. சுவாமி.119.

136. நம்.அக.68, மாற.அக.77, இலக்.வி.436, சுவாமி.84.

137. நம்.அக.214, மாற.அக.242, இலக்.வி.562, சுவாமி.124.

138. தமி.நெறி.விள.23.

139. நம்.அக.68, மாற.அக.77, நம்.அக.214, மாற.அக.242.

140. இலக்.வி.436,562, சுவாமி.84,124.

140. ச.திருஞானசம்பந்தர், அகப்பொருள் விளக்கம், ப.137.

141. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ,) மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையும், ப.199.

142. முத்.வீரி.850.

143. சுவாமி.84,124.

144. சுவாமி.112.

145. தொல்.பொருள்.கற்.52.

146. நம்.அக.68, மாற.அக.77, இலக்.வி.436, சுவாமி.84.

147. தொல்.பொருள்.கற்.26.

148. மேலது., 26.

149. மேலது., 37.

150. மேலது., 38.

151. மேலது, 45, தொல்.பொருள்.செய்.190.

152. தொல்.பொருள்.செய்.191.

153. இறை.அக.54,55.

154. நம்.அக.95.

155. மேலது., 96.

156. மேலது., 98.

157. மேலது., 102.

158. தொல்.பொருள்.கள.21, தொல்.பொருள்.கற்.6.

159. தொல்பொருள்.கற்.5, தொல்.பொருள்.கற்.6.

160. தொல்.பொருள்.கற்.11.

161. மாற.அக.118.

162. தமி.நெறி.விள.25,

163. நம்.அக.140.

164. நம்.அக.206.

165. நம்.அக.204, மாற.அக.229, இலக்.வி.553, சுவாமி.119.

166. இரா.செகதீசன், தொல்காப்பியப் பொருளதிகார வழி அகநானூறு – ஓர் ஆய்வு, ப.75.

167. தொல்.பொருள்.கள.26.

168. இறை.அக.28.

169. தமி.நெறி.விள.22,23,25.

170. நம்.அக.53.

171. மேலது., 183.

172. மேலது., 185.

173. நம்.அக.191.

174. மேலது., 194.

175. மாற.அக.204.

176. மேலது., 62.

177. மேலது., 214.

178. மேலது., 219.

179. மாற.அக.220,242,263,264.

180. இலக்.வி.537.

181. முத்.வீரி.850.

182. சுவாமி.110,112,113.

183. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், உரைவளம், ப.293.

184. நம்.அக.68, மாற.அக.77, இலக்.வி.436, சுவாமி.84.

185. மாற.அக.119.

186. தொல்.பொருள்.கற்.52.

187. தமி.நெறி.விள.22.

188. நம்.அக.108, இலக்.வி.476.

189. நம்.அக.98, இலக்.வி.466.

190. சுவாமி.84.

191. ஞா.மாணிக்கவாசகம், தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும், ப.43 8.

192. தொல்.கற்.5:48.

193. நம்.அக.102, இலக்.வி.470.

194. நம்.அக.68, இலக்.வி.436.

195. சுவாமி.84.

196. மாற.அக.243.

197. நம்.அக.131, மாற.அக.151, இலக்.வி.499.

198. மாற.அக.151.

199. மாற.அக.357.

இயல்-5

அகக்கோட்பாட்டில் புது மரபுகளும் மாற்றங்களும்

பண்டைய காலந்தொட்டு இன்று முதல் தொன்று தொட்டு வந்த ஒ ன்றைக் குறிப்பதாக மரபு என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இலக்கண விதி முறைகள் தொன்றுதொட்டு அமைந்து வருவன என்பதை உணர்த்த தொல்காப் பியர் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். மேலும் சொற்களின் இயல்பினை உ ணர்த்துவதற்காகவும் மொழியின் இயற்கையைக் காட்டுவதற்காகவும் அவர் இ ச்சொல்லைப் பயன்படுத்துகிறார். சில இடங்களில் இலக்கியக் கற்பனைப் போ க்கினை உணர்த்தவும் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் சுட்டியுள்ள அகப்பொருள் கோட்பாடுகள் அதன் வடிவிலிருந்து புதிதாக அல்லது வளர்ச்சி பெற்ற நிலையில் காணப்படும் தன்மை மக்குப் புதுமரபுகள் என்று பெயர். அதேநிலையில் தொல்காப்பியரின் மரபுகள் , கோட்பாடுகள், அதன் தன்மையிலிருந்து சிறிதோ, பெரிதோ, முற்றிலுமோ வே வறுபட்டுக் காணப்படுதல் மரபு மாற்றம் ஆகும். இத்தகைய புதுமரபுகளும் ம ாற்றங்களும் பிற்றைய இலக்கணங்களில் இடம்பெற்றுள்ள நிலையை இவ்விய ல் ஆராய்கின்றது.

தொல்காப்பியத்தில் மரபு என்ற சொல்லாட்சி

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும் அக இலக்கியக் கோட்பா டுகளை உள்ளடக்கிய பொருளதிகாரத்தில் மரபென்ற சொல்லாட்சி ஐம்பத்தை ந்து இடங்களில் காணப்படுகின்றது.

மரபு என்பதன் விளக்கம்

மரபு என்பதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலரும் பல வி ளக்கங்களைத் தருகின்றனர். இளம்பூரணர் ‘மயங்கா மரபின் எழுத்துமுறை கா ட்டி’ என்ற பாயிரத்தொடருக்கு, “மயங்காத முறையானே எழுத்திலக்கணத்தி னை வேறு தெரிவித்து”[1] என்பர். இதனால் மரபு என்பதற்கு முறை எனப் பொ ருள் கொண்டிருத்தல் தெளிவாகும்.

நச்சினார்க்கினியரும் 'மயங்கா மரபு' என்பதற்கு ''மயங்கா முறைமை'' என்றே பொருள் கொள்வர். பேராசிரியர் செய்யுளியல் முதல் நூற்பா உரையில், ''மரபென்பது காலமும் இடமும் பற்றி வழக்குத் திரிந்தக்காலும், திரிந்தவற்றுக்கேற்ப வழுப்படாமைச் செய்வதொரு முறை''[2] என விளக்குவர். மேலும் மரபியல் முதல் நூற்பாவின் உரையில் ''மரபென்ற பொருண்மை என்னையெனின் கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ், செய்யுளியலுள் (செய்யுளியல்-

1 உரை) மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமன்றி, இருதிணைப் பொருட்குணனாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும் உயர்திணை நான்கு சாதி பற்றிய மரபும், அவை பற்றி வரும் உலகியன் மரபும், நூன் மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது''[3] என சே.செந்தமிழ்ப்பாவை அவர்கள் பேராசிரியரின் கருத்தை எடுத்துரைப்பர். இவ்வுரையாசிரியர்கள் விளக்கத்தினடிப்படையில் மரபு என்பது முறைமை என்பதும், அது செய்யுள் மரபு, வரலாற்று மரபு, சாதி மரபு, இன மரபு, உயர்திணை மரபு, அஃறிணை மரபு, உலகியல் மரபு எனப் பலவாறாகும் என்பதும் புலனாகும்.

ஐந்திணை ஒழுக்கத்தில் புதுமரபு

ஐந்திணைப் பெயரைப் பற்றிச் சுட்டும் பொழுது ''பாலைத்திணையின் பெயரையும் சுட்டியிருப்பது புதுமையாகும்''[4] என நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஆறு நூல்களும் மொழிகின்றன. மாறனகப்பொருள் பெருந்திணையிலும் ''முதலில் பொருத்தமில்லாத விருப்பமாக இருந்து பின் பொருத்தமுடைய விருப்பமாக மாறி அமைவது பெருந்திணை''[5] என ஒரு புதிய மரபை மாறனகப்பொருள் தொல்காப்பிய பெருந்திணைக்கான ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம், தேறுதல் ஒழிந்த கமத்து மிகுதிறம், மிக்ககாமத்து மிடல் ஆகியவற்றிற்கு மாறாகச் சுட்டுகின்றது.

திணைகளைப் பகுத்தலில் புதுமரபு

முத்துவீரியர் அன்பின் ஐந்திணைகளில் நாற்திணைகளை கைகோளின் இரண்டு வகைகளாகிய களவு, கற்புக்குரியனவாகச் சுட்டுகின்றார். அவர், ''

மேலைமலைப் பகுதியாக (குடவரை) குறிஞ்சித்திணையும், கீழைக்கடலாகிய பரப்பை உடைய (குணகடல்) நெய்தல் திணையும் களவு செய்தலுக்குச் சிறந்த திணைகள் எனவும்''[6]

***"நன்னில மருதமுந் தென்னில முல்லையுந்
துன்னிரு கற்பொடு தோன்று மென்ப"   (முத்.வீரி.42)***

என்பதில் மருதமும், முல்லையும் கற்புப் புணர்ச்சி சிறத்தலுக்கு உரிய திணைகள் என்றும் புதுமரபாகச் சுட்டுகின்றார். கைக்கிளைக்குரிய தலை மக்களை மறையோர், மன்னவர், வணிகர், சூத்திரர் என நால்வராகப் பகுத்துச் சுட்டுவதும் புதுமை. ''கைக்கிளையை நால்வகைத் தலைமக்களுமன்றி ஐந்து நிலத்தும் உறையும் கீழ்நிலை மக்களுள் தலைமக்களும்''[7] பெறுவர் என்பதுவும் புதுமை. இயற்கைப் புணர்ச்சிக்குரிய சிறப்பு விதியையும் இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தின் வழி எய்தும் போது முயற்சி ஏதுமின்றித்தாமே முடிவதாகும் என்பதுவும் தொல்காப்பியர் சுட்டாத ஒன்று.

முதற்பொருளில் புதுமரபு

முதற்பொருள் நிலம், பொழுது என இரண்டு வகைப்படும். இவ்விரண்டில் பெரும்பொழுது கார், கூதிர், பனிஎதிர் (முன்பனி), வேனில் (இளவேனில், முதுவேனில்), பின்பனி என அறுவகை சிறுபொழுது மாலை, யாமம், வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல் அறுவகை எனத் தொல்காப்பியர் சுட்டுவர்.

பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள் அறுவகைப் பெரும்பொழுதில் இளவேனிலை ''சிறப்பு வாய்ந்த இளவேனில் என்பதாக சீர்இளவேனில்''[8] என அடை கொடுத்துச் சுட்டுவது புதுமரபாகும். முத்துவீரியமே புதுமரபினும், புதுமரபாகப் பெரும்பொழுது ஆறினையும், அதற்குரிய மாதங்களையும்

***"அவற்றுள்
பருவங் காரே கூதிர் முன்பனி
பின்பனி யிளவேனின் முதுவேனி லாறே"   (முத்.வீரி.11)***

***"அவைதாம்
ஆவணி முதலா ஆடி யீறாக
இரண்டிரண் டாக வேற்கு மென்ப"   (முத்.வீரி.12)***

என தனித்தனி நூற்பாக்களாகத் தெளிவுபடுத்தி உரைத்திருப்பது புதுமரபாகும்.

சிறுபொழுதில் புதுமரபு

முதற்பொருளில் இரண்டாவதான ஒருநாளின் கூறாகிய சிறுபொழு து பற்றித் தொல்காப்பியர் சுட்டும் போது அது ஆறெனப் (மாலை, யாமம், வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல்) பெரும்பொழுதோடு சேர்த்தே கூறுகின் றார். சிறுபொழுது பற்றிச் சுட்டும்போது மாறனகப்பொருளும் இலக்கண விள க்கமும் அறுவகைச் சிறுபொழுதைப் பற்றிய செய்திகளோடு சிறுபொழுதிற்குரி ய கால எல்லையையும் ''சிறுபொழுது அறுபது நாழிகை அளவிற்றாய் ஒவ்வொ ரு நாளிலும் காலை, நண்பகல், பிற்பகல், மாலை, யாமம், வைகறை என்று பப் பத்து நாழிகை அளவினைக் கொண்ட ஆறு பிரிவுகளை உடையது. இரண்டரை நாழிகை ஒரு மணியளவாகக் கணக்கிடப்பெறும்''[9] எனக் கூறியிருப்பது புதுமரபாகும்.

தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் இச்சிறுபொழுதுகள் ஒவ்வொன்றிற்குரிய நிகழ்ச்சிகளையும் அறுவகைச் சிறுபொழுதைச் சுட்டியபின் அந் நூற்பாவிலேயே திணை அடிப்படையில் அடுத்தடுத்து மொழிந்திருப்பது அக இலக்கண அடிப்படையில் புதுமரபு ஆகும். சான்றாக முல்லைத்திணையின் சிறுபொழுதாகிய மாலைக்குரிய நிகழ்ச்சிகளை,

> **''மாலைக்கு உரிமை மலர்தல் உற்பலம் புள்**
> **சோலை சேர்ந்து ஒலித்தல் சுரபி கரைதல்**
> **துன்அடைத் தாமரை சுளித்துஎனக் கூம்பல்**
> **கன்னடம் கம்போதி கனியப் பாடலே''**
>
> ***(தொன்.விள.31:3-6)***

எனக் குறிப்பிடுவது சுட்டத்தக்கது.

திணைக்குரிய பொழுதுகளுள் புதுமரபுகள்

தொல்காப்பியர் கார்காலமாகிய பெரும்பொழுதும் மாலைப் பொழுதாகிய சிறுபொழுதும் முல்லைத் திணைக்குரிய இருபொழுதுகள் என்கிறார். தொல்காப்பியரின் கார் என்ற இப்பெரும்பொழுதை ''நம்பியகப் பொருளும், இலக்கண விளக்கமும் மல்குகார்''[10] என்ற சொல்லாட்சியால் மிகுந்த கார்கால

ம் எனச் சுட்டுகின்றது. மேலும் மாறனகப்பொருள் "முன்பகர் கார்"[11] எனவும், சுவாமிநாதம் "முகப்புருகார்"[12] எனவும் அடைகள் கொடுத்துச் சுட்டியிருப்பதும் புதுமரபுகள் ஆகும்.

தொல்காப்பியர் அன்பில் ஐந்திணையில் பாலைத்திணைக்குரிய நிலத்தைச் சுட்டாது விடுத்திருந்தாலும் அதற்குரிய "சிறுபொழுதுகளை (நண்பகல், வேனில், பின்பனி)"[13] எனச் சுட்டுகின்றார். சுவாமிநாதம் "வேனில் காலத்தை 'மகிழ்வேனில்' எனச்சுட்டி 'மகிழை' அடை கொடுத்து வேனில் காலத்திற்குச் சுட்டியிருப்பதுவும்"[14] புதுமரபாகும். தலைவன்,தலைவி இருவரும் களவில் இதுவரைக் காதலர்களாக இருந்த அவர்கள் கற்பு வாழ்வில் ஒன்றிணைய மணமுடித்துக்கொள்ள எண்ணி இருவரும் உடன்போக்கில் ஒன்றிணைந்து செல்வது அவர்களுக்கு மகிழ்வைத் தருவதால் அக்காலத்தை 'மகிழ்வேனில்' எனச் சுவாமிக்கவிராயர் சுட்டியிருக்கின்றார்.

கருப்பொருளில் புதுமரபு

ஒரு செய்யுள் சிறந்து விளங்குவதற்கு அச்செய்யுளில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்று பொருட்களும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இப்பொருட்கள் அச்செய்யுள் எந்தத் திணையைச் சார்ந்தது என்பதனை அறியவும் பயன்படுகின்றது. ஒரு திணையைச் சார்ந்த மக்களைப் பற்றிய செய்யுள் அமைக்க வேண்டும் எனில் அதில் அத்திணையைச் சார்ந்த முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பொருட்களும், அல்லது மூன்றில் ஏதாவது இரண்டு பொருட்களும் அமைந்திருக்க வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் முப்பொருளில் இரண்டாவது பொருளான கருப்பொருளைப் பற்றிய செய்திகளில் தொல்காப்பியர் "தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ்"[15] "பூ, (ஆயர், வேட்டுவர்) மக்கள்"[16] எனக் கருப்பொருட்களை எண்ணிக்கையில் பத்தென மொழிகின்றார்.

தொல்காப்பியர் கூறியுள்ள கருப்பொருள் எண்ணிக்கையை பிற்றைய இலக்கணங்களான "நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஆறு நூல்களும் நான்கு பொருட்களைச் சேர்த்து பதினான்கென மொழிந்திருப்பது"[17] *புது மரபாகும். சான்றாக அப்புதுமரபை நம்பியகப்பொருள்,*

"ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு
ஊர்நீர் பூமரம் உணாப்பறை யாழ்பண்
தொழில்எனக் கருஈர் எழுவகைத்து ஆகும்" (நம்.அக.19)

என மொழிந்துள்ளது. தொல்காப்பியர் நிலத்தவர்களைப் பொதுவாக மக்கள் எனவே கூறுகின்றார். ஆனால் நம்பியகப்பொருள் மக்களை இரண்டாக உயர்ந்தவர், இழிந்தவர் எனப் பிரித்து ஊர், நீர், பண் என்ற மூன்று பொருட்களையும் சேர்த்துக் கருப்பொருள் பதினான்கென உரைக்கின்றது.

ஐந்திணைகளில் ஒவ்வொரு திணைகளுக்கும் உரிய கருப்பொருட்கள் பதினான்கைத் தனித்தனியாக,

"விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி
கறையடி சீயஞ் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தள்
ஆரந் தேக்ககில் அசோகம் நாகம்
வேரல் ஐவனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ்
வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரல்
பைந்திணை காத்தல் செந்தேன் அழித்தல்
செழுங்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே"
(நம்.அக.20)

என்றவாறு சுட்டியுள்ளதும் புதுமை. கைக்கிளை நிகழுங்காலத்தை "கிளை நரம்பினை உடைய யாழினையுடைய காந்தருவர் விரும்பும் களவிற் புணர்ச்சி முன் கைக்கிளை நிகழ்தல் கடனென்று சொல்லுவர்"[18] *எனச் சுட்டுவதும் புதுமை. வெ*

தால்காப்பியர் சுட்டிய கருப்பொருளில் ஒன்றான உணவை மாறனகப்பொருள் "துப்பு, அவி எனப் புதிய சொல்லாட்சியில் கூறுகின்றது."[19] ஏனெனில் துப்பு எ ன்பது வலிமையான அவி என்பது சோற்றைக் குறிக்கும் சொற்கள். ஆனால் மா றனகப்பொருள் துப்பு, அவி என்ற இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வலிமைய ான சோறு எனக் குறிக்கின்றது.

தொன்னூல் விளக்கமும், முத்துவீரியமும் கருப்பொருட்கள் பதினா ன்கில் "தலைமக்களைச் செல்வர் என்ற சொல்லாலும், குடிமக்களைச் சேர்குடி என்ற சொல்லாலும்"[20] குறிப்பிடுவதும் புதுமரபே ஆகும். தொல்காப்பியர் கரு ப்பொருளை பத்து வகையாகக் கூறியிருப்பினும் அன்னவை பிறவும் என ஒரு வரையறையின்றி இன்னும் கருப்பொருள்கள் உள எனச் சுட்டியிருப்பார். தொ ல்காப்பியத்திலிருந்து புதிதாக நம்பியகப்பொருள் தொடங்கி சுவாமிநாதம் வ ரை ஆறு நூல்களும் கருப்பொருட்கள் பதினான்கெனக் கூறியிருப்பதே புதுமை எனினும் சுவாமிநாதம்.

"சொற்றதெய்வம், உயர்ந்தோர், அல் லோர்விலங் கூர்நீர்புட்,
பகுந்தமரம், பூஉணவு பறை, யாழ்பண் தொழிலாம்
பதினான்கும் பிறவுமேகருப் பொருளாக் குகவே"

(சுவாமி.73:6-8)

என்பதில் தெய்வம் தொடங்கி தொழில் வரை உள்ள பதினான்கு பொருளும் பிறவும் கருப்பொருளாக ஆக்கம் பெறுபவை எனக் கூறியிருக்கிறார். இதில் பிற வுமே என்ற சொல்லாட்சியை இவ்வாசிரியர் சுட்டியிருப்பது கருப்பொருட்கள் பதினான்கைத் தவிர இன்னும் பிற உள்ளன என்பதைப் புலப்படுத்துகின்றது. இது புதுமரபிலும் புது மரபு ஆகும்.

பிரிவு

களவு வாழ்க்கையில் தலைவனுக்கென இரு பிரிவுகள் உண்டு. 1.ஒரு வழித்தணத்தல், 2.வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் என்பனவாகும். கற்புப் பிரிவில் தொல்காப்பியர் ஓதல், பகை, தூது, காவல், பொருள்வயிற்பிரி வு, பரத்தையர் பிரிவு என அறுவகைப் பிரிவைச் சுட்டுகின்றார்.

வரைபொருட் பிரிவுக்குக் காலவரையறை

களவுப் பிரிவுகளாகிய ஒருவழித்தணத்தல், வரைவுடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் இரண்டில் ''வரைவுடை வைத்துப் பொருள்வயிற் பிரிவுக்கான கால வரையறை இரண்டு மாதங்களாகும்''[21] *என மாறனகப்பொருள் புதிதாக ஒரு கருத்தைச் சுட்டுகின்றது.*

முத்துவீரியம் சுட்டும் பிரிவுகள்

முத்துவீரியம் தொல்காப்பியர் சுட்டிய கற்புப் பிரிவான அறுவகைப் பிரிவினுள்ளும் சில புதுமரபுகளைச் சுட்டுகின்றது. அவை ஒவ்வொரு பிரிவுகளுக்கும் எனச் சில வகைகளைச் சுட்டுகின்றது. ''ஓதற்பிரிவின் வகைகளாக கல்வி நலங்கூறல், பிரிவு நினைவுரைத்தல், கலக்கங் கண்டுரைத்தல், காதலர் தமது வாய்மொழி கூறல் என்ற நான்கு வகைகளையும், காவற்பிரிவின் கீழ் பிரிவு அறிவுறுத்தல், பிரிவு கேட்டிரங்கல் என்ற இரு வகைகளும், பகைதணிவினை பிரிவின் கீழ் பிரிவு கூறல், வருத்தந்தணித்தல் என்ற இரண்டு வகைகளையும், வேந்தற்குற்றுழிப்பிரிவில் 16 வகைகளையும், பொருள்வயிற் பிரிவில் 20 வகைகளையும் பரத்தையற் பிரிவில்

49 வகைகளையும்''[22] *சுட்டுகின்றது.*

உயர்ந்தோர்க்குரிய தொழிலில் புதுமரபு

உயர்ந்தோர்களில் மூவராகிய அரசர், வணிகர், வேளாளர் என்பவர்கள் ''அத்திர சத்திர வித்தைத் தொழிலை (எதிரியை எவ்வாறு பணிய வைத்தல்) என்ற யானை, குதிரையின் மீதேறி போர் புரிதல் போன்ற தொழில்களை முறைப்படிக் கற்றல், நாவினால் பேசிக் கற்கும் தொழிலை ஒழிந்த போர்புரிதலுக்குரிய தொழில்களைக் கற்றல்''[23] *என்ற ஒரு புதுமரபை முத்துவீரியர் சுட்டுகின்றார்.*

பிரிவிற்குரிய புதுமரபு

தலைவன் தலைவியை நேசிக்கும் களவு வாழ்க்கையிலும் மணந்து கொண்டு நடத்தும் இல்லறமாகிய கற்பு வாழ்க்கையிலும் பொருளின் காரணமாகவும் பிற செயல்களின் காரணமாகவும் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் நிகழ்விற்குப் பிரிவு என்று பெயர். அத்தகைய பிரிவு அறுவகைப்படும். கற்புக் காலத்தில் நிகழும் அறுவகைப் பிரிவில் சில பிரிவுகளுக்குச் சில ஊர்

திகளில் செல்வதுண்டு. ஆனால் இம்மாறனகப் பொருள் ''காலிற் பிரிவிற்கும், கலத்திற் பிரிவிற்கும் பின்பனியே பெரிதும் பொருந்திய பருவமாகும்''[24] *எனப் பிரிவில் பெரும்பொழுது பற்றிய மரபைப் புதிதாகச் சுட்டுகின்றது.*

இல்லாளோடு செல்லுவதற்கு உரிய பிரிவு

அக இலக்கணங்கள் அனைத்தும் தலைவன் தலைவியைப் பிரிந்து வினையாற்றச் செல்லும் பிரிவுகளென அறுவகையைச் சுட்டுகின்றது. இவ்வறுவகைப் பிரிவையும் மேற்கொள்ளும் தலைவன் பிரிவில் செல்லும் போது மனைவியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்லுதலில்லை எனவும் சுட்டுகின்றது. இவற்றிலிருந்து மாறுபடும் விதமாக மாறனகப்பொருள் ''பொருள்வயிற் பிரிவு, தூதிற்பிரிவு, ஓதல்பிரிவு என்ற மூன்று பிரிவுகளில் மட்டும் தலைவன் தன் மனைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்வது முறையன்று''[25] *எனச் சுட்டுகின்றது. இதிலிருந்து காவல் பிரிவு, பொருள்வயிற் பிரிவு என்ற இரு பிரிவுகளிலும் தலைவன் தலைவியை உடனழைத்துச் செல்லலாம் என்ற புதுமரபை இந்நூல் தெளிவுபடுத்துகின்றது.*

அந்தணர்க்குரிய பிரிவு வரையறை

அறுவகைப் பிரிவில் நான்கு வருணத்தார்க்கு எனச் சில பிரிவுகள் உண்டெனினும் அத்தகைய பிரிவிலும் செல்லும் ஊர்திகள் அவரவர்க்கென வேறுபடும், பிரிவில் அந்தணர்க்கு ஆகாத ஓர் ஊர்தி பற்றிய புதுமரபை

,

''புலத்தில் சிறந்த புரிநூல் முதல்வர்க்குக்
கலத்தில் சேறல் கடன்அன்று என்ப'' ***(நம்.அக.84)***

என்றவாறு நம்பியகப்பொருளும், மாறனகப்பொருளும், இலக்கண விளக்கமும் சுட்டுகின்றன.

பரத்தயர் இல்சேர்வதில் புதுமரபு

''தலைவி கருவுற்றிருக்கும் காலத்தில் இன்பந்துய்க்கத் தலைவன் பரத்தையரை நாடிச் செல்வது மரபு என சான்றோர்கள் மொழிவர்''[26] *என ஒரு புதுமரபை திருக்குருகைப்பெருமாள் கவிராயர் சுட்டுகின்றார்.*

பூப்பை வெளிப்படுத்தலில் புதுமரபு

தலைவி தான் மாதப்பூப்பு அடைந்ததைப் பரத்தையர் இல்லில் இருக்கும் தலைவனுக்கு தன் தோழிகளில் ஒருத்திக்குச் செவ்வாடை, செந்நிறத்தாலான அணிகலன்கள், செந்நிறத்தாலான பூவையும் கொடுத்துத் தலைவன் இருக்கும் பரத்தையற் சேரியில் சென்று அவன் கால்களில் செப்புக்குடத்தில் கொண்டு சென்ற நீரைப்பெய்துவித்து வணங்கி வருதல் தலைவி பூப்பு அடைந்ததைத் தலைவன் அறிந்து கொள்ளுவது செவ்வணி விடுத்தல் முறையாகும்.

இம்முறையில் "தலைவி தன் பூப்பைத் தலைவனுக்கு அறிவிக்கும் புதுமரபை நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டு நூல்களும் கற்பில் தலைவிக்குரிய ஒழுகலாறுகளில் முதலாவதாக வைத்துச் சுட்டுகின்றது."[27] *இத்தகைய புதுமரபை மாறனகப்பொருளும்,*

"புனங்கொடி பூத்தமை இகுளையர் புரவலன்
மனங்கொளச் சேரிப் பரத்தையர் வாயிலின்
செவ்வணி அணிந்துசே டியைவிடுப் பதும்உள"

(மாற.அக.103)

எனச் சுட்டுகின்றது.

செவ்வணி, வெள்ளணி பற்றிய புதுமரபு

தலைவிக்கு மாதப்பூப்பு, மகப்பேற்றுப்பூப்பு ஆகியவை நடைபெறும் காலங்களில் பரத்தையரை நாடி இன்பந்துய்ப்பது அக்கால மரபு. அங்கு செல்லும் தலைவன் அங்கேயே தங்கிவிடுதலும் மரபு. அவனை பரத்தையற் சேரியிலிருந்து மீட்டுத் தன் இல்லில் சேர்க்க எண்ணிய தலைவி மாதப்பூப்பு, மகப்பேற்றுப்பூப்பு எய்திய காலங்களில் அதனைத் தன் தோழி ஒருத்தி மூலமாகத் தலைவனுக்குத் தெரிவிப்பதாகிய செவ்வணி, வெள்ளணி பற்றிய செய்திகளைப் புதுமரபாகச் சுவாமிநாதம் சுட்டுகின்றது. செவ்வணிவிடலை,

"............... செவ்வணியைப்
பாவைசே டியர்க்கு அணிதல், அணிந்துவிடல், அணியூர்ப்
பார்த்து அழுங்கல், கண்டுபரத் தையர்கள்பழித் திடலே"

(சுவாமி.119)

என்றும், மேலும் அடுத்த நூற்பாவில் உணர்த்த உணர்ந்திடும் வாயில்களையும் உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளையும் கூறுகையில் ‘‘வெள்ளணி அணிதல், அணிந்து விடுதல், அப்போது தலைவன் வாயில் வேண்டல், தலைவி நெய் யாடியது தோழி சொல்லுதல், தலைவன் மகிழ்ச்சி அடைவதைச் சொல்லுதல்’’ [28] என்ற வெள்ளணி விடுதல் தொடர்புடையதாகச் சொல்லப்பட்ட ஏழுதுறைகளும் புதுமை வாய்ந்தவை.

தலைவனைப் பிரிந்த பெண்களின் இயல்பு

பிரிவில் வாடும் பெண்களின் இயல்பை, ‘‘தலைவனைப் பிரிந்த பெண் அப்பிரிவுத் துன்பத்தால் உணவை வெறுப்பாள். சந்திரனைத் தனக்கு வெண்கொற்றக்குடையாகக் கொண்ட காமனைப் பழிப்பாள். அடிக்கடி பெருமூச்சு விடுவாள். தென்றல் எங்கே தன்னைத் தீண்டி மோகத்தீயை மூட்டிவிடுமோ எனப் பயப்படுவாள்; ஒருவிதக் காரணமும் இன்றித் தன் தோழியுடன் சினம் கொள்வாள்; நாள்தோறும் அவள் தாய் தனக்குள் வருந்தும் வண்ணம் அவளை வருத்துவாள்; வளையல் முதலிய அணிகலன்களாலும் புத்தாடைகளாலும் பூக்களாலும் தன்னை ஒப்பனை செய்து கொள்வதை மறந்தே இருப்பாள் எனத் தலைவனைப் பிரிந்த தலைவியின் செயல்களை’’[29] இவ்வாறு விளக்குகின்றார்.

கூற்றில் புதுமரபு

தொல்காப்பியர் மாந்தர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தலைவன், தலைவியின் வாழ்வியலான களவு, கற்பு நிகழ்வுகளை மாந்தர்களின் கூற்றுகள் மூலமாகவே நகர்த்திச் செல்கின்றார். செய்யுளில் அல்லது உரைநடையில் கோட்பாடுகளைச் சுட்டும் பொழுது படிப்பவர்க்கு மந்தநிலையே ஏற்படும். அதைப் பயில்பவரை முற்றிலும் போய்ச் சேராது என்ற எண்ணத்தில் ஒருவர் வினா எழுப்ப மற்றவர் வினையைச் சுட்ட என்ற நிலையிலேயே பொருளதிகாரத்தை முழுமையாகப் படைத்துள்ளார்.

கூற்று மாந்தர்களில் புதுமரபுகள்

தொல்காப்பியர் கூற்றுக்குரிய மாந்தர்களைப் பன்னிருவர் எனச் சுட்ட பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் என்ற மூன்று நூல்களும் நற்றாய் என்னும் மாந்தரைக் கூடுதலாகச் சே

ர்த்திருப்பது புதுமரபு ஆகும். இதிலிருந்தும் மற்றுமோர் புதுமரபாக மாறனகப் பொருள் "பாகரையும் தூதரையும்"[30] கூடுதலாகச் சேர்த்துச் சுட்டியிருக்கின்றது

வாயில் மாந்தர்களில் புதுமரபு

வாயில் மாந்தர்களைத் தொல்காப்பியர் பன்னிருவர் எனச் சுட்ட பிற்றைய இலக்கணங்களில் மாறனகப்பொருள், சுவாமிநாதம் என்ற இரண்டு நூல்களும் தலைவன், தலைவியிடையே தோன்றும் ஊடலைத் தீர்க்கும் மாந்தர்களாகிய பதினைந்து வகை வாயில்கள் பற்றிச் சுட்டும்பொழுது, பார்ப்பனப்பாங்கர், பாங்கர் என்ற இருவரைச் சேர்த்தே "இருபிறப்போர், இருபிறப்பாளன்"[31] என்ற புதுச்சொல்லால் சுட்டுகின்றார்.

மேலும் தலைவியைத் "துணைவி"[32] என்ற புதுச்சொல்லாலும் சுட்டுகின்றது. மேலும் தொல்காப்பியர் வாயில்கள் பன்னிருவரை தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாட்டி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் எனச் சுட்ட "சுவாமிநாதம் இவர்களோடு துணைவி, ஆற்றாமை, தற்புதல்வன் என்ற மூன்றையும் புதிதாகச் சுட்டி"[33] வாயில்கள் பதினைவர் எனச் சுட்டுகின்றன. சுவாமிநாதம் என்ற ஐந்து நூல்களும் மூவரைக் கூடுதலாகச் சேர்த்திருப்பது புதுமரபாகும்.

காதலை வெளிப்படுத்துவதில் பெண்களின் புதுமரபு

பெண்கள் தன் காதலை வெளிப்படுத்தும் முறை பற்றி,

> ***"பார்வையில் பரிவில் பழகலில் பகர்ச்சியில்***
> ***செயலில் சேயிழை சிந்தையில் கிடக்கும்***
> ***மோகம் கமழ்வது முறைஎனத் தகுமே"   (அறு.வகை.29)***

எனக் கூறுகின்றார். இதில் தலைவி தன் உள்ளத்தில் உள்ள காதல் அவளுடைய சிறப்பு நோக்காலும், தலைவன் மாட்டுக் காட்டும் தனி அன்பினாலும், அவனோடு பழகுகின்ற முறையாலும், பேசும் மொழிகளாலும், நடைமுறைச் செய்கைகளாலும் வெளிப்படும் என்கிறார்.

தலைவி மடல்ஏறல்

தலைவிக்குத் தலைவன் மேல் உண்டான காதல் நிறைவேறாது, அதற்குப் பல தடைகள் ஏற்பட்டு அதனால் தலைவி சோர்ந்து தலைவனை நினைத்

து அவனைப் பெற முடியாதோ என எண்ணி வருந்தும் பொழுது அவன்மீது கொண்ட காதல் மிகுதியாகின்றது. ''எல்லை கடந்த காதல் நிலையில் தலைவி தலைவனைப் பெற மடலேறுவேன் எனக் கூறுதல் குற்றமல்ல''[33] என ஒரு புதுமரபை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

மேலும் இம்மடலேறுதல் தொடர்பாக வடமொழியிலுள்ள ஒரு புதுமரபை ''ஆடவர் மடலேறுதலும் மகளிர் மடலேறுதலும் ஆகிய இருதிறத்து மடலேறுதலும் வடநூல்களில் உள''[34] என்றும் சுட்டுகின்றது.

கற்பில் தலைவியின் வாழ்நாள் பயணத்தில் புதுமரபு

கற்பு வாழ்வில் தன்னையும் தற்கொண்டானையும் அவனுக்கு ஏதும் நேராது பேணிப் பாதுகாத்தலே ஓர் இல்லறத் தலைவியின் கடமையாகும். அதுவே இல்லறத்தலைவிக்கு அழகும் ஆகும். ''தலைவி செவ்வணி அணிவித்துத் தலைவன் பரத்தையர் பால் இனியும் இருத்தலாகாது எனச் சேடி ஒருத்தியைத் தலைவன் இருக்குமிடம் விட அதைக்கண்டு தலைவன் பரத்தையரைத் துறந்து தலைவியை நாடிவிடுவான் என எண்ணி காமக்கிழத்தி தலைவனை இடித்துரைக்க, இதனைப் பொறுக்காத தலைவி தலைவனைத் தன் உறவினர்கள் மற்றும் தன் நண்பர்களாகிய வாயில்கள் துணை கொண்டு காமக்கிழத்தியர் மற்றும் பரத்தையரையும் பழித்துக்கூறி, மேலும் தலைவன் அங்கு காலங்கழிக்காதவாறும் புறவொழுக்கத்தில் ஈடுபடாதவாறும் அவ்வாறு தலைவன் தங்கினால் தன் கற்புக்கு மாசு ஏற்படும் எனக் கருதி அவனை மீட்டு பாதுகாத்துக் கொள்ளுதல் ஆகிய செயல்களாகத் தலைவியின் வாழ்நாள்கள் கற்புக் காலத்தில் கழிக்கப்படும்''[35] எனக் கற்பில் தலைவியின் வாழ்நாள் பயணம் பற்றிய புதுமரபை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

''மாலை நேரத்தைக் கண்டு மனமகிழ்ச்சி கொள்வதுவும், வாசனைப் பொருள் கலந்த நன்னீராடலும் புத்தாடை உடுத்தி அணிகலன்கள் பூண்டு, நெற்றிப் பொட்டுடன் கண்களில் மை எழுதி தன்னை ஒப்பனை செய்து கொள்வதும் எனக்''[36] கணவனைச் சேர்ந்திருக்கும் பெண்களின் இயல்புகள் பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றார். நம்பியகப்பொருள் பரத்தையிற் பிரிவின் ''அயல்மனைப்பிரிவு, அயற்சேரியின் அகற்சி, புறநகர்ப்போக்கு என்ற மூன்று வகைகள், காமக்கி

மூத்தியர் காரணமாகத் தலைமகன் அயல்மனைக் கண் பிரிதல், இரண்டாவது வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக்கிழத்தியையும் காதற்பரத்தையையும் விழாவினைக் காண அயற்சேரியின் கண்ணே தலைவன் பிரிவான்.''[37] இளமரக்காவில் விளையாடவும், புனலாடவும் தான் விரும்பிய பரத்தையைத் தேரில் ஏற்றிக் கொண்டு நகர்ப்புறத்திற்குத் தலைவன் செல்வான் என பரத்தையர் பற்றிச் சுட்டுவது அனைத்தும் புதுமை.

மாந்தர்களில் புதுச்சொற்கள்

கைக்கோண் மரபில் தலைவனும், தலைவியும் நேரே ஒருவரை ஒருவர் காண்பதற்குக் காட்சி என்று பெயர் அதனைச் சுட்டும்பொழுது, தலைவியை ''மின்''[38] என்ற புதுச்சொல்லால் சுட்டுகின்றது. களவிற்குரிய கிளவிகளாகிய வன்புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி பற்றிச் சுட்டும் பொழுது தலைவியை ''மாது''[39] என்றும் தலைவனைக் ''கோன்''[40] என்றும் புதுமையான சொற்களால் சுட்டுகின்றது.

அடைச்சொற்களில் சுட்டுவது

ஒரு சொல்லைச் சிறப்பாகச் சுட்டுவதற்கு அக்காலத்தில் சான்றோர்கள் சொல்லுக்குமுன் சிறப்புப் பெற்ற சொல்லைச் சொல்லி பின் இதனைக் கூறுவர். இவ்வாறு கூறுவதற்கு அடை கொடுத்துச் சுட்டுதல் என்று பெயர். தமிழ்நெறி விளக்க ஆசிரியர் தன் நூல் முழுதும் அதிக அடைச்சொற்ளையே சுட்டியுள்ளார். அவர் ஐந்திணைக்குரிய நிலத்தைச் சுட்டும் பொழுது நெய்தல் திணையை வாரி என்ற புதுச்சொல்லால் குறிப்பிடுவதோடு அதற்கு அடைச்சொல்லான ''பரப்பமை''[41] என்ற சொல்லையும் சுட்டியிருப்பது புதுமரபு ஆகும்.

அதேபோல் பெரும்பொழுதுகளைச் சுட்டும் பொழுது பனிக்காலத்திற்கு கொழுங்கார் ஒழிபனி என்ற அடைச்சொல்லையும் சிறுபொழுதில் அந்திப் பொழுதை ''இருணிலை''[42] அந்தி எனவும் அடைகொடுத்துச் சுட்டுகின்றது. மேலும் செயல் பற்றிச் சுட்டும்பொழுது முல்லை நிலத்திற்கு உரிய தொழிலாக ''ஒருக்கினம் ஓம்பல் என (ஆடு + பசு + எருமை) மூன்று இனங்களையும் ஒருக்கினம்''[43] என்ற அடைச்சொல்லால் சுட்டுகின்றது. ''குறிஞ்சித் திணைக்குரிய ே

தனழித்தல் என்ற தொழிலைச் சுட்டும்பொழுது, நிறை தேன்''[44] என அடைச்சொல்லால் புதுமையாகச் சுட்டுகின்றது.

இந்நூலாசிரியர் கற்பைப் பற்றிச் சுட்டும்பொழுது கற்பு என்பதற்கு ''அறத்தொடு நிலையும் உடன்செலவும் சேயிடைப்பிரிவும் ஆயிடைப்பிரிவும் எனப்பட்ட நான்கும் தொக்க ஒழுக்கம் முக்கட் கூட்டமுடைய கற்பென்று சிறப்பிக்கப்படும்''[45] எனக் கூறுகின்றார். இக்கற்பொழுக்கம் பற்றிய இந்நூற்பாவில் முக்கட்கூட்டம் என்று வரும் சொல்லாட்சி புதுமையானது. இச்சொல்லுக்கு இரா.இளங்குமரன் ''முக்கட் கூட்டம் என்பதே சரியான வடிவம் கண் இடப்பொருளானது. முக்கண் மூவிடம், அம்மூவிடங்கள் இயற்கையால் கூடுமிடம், தோழியால் கூடுமிடம், தோழனாற் கூடுமிடம் என்பவை''[46] எனப் பொருளுரைக்கின்றார். மேலும் இந்நூல் தொல்காப்பியர் உடன்போக்கு எனச் சுட்டியதை உடன் செலவு என்றும் புதுச்சொல்லில் குறிப்பிடுகின்றது.

வீரசோழியப் பொருளதிகாரத்தின் இருபத்தொரு நூற்பாக்களில் முதல் பதினொரு நூற்பாக்களே அகம் பற்றிப் பேசுகின்றன. முதல் நூற்பாவிலேயே அகம், புறம், அகப்புறம், புறப்புறம் எனப் பகுத்துச் சுட்டுவது தொல்காப்பிய மரபிலிருந்து வேறுபட்ட புதுமரபாகும். மேலும் முதல் நூற்பாவின் இறுதியில் தாழ்குழலே எனப் பெண்ணை விளித்துச் சுட்டுவதும் புதுமரபாகும். கைக்கிளை, பெருந்திணையை இவ்வாசிரியர் அகப்புறத்தில் சுட்டுகின்றார்.

பிறர் அறத்தொடு நிற்றலில் புதுமரபு

செவிலியை ''அறிவுச்செவிலி''[47] என அவளது இயல்பை, அறிவான தன்மையை மாறனகப்பொருள் அடை கொடுத்துச் சுட்டுகின்றது. ''செவிலி அறத்தொடு நிற்கும்போது நற்றாய்க்குத் தலைவியின் களவைத் தெளிவாக எடுத்துரைப்பாள்''[48] என்ற புதுமரபை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்ற மூன்று நூல்களும் சுட்டுகின்றன. ''நற்றாய் தந்தை, தன்னையர் ஆகியோரிடம் அறத்தொடு நிற்கும் பொழுது வெளிப்படையாகச் சுட்டாது குறிப்பால் சுட்டுவர்.''[49] தந்தை, தன்னையரிடம் அறத்தொடுநிற்றல் நற்றாய் என்பதைப் புதுமரபாக நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்ற மூன்று நூல்களும் சுட்டுகின்றன.

பிரிவில் தலைவி நிலை

பிரிவில் தலைவி ''உண்ணும் நிலையை வெறுத்தும் அதனால் உடல் மெலிந்தும், தலைவனைப் பிரிந்த ஏக்கத்தால் தூக்கமில்லாது தவிப்பாள்''[50] எனத் தலைவனைப் பிரிந்த நிலையில் ஒவ்வொரு தலைவிக்கும் உள்ள இயல்பைப் புதுமரபாக மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

கற்பிலும் சிறந்தது களவே

தலைவன், தலைவியும் உடன்போக்கில் சென்று தலைவன் இல்லில் சென்று மணமுடித்து இன்பமுடன் வாழ்ந்தாலும் ''தலைவனுக்குக் கற்பில் பெறும் இன்பத்தைவிடக் களவில் தலைவியோடு கழித்த நாட்களில் பெற்ற இன்பமே சிறந்தது''[51] என புதிய மரபை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

தொல்காப்பியர் அகவாழ்வோடு தொடர்புடைய அகமாந்தர்களை, புறமாந்தர்களுள் தலைமாந்தர்களாகிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்பவரைப் பற்றிய செய்திகளையே கூறியுள்ளார். ஆனால் வீரமாமுனிவர் தேவராகிய உயர்ந்தோர் பற்றியும் இழிசனர் என இழிந்த வாழ்க்கைத் தரத்தை உடைய மக்களையும் சாதாரண மனிதர்களை தம் இலக்கணத்தில் சுட்டி அவர்கள் பின் மேற்கூறிய தேவர்மொழி, இழிசினர் மொழி, எல்லா நாட்டிலும், எல்லோரும் பேசும் மொழி என்ற மூன்று விதமான மொழிகளும் பயன்படுத்தப்படும் பகுதிகளென பதினெண் நாடுகளையும் மேலும் செந்தமிழ், கொடுந்தமிழ் வழங்கும் நிலப்பகுதிகளையும், புதுவிதமாக,

***''கொங்கணம் மகதம் கோசலம் துளுவம்
சிங்களம் சீனம் சிந்து திராவடம்
வங்கம் சாவகம் மராடம் கலிங்கம்
அங்கம் சோனகம் அருணம் கவுசலம்
பப்பரம் காம்போசம் பாடை மூவாறனுள்
மருவூரின் மேற்கும் கருவூரின் கிழக்கும்
மருதை ஆற்றின் தெற்கும் வைகை
ஆற்றின் வடக்கும் செந்தமிழ் நிலனே
வெண்கும் பூழி மலாடு சீதம்
புனல் நாடு அருவா அருவா வடதலை
எனச் செந்தமிழ் சூழ் பன்னிரு நாடே'' (தொன்.விள.51)***

எனச் சுட்டுகின்றார்.

மனிதனைப் பற்றுகின்ற குணங்களில் புதுமரபு

தொல்காப்பியர் அகமாந்தர்களான தலைவன், தலைவியின் களவு, கற்பு வாழ்க்கையைப் பற்றியும் வயது முதிர்ந்த பின் நிகழும் துறவறம் பற்றியும் சுட்டுவார். ஆனால் வீரமாமுனிவர் இங்கு ஒரு மனிதனைப் பற்றுகின்ற சில குணங்களைப் பற்றுதல் உரிமை என்ற நூற்பாவில் புதுமரமாகப் பட்டியலிடுகின்றார். அவற்றுள் வெறுப்பு, உவப்பு, இரக்கம், வெகுளி, நாணம், துணிவு, அச்சம் போன்றவைகள் மனிதனுக்குப் பற்றுதலாகிய ஆசையின் காரணமாகத் தோன்றுகின்றன என்றும் சுட்டுகின்றார். மேலும் இந்நூற்பா பற்றிய கருத்தை திறனாய்ந்த வ.சுப.மா. ‘‘பற்றில்லார்க்கு மேற்கூறிய பண்புகள் தோன்றுவதில்லை. கற்றோர் இதுபோன்ற பண்புகள் பற்றிய வழியும் வழுவாது காப்பது கடன் என வீரமாமுனிவர் சுட்டுவதாகச்’’[52] சுட்டுகின்றார்.

வீரமாமுனிவர் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணை நிலப்பகுப்பே அன்றி மற்றும் ஒரு ‘‘மூவகையை மலை, ஆறு, நாடு என மூவகை இட உரிமையென புதிதான ஒரு மரபைச்’’[53] சுட்டுகின்றார். பிரிவுகள் பற்றிச் சுட்டுகையில் சாதித்தொழிலுரிமை என ஒவ்வொரு வகுப்பினத்தவரான அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்க்குரிய ஓதற்பிரிவைப் பற்றிச் சுட்டுகையில் வன்னியர், மன்னர், வணிகர், சூத்திரர் என்ற புதிய சொற்களால் சுட்டுகின்றார். தூதுப்பிரிவிற்குரிய அரசர், அந்தணர் என்ற இரு மாந்தர்களையும் முத்துவீரியம் ‘‘வேதமாந்தர், வேந்தர்’’[54] என்ற புதுச்சொற்களால் சுட்டுகின்றார்.

முத்துவீரியம் காட்டும் புதுமரபுகள்

முல்லை நிலம் என்பது காடும், காடு சார்ந்த பகுதியும் என்றாலும் முல்லைத் திணைக்குரிய என்பதைக் ‘‘காட்டிற்குரிய’’[55] எனச் சுட்டியிருப்பது புதுமை. தொல்காப்பியர் நடுவண் ஐந்திணை, நடுவனது ஒழிய என பாலைத்திணையை நடுவனது திணை எனச்சுட்ட முத்துவீரியர் சொல் மாற்றமாக ‘‘னடுத்திணை’’[56] எனச் சுட்டுகின்றது.

மாந்தர் பெயரில் சொல்மாற்றம்

தூது சென்று பகையைத் தீர்த்தலாகிய தூதுபோதல் தொழிலுக்கு உரிய இரு மாந்தர்களைப் பற்றிச் சுட்டும் பொழுது அரசர், அந்தணர் என்ற மாந்தர் பெயர்களை "இறைவர், இருபிறப்பாளர்"[57] *என்ற புதுமைச் சொற்களில் சுட்டுகின்றார்.*

அகத்தில் புறம் புதுமரபு

முத்துவீரியர் பொருளதிகாரத்தை முப்பிரிவுகளாக அகவொழுக்கவியல். களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் எனச் சுட்டுகையில், இதில் முதல் பிரிவாகிய அறுபது நூற்பாக்களைக் கொண்ட அகவொழுக்கவியலில் இறுதி பத்து நூற்பாக்களில் புறத்திணை தொடர்பான செய்திகளை "புறத்திணை என்றால் என்ன? அதன் வகைகள். வகைகளாகிய வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை"[58] *போன்றவற்றின் விளக்கங்களைப் புதுமரபாக அகவொழுக்கவியலிலேயே சுட்டுகின்றார். முத்துவீரியர் கைக்கிளையின் வகைகளாக ஓர் ஏழினைப் புதுமரபாக,*

"காட்சி யையந் தெளித னயப்பே
உட்கோ டெய்வந் துணிதல் கைக்கிளை"   (முத்.வீரி.67)

என்று சுட்டுகின்றார்.

புதுமைச்சொற்கள்

களவுப் புணர்ச்சியின் நான்கு வகைகள் பற்றிச் சுட்டும் பொழுது பாங்கர் கூட்டம், பாங்கியர் கூட்டம் என்பதை "அன்பரிற்கூட்டு, இகுழைக்கூட்டு எனச் சொற்களில் புதுமை காட்டிச் சுட்டுகின்றன."[59] *மேலும் "இகுளை"*[60] *என்ற சொல்லாட்சி தோழியைச் சுட்டுவதாக மாறனகப்பொருள் கூற சுவாமிநாதம் 'இகுழை' என ழகரத்தை மாற்றிச் சுட்டுகின்றன. கைக்கிளை பற்றிச் சுட்டும்பொழுது தலைவனைக் 'கணவன்' என்ற சொல்லாட்சியில் களவுக் காலத்தில் இந்நூல் சுட்டியிருப்பது புதுமரபு.*

சுவாமிநாதம் களவுக் கூற்றுக்குரிய அறுவருள் "தலைவனை அண்ணல் என்றும், தோழியைச் சகி என்றும் மாற்றிக் கூறுகின்றது. மேலும் இந்நூல் களவுக் கிளவிக்குரிய இவ்வறுவரில் தொல்காப்பியர் இறுதி மாந்தராகக் கூறிய த

லைவியை முன்னிறுத்திக் கூறுகின்றது.''[61] தலைவனுக்குரிய பண்புகளைச் சுட்டுகையில் தவைனை ''நிறை''[62] என்ற சொல்லால் சுட்டியிருப்பதும் புதுமை. அறத்தொடு நிற்றல் பற்றிச் சுட்டும் பொழுது தோழியைச் சகி என்ற சொல்லால் சுட்டுவதும் புதுமை.

சுவாமிநாதம் நற்றாய்க்குரிய கூற்றைப் பற்றிய புதிய மரபைச் சுட்டும்பொழுது,

''அரியகண்டோர் இறைவிசகி யாபெற்றோர்க்கு உரைப்பார்
அணைசொல்லுஞ் சுரத்து இறைவிக்கு இறைதமர் காண்பொழுதே''
(சுவாமி.55:7-8)

என மொழிகின்றது. சுவாமிநாதரின் இக்கருத்தில் இருந்து பாலைவனத்தில் தலைவியின் சுற்றத்தாரோடு கூற்று நிகழ்த்துவதாகக் கூறுவது செவிலி, நற்றாய் என்ற இருவரே ஆகும். மேலும் களவு ஒழுக்கத்திற்குரிய மகளிர் பற்றிச் சுட்டும் பொழுது ஒருவகைப் பரத்தையரை நூற்பாவில் ''வருணம் அறுத்த பரத்தையர்''[63] என்ற (நல்ல சாதி இல்லாத பரத்தையர் என) புதுமை வாய்ந்த சொற்களால் சுட்டுவது புதுமை.

சுவாமிநாதம்

சுவாமிநாதம் ஐந்திணைக்குரிய இலக்கணத்தைச் சுட்டும்பொழுது ''ஐந்திணை அன்புடைய காமம்''[64] என மாறனகப்பொருள் போலவே புதுமரபாக ஐந்திணைக்குரிய இலக்கணத்தைச் சுட்டுகின்றது. ''பாலையை ஐந்திணையில் ஒன்றாகச் சுட்டுவது''[65] தொல்காப்பிய மரபிலிருந்து மாற்றமாகும். ''சுவாமிநாதம் இசையாக்காமம் எனப் பெருந்திணைக்குரிய பொருந்தாக் காமத்தைச் சொல்மாற்றிச் சுட்டுகின்றது.''[66] மேலும் திணைமயக்கம் பற்றிச் சுட்டும்பொழுது சுவாமிநாதம், ''ஐந்திணையில் பெருந்திணையும், கைக்கிளையும் மயங்கும்''[67] எனச் சுட்டியிருப்பதும் புதுமை.

மாந்தர்களில் புதுச்சொற்கள்

தொல்காப்பியர் தலைமக்களைப் பொதுவாக தலைவன், தலைவி, கிழவன், கிழத்தி என்ற சொற்களாலேயே சுட்டுகின்றார். ஆனால் மாறனகப்பொ

ருளும், சுவாமிநாதமும் தலைமக்களை மட்டுமின்றி கூற்றுக்குரிய மாந்தர்கள் பலரையும் பல்வேறு புதுச்சொற்களால் சுட்டுகின்றார்.

அறுவகை இலக்கணம் புதுமரபுகள்

தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகை இலக்கணப் பொருளதிகாரம் சொல் புதிது, பொருள்புதிது என்ற நோக்கில் தொல்காப்பியத்தைத் தழுவிய ஒரு சில நூற்பாக்களைத் தவிர முற்றிலும் புதுமரபைக் கொண்டே படைக்கப்பட்டுள்ளது.

உறுப்பியல்பு

அகப்பொருளின் இரண்டாம் பகுப்பாகிய உறுப்பியல்பில் 23 நூற்பாக்கள் உள்ளன. இதில் இன்பத்தை அளிக்கும் பொருளாகிய ‘‘மகளிரின் உறுப்பின் தன்மைகள், நலன்கள் பற்றி முடிமுதல் அடிவரை கேசாதிபாதவர்ணனையில் உறுப்புகளின் இயற்கை, செயற்கை அழகுகளைத்’’[68] தொல்காப்பிய மரபில் இருந்து முற்றிலும் புதுமரபாகச் சுட்டுகின்றார். இதில் இவர் தண்டபாணி சுவாமிகள் பெண்களின் கூந்தல், நெற்றி, புருவங்கள், கண்கள், மூக்கு, இதழ்கள், கன்னங்கள், காதுகள், கழுத்து, மார்புகள், தோள்கள், கைகள், வயிறு, இடை, கால்கள் எனப் பெண்களின் ஒவ்வொரு உறுப்பைப் பற்றியும் அவற்றின் இயற்கை, செயற்கை அழகுகளைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றார்.

உழி இயல்பு

உழி என்பது இருப்பிடத்தைக் குறித்து நின்றது. இப்பிரிவில் நால்வருணத்தாராகிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், தவசிகள் ஆகியோர் வாழிடங்களில் காணப்படும் பொருட்களையும் போர்க்களம், புலவர் அவை பற்றிய செய்திகளையும் புதுமையாக இவ்வாசிரியர் விளக்குகின்றார்.

அரசர்களின் அரண்மனையில் இருக்க வேண்டிய உடைமைப் பொருட்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

‘‘மூவகை முரசமும் முத்தமிழ்ப் புலவர்
ஆர்வமும் கரிபரி ஆதியின் பெருக்கும்
கதிர்வாட் சேவகர் காப்பும், பசும்பொன்
நவமணிக் குவியலும் நடம்பயில் அரங்கும்

ஆக்கமும் செருக்கமும் அறநெறி ஆதியும்
மன்னர்வாழ் அரண்மனை வாய்ந்த பொருளே''
(அறு.வகை.71)

என்றவாறு சுட்டுகின்றார்.

மாற்றங்கள்

இயல் பகுப்பில் தொல்காப்பியம் ஒன்பது இயல்களைக் கொண்டுள் ளது. இறையனார் அகப்பொருள் இரண்டு இயல்களையே கொண்டுள்ளது. நம் பியகப்பொருள், மாறனகப்பொருள், அகத்திணையியல், களவியல், கற்பியல், வரைவியல், ஒழிபியல் என ஐந்து பகுப்புகளையும் அவிநயம், வீரசோழியம், இ லக்கண விளக்கம் என்னும் மூன்று நூல்களும் ஒற்றைப் பகுப்புகளைக் கொண் டு இயல் பகுப்பில் மாற்றத்தைக் கையாண்டுள்ளது. மேலும் இறையனார் அக ப்பொருள், தமிழ்நெறி விளக்கம், அவிநயம், வீரசோழியம், தொன்னூல் விளக்க ம் போன்ற நூல்கள் ஐந்திணை மரபையே சுட்டி தொல்காப்பிய எழுதிணை மர பிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

திணை மாற்றங்கள்

கைக்கிளைப் பெருந்திணையைத் தொல்காப்பியர் அகத்திணைகளில் சுட்ட ''நம்பியகப்பொருள் அகப்புறத்திணையில் சுட்டுவது வேறுபாடு''[69] ஆ கும். அகப்புறப்பொருள் என்னும் மூன்றாம் பகுப்பு தமிழ்நெறி விளக்கத்தில் இ டம்பெற்றிருப்பது புதுமரபு ஆகும். இந்நூல் தொல்காப்பியம் போலவே ஐந்தி ணையைச் சுட்டினாலும் ''குறிஞ்சித்திணையின் இடத்தை பொருப்பு என்றும், பாலையை வெம்பரல், முல்லையைப் புறவு, மருதத்தைப் பழனம், நெய்தலைப் பரப்பமை வாரி என்றும் ஐந்திணைகளை வேறு பெயரால் சுட்டியிருப்பது''[70] புதுமை.

இந்நூல் கருப்பொருளில் ஒன்றான மக்கள் என்பதை ''மானிடர்''[71] எ ன்ற புதுச்சொல்லால் சுட்டுகின்றது. மேலும் பாலைத்திணைக்குரிய உணவுப் பொருளான அவலைத் ''தருப்பணம்''[72] என்ற சொல்லால் சுட்டுகின்றது. தொல்க ாப்பியர் அன்பின் ஐந்திணைக்குரிய பெயரைத் தனித்துச் சுட்டாது ஒவ்வொரு நிலத்துக்குரிய தெய்வமாகிய கருப்பொருளொடு இணைத்துச் சுட்ட நம்பியகப்

பொருள் வேறுபட்டு ‘‘குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்தி ணைக்குரிய பெயரையும் தனித்து’’[73] ஒரு நூற்பாவில் சுட்டுகின்றது.

‘‘முதற்பொருளாகிய நிலத்தின் பெயரையும் வரை, சுரம், புறவு, பழ னம், திரை’’[74] எனப் பெயரைச் சொல் மாற்றி உரைக்கின்றது நம்பியகப்பொரு ள். சிறுபொழுதை தொல்காப்பியர் ஆறென்றதை இந்நூல் ‘‘ஐந்தெனச்’’[75] சுட்டு வதும் வேறுபாடு ஆகும். நெய்தற்குரிய சிறுபொழுதை ‘‘வெய்யோன்பாடு’’[76] எனச் சுட்டுவது சொல் வேற்றுமை.

கருப்பொருளில் தெய்வத்தை ‘‘ஆரணங்கு’’[77] எனவும் நம்பியகப்பெ ாருள் சொல் மாற்றியும் களவுப் புணர்ச்சியை ‘‘கள்ளப் புணர்ச்சி’’[78] எனவும் செ ால் மாற்றி சுட்டுகின்றன. ‘‘முல்லைத்திணை உணவுப் பொருளாக முதிரையை (வரகு)‘‘.’’[79] எனவும் சுட்டுவது புதுமை.

செய்யுள் உறுப்பில் மாற்றம்

சட்டகம் என்ற உரை அமைப்பில் 27 கூறுகளை இந்நூலாசிரியர் கூ றியுள்ளதில் பத்து வகைச் செய்யுள் உறுப்புக்களை திணை, கைக்கிளை, நடை, சுட்டு, இடன், பொருள்கோள், எச்சம், பயன், மெய்ப்பாடு, காலம் என்றவாறு சுட்டுகின்றது. பன்னிரு அகஉறுப்பில் கூற்றைக் கிளவி என்றும் களனை இடம் என்றும் கேட்போரைக் கேள்வி என்றும் முன்னத்தைக் குறிப்பென்றும் பொரு ளைக் கோளென்றும் துறையை உட்பொருள் என்றும் சொல் மாற்றிச் சுட்டுகி ன்றது. வீரசோழியம் அகப்பாட்டு உறுப்புகளை அகனைந்திணையும் உரைக்கு ம் முறை என்றே கூறுகின்றன. தொல்காப்பியர் காமப்புணர்ச்சி என்பதை நம்பி யகப்பொருள் ‘‘இயற்கைப்புணர்ச்சி’’[80] என்று சுட்டுகின்றது.

இறையனாரகப்பொருள் அகத்திற்கு மட்டும் இலக்கணம் சுட்டுவதா க அமைந்துள்ளது. தொல்காப்பியர் அகம், புறம் இரண்டிற்கும் சுட்டிய செய்யு ள் உறுப்புகளை அகத்திற்கு மட்டும் கூறுகின்றது. தொல்காப்பியம் பன்னிரெ ண்டு எனக்கூறிய அகப்பாட்டு உறுப்புகளை ‘‘இறையனார் அகப்பொருள் பத் து என மொழிகின்றது.’’[81] இந்நூல் தொல்காப்பியர் கூறிய பன்னிரெண்டு அக உறுப்புகளுள் ஒன்பதாவது உறுப்பாகிய முன்னத்தினையும், பதினொன்றாவது

உறுப்பாகிய துறையையும் விடுத்து அகஉறுப்புகள் பத்தென மொழிகின்றது. இறையனார் அகப்பொருள் அகப்பாட்டு உறுப்புக்களை "அகனைந்தினையும் உரைக்கும்முறை"[82] என்றே கூறுகின்றது.

இவர் பத்துறுப்பை மட்டும் சுட்டியதற்கான காரணத்தை "தொல்காப்பியர் விரித்த அகத்திணை, புறத்திணை ஆகியவற்றில் எழுதிணைகளுக்கும் உரிய செய்யுளுறுப்புக்களுள் சில களவியலார் காலத்தில் பொருள் சுருக்கம் பெற்று அன்பின் ஐந்திணையை மட்டும் குறிக்கத் தொடங்கியுள்ளது."[83] இப்பத்துறுப்பில் எச்ச உறுப்பை மட்டும் விரித்து மூன்று நூற்பாக்களில் சுட்டியுள்ளது இறையனார் அகப்பொருள். களவியலில் இடம்பெற்றுள்ள நூற்பாக்களில் அகன் ஐந்திணைக்குரிய செய்திகள் மட்டுமே உள்ளன என்பதை "அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது"[84] என்ற நூற்பாவிலிருந்து அறியமுடிகின்றது.

இந்நூலின் மாற்றம் பற்றிப் பேசுகையில் த.வசந்தாள் "இறையனாரகப்பொருளில் அகமாந்தர்கள் பற்றிய விரிவான இலக்கணக் கேட்பாடு இல்லை. தொல்காப்பியத்தைப்போன்று இயல்பாகுபாடு, இலக்கணம் இயம்பும் முறைமை, மாந்தர் பற்றிய ஆய்வு, இலக்கிய மரபு பற்றிய வரையறை என்பன போன்ற செய்திகள் இந்நூலில் இல்லை. கிழவன், கிழத்தி, தோழி, தாய், தந்தை, பரத்தை, வாயில் ஆகியோர் மட்டும் துறைக்குரிய கிளவித் தொகைகளையும், அவர்களது கூற்றுக்குரிய மரபுகளையும் காட்டும் போது ஆங்காங்கு சுட்டப்பெறுகின்றனர்"[85] என்பார்.

கருப்பொருளில் மாற்றங்கள்

தொல்காப்பியம் கருப்பொருளைப் பதினொரு வகை எனச் சுட்டுகின்றது. ஆனால் இதற்கு மாறாக இத்தமிழ்நெறி விளக்கம் கருப்பொருளை "ஒன்பது என"[86] மொழிகின்றது. தொல்காப்பியர் கருப்பொருள் மயக்கத்தைப் பற்றிச் சுட்டும் பொழுது ஒரு நிலத்தைச் சார்ந்த பூவும், புள்ளும் மற்றொரு நிலத்தில் சென்று வாழ்ந்தாலும், அஃது அந்நிலத்தைச் சேர்ந்த பறவையாகவே கொள்ளப்படும் எனக் கூறுகின்றார். இதனையே தண்டபாணிசுவாமிகள்,

"ஒரு நிலத்து உறுவன மற்றொன் றிடத்தில்
புகுவது உண்டு; அம்முறை புகல்வதும் இயல்பே"

(அறுவகை.பொருளதி.நூ.67)

எனச் சுட்டினாலும் இவர் கருப்பொருளில் என்னென்ன பொருட்கள் என வரையறுத்துச் சுட்டாது விட்டதால் தொல்காப்பியரிலிருந்து வேறுபடுகின்றார்.

களவுக் கூற்றுக்குரியோரில் மாற்றம்

தொல்காப்பியர் தலைவனும், தலைவியும் மேற்கொள்ளும் களவு வாழ்வில் கூற்றுக்குரியோர்களாக அறுவரைச் சுட்டுவர். நம்பியகப்பொருள் தொல்காப்பியர் சுட்டிய அறுவரையே களவினில் கூற்றுக்குரியோராக மொழிந்த போதும் ''தொல்காப்பியர் சுட்டிய கிழவன், கிழத்தி என்ற சொல்லாட்சிகளைத் தலைவன், தலைவியென மொழிகின்றது.''[87] மேலும் தொல்காப்பியர் சுட்டிய வரிசை முறைகளையும் ''தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், பாங்கி, செவிலி''[88] என நிரல் மாற்றிச் சுட்டுகின்றது.

தொல்காப்பிய வேறுபாடுகள் அகப்பொருள் விளக்கத்தில்

சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார் என்பதை மீறி இவர் இயற்பெயர் கூறுகின்றார். பாட்டுடைத் தலைவர்க்கு, இயற்பெயர் கிளவித் தலைவற்கு இசையார்என அகப்பொருளில் கூறுகின்றார்.

பிரிவில் மாற்றங்கள்

தொல்காப்பியர் சுட்டிய அறுவகைப் பிரிவைத் தமிழ்நெறி விளக்கம் இந்நூல் ஆயிடைப்பிரிவு, சேயிடைப்பிரிவு என இரண்டு நூற்பாக்களில் சுட்டுகின்றது. ''ஓதல் முதல் ஐவகைப் பிரிவுகளும் சேயிடைப்பிரிவு''[89] என்னும் பிரிவின் கீழ், பிரிவு வகை உணர்த்தல், பாங்கி கூற உரிதினின் அழுங்கல், அழுங்கராக் காலை அறிகுவன் என்றல், அறியக்கூறல், நறுநுதல் இனைதல், நயவரக்கூறல், தெரியிழை நேர்தல், செலவுடன் மயங்கல், வந்தது பொழுது என வருந்தல், தோழி நொந்தனள் உரைப்பவும், நோவாள் கூறலும், ஆற்றுவித்தல், ஆயிடை வருவோன் மேனல் என மாற்றமாக அமைந்துள்ளன. தொல்காப்பியரின் ''பரத்தையர் பிரிவு ஆயிடைப் பிரிவு''[90] என மாற்றமாகச் சுட்டப்பட்டுள்ளது. முல்லைத்திணைக் கடவுளான மாயோன் என்பதை ''மாயன்''[91] என மாற்றி உரைக்கின்றது.

“தமிழ்நெறி விளக்கம் தொல்காப்பியரைப் பின்பற்றி கூதிர், வேனில், கார், ஒழிபனி, வேனில்,முன்பனி, இருணிலை, உச்சி, மாலை, வைகறை, பொருணிலை, அந்தி பெரும்பொழுது சிறுபொழுதுகளை ஆறு எனச் சுட்டினாலும் எத்திணைக்கு எப்பொழுதுகள் வரும் என ஒரு தெளிவில்லாமல் சுட்டுவதும் மரபு மாற்றமாகும்.”[92] தமிழ்நெறி விளக்கத்தில் கூற்றுகள் அடிப்படையில் களவு, கற்பு நிகழ்வுகள் அல்லாமல், கிளவித்துறைகள் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன.

கூற்றுக்குரியோரில் சொல்மாற்றம்

களவுக் கூற்றுக்குரிய அறுவருள் மாறனகப்பொருள் “கிழவன், கிழத்தியை இறைவன், இறைமகள் என்றும், பார்ப்பானை இருபிறப்பாளன் என்றும், தோழியை இகுளை என்றும் சொற்களை மாறுதலாகச் சுட்டி, தொல்காப்பியத்தில் இருந்து வரிசை முறையையும் மாற்றியே”[93] உரைக்கின்றது.

மற்றையோர் கூற்றில் மாற்றம்

தலைவன் தலைவியோடு களவு, கற்புக் கூற்றுக்குரிய பன்னிருவருள் இவர் இருவர் தவிர்த்து பத்து பேரும் வாய்ப்புகள் கிடைக்கும் பொருட்டு கூற்று நிகழ்த்துவர் என்பதனை திருக்குருகைப் பெருமாள் கவிராயர் வேறுபாடாக எழுவர் என உரைக்கின்றது.

“பார்ப்பான் பாங்கன் பாணன் விறலி
கூத்தர் பரத்தையர் குறைவில் அறிவர்என்று
ஏத்தும் எழுவரும் இறைவன் இறைவியொடு
ஏற்பக் கூறுவர் இடந்தொறும் இடந்தொறும்”

(மாற.அக.215)

இந்நூற்பாவிலிருந்து தொல்காப்பியர் சுட்டிய பதின்மரில் தோழி, செவிலி, கண்டோரை மாறனகப்பொருள் விடுத்துச் சுட்டியிருப்பது மரபு மாற்றமாகும். கேட்போர் பற்றிய நூற்பாவில் மனையோள், கிழவன், பார்ப்பான், அரிவர் எனத் தொல்காப்பியர் கூறியதை “இறைவி, இறைவன், அந்தணர், கலைஞர்”[94] என மாறனகப்பொருள் சொல்லை மாற்றிச் சுட்டுகின்றது.

தொகுப்புரை

- தொன்றுதொட்டு வந்த ஒன்றை குறிப்பதற்காக மரபு என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படுகிறது. தொல்காப்பியத்தில் மரபு என்ற சொல்லாட்சி 5 5 இடங்களில் கையாளப்பட்டுள்ளது.
- முதலில் பொருத்தமில்லாத விருப்பமாக இருந்து பின் பொருத்தமுடைய விருப்பமாக மாறி அமைவது பெருந்திணை என்ற புதுமரபை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.
- குறிஞ்சியும் நெய்தலும் களவுக்குரிய திணைகள் என்றும் மருதமும் முல்லையும் கற்புக்குரிய திணைகள் என்றும் முத்துவீரியம் புதுமரபாகச் சுட்டுகின்றது.
- நம்பியகப்பொருள் வேனிற்காலத்தை சிறப்பு வாய்ந்த இளவேனில் என அடைகொடுத்துச் சுட்டுகின்றது.
- சிறுபொழுதுகள் காலை, நண்பகல், பிற்பகல், மாலை, யாமம், வைகறை என்ற ஆறும் பப்பத்து நாழிகை அளவினைக் கொண்ட ஆறு பிரிவுகளை உடையது என்ற புதுமரபை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.
- தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் அறுவகை பெரும்பொழுது சிறுபொழுதுகளோடு அக்காலத்தில் நிகழ்வதற்குரிய நிகழ்ச்சிகளையும் தனித்தனியாகச் சுட்டுவது புதுமரபாகும்.
- சுவமிநாதம் வேனிற்காலத்தில் மகிழ்வேனில் எனப் புதிதாகச் சுட்டுகின்றது. நம்பியகப்பொருள் மக்களை உயர்ந்தவர் இழிந்தவர் என இரண்டாகவும் அவற்றோடு ஊர், நீர், பண் மூன்று பொருட்களையும் சேர்த்து கருப்பொருட்கள் பதினான்கு என உரைக்கின்றது.
- வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவதற்கான காலவரையறை இரண்டு மாதங்கள் என மாறனகப்பொருள் மொழிகின்றது.
- முத்துவீரியம் அறுவகைப் பிரிவுகளுக்கும் உரிய வகைகளாகச் சிலவற்றைப் புதுமரபாக உரைக்கின்றது.
- சுவாமிநாதம் துணைவி, ஆற்றாமை, புதல்வன் என்ற மூவரைப் புதிதாகச் சேர்த்து வாயிற்மாந்தர்கள் பதினைவர் என உரைக்கின்றது.

- தமிழ்நெறி விளக்கம் முதற்பொருளில் நெய்தல் திணையை பரப்பமை வாரி, அந்தியை இருணிலை அந்தி, ஒருக்கினம் ஓம்பல், தொழிலை நிறைதேனழித்தல் என்ற அடைச்சொற்களால் புதுமையாகச் சுட்டுகின்றது.

- இயல் பகுப்பு, இறையனார் அகப்பொருள் இரண்டு பகுப்பையும் நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் ஐந்து பகுப்புகளையும் வீரசோழியம் தமிழ்நெறி விளக்கம் போன்ற நூல்கள் தலா ஒரு பகுப்பையும் கொண்டிருப்பது தொல்காப்பிய மரபில் திரிந்த மாற்றமாகும்.
- நம்பியகப்பொருள் வரை, சுரம், புறவு, பழனம், திரை என நிலத்தின் பெயரைச் சொல் மாற்றிச் சுட்டுகின்றது.
- இறையனார் அகப்பொருள் அகத்திற்கு மட்டும் செய்யுள் உறுப்புகளை உரைப்பது மரபு மாற்றமாகும்.
- பரத்தையற் பிரிவை ஆயிடைப்பிரிவு என தமிழ்நெறி விளக்கம் மாற்றமாக உரைக்கின்றது.

சான்றெண் விளக்கம்

1. இளம்பூரணர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், ப.7.
2. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், ப.9.
3. சே.செந்தமிழ்ப்பாவை, சங்கப் பாடல்களில் மரபு மாற்றங்கள், ப.39.
4. நம்.அக.6, மாற.அக.7, இலக்.வி.379, தொன்.விள.174, முத்.வீரி.776, சுவா மி.72.
5. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையு ம், ப.6.
6. முத்துவீரிய உபாத்தியாயர், முத்துவீரியம், ப.222.
7. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.26.
8. நம்.அக.11.
9. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையு ம், ப.7.
10. நம்.அக.11.
11. மாற.அக.17.
12. சுவாமி.73.
13. தொல்.பொருள்.அகத்.11.
14. சுவாமி.73.
15. தொல்.பொருள்.அகத்.20.
16. மேலது, 73.
17. நம்.அக.19, மாற.அக.23, இலக்.வி.387, தொன்.விள. , முத்.வீரி.801, சுவா மி.73.
18. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.25.
19. மாற.அக.23.
20. தொன்.விள.175, முத்.வீரி.801.
21. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையு ம், ப.18.
22. முத்.வீரி.856,857,858,859,860,861.
23. முத்துவீரிய உபாத்தியாயர், முத்துவீரியம், ப.227.

24. மாற.அக.87.

25. மாற.அக.87.

26. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையும், ப.31.

27. ச.திருஞானசம்பந்தம், அகப்பொருள் விளக்கம், ப.128,
வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கம், ப.228.

28. சுவாமி.120.

29. தண்டபாணி சுவாமிகள், அறுவகை இலக்கணம், ப.206.

30. மாற.அக.243.

31. சுவாமி.125, மாற.அக.241.

32. சுவாமி. 84.

33. மேலது., 84.

34. மாற.அக.48.

35. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையும், ப.34.

36. தண்டபாணி சுவாமிகள், அறுவகை இலக்கணம், ப.207.

37. நம்.அக.64,65,66.

38. சுவாமி.85.

39. மேலது., 88.

40. மேலது., 88.

41. தமி.நெறி.விள.3.

42. மேலது., 5.

43. மேலது., 9.

44. மேலது., 9.

45. மேலது., 22.

46. இரா.இளங்குமரன், தமிழ் இலக்கண வரலாறு, ப.230.

47. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையும், ப.22.

48. நம்.அக.54, மாற.அக.64, இலக்.வி.533.

49. நம்.அக.52, மாற.அக.60, இலக்.வி.533.

50. டி.வி.கோபால் ஐயர் (உ.ஆ.), மாறனகப்பொருளும், திருப்பதிக் கோவையு ம், ப.18.

51. மேலது., ப.23.

52. ச.வே.சுப்பிரமணியன், தொன்னூல் விளக்கம், ப.121.

53. தொன்.விள.181.

54. மேலது., 186.

55. முத்.வீரி.782.

56. மேலது., 787.

57. மேலது., 817.

58. மேலது., 819,820.821,822,823,824,825,826,827,828.

59. சுவாமி.80.

60. மாற.அக.164.

61. சுவாமி.124.

62. மேலது., 124.

63. மேலது., 71.

64. மேலது., 72.

65. மேலது., 71.

66. மேலது., 71.

67. சுவாமி. 80.

68. அறு.வகை.6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,21,22.

69. நம்.அக.241,243,244.

70. தமி.நெறி.விள.3.

71. மேலது., 6.

72. மேலது., 10.

73. நம்.அக.5.

74. மேலது., 9.

75. மேலது., 12.

76. மேலது., 17.

77. மேலது., 19.

78. மேலது., 19.

79. மேலது., 10.

80. மேலது., 123.

81. இறை.அக.56.

82. மேலது., 56.

83. த.வசந்தாள், தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள், ப.26.

84. இறை.அக.1.

85. த.வசந்தாள், தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள், ப.27.

86. தமி.நெறி.விள.6.

87. நம்.அக.213.

88. மேலது., 213.

89. தமி.நெறி.விள.24.

90. மேலது., 25.

91. மேலது., 7.

92. மேலது., 4,5.

93. மாற.அக.241.

94. மேலது., 269.

முடிவுரை

அகப்பொருளுக்கெனத் தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் புறத்திணையியல், மரபியல் தவிர்த்த ஏழு இயல்களிலும் அகப்பொருள் கோட்பாடுகளை முழுமையாக விளக்குகின்றது.

கி.மு.5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரை அகப்பொருளுக்கெனத் தொல்காப்பியம், அவிநயம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், களவியற்காரிகை, நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற பதின்மூன்று நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன. இப்பதின்மூன்று அக இலக்கண நூல்களில் அவிநயம், வீரசோழியம், இலக்கண விளக்கம் போன்ற ஏழு நூல்களும் ஒரு பகுதியாக மொழிகின்றன.

தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள் போன்ற ஆறு நூல்களும் அக இலக்கணத்தை முழுமையாக விளம்புகின்றன.

அவிநயத்தில் திணையின் மூன்று வகைகள், ஊழ்வினையால் தோன்றும் காதல், கைக்கிளையின் நான்கு நிலைகள் தலைவி, தலைவனுக்குரிய குணங்கள், களவு மணம் போன்ற செய்திகள் சுட்டப்பட்டுள.

உரையால் சிறப்பு பெற்ற நூல் என்ற பெருமையை நக்கீரர் உரையால் இறையனார் அகப்பொருள் பெறுகின்றது. சூத்திரங்களில் ஓரடிச் சூத்திரங்கள் பதினைந்தும் ஈரடிச் சூத்திரங்கள் இருபத்தேழும் இறையனார் அகப்பொருளில் இடம்பெற்றுள்ளன.

அகப்பொருளாகிய தமிழை விளக்குவதற்காக எழுந்த நூல் தமிழ்நெறி விளக்கம். தமிழ்நெறி விளக்கத்திற்கு நூலாசிரியரும், உரையாசிரியரும் யாரென அறியாத நிலையில் உ.வே.சா. அவர்கள் பதிப்பித்துள்ளார்.

வீரசோழியம் கட்டளைக் கலித்துறை யாப்பில் இருபத்தோர் நூற்பாக்களைக் கொண்டு வீரசோழ மன்னனின் பெயரில் புத்தமித்திரனாரால் எழுதப்பட்டுள்ளது. இதன் பொருட்படலத்தில் இருபத்தோர் நூற்பாக்கள் உள்ளன. களவியற்காரிகையில் களவு, கற்புக் கூற்றுத்துறைகளைப் பற்றிய செய்திகளே முழுமையாக நிறைந்துள்ளன.

தொல்காப்பியச் செய்திகளையும் நம்பியகப்பொருள் செய்திகளையும் முற்றிலுமாகக் கொண்டு வைத்தியநாத தேசிகர் இலக்கண விளக்கப் பொருளதிகாரத்தைப் படைத்துள்ளார்.

தொன்னூல் விளக்கப் பொருளதிகாரம் பதிகம், காரணம், விரிவு, தொகையுந்துணிவும், உரிமை என்னும் பெரும்பகுப்புக்களையும் கால உரிமை, இடவுரிமை, பண்புரிமை, சாதித்தொழிலுரிமை, பற்றுதலுரிமை, வடிவு முதலிய உரிமை, ஒழுக்க உரிமை, சொல் உரிமை என்ற சிறு பகுப்புக்களையும் கொண்டு அமைந்துள்ளது.

முத்துவீரியம் 92 நூற்பாக்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. சுவாமிநாதம் அகத்திணை மரபு, கைக்கோள் மரபு, புறத்திணை மரபு என்னும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணத்தோடு புலமை இலக்கணம் என்ற பகுதியையும் சேர்த்து ஆறிலக்கணங்கூறும் நூல் அறுவகை இலக்கணம். இந்நூல் அக இலக்கணத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

தொல்காப்பியம் போலவே பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் போன்ற ஆறு நூல்களும் எழுதிணை மரபை மொழிகின்றன.

கைக்கிளை பற்றிய செய்திகளை அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் ஆகிய ஐந்து இயல்களிலும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

செய்யுளில் பயின்றுவரும் பொருட்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் முதல், கரு, உரிப்பொருள் என்ற வரிசை முறையிலேயேயும் அப்பொருட்களின் விரி பற்றிக் குறிப்பிடும் பொழுது முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்ற முறையிலும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

தொல்காப்பியர் குறிஞ்சித்திணை முதன்மையானது எனக் கருதினாலும் முல்லைத்திணையையே முதன்மைப்படுத்திக் கூறுகின்றார். முதல், கருப்பொருள்களின்றி உரிப்பொருள் மட்டுமே தழுவிக் கைக்கிளையும், பெருந்திணையும் வரும் என்ற கருத்தால் அவை அகத்திணை இயலின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளது.

உயிர்கள் நிலத்தை ஆதாரமாகக் கொண்டே வாழ்கின்றன. இவ்வாறு உயிர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள நிலமும் அவ்விடத்துத் தோன்றும் காலமும் முதற்பொருள் ஆகும். நிலத்தினும், காலத்தினும் தோன்றும் பொருள் கருப்பொருள். அவ்வுயிர்களின் ஒழுகலாறுகளே உரிப்பொருள் ஆகும்.

சுவாமிநாதம் தெய்வம் தொடங்கி தொழில் வரை உள்ள பதினான்கு பொருளன்றிப் பிறவும் கருப்பொருளாக ஆக்கம் பெறுபவை எனச் சுட்டுவதை

நோக்கும் பொழுது பதினான்கைவிட இன்னும் உள்ளன என்பது கருப்பொருள் சார்ந்த வளர்ச்சி முறையைக் குறிக்கின்றது.

மக்களை இரண்டாகப் பிரித்து அவற்றொடு ஊர், நீர், பண் என்றவற்றொடு சேர்த்து நம்பியகப்பொருள், கருப்பொருளைப் பதினான்கென தொல்காப்பியத்தில் இருந்து வளர்ச்சி பெற்ற நிலையில் சுட்டுகின்றது.

மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் சிறுபொழுதிற்குரிய கால எல்லையாகிய நேரத்தைப் பத்து நாழிகை எனச் சுட்டியுள்ளதும் முதற்பொருளின் சிறுபொழுது சார்ந்த வளர்ச்சியே ஆகும்.

அகப்பாட்டினுள் உள்ள திணையை உணர்வதற்கு உள்ளுறை உவமமே சிறந்தது. தெய்வம் மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது ஆகையால் தெய்வம் தவிர்த்த பிற கருப்பொருட்களையே செய்யுளில் உள்ளுறை கூறும்பொழுது நிலைக்களன்களாக வைத்துக் கூறவேண்டும்.

பிற்றைய இலக்கணங்களில் முத்துவீரியமே அறுவகைக் கற்புப் பிரிவில் ஒவ்வொரு பிரிவிற்கும் ஓதற்பிரிவில் நான்கு வகைகளையும் பகைவயிற்பிரிவில் இரண்டு வகைகளையும் பொருள்வயிற் பிரிவில் இருபது வகைகளையும் , பரத்தைற்பிரிவில் 49 வகைகளையும் சுட்டுகின்றது. இது பிரிவுகள் சார்ந்த வளர்ச்சிகளாகும்.

தொல்காப்பியர் செய்யுளியலில் 34 உறுப்புகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவற்றில் பதின்மூன்றாம் உறுப்பு முதல் இருபத்து நான்காம் உறுப்பு வரை உள்ள பன்னிரெண்டு உறுப்புக்களை அக இலக்கியத்திற்குரிய உறுப்புகள் என்பர்.

தொல்காப்பியர் திணை, கைகோள், கூற்று, கேட்போர், காலம், களன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பயன், கோள், துறை என்ற பன்னிரெண்டை செய்யுளில் இடம்பெற வேண்டிய உறுப்புகள் என்பர்.

அகச்செய்யுளில் இடம்பெறக்கூடிய அக உறுப்புகள் பன்னிரெண்டை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் ஆகிய இரண்டு நூல்களும் ஒழிபியலில் உரைக்கின்றன.

கற்பொழுக்கம் என்பது மறைவெளிப்படுதல், தமரின் பெறுதல், மலிவு, புலவி, ஊடல், ஊடல் உணர்த்தல், பிரிவு, புணர்வு என்ற எட்டு வகைகளை உடையது.

பார்ப்பான், பாங்கன், பாணன், விறலி, கூத்தர், பரத்தை, அறிவர் ஆகிய எழுவரும் தலைவன், தலைவியொடு வாய்ப்புகள் நிகழும் பொழுதெல்லாம் கூற்று நிகழ்த்துவதற்கு உரியர் என மாறனகப்பொருள் உரைக்கின்றது.

சுவாமிநாதம் தலைவி பேச்சையும், தலைவன் பேச்சையும் கூற்றிற்குரிய எல்லோரும் கேட்பர் என்றும் அவ்வாறே ஏனையோருடைய பேச்சையும் இடம் அறிந்து தலைவனும், தலைவியும் கேட்பர் என்றும் சுட்டுகின்றது.

அகப்பொருள் இலக்கியங்களில் ஐந்திணை எனப்படும் ஐவகையான காதல் ஒழுக்கங்கள் நிகழ்வனவாகக் கூறப்படும் குறிஞ்சி, முல்லை முதலிய இடங்கள் களன் ஆகும். இது இடனென்றும் அழைக்கப்படும்.

சிறுபொழுதுகள் ஆறும், பெரும்பொழுதுகள் ஆறும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற இம்மூன்று நிலைகளிலும் செய்யுளில் பொருந்தி வருமாறு சுட்டும் உறுப்பே காலம் எனத் தொல்காப்பியத்தில் இருந்து சிறிது விரிவுபடுத்தி நம்பியகப்பொருள் சுட்டுகின்றது.

எச்சமும், கோளும் இல்லாமலும் செய்யுள் அமையும் எனச் சுட்டுகின்றது இறையனார் அகப்பொருள்.

முதல் பொருளும், கருப்பொருளும் இல்லாமல் கூட ஒரு செய்யுள் அமையும். உரிப்பொருள் இல்லாமல் செய்யுள் அமையாது. அத்தகைய உரிப் பொருளோடு புலவனது கற்பனை, உள்ளடக்கம், வர்ணனை, உவமை, விளக்கம், இலக்கணக் குறிப்பு போன்ற பல துணைப்பொருட்களையும் சேர்த்து செய்யுள் அமையப் பாடுவதே பொருள்வகை.

இளம்பூரணர் கருத்துப்படி பார்ப்பான் அவருக்குரிய ஆறு கூற்றுகளில் முதல் மூன்றைத் தலைவனிடமும், பின் இரண்டைத் தலைவியிடமும் இறுதி ஒன்றை இருவரிடமும் உரைப்பான்.

தொல்காப்பியர் தலைவன், தலைவியிடம் பார்ப்பான் நிகழ்த்தும் கூற்றுகளைச் சுட்ட மாறனகப்பொருள், சுவாமிநாதம் இரண்டு நூல்களும் தலைவியைத் தேடிச்செல்லும் செவிலியிடம் நிகழ்த்தும் கூற்றுகளையே சுட்டுகின்றன.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் கூற்றுகளான நன்னயம் உரைத்தல் என்பதைத் தன்னயம் உரைத்தல் என்றும் தெளிவு அகப்படுத்தலைத் தெளிதல் என்றும் தமிழ்நெறி விளக்கம் சுட்டுகின்றது.

தலைவனுக்குத் தொல்காப்பியத்தில் உள்ள கூற்றுகள் 84இன் கீழ் உள்ள பதினான்கு துறைகளில் வினைமுற்றி மீளல் துறையில் மூன்று கூற்றுகள் உள்ளதைப் பிற்றைய இலக்கணங்கள் எடுத்தாளவில்லை.

பாணர்க்கென தொல்காப்பியர் சுட்டிய இரு கூற்றுகளையே பின்னெழுந்த நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் இரண்டு நூல்களும் பத்தாக விரித்து வளர்ந்த நிலையில் மொழிகின்றன.

மாறனகப்பொருளும் நம்பியகப்பொருளும் பாணன் தோழியிடம் தன் வாழ்க்கையை வெறுத்துப் பணிவாகக் கூறுவதை புதுமையான ஒரு கூற்றாக மொழிகின்றன.

கற்பினில் கூற்றுக்குரிய மாந்தர்களில் ஒருவராகக் கூத்தரை மாறனகப்பொருள், சுவாமிநாதம் என்ற இரண்டு நூல்களும் சுட்டிய பொழுதும் கூத்தர்க்குரிய கூற்றுகளை மொழியவில்லை.

மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்ற இரண்டு நூல்களும் வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல் என்ற கூற்றுகளை விறலிக்கென மொழிந்தாலும் வாயில்மாந்தர்களில் ஒருவராக விறலியைச் சுட்டவில்லை.

பரத்தை, மாயப்பரத்தை, காமக்கிழத்தி எங்கையர், காதல் எங்கையர் என்ற சொல்லாட்சிகள் பரத்தையர்க்கு உரியனவாகத் தொல்காப்பியத்தில் எட்டு இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

நம்பியகப்பொருள் பரத்தையரை பரத்தை, சேரிப்பரத்தை, காமக்கிழத்தி என மூன்று வகையாகச் சுட்டினாலும் பரத்தையர்க்கென ஆறு கூற்றுகளையும், மற்றைய இருவர்க்கென தலா மூன்று மூன்று கூற்றுகளையும் சேர்த்துப் பன்னிரு கூற்றுகளாகப் பரத்தையர்க்கு பொதுநிலையில் வைத்துச் சுட்டுகின்றது.

தொல்காப்பியம் கண்டோர்க்குரியதாக ஏழு கூற்றுகளை மொழிய நம்பியகப்பொருள் இரண்டு கூற்றுகளையும், மாறனகப்பொருள் மூன்று கூற்றுகளையும், முத்துவீரியம் 13 கூற்றுகளையும், சுவாமிநாதம் 5 கூற்றுகளையும் மொழிகின்றது. இதில் முத்துவீரியம் சுட்டும் 15 கூற்றுகளும், சுவாமிக்கவிராயரின் தலைவியின் ஊடலுக்குக் காரணம் அவன் பிரிவு தான் எனக் கூறும் ஒரு கூற்றும் கண்டோர் கூற்றின் வளர்ச்சியாகும்.

தொல்காப்பியர் பன்னிருவகை வாயில்களுக்கும் தலைவன், தலைவியரிடையே உண்டாகும் ஊடலைத் தீர்த்து வைக்கும் நிலையில் நிகழ்த்தும் கூற்றுகளாக இரண்டை மொழிய நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் என்ற இரண்டு நூல்களும் பத்துக் கூற்றுகளை வளர்ந்த நிலையில் மொழிகின்றன.

தமிழ்நெறி விளக்கத்தில் கிளந்த தமர்வயின் நற்றாய் கிளத்தல், நைவுடைச் செவிலி, நற்றாய், மொழி, தாயார் கூற்று, தாய் கண்டு உரைத்தல் என்ற நான்கு கூற்றுகள் நற்றாய்க்கு உரியதாகச் சுட்டடப்பட்டுள்ளன.

பாட்டி என்ற பாடினி பற்றித் தொல்காப்பியம் வாயில்களில் ஒரு மாந்தராக மொழிகின்றதே தவிர அவரைப் பற்றிய வேறு செய்திகளைக் குறிப்பிடவில்லை.

தொல்காப்பியர் ஏழு கூற்றுகளை இளையோர்க்கெனச் சுட்டியதோடு மேலும் மூன்று கூற்றுகளைச் சேர்த்து நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும் பத்தென மொழிந்திருப்பது இளையோர் சார்ந்த கூற்றுக் கோட்பாட்டு வளர்ச்சியே.

பாகனைத் தலைவன் கூற்றில் மட்டும் தொல்காப்பியம் சுட்ட மாறனகப்பொருள், கூற்றுக்குரியோரில் ஒருவராகவும் நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் வாயில்களில் ஒரு மாந்தராகவும் சுட்டுகின்றது. நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும் நான்கு கூற்றுகளைப் பாகனுக்குரியதாக மொழிவது பாகன் பற்றிய கூற்றுக்கோட்பாடு சார்ந்த வளர்ச்சியாகும்.

களவுக்குப்பின் கற்புக்குமுன் நம்பியகப்பொருளும் மாறனகப் பொருளும் வரைவியல் என்ற இயலைப் புதுமையாகச் சுட்டியுள்ளன.

வீரமாமுனிவர் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணை நிலப்பகுப்போடு மலை, ஆறு, நாடு என்னும் மூவகை இட உரிமையொடு புதிதான மரபைச் சுட்டுகின்றார்.

மாறனகப்பொருள் தலைவன் மீது கொண்ட காதல் எல்லை கடந்த நிலையில் தலைவி மடலேறுவதாகக் கூறுவது குற்றமல்ல என்ற புதுமரபைச் சுட்டுகின்றது.

தமிழ்நெறி விளக்கம் அந்தி என்பதற்கு இருணிலை அந்தி என்றும் நெய்தல் திணைக்கு பரப்பமை வாரி என்னும் பல சொற்களை அடை கொடுத்துப் புதுமையாகச் சுட்டுகின்றது.

ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருட்களை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் தனித்தனியாகச் சுட்டுவது புதுமரபு ஆகும். பொருள்வயிற் பிரிவிற்கான காலம் இரண்டுமாதம் என்ற புதுமரபை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

நம்பியகப்பொருள் இயற்கைப் புணர்ச்சியைக் கள்ளப் புணர்ச்சி என மாற்றமாக மொழிகின்றது. பரத்தையர் இல் சென்ற தலைவனுக்குப் பூப்பை உணர்த்த செவ்ணி விடலை நம்பியகப்பொருள் புதுமையாகச் சுட்டுகின்றது.

சுவாமிநாதம் இசையாக்காமம் எனப் பெருந்திணைக்குரிய பொருந்தாக் காமத்தைச் சொல் மாற்றிச் சுட்டுகின்றது.

தொல்காப்பியர் பத்தென மொழிந்த கருப்பொருளை ஒன்பது பொருளாகத் தமிழ்நெறி விளக்கம் மாற்றமாக மொழிகின்றது.

தொல்காப்பியம் மாந்தர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் களவு, கற்பு நிகழ்வுகளைக் கூற்றில் சுட்ட பிற்றைய இலக்கணங்கள் கிளவித் துறைகளில் சுட்டுவது மரபு மாற்றமாகும்.

தொல்காப்பியம் கூறிய அரசர் அந்தணர் என்ற மாந்தர்களை மாறன கப்பொருள், சுவாமிநாதம் என்ற இரண்டு நூல்களும் மாற்றமாக இறைவர், இருபிறப்பாளன் எனச் சுட்டுகின்றது.

தோழி எனத் தொல்காப்பியர் சுட்டியதை இகுழை என சுவாமிநாதம் மாற்றமாகச் சுட்டுகின்றது. தொல்காப்பியர் நடுவண் ஐந்திணை எனச் சுட்டியதை முத்துவீரியம் நடுத்திணை எனச் சுட்டுகின்றது. செவிலியை அறிவுச் செவிலி என மாறனகப்பொருள் அடை கொடுத்துச் சுட்டுகின்றது.

திணை சார்ந்த கோட்பாடுகளில் பிற்றைய இலக்கணங்களில் நம்பிய கப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற நூல்களில் வளர்ச்சி காணப்படுகின்றது.

செய்யுள் உறுப்புகள் கோட்பாட்டில் வளர்ச்சி என்பது இல்லை. ஏனெனில் தொல்காப்பியர் சுட்டிய அக உறுப்புகள் பன்னிரெண்டை உள்ளது உள்ளவாறே பிற்றைய நூல்களும் மொழிகின்றன.

தொல்காப்பியர் தலைவன் தலைவி, தோழி செவிலி தவிர்ந்த பிற மாந்தர்களுக்குச் சுட்டிய கூற்றுகளை பிற்றைய இலக்கணங்கள் எண்ணிக்கையில் சற்றுக் கூடுதலாகவே உரைக்கின்றன. எனினும் இது கூற்றுக்கோட்பாட்டு வளர்ச்சி அல்ல. ஏனெனில் தொல்காப்பியம் அகக்கோட்பாடுகளைக் கூற்று முறையில் சுட்டும் பொழுது மாந்தர்களும் முக்கியத்துவம் பெற்றனர். ஆனால் பிற்றைய இலக்கணங்களுள் கிளவித் துறைகளாகச் சுட்டுவதால் மாந்தர்களுக்கு எள்ளலவும் பங்கு இல்லை. அவர்கள் தனித்தவர்களே. ஆகவே பெயரளவில் அக இலக்கணங்களில் மாந்தர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொல்காப்பியத்தில் உள்ள சில அக மரபுகளே மாற்றம் பெற்றுள்ளன. எனினும் முற்றிலுமாக மாற்றங்கள் இல்லை. பிற்றைய இலக்கணங்களில் புதுமரபுகளும் சிற்சிலவே புதிதாகக் காணப்படுகின்றன.

இதனை நோக்குகையில் பிற்யை இலக்கணங்களில் தொல்காப்பிய அகக்கோட்பாடுகள் சில இடங்களில் வளர்ச்சி பெற்றும் குறுகிய இடங்களில் மாற்றமடைந்தும் காணப்படுகின்றன.

மேலாய்வுக்களம்

இலக்கண நூல்கள் தோன்றிய காலகட்டத்தைச் சார்ந்த இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளலாம்.

துணைநூற்பட்டியல்

முதன்மைச் சான்றாதாரங்கள்

1. அறவாணன்,க.ப. - அவிநயம் மூலமும் உரையும்
ஜைன இளைஞர் மன்றம்,
சென்னை.
1975.

2. இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம்,
கழக வெளியீடு,
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
154, டி.டி.கே. சாலை, சென்னை.

3. கோபாலையர்.தி.வே. - மாறன்அகப்பொருளும்
திருப்பதிக்கோவையும்,
இன்ஸ்ட்டியூட் பிரான்கைஸ் டீ
பாண்டிச்சேரி,
2005.

4. கோபாலையர்.தி.வே. - இலக்கண விளக்கம்,
பொருளதிகாரம் அகத்திணையியல்
முதற்பகுதி,
சரஸ்வதிமகால் நூல்நிலையம்,
தஞ்சை.
1972.

5. கோபாலையர்.தி.வே. (ப.ஆ.) - இலக்கண விளக்கம்,
பொருளதிகாரம் அகத்திணையியல்
பிற்பகுதி,
சரஸ்வதிமகால் நூல்நிலையம்,
தஞ்சாவூர்.
1972.

6. கோவிந்தசாமி பிள்ளை இராம. (ப.ஆ.) - தொல்காப்பியம் (நச்சினார்க்கினியம்) எழுத்ததிகாரம், தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர். 1889.

7. கோவிந்தராசனார்.கா.ர. (ப.ஆ.) - களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் மூலமும் உரையும், வசந்தா பதிப்பகம், ஆதம்பாக்கம், சென்னை. 2006.

8. கோவிந்தராச முதலியார் கா.ரா. (ப.ஆ.) - வீரசோழியம், கழகவெளியீடு, சென்னை. மறுபதிப்பு - 1970.

9. கோவிந்தராச முதலியார் கா.ரா. (உ.ஆ.) - அகப்பொருள் விளக்கம் பழைய உரையுடன், கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை. 10 ஆம் பதிப்பு - 1997.

10. சண்முகம்.செ.வை. (ப.ஆ., உ.ஆ.,) - சுவாமிநாதம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம். 1975.

11. சாமிநாதையர்.உ.வே. (ப.ஆ.) - தமிழ்நெறி விளக்கம், பதிப்பு முகவரி தெரியவில்லை.

12. சுந்தரமூர்த்தி.கு. (ப.ஆ.) - முத்துவீரியம்,
கழகவெளியீடு,
1/140, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை.
1972.

13. சுந்தரமூர்த்தி.கு. (ப.ஆ.) - தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
இளம்பூரணர் உரை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
1979.

14. செந்தமிழ்ப்பாவை.சே. - சங்க அகப்பாடல்களில் மரபு மாற்றங்கள்,
தி பார்க்கர்,
293, அகமது வணிகவளாகம்,
இராயப்பேட்டை,
சென்னை.
2007.

15. செந்தமிழ்ப்பாவை.சே. (ப.ஆ.) - தொல்காப்பிய அகவியற்கோட்பாடுகளும்
பிற்கால அகவியல் இலக்கணங்களும்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.
2011.

16. சுப்பிரமணியன்.ச.வே. (ப.ஆ.) - தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும்,
குறிப்பு விளக்கங்களுடன்,
மெய்யப்பன் பதிப்பகம்,
சிதம்பரம்.
2007.

17. நக்கீரர் (உ.ஆ.) -
களவியல் என்ற இறையனார் அகப்பொருள்,
கழக வெளியீடு,
1/140, பிரகாசம் சாலை, சென்னை.
மறுபதிப்பு - 1976.

18. நாகராசன் (ப.ஆ., உ.ஆ.,) - அறுவகை இலக்கணம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
1991.

19. வீரமாமுனிவர் - ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்,
கழக வெளியீடு,
79, பிரகாசம் சாலை, சென்னை-108.
1984.

துணைமைச் சான்றாதாரங்கள்

1. இராஜரெத்தினம்.தி. அகப்பொருள் விளக்கம்,
ஆய்வுப் பதிப்பு,
காவ்யா வெளியீட்டகம்,
கோடம்பாக்கம், சென்னை.
2014.

2. இராஜகோபாலாச்சாரியார்- கே. இலக்கண விளக்கப் பொருளியல்,
ஸ்டார் பிரசுரம்,
திருவல்லிக்கேணி, சென்னை.
1962.

3. இராஜகோபாலாச்சாரியார் இலக்கண விளக்கம்-4,
பொருளியல்,
கண்ணப்பன் பதிப்பகம்,
தி.நகர், சென்னை.
2002.

4. சிவலிங்கனார்.ஆ. - தொல்காப்பிய உரைவளம்,
பொருளதிகாரம் அகத்திணையியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
1991.

5. மேலது., - தொல்காப்பியம் உரைவளம்,
பொருளதிகாரம் கற்பியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
1993.

6. மேலது., - பொருளதிகாரம் களவியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
1994.

7. மேலது., - பொருளதிகாரம் பொருளியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
1994.

8. மேலது., - தொல்காப்பிய உரைவளம்,
பொருளதிகாரம் செய்யுளியல் பகுதி-4,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
1998.

9. சுப்பிரமணியன்.ச.வே. - தொன்னூல் விளக்கம்,
திறனாய்வு மூலம் விளக்கம்,
தமிழ்ப் பதிப்பகம்,
அடையாறு, சென்னை.
1978.

10. சுப்பிரமணிய பிள்ளை.கா. பழந்தமிழர் நாகரிகம் அல்லது
தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து,
7/43-A, அழகாய் அம்மன் பதிப்பகம்,
திருச்சி மாவட்டம்,
2010.

11. செல்லையா பிள்ளை.சு. மாறனகப்பொருள் ஆய்வுப் பதிப்பும்
அதன் அகக்கொள்கைகள்,
திருப்பதிக்கோவையில் பயிலும் நிலையும்,
பகுதி-1,
தி பார்க்கர்,
293, அகமது வணிகவளாகம்,
இராயப்பேட்டை, சென்னை.
2005.

12. செல்லையா பிள்ளை.சு. - மாறனகப்பொருள் ஆய்வுப் பதிப்பும்
அதன் அகப்கொள்கைகள்,
திருப்பதிக்கோவையில் பயிலும் நிலையும்,
பகுதி-2,
தி பார்க்கர்,
293, அகமது வணிகவளாகம்,
இராயப்பேட்டை, சென்னை.
2005.

13. சோமசுந்தர பாரதியார்.ச.- தொல்காப்பியர் பொருட்படலப்புத்துரை,
நாவலர் புத்தக நிலையம்,
59-ஏ, மேல ஆவணி மூலவீதி,
மதுரை.
திருந்திய பதிப்பு - 1982.

14. நக்கீரனார் - இறையனார் அகப்பொருள்,
சாரதா பதிப்பகம்,
ஜீ-4, சாந்தி அடுக்ககம்,
இராயப்பேட்டை, சென்னை.
2010.

15. பாலசுந்தரம்.ச. - தொல்காப்பியம் ஆராய்ச்சிக்
காண்டிகையுரை பொருளதிகாரம்,
தாமரை வெளியீட்டகம்,
367, மேலவீதி, தஞ்சாவூர்.
1991.

16. வெள்ளைவாரணன்.க. - தொல்காப்பியம் - கற்பியல் - உரைவளம்,
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.
1983.

17. வெள்ளைவாரணன்.க. - தொல்காப்பியம் பொருளியல் உரைவளம்,
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.
1985.

18. வெள்ளைவாரணன்.க. தொல்காப்பியம் செய்யுளியல்,
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.
1989.

19. வெள்ளைவாரணன்.க. தொல்காப்பியம் களவியல் உரைவளம்,
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.
1999

திறனாய்வு நூல்கள்

1. ஆண்டியப்பன்.தே. - காப்பியர் நெறி,
(அகத்திணை இயல், புறத்திணை இயல்)
முத்துப் பதிப்பகம்,
மதுரை.

2. ஆறுமுகம்,க. - தொல்காப்பியச் சிந்தனைகள்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
1992.

3. இராகவையங்கார்.மு. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி,
மானாமதுரை.
மூன்றாம் பதிப்பு - 1960.

4. இராசாராம்.சு. - வீரசோழிய இலக்கணக்கோட்பாடு,
இராகவேந்திரா,
9ஏ, ஜீவா நகர்,
நாகர்கோவில்.

5. இராமையா பிள்ளை நா. வித்துவான் தொல்காப்பியத்தில் அரசியல் அமைப்புச் சட்டம்,
113, சுந்தரர் தெரு, மதுரை.
1996.

6. இலக்குமணப்பெருமாள்.சு.
தொல்காப்பியப் பொருளதிகாரக்கோட்பாடு
ஆனையூர்,
மதுரை.
1997.

7. இலக்குவனார்.சீ. தொல்காப்பிய ஆராய்ச்சி,
வள்ளுவர் பதிப்பகம்,
புதுக்கோட்டை.
1961.

8. இளங்குமரனார்.இரா. - தமிழர் வாழ்வியல் இலக்கணம்,
அமிழ்தம் பதிப்பகம்,
தியாகராயர் நகர், சென்னை.
2004.

9. இளங்குமரன்.இரா. - இலக்கண வரலாறு,
மணிவாசகர் பதிப்பகம்,

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை.
2009.

10. இளமாறன்.பா. (ப.ஆ.) - தொல்காப்பியம் பன்முக வாசிப்பு,
176, தொல்காப்பியர் தெரு, சென்னை.
2008.

11. இளவரசு.சோம. - இலக்கண வராறு,
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத்தெரு, சிதம்பரம்.
2003.

12. ஈஸ்வரி.இரா. - தொல்காப்பியத்தில் கூற்றுக்கோட்பாடு,
16, இரண்டாம் குறுக்கு வீதி, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை.
2008.

13. கவிதா.ச. - சங்க இலக்கியத்தில் வாயில் மறுத்தல்,
விக்னேசுவர் பதிப்பகம்,
வாடிப்பட்டி,
மதுரை.
2005.

14. குழந்தை புலவர் - தொல்காப்பியம் பொருளதிகாரம்,
குழந்தையுரை,
வேலா பதிப்பகம்,
ஈரோடு.

15. மேலது., - தொல்காப்பியர் காலத் தமிழர்,
பதிப்பு முகவரி
தெரியவில்லை.

16. சாம்பசிவனார்.ச. - காப்பியர் வழியில் ...
வளவன் வெளியீடு,
7, சூடன் சாமியார் சந்து, மதுரை.
1992.

17. சாம்பசிவனார்.ச. - சிவனார் நூல் வரிசை,
தொல்காப்பியம் பொருளதிகாரம்,
தமிழ் மருதம்,
புறவழிச்சாலை, மதுரை.
மறுபதிப்பு - 2004.

16. சிதம்பரனார்.சாமி. - தொல்காப்பியத் தமிழர்,
இலக்கிய நிலையம்,
19, சவுராஷ்டிர நகர்,
சென்னை.
நான்காம் பதிப்பு - 1986.

17. சீனிவாசன்.இரா. - தமிழ் இலக்கண மரபுகள்,
தி பார்க்கர்,
293, அகமது வளாகம்,
இராயப்பேட்டை, சென்னை.
2000.

18. சுந்தரபாண்டியன்.க. - தமிழில் பொருளிலக்கண வளர்ச்சி,
அய்யனார் பதிப்பகம்,
சென்னை.
2010.

19. சுப்புரெட்டியார்.ந. - தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை,
பழனியப்பா பிரதர்ஸ்,
கோனார் மாளிகை,
பீட்டர்ஸ் ரோடு, சென்னை.
நான்காம் பதிப்பு - 2002.

20. செதீசன் டாக்டர் இரா. - தொல்காப்பியப் பொருளதிகாரவழி
அகநானூறு ஓர் ஆய்வு,
முருகு பதிப்பகம்,
42-அ முதல் செங்குந்தர் வீதி
ஆம்பூர்.
வேலூர் மாவட்டம்.
2002.

21. தமிழண்ணல் - சங்க இலக்கிய ஒப்பீடு
இலக்கியக் கொள்கைகள்,
மீனாட்சி புத்தக நிலையம்,
45, தானப்பமுதலி தெரு,
மதுரை.
திருத்திய பதிப்பு - 2003.

22. திராவிடமணி.பொ. - தொல்காப்பியம் நம்பியகப்பொருள்
களவியல் ஒரு பார்வை,
பொதிகைப் பதிப்பகம்,
தங்கம் நகர், தஞ்சாவூர்.
2007.

23. பாலசுந்தரம் பிள்ளை - பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை,
கழக வெளியீடு,
79, பிரகாசம் சாலை, சென்னை.
மறுபதிப்பு - 1983.

24. மங்கையர்க்கரசி.கு. - அக இலக்கியக் கோட்பாடுகள்,
(தொல்காப்பியம்),
கலைச்செல்வி பதிப்பகம்,
செனாய் நகர், சென்னை.
1999.

25. மணிவேல்.மு. - கைக்கிளைக் காதல்,
பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.
1992 .

26. மாணிக்கம்.வ.சுப. - தமிழ்க் காதல்,
மெய்யப்பன் தமிழாய்வகம்,
53, புதுத்தெரு, சிதம்பரம்.
2002.

27. வசந்தாள்.த. - தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள்,
வரலாற்றுப் பார்வை,
சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு,
சென்னை.
1990.

ஆய்வுக்கோவை

1. திருஞானமூர்த்தி.தெ. (ஒருங்கிணைப்பாளர்) - தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்,
கருத்தரங்க ஆய்வுக்கோவை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி,
தமிழ் உயராய்வு மையம்,
மேலைச்சிவபுரி.
2014.

ஆய்வேடு

1. சுரேஷ்.சொ. - அகப்பொருள் மரபுகள்,
(தொல்காப்பியம் - நம்பியகப்பொருள்)
ஆய்வியல் நிறைஞர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.
2007.

2. பரமேஸ்வரி.சி. - தமிழ் அக இலக்கணங்களில்
கூற்றுமுறை ஒப்பீடு,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.
2008.

3. ஜெய்சங்கர்.ம. - தொல்காப்பியத்தில் அகக்கோட்பாடுகளும்
அகநானூறும்,
இளமுனைவர் பட்ட ஆய்வேடு,
தமிழியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
2009.

தொல்காப்பிய அகவியற் கோட்பாட்டு இலக்கண வளர்ச்சி

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (Ph.D.,)
பட்டத்திற்குப் பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

மு.செண்பகவள்ளி
(பதிவு எண்.552)

நெறியாளர்

பேராசிரியர் **சே.செந்தமிழ்ப்பாவை**

தமிழ்ப் பண்பாட்டு மையம்

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத் தர நிர்ணயக்குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+
(CPA:3.64) தகுதி பெற்றது மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பல்கலைக்கழக மானியக்கு
முவின்
முதல்தரப் பல்கலைக்கழகத் தகுதிபெற்றது)

காரைக்குடி – 630 003

தமிழ்நாடு - இந்தியா

ஆகட்டு - 2019

முடிவுரை

அகப்பொருளுக்கெனத் தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் புறத்திணையியல், மரபியல் தவிர்த்த ஏழு இயல்களிலும் அகப்பொருள் கோட்பாடுகளை முழுமையாக விளக்குகின்றது.

கி.மு.5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரை அகப்பொருளுக்கெனத் தொல்காப்பியம், அவிநயம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், களவியற்காரிகை, நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற பதின்மூன்று நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன. இப்பதின்மூன்று அக இலக்கண நூல்களில் அவிநயம், வீரசோழியம், இலக்கண விளக்கம் போன்ற ஏழு நூல்களும் ஒரு பகுதியாக மொழிகின்றன.

தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள் போன்ற ஆறு நூல்களும் அக இலக்கணத்தை முழுமையாக விளம்புகின்றன.

அவிநயத்தில் திணையின் மூன்று வகைகள், ஊழ்வினையால் தோன்றும் காதல், கைக்கிளையின் நான்கு நிலைகள் தலைவி, தலைவனுக்குரிய குணங்கள், களவு மணம் போன்ற செய்திகள் சுட்டப்பட்டுள.

உரையால் சிறப்பு பெற்ற நூல் என்ற பெருமையை நக்கீரர் உரையால் இறையனார் அகப்பொருள் பெறுகின்றது. சூத்திரங்களில் ஓரடிச் சூத்திரங்கள் பதினைந்தும் ஈரடிச் சூத்திரங்கள் இருபத்தேழும் இறையனார் அகப்பொருளில் இடம்பெற்றுள்ளன.

அகப்பொருளாகிய தமிழை விளக்குவதற்காக எழுந்த நூல் தமிழ்நெறி விளக்கம். தமிழ்நெறி விளக்கத்திற்கு நூலாசிரியரும், உரையாசிரியரும் யாரென அறியாத நிலையில் உ.வே.சா. அவர்கள் பதிப்பித்துள்ளார்.

வீரசோழியம் கட்டளைக் கலித்துறை யாப்பில் இருபத்தோர் நூற்பாக்களைக் கொண்டு வீரசோழ மன்னனின் பெயரில் புத்தமித்திரனாரால் எழுதப்பட்டுள்ளது. இதன் பொருட்படலத்தில் இருபத்தோர் நூற்பாக்கள் உள்ளன. களவியற்காரிகையில் களவு, கற்புக் கூற்றுத்துறைகளைப் பற்றிய செய்திகளே முழுமையாக நிறைந்துள்ளன.

தொல்காப்பியச் செய்திகளையும் நம்பியகப்பொருள் செய்திகளையும் முற்றிலுமாகக் கொண்டு வைத்தியநாத தேசிகர் இலக்கண விளக்கப் பொருளதிகாரத்தைப் படைத்துள்ளார்.

தொன்னூல் விளக்கப் பொருளதிகாரம் பதிகம், காரணம், விரிவு, தொகையுந்துணிவும், உரிமை என்னும் பெரும்பகுப்புக்களையும் கால உரிமை, இடவுரிமை, பண்புரிமை, சாதித்தொழிலுரிமை, பற்றுதலுரிமை, வடிவு முதலிய உரிமை, ஒழுக்க உரிமை, சொல் உரிமை என்ற சிறு பகுப்புக்களையும் கொண்டு அமைந்துள்ளது.

முத்துவீரியம் 92 நூற்பாக்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. சுவாமிநாதம் அகத்திணை மரபு, கைக்கோள் மரபு, புறத்திணை மரபு என்னும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணத்தோடு புலமை இலக்கணம் என்ற பகுதியையும் சேர்த்து ஆறிலக்கணங்கூறும் நூல் அறுவகை இலக்கணம். இந்நூல் அக இலக்கணத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

தொல்காப்பியம் போலவே பிற்றைய இலக்கணங்களில் நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற ஆறு நூல்களும் எழுதிணை மரபை மொழிகின்றன.

கைக்கிளை பற்றிய செய்திகளை அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் ஆகிய ஐந்து இயல்களிலும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

செய்யுளில் பயின்றுவரும் பொருட்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் முதல், கரு, உரிப்பொருள் என்ற வரிசை முறையிலேயேயும் அப்பொருட்களின் விரி பற்றிக் குறிப்பிடும் பொழுது முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்ற முறையிலும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

தொல்காப்பியர் குறிஞ்சித்திணை முதன்மையானது எனக் கருதினாலும் முல்லைத்திணையையே முதன்மைப்படுத்திக் கூறுகின்றார். முதல், கருப்பொருள்களின்றி உரிப்பொருள் மட்டுமே தழுவிக் கைக்கிளையும், பெருந்திணையும் வரும் என்ற கருத்தால் அவை அகத்திணை இயலின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளது.

உயிர்கள் நிலத்தை ஆதாரமாகக் கொண்டே வாழ்கின்றன. இவ்வாறு உயிர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள நிலமும் அவ்விடத்துத் தோன்றும் காலமும் முதற்பொருள் ஆகும். நிலத்தினும், காலத்தினும் தோன்றும் பொருள் கருப்பொருள். அவ்வுயிர்களின் ஒழுகலாறுகளே உரிப்பொருள் ஆகும்.

சுவாமிநாதம் தெய்வம் தொடங்கி தொழில் வரை உள்ள பதினான்கு பொருளன்றிப் பிறவும் கருப்பொருளாக ஆக்கம் பெறுபவை எனச் சுட்டுவதை

நோக்கும் பொழுது பதினான்கைவிட இன்னும் உள்ளன என்பது கருப்பொருள் சார்ந்த வளர்ச்சி முறையைக் குறிக்கின்றது.

மக்களை இரண்டாகப் பிரித்து அவற்றொடு ஊர், நீர், பண் என்றவற்றொடு சேர்த்து நம்பியகப்பொருள், கருப்பொருளைப் பதினான்கென தொல்காப்பியத்தில் இருந்து வளர்ச்சி பெற்ற நிலையில் சுட்டுகின்றது.

மாறனகப்பொருளும் இலக்கண விளக்கமும் சிறுபொழுதிற்குரிய கால எல்லையாகிய நேரத்தைப் பத்து நாழிகை எனச் சுட்டியுள்ளதும் முதற்பொருளின் சிறுபொழுது சார்ந்த வளர்ச்சியே ஆகும்.

அகப்பாட்டினுள் உள்ள திணையை உணர்வதற்கு உள்ளுறை உவமமே சிறந்தது. தெய்வம் மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது ஆகையால் தெய்வம் தவிர்த்த பிற கருப்பொருட்களையே செய்யுளில் உள்ளுறை கூறும்பொழுது நிலைக்களன்களாக வைத்துக் கூறவேண்டும்.

பிற்றைய இலக்கணங்களில் முத்துவீரியமே அறுவகைக் கற்புப் பிரிவில் ஒவ்வொரு பிரிவிற்கும் ஓதற்பிரிவில் நான்கு வகைகளையும் பகைவயிற்பிரிவில் இரண்டு வகைகளையும் பொருள்வயிற் பிரிவில் இருபது வகைகளையும், பரத்தைற்பிரிவில் 49 வகைகளையும் சுட்டுகின்றது. இது பிரிவுகள் சார்ந்த வளர்ச்சிகளாகும்.

தொல்காப்பியர் செய்யுளியலில் 34 உறுப்புகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவற்றில் பதின்மூன்றாம் உறுப்பு முதல் இருபத்து நான்காம் உறுப்பு வரை உள்ள பன்னிரெண்டு உறுப்புக்களை அக இலக்கியத்திற்குரிய உறுப்புகள் என்பர்.

தொல்காப்பியர் திணை, கைகோள், கூற்று, கேட்போர், காலம், களன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பயன், கோள், துறை என்ற பன்னிரெண்டை செய்யுளில் இடம்பெற வேண்டிய உறுப்புகள் என்பர்.

அகச்செய்யுளில் இடம்பெறக்கூடிய அக உறுப்புகள் பன்னிரெண்டை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் ஆகிய இரண்டு நூல்களும் ஒழிபியலில் உரைக்கின்றன.

கற்பொழுக்கம் என்பது மறைவெளிப்படுதல், தமரின் பெறுதல், மலிவு, புலவி, ஊடல், ஊடல் உணர்த்தல், பிரிவு, புணர்வு என்ற எட்டு வகைகளை உடையது.

பார்ப்பான், பாங்கன், பாணன், விறலி, கூத்தர், பரத்தை, அறிவர் ஆகிய எழுவரும் தலைவன், தலைவியொடு வாய்ப்புகள் நிகழும் பொழுதெல்லாம் கூற்று நிகழ்த்துவதற்கு உரியர் என மாறனகப்பொருள் உரைக்கின்றது.

சுவாமிநாதம் தலைவி பேச்சையும், தலைவன் பேச்சையும் கூற்றிற்குரிய எல்லோரும் கேட்பர் என்றும் அவ்வாறே ஏனையோருடைய பேச்சையும் இடம் அறிந்து தலைவனும், தலைவியும் கேட்பர் என்றும் சுட்டுகின்றது.

அகப்பொருள் இலக்கியங்களில் ஐந்திணை எனப்படும் ஐவகையான காதல் ஒழுக்கங்கள் நிகழ்வனவாகக் கூறப்படும் குறிஞ்சி, முல்லை முதலிய இடங்கள் களன் ஆகும். இது இடனென்றும் அழைக்கப்படும்.

சிறுபொழுதுகள் ஆறும், பெரும்பொழுதுகள் ஆறும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற இம்மூன்று நிலைகளிலும் செய்யுளில் பொருந்தி வருமாறு சுட்டும் உறுப்பே காலம் எனத் தொல்காப்பியத்தில் இருந்து சிறிது விரிவுபடுத்தி நம்பியகப்பொருள் சுட்டுகின்றது.

எச்சமும், கோளும் இல்லாமலும் செய்யுள் அமையும் எனச் சுட்டுகின்றது இறையனார் அகப்பொருள்.

முதல் பொருளும், கருப்பொருளும் இல்லாமல் கூட ஒரு செய்யுள் அமையும். உரிப்பொருள் இல்லாமல் செய்யுள் அமையாது. அத்தகைய உரிப் பொருளோடு புலவனது கற்பனை, உள்ளடக்கம், வர்ணனை, உவமை, விளக்கம், இலக்கணக் குறிப்பு போன்ற பல துணைப்பொருட்களையும் சேர்த்து செய்யுள் அமையப் பாடுவதே பொருள்வகை.

இளம்பூரணர் கருத்துப்படி பார்ப்பான் அவருக்குரிய ஆறு கூற்றுகளில் முதல் மூன்றைத் தலைவனிடமும், பின் இரண்டைத் தலைவியிடமும் இறுதி ஒன்றை இருவரிடமும் உரைப்பான்.

தொல்காப்பியர் தலைவன், தலைவியிடம் பார்ப்பான் நிகழ்த்தும் கூற்றுகளைச் சுட்ட மாறனகப்பொருள், சுவாமிநாதம் இரண்டு நூல்களும் தலைவியைத் தேடிச்செல்லும் செவிலியிடம் நிகழ்த்தும் கூற்றுகளையே சுட்டுகின்றன.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் கூற்றுகளான நன்னயம் உரைத்தல் என்பதைத் தன்னயம் உரைத்தல் என்றும் தெளிவு அகப்படுத்தலைத் தெளிதல் என்றும் தமிழ்நெறி விளக்கம் சுட்டுகின்றது.

தலைவனுக்குத் தொல்காப்பியத்தில் உள்ள கூற்றுகள் 84இன் கீழ் உள்ள பதினான்கு துறைகளில் வினைமுற்றி மீளல் துறையில் மூன்று கூற்றுகள் உள்ளதைப் பிற்றைய இலக்கணங்கள் எடுத்தாளவில்லை.

பாணர்க்கென தொல்காப்பியர் சுட்டிய இரு கூற்றுகளையே பின்னெழுந்த நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் இரண்டு நூல்களும் பத்தாக விரித்து வளர்ந்த நிலையில் மொழிகின்றன.

மாறனகப்பொருளும் நம்பியகப்பொருளும் பாணன் தோழியிடம் தன் வாழ்க்கையை வெறுத்துப் பணிவாகக் கூறுவதை புதுமையான ஒரு கூற்றாக மொழிகின்றன.

கற்பினில் கூற்றுக்குரிய மாந்தர்களில் ஒருவராகக் கூத்தரை மாறனகப்பொருள், சுவாமிநாதம் என்ற இரண்டு நூல்களும் சுட்டிய பொழுதும் கூத்தர்க்குரிய கூற்றுகளை மொழியவில்லை.

மாறனகப்பொருள், இலக்கண விளக்கம் என்ற இரண்டு நூல்களும் வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல் என்ற கூற்றுகளை விறலிக்கென மொழிந்தாலும் வாயில்மாந்தர்களில் ஒருவராக விறலியைச் சுட்டவில்லை.

பரத்தை, மாயப்பரத்தை, காமக்கிழத்தி எங்கையர், காதல் எங்கையர் என்ற சொல்லாட்சிகள் பரத்தையர்க்கு உரியனவாகத் தொல்காப்பியத்தில் எட்டு இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

நம்பியகப்பொருள் பரத்தையரை பரத்தை, சேரிப்பரத்தை, காமக்கிழத்தி என மூன்று வகையாகச் சுட்டினாலும் பரத்தையர்க்கென ஆறு கூற்றுகளையும், மற்றைய இருவர்க்கென தலா மூன்று மூன்று கூற்றுகளையும் சேர்த்துப் பன்னிரு கூற்றுகளாகப் பரத்தையர்க்கு பொதுநிலையில் வைத்துச் சுட்டுகின்றது.

தொல்காப்பியம் கண்டோர்க்குரியதாக ஏழு கூற்றுகளை மொழிய நம்பியகப்பொருள் இரண்டு கூற்றுகளையும், மாறனகப்பொருள் மூன்று கூற்றுகளையும், முத்துவீரியம் 13 கூற்றுகளையும், சுவாமிநாதம் 5 கூற்றுகளையும் மொழிகின்றது. இதில் முத்துவீரியம் சுட்டும் 15 கூற்றுகளும், சுவாமிக்கவிராயரின் தலைவியின் ஊடலுக்குக் காரணம் அவன் பிரிவு தான் எனக் கூறும் ஒரு கூற்றும் கண்டோர் கூற்றின் வளர்ச்சியாகும்.

தொல்காப்பியர் பன்னிருவகை வாயில்களுக்கும் தலைவன், தலைவியரிடையே உண்டாகும் ஊடலைத் தீர்த்து வைக்கும் நிலையில் நிகழ்த்தும் கூற்றுகளாக இரண்டை மொழிய நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் என்ற இரண்டு நூல்களும் பத்துக் கூற்றுகளை வளர்ந்த நிலையில் மொழிகின்றன.

தமிழ்நெறி விளக்கத்தில் கிளந்த தமர்வயின் நற்றாய் கிளத்தல், நைவுடைச் செவிலி, நற்றாய், மொழி, தாயார் கூற்று, தாய் கண்டு உரைத்தல் என்ற நான்கு கூற்றுகள் நற்றாய்க்கு உரியதாகச் சுட்டப்பட்டுள்ளன.

பாட்டி என்ற பாடினி பற்றித் தொல்காப்பியம் வாயில்களில் ஒரு மாந்தராக மொழிகின்றதே தவிர அவரைப் பற்றிய வேறு செய்திகளைக் குறிப்பிடவில்லை.

தொல்காப்பியர் ஏழு கூற்றுகளை இளையோர்க்கெனச் சுட்டியதோடு மேலும் மூன்று கூற்றுகளைச் சேர்த்து நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும் பத்தென மொழிந்திருப்பது இளையோர் சார்ந்த கூற்றுக் கோட்பாட்டு வளர்ச்சியே.

பாகனைத் தலைவன் கூற்றில் மட்டும் தொல்காப்பியம் சுட்ட மாறனகப்பொருள், கூற்றுக்குரியோரில் ஒருவராகவும் நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம், மாறனகப்பொருள், சுவாமிநாதம் என்ற நான்கு நூல்களும் வாயில்களில் ஒரு மாந்தராகவும் சுட்டுகின்றது. நம்பியகப்பொருளும் இலக்கண விளக்கமும் நான்கு கூற்றுகளைப் பாகனுக்குரியதாக மொழிவது பாகன் பற்றிய கூற்றுக்கோட்பாடு சார்ந்த வளர்ச்சியாகும்.

களவுக்குப்பின் கற்புக்குமுன் நம்பியகப்பொருளும் மாறனகப் பொருளும் வரைவியல் என்ற இயலைப் புதுமையாகச் சுட்டியுள்ளன.

வீரமாமுனிவர் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணை நிலப்பகுப்போடு மலை, ஆறு, நாடு என்னும் மூவகை இட உரிமையொடு புதிதான மரபைச் சுட்டுகின்றார்.

மாறனகப்பொருள் தலைவன் மீது கொண்ட காதல் எல்லை கடந்த நிலையில் தலைவி மடலேறுவதாகக் கூறுவது குற்றமல்ல என்ற புதுமரபைச் சுட்டுகின்றது.

தமிழ்நெறி விளக்கம் அந்தி என்பதற்கு இருணிலை அந்தி என்றும் நெய்தல் திணைக்கு பரப்பமை வாரி என்னும் பல சொற்களை அடை கொடுத்துப் புதுமையாகச் சுட்டுகின்றது.

ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருட்களை நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களும் தனித்தனியாகச் சுட்டுவது புதுமரபு ஆகும். பொருள்வயிற் பிரிவிற்கான காலம் இரண்டுமாதம் என்ற புதுமரபை மாறனகப்பொருள் சுட்டுகின்றது.

நம்பியகப்பொருள் இயற்கைப் புணர்ச்சியைக் கள்ளப் புணர்ச்சி என மாற்றமாக மொழிகின்றது. பரத்தையர் இல் சென்ற தலைவனுக்குப் பூப்பை உணர்த்த செவ்ணி விடலை நம்பியகப்பொருள் புதுமையாகச் சுட்டுகின்றது.

சுவாமிநாதம் இசையாக்காமம் எனப் பெருந்திணைக்குரிய பொருந்தாக் காமத்தைச் சொல் மாற்றிச் சுட்டுகின்றது.

தொல்காப்பியர் பத்தென மொழிந்த கருப்பொருளை ஒன்பது பொருளாகத் தமிழ்நெறி விளக்கம் மாற்றமாக மொழிகின்றது.

தொல்காப்பியம் மாந்தர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் களவு, கற்பு நிகழ்வுகளைக் கூற்றில் சுட்ட பிற்றைய இலக்கணங்கள் கிளவித் துறைகளில் சுட்டுவது மரபு மாற்றமாகும்.

தொல்காப்பியம் கூறிய அரசர் அந்தணர் என்ற மாந்தர்களை மாறன கப்பொருள், சுவாமிநாதம் என்ற இரண்டு நூல்களும் மாற்றமாக இறைவர், இருபிறப்பாளன் எனச் சுட்டுகின்றது.

தோழி எனத் தொல்காப்பியர் சுட்டியதை இகுளை என சுவாமிநாதம் மாற்றமாகச் சுட்டுகின்றது. தொல்காப்பியர் நடுவண் ஐந்திணை எனச் சுட்டியதை முத்துவீரியம் நடுத்திணை எனச் சுட்டுகின்றது. செவிலியை அறிவுச் செவிலி என மாறனகப்பொருள் அடை கொடுத்துச் சுட்டுகின்றது.

திணை சார்ந்த கோட்பாடுகளில் பிற்றைய இலக்கணங்களில் நம்பிய கப்பொருள், மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்ற நூல்களில் வளர்ச்சி காணப்படுகின்றது.

செய்யுள் உறுப்புகள் கோட்பாட்டில் வளர்ச்சி என்பது இல்லை. ஏனெனில் தொல்காப்பியர் சுட்டிய அக உறுப்புகள் பன்னிரெண்டை உள்ளது உள்ளவாறே பிற்றைய நூல்களும் மொழிகின்றன.

தொல்காப்பியர் தலைவன் தலைவி, தோழி செவிலி தவிர்ந்த பிற மாந்தர்களுக்குச் சுட்டிய கூற்றுகளை பிற்றைய இலக்கணங்கள் எண்ணிக்கையில் சற்றுக் கூடுதலாகவே உரைக்கின்றன. எனினும் இது கூற்றுக்கோட்பாட்டு வளர்ச்சி அல்ல. ஏனெனில் தொல்காப்பியம் அகக்கோட்பாடுகளைக் கூற்று முறையில் சுட்டும் பொழுது மாந்தர்களும் முக்கியத்துவம் பெற்றனர். ஆனால் பிற்றைய இலக்கணங்களுள் கிளவித் துறைகளாகச் சுட்டுவதால் மாந்தர்களுக்கு எள்ளலவும் பங்கு இல்லை. அவர்கள் தனித்தவர்களே. ஆகவே பெயரளவில் அக இலக்கணங்களில் மாந்தர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொல்காப்பியத்தில் உள்ள சில அக மரபுகளே மாற்றம் பெற்றுள்ளன. எனினும் முற்றிலுமாக மாற்றங்கள் இல்லை. பிற்றைய இலக்கணங்களில் புதுமரபுகளும் சிற்சிலவே புதிதாகக் காணப்படுகின்றன.

இதனை நோக்குகையில் பிற்யை இலக்கணங்களில் தொல்காப்பிய அகக்கோட்பாடுகள் சில இடங்களில் வளர்ச்சி பெற்றும் குறுகிய இடங்களில் மாற்றமடைந்தும் காணப்படுகின்றன.

மேலாய்வுக்களம்

இலக்கண நூல்கள் தோன்றிய காலகட்டத்தைச் சார்ந்த இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளலாம்.